# இயல் தமிழ் இன்பம்



சுந்தர சண்முகனார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

நூல் பெயர் :

# இயல் தமிழ் இன்பம்

அட்டை ஓவியம் :

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்த —
என்றும் உள தென்தமிழ்
இயம்பி இசைகொண்ட
**அகத்தியனார்**

ஆசிரியர் பெயர் :

**சுந்தர சண்முகனார்**

# இயல் தமிழ் இன்பம்

ஆசிரியர்:

ஆராய்ச்சி அறிஞர்

**முனைவர் சுந்தர சண்முகனார்**

தமிழ் - அகராதித் துறைப் பேராசிரியர் (ஓய்வு)

மிழ்ப் பேரவைச் செம்மல் (மதுரைப் பல்கலைக் கழகம்)

புதுச்சேரி

வெளியீடு:

**சுந்தர சண்முகனார்**

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்

38, இரண்டாம் தெரு, வேங்கட நகர்

புதுச்சேரி-11

முதல் பதிப்பு: ஜூன் 1992

உரிமை: ஆசிரியருக்கே

**ஆசிரியர் சுந்தர சண்முகனாரின் 70ஆம் அகவை நிறைவு விழா வெளியீடு.**

விலை: **ரூ: 30-00**

அச்சிட்டோர்:

சபாநாயகம் பிரிண்டர்ஸ்
கீழவீதி, சிதம்பரம்
போன்: 2350

# ஆசிரியர் முன்னுரை

'இயல் தமிழ் இன்பம்' என்னும் இந்த நூல் அரிதின் முயன்று எழுதிய ஆய்வுத் தொகுப்பு. பல்வேறு கோணங்களில் பல்வேறு பொருள்பற்றி எழுதப்பட்டது இது.

புதுக் கவிதைகள் புறப்பட்டு, பழைய இலக்கிய - இலக்கணச் செய்திகளைக் காணாதடித்துவிடுமோ – தமிழின் தலையெழுத்தைத் திசை மாற்றி விடுமோ – என்ற ஐயமும் அச்சமும் ஏற்பட்டுள்ள இந்தக் கால கட்டத்தில், பழைய இலக்கிய - இலக்கணச் செய்திகளை மீண்டும் புதுப்பித்து மக்களுக்கு அளிக்க வேண்டிய கட்டாயக் கடமை நம்மனோர்க்கு உண்டு. அந்தக் கடமை உணர்வின் ஒரு கூறே இந்நூலின் எழுச்சி.

தாள் விலை, அச்சுக் கூலி, படச் செலவு முதலியவை வானளாவ உயர்ந்து கொண்டு போகும் இந்நாளில், தரமான கருத்துடைய பெரிய நூல்களை வெளியிடுவது என்பது அரிய செயலாயுள்ளது.

நூறு பக்கங்களுக்குள் வணிக நோக்குடன் புற்றீசல்கள் போல் புறப்பட்டு வெளியாகும் நூல்கள் மட்டும் மக்களுக்குப் போதமாட்டா. I. A. S. தேர்வில் தமிழர்களின் தரம் குறைந்துள்ளதாகக் கருதப்படும் இந்நாளில், பலதுறைச் செய்திகளைக் கூறும் இத்தகைய பெரிய நூல்கட்கு நல்லாதரவு அளிக்கத் தொடர்புடைய அனைவரையும் மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

இந்நூல் வெளியீட்டுக்கு ஓரளவு பொருள் உதவிபுரிந்த புதுவை அரசுக்கு மிக்க நன்றி. வணக்கம்.

சுந்தர சண்முகன்
(நூலாசிரியன்)

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | புகு வாயில் | — | 5 |
| 2. | இன்சொல் இயம்பல் | — | 9 |
| 3. | உயிர் அன்பு ஒருமைப்பாடு | — | 15 |
| 4. | காட்சிக்கு எளிமை | — | 20 |
| 5. | இன்னா செய்தார்க்கு ஒறுப்பு | — | 25 |
| 6. | ஒரே உலகம் | — | 31 |
| 7. | மூவர் தமிழ் | — | 39 |
| 8. | கன்னல் தமிழும் கவியரசும் | — | 48 |
| 9. | பகைவரை மயக்கிய பாவேந்தர் | — | 54 |
| 10. | கவிஞர் கண்ட காதலர்களும் தொழிலாளர்களும் | — | 60 |
| 11. | மூன்று மடல்கள் | — | 64 |
| 12. | பெண் தெய்வ வழிபாடு | — | 77 |
| 13. | பாரதிதாசன் ஊரும் பேரும் | — | 84 |
| 14. | அமைதிச் சுவை | — | 106 |
| 15. | ஆசிரிய இராமாயணம் | — | 112 |
| 16. | தமிழன் கண்ட கல்விமுறை | — | 119 |
| 17. | காக்கை கற்பிக்கும் ஆக்க நிலை | — | 126 |
| 18. | நிகழ்வது தழீஇய எச்ச உம்மை | — | 129 |
| 19. | ஆசானின் அன்புரை – நன்னூல் நவில்வது | — | 140 |
| 20. | மெய்ம் மயக்கம் | — | 155 |
| 21. | நன்னூலும் நடைமுறை இலக்கணமும் | — | 167 |
| 22. | பதப் புணர்ச்சியும் விகுதிப் புணர்ச்சியும் | — | 202 |
| 23. | மெய்ப்பாடு-ஓர் அறிமுகம் | — | 227 |

# இயல் தமிழ் இன்பம்

## 1. புகு வாயில்

முத்தமிழ் என மூன்று பகுதிகள் உடையதாகச் சொல்லப்பெறும் பரந்த—விரிந்த பெருமை தமிழ் மொழிக்கு உண்டு. திருவள்ளுவமாலையில் சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ள கீழ்வரும் பாடலில் முத்தமிழைக் காணலாம்:

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்-மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்" (10)

என்பது பாடல். அகத்தியனை 'முத்தமிழ் முனிவன்' எனக் காஞ்சிப் புராணம் (வீரராக-6) கூறுகிறது. மூன்றாம் வகுப்புப் பிள்ளைகள் படிக்கும் நல்வழி என்னும் நூலின் காப்புச் செய்யுளாக ஔவையாரால் இயற்றப்பெற்றுள்ள,

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்-கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா"

என்னும் பாடலிலும், முத்தமிழ் என்னும் பொருளில் 'தமிழ் மூன்று' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. இன்னும் பல நூல்களிலும் முத்தமிழ் என்னும் வழக்காறு எடுத்தாளப்பட்டுள்ளது. மூன்று தமிழ் என்பன: இயல் தமிழ்,

இசைத் தமிழ், கூத்துத் தமிழ் (நாடகத் தமிழ்) என்பன வாகும்.

மக்கள் தொடக்கக் காலத்தில் வாயில் வந்தபடி இசைத்துப் பாடியிருப்பார்கள், இப்போதும் அறியாத தொழிலாளர்கள் பாடிக்கொண்டே தொழில் செய்வதைக் காணலாம். எனவே, இசைத் தமிழ்தான் முதலில் தோன்றி யிருக்க வேண்டும்.

கண்டபடிப் பாடிக்கொண்டிருந்த மக்களுள், மகிழ்ச்சி மேலீட்டால் பலர் சேர்ந்து பாடியபடியே ஆடியிருப்பர். நாளடைவில் ஆடல் பாடலோடு பல கருத்துகள் கூறி நடித்தும் இருப்பர். இதுதான் கூத்துத் தமிழ் (நாடகத் தமிழ்) ஆகும். இசைத் தமிழ் முதலாவ தென்றால், கூத்துத் தமிழை இரண்டாவதாகக் கூறலாம்.

நாடைவில் வாழ்க்கை முறைகளையும் பல அறிவுரை களையும் அமைத்துப் பாட்டு எழுதலாயினர். இலக்கியம் எனப்படும் இதுதான் இயல்தமிழ் ஆகும். பின்னர், இயல் தமிழை எவ்வாறு எழுதல் வேண்டும் என இலக்கணம் வகுத்தனர். இலக்கணமும் இயல் தமிழைச் சேர்ந்ததுதான். இந்த இயல் தமிழை மூன்றாவதாகக் கொள்ளலாம். ஆகவே, பல கருத்துகள் அமைந்த பாடல்களைப் பாடி ஆடுவதில் முத்தமிழ்க் கூறும் இருப்பதை அறியலாம்.

இயல் தமிழ் மூன்றாம் இடத்தைப் பெறினும், இசைத் தமிழிலும் கூத்துத் தமிழிலும் பல கருத்துகள் பொதிந்து கிடப்பதால், இசைத் தமிழிலும் கூத்துத் தமிழிலும் இயல் தமிழும் உள்ளது-அதாவது-இயல் தமிழ் இல்லாத இசைத் தமிழோ கூத்துத் தமிழோ இல்லை எனலாம்.

பண்டைக் காலத்தில் என்றென்ன! இக்காலத்தும் இலக்கிய விரிவுரையாற்றும் சிலர், பக்க இசை இயங்

களுடன் பாடிக்கொண்டும், கைகால்-தலை ஆகியவற்றை அசைத்து ஆடிக்கொண்டும் சொற்பொழிவு செய்வதைக் காணலாம். எனவே, இயல் தமிழ் மற்ற இரண்டு தமிழ்க் கூறுகளிலும் ஊடுருவி இரண்டறக் கலந்துள்ளது என்பது புலனாகும்.

பொதுமக்கள் கூத்தையும் இசையையும் சுவைக்கும் அளவுக்கு, ஆடல் பாடல் இல்லாமல் விளக்கப்படுகின்ற இயல் தமிழாகிய இலக்கிய - இலக்கணங்களைச் சுவைப்பது குறைவுதான்.

உரை நடை எழுதப்படாத பண்டைக் காலத்தில், எழுதப்பட்டுள்ள இலக்கியங்களில் உள்ள பாட்டுகள், இன்றும் இசையுடன் பாடிக் காட்டி வகுப்புகளில் விளக்கப் படுவதை அறியலாம். பாடுவதே பாட்டு. எனவே, எல்லா இலக்கிய வகைப் பாடல்களுமே, கருத்துக்கு ஏற்ற மெய்ப் பாடுகளுடனும்-அதாவது-உறுப்புகளின் அசைவுடனும் உரிய இசையுடனும் பாடப்பட்டன என்பது புலனாகலாம். பாட்டுகளுக்குக் கருத்துக்கு ஏற்ற இசை அமைக்கப்பட்டதும் ஈண்டு எண்ணத்தக்கது.

பண்டு, பாட்டு எழுதிய அளவுக்கு உரைநடை இல்லை. பாடல்களை விளக்கும் உரை (நடை)களே இருந்தன. பிற் காலத்தில்-அதாவது-கடந்த இரண்டு நூற்றாண்டு கால மாகத் தமிழில் உரை நடை நூல்கள் எழுதப்படலாயின. இந்த உரைநடைகளும் இலக்கியம் என்னும் பெயரில் படித்துச் சுவைக்கப்படுகின்றன. உரைநடையில், புதினம் எனப்படும் தொடர் கதைகள் இப்போது பெற்றிருக்கும் இடம் மிகுதி.

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்னும் முன்னோர் மொழிப்படி இலக்கணம் எழுந்தது. வாழ்க் கைக்கு வழிகாட்ட எழுந்த அறநூல்களைப் போல,

மொழிக்கு (இலக்கியத்திற்கு) இலக்கண நூல்கள் தோன்றின. இலக்கணம் அறியாத கல்வியை ஒரு கல்வியாக அறிஞர்கள் கருதுவதில்லை. இங்கிலாந்தில் உள்ள தொடக்கப்பள்ளிகட்கு Grammar Schools (இலக்கணப் பள்ளிகள்) என்ற பெயர் சூட்டப்பட்டதாம்.

பல்வேறு தொழில் பள்ளிகளில் கற்றுத் தருவதற்காக எழுதப்படும் நூல்களையும் இயல் தமிழில் ஒருவிதமாக அடக்கலாம். பண்டு பல்வேறு தொழில்களையும் கலைகளையும் பற்றிய செய்திகளும் பாடல்களாகவே எழுதப்பட்டுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

ஆடல் பாடல்களையே மிகுதியாகச் சுவைத்து வந்த மக்களிடையே, இயல் தமிழையும் சுவைக்கும் பழக்கம் இப்போது பெரிதும் காணப்படுகிறது. சிலருக்கு இட்லி-தோசைக்குத் தொட்டுக் கொள்ள, குழம்பு-சாம்பார்-கொசுத்து - கடப்பா - வெங்காயச் சட்னி - கொத்துமல்லிச் சட்னி - தேங்காய்ச்சட்னி - சர்க்கரை - ஆகியவற்றுள் சில பிடிக்கலாம். இவ்வளவு இருப்பினும் பிடிக்காமல், மிளகாய்ப் பொடிமீது தீராக் காதல் கொண்டு கேட்டு வாங்கித் தொட்டுக் கொண்டு இணையிலா இன்பம் எய்துபவர் சிலரும் உளர். அதுபோல், பல்வேறு துறைகளில் இன்பம் காண்பவர்போல் இலக்கணத்தில் இன்பம் காணும் மேதைகளும் உளர், 'சரியான முறையில் விளக்கப்படின், இலக்கிய இன்பத்திற்கு இலக்கணம் துணை செய்வதை அறிந்து சுவைக்க இயலும்.

எனவேதான், இந்த நூலில், அற இயல், வாழ்வியல், சமூக இயல், ஒருமைப்பாட்டு இயல்-கல்வி இயல், வழி பாட்டியல் முதலியவை தொடர்பான இலக்கிய விளக்கங் களும் உரைநடையில் தரப்பெற்றுள்ளன. இயல் தமிழ் இன்பம் பெறுவதற்காகவும், பெற்றுப் பின்பற்றுவதற்

காகவும் எழுதப்பட்டதாதலின், இந்நூலுக்கு 'இயல் தமிழ் இன்பம்' என்னும் பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

அடியேனது இந்த நூலில் ஆய்வுக் கருத்துகள் சிலவும் எண்ணத்தைக் கிளறும் புதிய கருத்துகள் சிலவும் உள்ளன. அனைத்தையும் அறிஞர்களின் - தமிழ் அன்பர்களின் மதிப்பீட்டிற்கு விட்டு விடுகிறேன். நன்றி வணக்கம்.

## 2. இன்சொல் இயம்பல்

இன்சொல் என்பது மிகவும் விலை மலிவான-இல்லை யில்லை-விலையே இல்லாத ஓர் அருட்கொடைப் பொரு ளாகும். இந்த மலிவான பொருளை மக்களுள் பெரும் பாலார் பெற்றிராதிருப்பது மிகவும் வியப்பாயுள்ளது. மலிவான பொருளுக்கு மதிப்பு இல்லை என்பது இவர்தம் எண்ணம் போலும்.

திருமூலர் மக்களைப் பார்த்துச் சொல்கிறார்: கடவுளுக்கு ஒரு பச்சிலை கொண்டுவந்து சாத்தலாமே- நமக்குப் பால் தந்து காக்கும் ஆவிற்கு ஒருவாய்ப் புல்லாவது கொடுக்கலாமே என்கிறார். நாங்கள் பச்சிலையும் வாய்ப் புல்லும் தேடிக்கொண்டு வந்து தருவது இயலாத செயல்- எங்களுக்கு இருக்கும் வேலையிலே இவற்றைத் தேடுவது எப்படி என்ற பதில் வந்ததுபோல் தோன்றிற்று. அடுத்துத் திருமூலர் தெரிவிக்கிறார்: இரவலர்க்கு-ஏழையர்க்கு ஒரு கைப்பிடி உணவாவது இடலாமே என்கிறார். யாங்கள் உண்பதற்கு முன்-சமையல் முடிவதற்கு முன் எவ்வாறு இடுவது என்ற பதில் வந்ததுபோல் தெரிந்தது. உண்பதற்கு முன் இடமுடியாவிடினும், உண்ட பிறகாவது இடலாமே என்கிறார். உண்டபின் தீர்ந்துபோய் விட்டதே-எவ்வாறு

கொடுப்பது என்ற பதில் வந்தது போலும். அங்ஙனமெனில், உண்டு கொண்டிருக்கும்போதே, வந்து கேட்பவர்க்கு-ஒரு படி சோறு தரச் சொல்லவில்லை-ஒரு பிடி சோறாயினும் தர முடியுமே என்றார். அதற்கும் நல்ல பதில் எதிர்பார்க்க முடியவில்லை போலும். முடிவாக-இறுதியாகக் கூறுகிறார். பிறர்க்கு எந்த உதவியும் செய்ய இயலாவிடினும், இனிய சொல்லாலாவது பிறரைக் குளிரச் செய்யலாமே என்கிறார். திருமந்திரம் என்னும் தமது நூலில் ஒரு பாடலில் அவர் இதைத் தெரிவித்துள்ளார்,

"யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே" (252)

என்பது அவரது பாடல். எந்த உதவியும் செய்ய முடியாதவர்க்கு, பிறர்க்கு இன் சொல்லாவது இயம்பக்கூடிய இந்த உதவியை அறிமுகப்படுத்தி யுள்ளார். விலை கொடுத்து வாங்க வேண்டாத மலிவான பொருளை மக்கட்குப் பரிந்துரைத் துள்ளார் திருமூலர்.

உலகியலில் மக்களிடையே இன்சொல்லுக்கு எதிரான வன்சொல்லே பேரரசு புரிவதால், அறிஞர்கள் பலரும் மலிவான இன்சொல்லை வற்புறுத்தியுள்ளனர். உலகத்தை இன் சொல்லால் தவிர வன் சொல்லால் மகிழ வைக்க முடியாதென நல்லாற்றூர்ச் சிவப்பிரகாச அடிகளார் நவின்றுள்ளார்.

"இன் சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன் சொலால் என்றும் மகிழாதே" (18)

என்பது அவரது நன்னெறி நூலின் ஒருபாடல் பகுதி. இன் சொல் இயம்பாவிடினும், நாயை அவிழ்த்து விட்டு விரட்டாமல் இருந்தால் போதும்-என்று ஒருவர் சொல்வது

காதில் ஒலிப்பதுபோல் கற்பனையின் தெரிகிறது. சிலர் வீடுகளில் வரவேற்பாளர் நாய்தான். வீட்டின் ஓரமாகத் தெருவில் சென்றாலுமே அந்த வரவேற்பு கிடைக்கும். இவர்களிடம் இன்சொல்லை எவ்வாறு எதிர்பார்ப்பது? சிலர் வீடுகட்குச் செல்பவர்கள், நாய் இருக்கிறதா?-என்று 'பயபக்தியுடன்' கேட்டுவிட்டு, நாய் இல்லை என்ற பதில் வந்த பின்னரே உள்ளே காலடி எடுத்து வைப்பது மரபாயுள்ளது. நாயைக் கட்டி வைத்துவிட்டோம்-அஞ்சாமல் வரலாம்-என்ற பதில் வந்த பின்னரும், குலை நடுக்கத்தோடு உள்ளே மெள்ள-மெள்ளச் செல்பவர்களும் உண்டு, ஈண்டு, "ஆசு இல் தெருவில் நாய் இல் வியன்கடை (277) என்னும் குறுந்தொகைப் பாடல் பகுதி எண்ணத்தக்கது.

இன்சொற்கள் இருக்க அவற்றைப் பயன்படுத்தாமல், சிலர் வன் சொற்களைக் கொதிக்கக் கொதிக்கக் கொட்டுவது எதற்கு என்று காரணம் தெரியாமல் திருவள்ளுவர் திகைக்கிறார். கனிந்த சுவையான இனிய கனிகள் இருக்க அவற்றை உண்ணாமல், முற்றாத-இனிப்பு ஏறாத துவர் உள்ள காய்களைப் பறித்துத் தின்பவர்க்கும் இந்த வன்சொலாளர்க்கும் வேறுபாடு இல்லை என எண்ணிப் பார்க்கிறார் வள்ளுவர். அந்த எண்ணத்தின் வெளியீடாக,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (100)

என்ற குறட்பா எழுந்தது. திருவள்ளுவர் இதற்கு 'இனியவை கூறல்' என்னும் தனித் தலைப்பு தந்து பத்துப் பாக்கள் செலவழித்துள்ளார். அவற்றுள் ஒன்று தான் மேற்கூறிய பாடல்.

உள்ளம் மகிழ்ந்து ஒன்று உதவ இயலாவிடினும், முகம் மலர்ந்து இன்சொல் வழங்குவது எவ்வளவோ மேலானது என்பது வள்ளுவர் கருத்து.

"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்" (92)

இது குறள்

சிலர் ஒருவகையான இன்சொல் இயம்புவார்கள்: தம்பி சாப்பிடு என்றால் எதுவும் சாப்பிடாது; தம்பி கையில் எது இருந்தாலும் கேட்டால் கொடுத்து விடும் - என்ற மாதிரியில் இன்சொல் கூறி, இருப்பதைப் பறித்துக் கொண்டு, வாய்ப்பேச்சால் குளிப்பாட்டி அனுப்பி விடுவார்கள்.

இன்னும் சிலர், வந்திருப்பவரைப் பார்த்து 'இவன் எப்போது எழுந்து போய்த் தொலைவான்' என்று உள்ளத்தில் எண்ணிக்கொண்டிருப்பார்கள். வந்தவர் ஒரு விதமாக விடைபெற்று வெளிவாயிற்படியண்டை போன பிறகு, 'காஃபி சாப்பிடாமல் போகிறீர்களே – என்ன சாப்பிடுகிறீர்கள்? சர்க்கரை போடலாமா? டிக்கேஷ்சன் லைட்டா இருக்கவேண்டுமா? காஃபி பிடிக்காவிடின், ஆர்லிக்சாவது - போர்ன் விட்டாவாவது சாப்பிடலாமா? எதுவும் பிடிக்காவிடின் வெறும் பாலாவது சாப்பிடலாமா? - என்று அடுக்கிக் கொண்டே - நகர்ந்து கொண்டே வழியனுப்புவார்கள். இவர்கள் எப்படி ஏமாற்ற முயன்றாலும், எப்படியாவது வாங்கிப் பருகிவிட்டுச் செல்லும் பேர்வழிகளும் உண்டு, காஃபி சாப்பிடுகிறீர்களா- என்று ஒப்புக்காவது கேட்கும் பண்பும் ஒருவகையில் பாராட்டுக்கு உரிய இன்சொல்லே.

சில இடங்களில், என்ன சாப்பிடுகிறீர்கள் என்று கேட்டாலேயே - 'போச்சு' - ஒன்றும் கொடுக்க மாட்டார்கள் — என்பது பொருள். உண்மையில் கொடுப்பவர் என்றால், கேட்காமலேயே காஃபி வந்து விடுமே. சிலர் காஃபி சாப்பிடுகிறீர்களா என்று கேட்டால், சீக்கிரம்

எழுந்து போங்கள் என்று பிடித்துத் தள்ளுவதாகப் பொருள் கொண்டு, மரியாதையாக அந்த இடத்தை விட்டு அகன்று விடல் வேண்டும். இவர்களின் பேச்சு மறைமுகமான - வஞ்சகமான வன்சொல்லாகக் கருதப்படும்.

ஒரு சிலர் வந்தவரை நோக்கி, "ஏம்பா, நீ செய்வது ஒன்றும் பிடிக்கவில்லை - இப்படி எல்லாமா பேசுவது - இப்படி எல்லாமா நடந்து கொள்வது? 'ச்சே-ச்சே' — இது சரியில்லை" — என்று எதன் தொடர்பாகவோ கடிந்து பேசுவார்கள். பேச்சின் இடையிலே, உள்ளே இருப்பவரை அழைத்து, 'தம்பிக்குக் காஃபி கொண்டு வந்து கொடு' என்பார்கள். வந்தவர் எனக்குக் காஃபி வேண்டியதில்லை என்று சொன்னால், வீட்டிற்கு உடையவர், 'பார்த்தாயா-பார்த்தாயா? ஏன் காஃபி வேண்டியதில்லை? நம் வீட்டிற்கு வரின் கட்டாயம் காஃபி சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, உள்ளேயிருந்து காஃபி வந்துவிடும். 'இந்தா—இந்தக் காஃபியைப் பிடி — கட்டாயம் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும் — என்று கட்டாயப்படுத்திப் பருகச்செய்வர்.

முதலில், சிலர், உண்மையாக ஒன்றும் தராமல் இனிமையாகப் பேசி வாய்ச் சொல்லாலேயே காஃபி கொடுப்பதாக நடித்து அனுப்பி விடுவார்கள் என்பதை அறிந்தோம். இன்னாரின் அகம் வேறு—முகம் வேறு. அடுத்தாற்போல், எதற்காகவோ வன்மையாகக் கண்டித்துப் பேசியவர், உண்மையிலேயே உள்ளம் உவந்து கட்டாயப் படுத்தியாவது சாப்பிடச் செய்துள்ளார். இதனால் என்ன தெரிகிறது? வஞ்சக உள்ளம் உடையவர் பேசும் இன்சொல்லினும் உண்மையான அன்புள்ளம் உடையவர்கள் பேசும் வன்சொல்லே இனிமையானது என்னும் கருத்து தெரிய வருகிற தல்லவா? இதைத்தான் சிவப்பிரகாச அடிகளார் தமது நன்னெறி நூலில்,

"மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்இனிது ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க" (2)

என்று கூறியுள்ளார். முகம் மலர்ந்து நோக்குவதோடு அகமும் உண்மையாக உவந்து இன்சொல் இயம்பவேண்டும் என்று அறிவித்துள்ளார் வள்ளுவர்.

"முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொலினதே அறம்" (93)

என்பது திருக்குறள் பாடல்.

பிறர் நம்மிடம் இன்சொல் பேசினால்தான் நமக்கு மகிழ்ச்சியா யிருக்கிறது. இதுபோல் நாமும் பிறரிடம் இன்சொல் பேசினால்தானே அவர்கட்கும் மகிழ்ச்சியா யிருக்கும் என்பதை உணராமல், சிலர் பிறரிடம் வன்சொல் பேசுவது எதற்காக? என்று வருந்துகிறார் வள்ளுவனார்.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது" (99)

என்பது குறள். வன்சொல் வழங்கும் பொருளா என்று கேட்பதுபோல் தெரிகிறது.

ஒருவர் தம்மை அணி (அலங்காரம்) செய்து கொள்வதற்குப் பொருள் செலவு செய்து விலைமிக்க ஆடை அணிகலன்கள் வாங்க வேண்டிய தில்லையே! தம்மை அணி செய்வதற்குப் பணிவுடன் கூடிய இன்சொல்லே மலிவானதும் மிகவும் உயர்ந்ததும் ஆன அணிகளாகும் என்பது வள்ளுவம்!

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி, அல்ல மற்றுப் பிற" (95)

என்பது அந்த வள்ளுவம்.

எனவே, மக்கள் ஒருவர்மேல் ஒருவர் இன்சொல் மழை பொழிந்து அதில் நனைந்து குளிர்ந்து நன்கு மகிழ்வார்களாக!

# 3. உயிர் அன்பு ஒருமைப்பாடு

உயிர் நேயம் என்பது உயிர்களிடத்தில் செலுத்தும் நேயம். அதாவது அன்பு எனப் பொருள்படும். இதைச் சிலர் 'ஆன்ம நேயம்' என்பர். தமிழில் 'உயிர் அன்பு' எனலாம். மேலோடு நோக்கின், உயர்திணையாகிய மக்களிடம் - மக்கள் உயிரியிடம் செலுத்தும் அன்பு என்பது பெறப்படும். சிறிது ஆழ்ந்து நோக்கின், அஃறிணையாகிய-ஓரறிவு உடைய உயிர்கள் எனப்படும் மரம் செடி கொடி புல்பூண்டு முதல் ஆறறிவுடைய மாந்தர் வரை அனைத்து உயிர்களிடமும் செலுத்தும் அன்பு என்னும் கருத்து கிடைக்கும்.

உயிர்ப்பது அதாவது சுவாசிப்பது உயிர். ஆன்மா என்னும் வட சொல்லின் வேர்ச் சொல்லாகிய 'ஆன்' என்பதற்கும் 'உயிர்த்தல்' என்பதுதான் பொருளாகும். பெரும்பாலும் பல்வேறு உயிர்கட்கும் உயிர்ப்பு - சுவாசிப்பது உண்டு. மர இனங்கள் (தாவரங்கள்) மக்கள் வெளியிடும் கரியகத்தை (கரிமமில வாயுவை) உட்கொண்டு, உயிரகத்தை (பிராண வாயுவை) வெளியிடும் செய்தி ஈண்டு எண்ணத் தக்கது. 'அதானல், மர இனங்களையும் உயிர்ப் பொருளாகச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

மக்கள் ஒருவர்க்கு ஒருவர் அன்பு செலுத்தல் வேண்டும் என்னும் கருத்தோடு, பறவை-விலங்கு முதலிய அஃறிணை உயிர்களையும் கொல்லலாகாது-கொன்று தின்னலாகாது என்ற கருத்தும் உயிர் அன்பில் (ஆன்ம நேயத்தில்) அடக்கப்படும்.

மர இனமான தாவரங்கட்கும் பல உணர்வுகள் உண்டு. அவற்றுள்ளும் ஆண்பெண் உண்டு. எல்லா மர இன உயிரிகளும் காதல் புரிகின்றன. அவற்றிலிருந்து கிடைக்கும் தானியங்கள்-பருப்பு வகைகள்-கொட்டைகள் முதலியனவும்

உயிருள்ள பொருள்களே. அவற்றை விதைத்தால் முளைத்து வளர்கின்றன வாதலின், அவற்றை உண்பதும் உயிர்க் கொலையே என்பது, ஒரு காலத்தில் வாழ்ந்த துறவியர்கள் சிலரின் கடுமையான கோட்பாடாக இருந்தது. அதனால் அவர்கள் காய் கனிகளின் தசைப் பகுதியை மட்டும் உண்டு, உள்ளிருக்கும் கொட்டைகளைப் போட்டு விடுவார்களாம். பச்சை இலைகளைப் பறித்தால், அவற்றையுடைய மரஞ்செடிகட்கு ஏதாவது நோக்காடு இருக்கலாம் என எண்ணித் தாமாகக் கீழே விழுந்த உலர்ந்த சருகுகளைக் கடுமையான துறவியர் உண்டு வந்தனர் என்று சொல்வதும் உண்டு.

இச் செய்திகளை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு நோக்குங்கால், மர வகைகளைப் பற்றிக் கவலைப்படாவிடினும், மக்கள் தமக்குள்ளேயாவது ஒருவரை ஒருவர் துன்புறுத்தாமல், ஒருவர்க்கு ஒருவர் அன்பு செலுத்தி வந்தாலேயே போதும்போல் தோன்றுகிறது. எந்த உயிரையும் கொல்லாமலும் கொன்று தின்னாமலும் வாழ்பவனை எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும் எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" (260)

என்பது திருக்குறள் பாடல். கைகூப்பித் தொழும் என்பது கற்பனை நயம் செறிந்த தொடராகும்.

உயிர்கள் எல்லாமே தன்னலம் உடையவை. உயிரிகளே ஒன்றை ஒன்று கொன்று தின்பதைக் காண்கிறோம். சிங்கம் புலி-கரடி போன்றவை, மர இனம் அல்லாத பிற உயிரிகளைக் கொன்று தின்கின்றன. மாடு-மான்—யானை போன்றவை மர வகைகளை மட்டும் உண்கின்றன. இந்த அமைப்பின் காரணம் புரியவில்லை. ஆனால், மாந்தரோ

இரண்டையும் விட்டாரிலர்; இதையும் ஒரு கை பார்க்கின்றனர்-அதையும் ஒரு கை பார்க்கின்றனர். மக்களுள் மரவகை உணவு மட்டும் உண்பவர் மிகவும் குறைவானவரே.

ஒருவர் இன்னொருவரை நோக்கி, தழைகளையும் இலைகளையும் தின்பதற்கு நாம் என்ன ஆடா-மாடா? என்று கேட்டார். அதற்கு மற்றவர், ஆடுமாடுகளைக் கொன்று தின்பதற்கு நாம் என்ன சிங்கம் புலி கரடியா? - என்று வினா எதிர் வினா விடை விடுத்தார். மாந்தர் மாந்தரையே கொன்று தின்னும் காலம் இருந்தது - இடங்கள் இருந்தன. இப்போது இது இல்லை. நாம் அறியாத காடு - மலைப் பகுதிகளில் தீவுகளில் எங்கேனும் இந்த நிலைமை இப்போதும் இருக்குமோ என்னவோ!

தனியொரு மாந்தர் பிறர் உதவியின்றி உலகில் வாழ முடியாது. ஒருவர்க்குக் குறைந்தது குடும்பத்தின் உதவியாவது தேவை. ஒரு குடும்பத்திற்கு ஊரின் உதவி தேவை. ஓர் ஊருக்கு நாட்டின் உதவி தேவை. ஒரு நாட்டிற்கு உலகத்தின் உதவி தேவை. எனவே, குடும்ப ஒருமைப்பாடு - ஊர் ஒருமைப்பாடு - நாட்டு ஒருமைப்பாடு - உலக ஒருமைப்பாடு என்பன முறையே தேவையாகும்.

இந்த அடிப்படையில், தன்னுயிர் போலவே மன்னுயிரையும் காத்து உலகத்தோடு ஒன்றி வாழ்தல் உயிர் அன்பு (ஆன்மநேயம்) எனப்படுகிறது. தமக்குத் துன்பம் நேரின் தாம் வருந்துவது போலவே, பிற உயிர்களும் துன்பம் நேரின் வருந்தும் என்பதைத் தம் சொந்தப் பட்டறிவால் உணர்ந்து, பிற உயிர்களின் நன்மையிலும் கருத்து செலுத்தல் வேண்டும். பிற உயிர்களின் துன்பத்தைத் தமக்கு வந்த துன்பம் போல் எண்ணி, அவ்வுயிர்கட்கு வேண்டிய நலம் செய்யாவிடின், ஆறறிவு பெற்றிருப்பதால் - கல்வி கேள்வி

யறிவும் பெற்றிருப்பதால் என்ன பயன் இருக்க முடியும்? - என்று வினவுகின்றார் வள்ளுவர்;

"தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்" (318)

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை" (315)

என்பன குறள்கள்

மிகுதியான மலப்போக்கினால் மலத்தோடு மலமாய் மயங்கிக் கிடந்த ஒருவனைக் கவுதமப் புத்தர் எடுத்துத் தூய்மை செய்து காப்பாற்றினார் என்பது நடந்த வரலாறு. பெரு நோய் பிடித்தவனைத் தொட்டுப் பிடித்து அவனுக்கு ஆகவேண்டிய உதவிகளை அண்ணல் காந்தியடிகள் புரிந்தார் என்பதும் உலகறிந்த வரலாறு. இஃதன்றோ உயிர் அன்பு-ஆன்மநேயம்!

தாம் வேறு - உயிர் அன்பு வேறு என்று சொல்ல முடியாமல், தாமே உயிர் அன்பின் மொத்த உருவமாய் விளங்கிய வடலூர் இராமலிங்க வள்ளலார், பசித்தவரைப் பார்க்கப் பொறாமல், இலவசமாக உணவளிக்க அறச்சாலை அமைத்து உதவினார். வாடிய பயிரைக் கண்டாலும் அவர் வாடினாராம். பசியில் வருந்தி வீடு தோறும் சென்று இரந்தவரைக் கண்டு பதைத்தாராம்; பிணியினால் வருந்தியவரைக் கண்டு உள்ளம் துடித்தாராம்; மானம் ஒரு பக்கம் இழுக்க - ஏழமை ஒரு பக்கம் இழுக்கச் செய்வது அறியாது உள்ளம் சோர்ந்து இளைத்தவரைக் கண்டு தாமும் உள்ளம் இளைத்துச் சோர்ந்து போனாராம்.

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்

நீடிய பிணியால் வருந்துவோர் என்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்''

என்பது வள்ளலாரின் அருட்பா. புத்தரும், ஏழைகளையும் நோயாளிகளையும் அகவை முதிர்ந்து தளர்ந்தவர்களையும் கண்டு ஆழ்ந்த எண்ணத்தில் ஈடுபட்ட செய்தியை வரலாறு அறிவிக்கிறது.

பார்த்தார் சுப்பிரமணிய பாரதியார். உலகத்தில் ஒரு மனிதனுக்கு உணவு இல்லை எனினும் இந்த உலகத்தையே அழித்து விடவேண்டும் எனக் கனல் கக்கினார்:

''தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்''

என்று கொக்கரித்தார். மற்றும், பெரியோர்கள் பலர் இந்தக் கோட்பாட்டைப் பல கோணங்களில் நின்று அறிவித்துள்ளனர். கடவுளுக்கு உணவு படைக்கின் அது உயிர்களைச் சென்றடையாது; உயிர்கட்கு உணவிடின் அது கடவுளுக்கும் ஏற்புடைத்தாகும் - என்பது திருமூலர் கருத்து;

''படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க் காகாது
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே'' (1857)

என்பது திருமூலரின் திருமந்திரப் பாடல்.

''அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்''

என்றார் வடலூர் வள்ளலார்.

''எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே''

என்றார் தாயுமானவர் (பராபரக்கண்ணி)

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" (85)

என்றருளினார் திருமூலர்.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (399)

என்றறிவித்தார் வள்ளுவனார்.

ஆக, இவ்வாறெல்லாம் அறிவிக்கப்பட்டுள்ள உயிர் அன்பு (ஆன்மநேயம்) ஏட்டளவில் இருந்தால் போதுமா? இப்போது, ஒரே உலகக் கொள்கையாகிய உலக ஒருமைப் பாடு பேசப்படுகிறது. இந்தக் கொள்கை வெற்றி பெறின், உயிர் அன்பு ஒருமைப்பாடு வெற்றி பெற்றதாகப் பொருள் கொள்ளலாம். கடவுள் நெறி அதாவது சமயநெறி வற்புறுத் துவதும் இந்த உயிரன்பு ஒருமைப்பாடே யாகும்.

## 4. காட்சிக்கு எளிமை

உலகில் செல்வர்கள் சிலர் செய்யும் ஆரவார - ஆடம்பரங்களைக் கண்டு, போதிய செல்வம் இல்லாதவரும் அந்தப் பாதையில் சென்று பின்னர் இடர்ப்படுகின்றனர். தம்மைப் பார்த்து உள்ளம் நாணும் ஏழைகட்காகவாவது செல்வர்கள் எளிமையாய் இருப்பது நல்லது.

செல்வர் சிலர், வாழ்க்கை நடைமுறையில் எளிமையாய் இல்லாவிடினும், தம்மை அணுகும் மக்களிடமாவது எளிமை யாய்ப் பழகினால், அவர்கட்கு ஒரு வகையில் உள்ளம் நிறைவடையும்.

மேட்டுக் குடியினர், பிறர்க்கு எந்தப் பெரிய உதவியும் செய்யாவிடினும், வந்து காண்பவர்க்கு எளியவராய், விலை

இல்லாத இன்சொல் பேசினாலே, வந்தவர் பெருமை கொள்வார் - பெருமை செய்வார். இது மன்னர்க்கும் பொருந்தும்.

இக்கருத்தினைப் பொருட்பாலில் இறைமாட்சி என்னும் தலைப்பில் உள்ள

> "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
> மீக்கூறும் மன்னன் நிலம்" (386)

என்னும் குறட்பா அறிவுறுத்துகின்றது. இறை எனப்படும் அரசனுக்கு இருக்க வேண்டிய மாண்புகளைக் கூறும் பகுதி இது.

காட்சிக்கு எளியன் என்னும் அணுத் தொடருக்குள் ஆழ்ந்த அகன்ற அருங் கருத்துகள் பல பொதிந்து கிடக்கின்றன. காட்சிக்கு எளியன் என்றதும், பிறருக்கு எளிதில் காட்சி கொடுப்பவன்-அதாவது-யாரும் வந்து எளிமையாய்க் காணக்கூடியவன் - எப்போதும் எந்த நேரத்திலும் வந்து எளிமையாய்க் காணக்கூடியவன் - எந்த இடத்திலும் வந்து எளிமையாய்க் காணக் கூடியவன் - என்னும் கருத்துரை நினைவுக்கு வரும்.

ஆனால், உலகியலில் பல தலைவர்களைச் சிலரே சென்று காணமுடியும்; எளிய பொது மக்கள் காணவே முடியாது. அன்றியும், குறிப்பிட்ட (Visiting Hours) நேரத்தில் மட்டுமே - குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே காண முடியும். இவர்கள் காட்சிக்கு அரியர் ஆவர். இவர்கட்கு எதிர் மாறான தலைவனே காட்சிக்கு எளியன் எனப்படுபவன்.

காட்சிக்கு எளியன் என்னும் சுரங்கத்தில் இன்னும் ஒரு புதிய பொருள் பொதிந்து கிடக்கிறது; அகழ்ந்து பார்த்தால் அகப்படும். கையில் கத்தி-கம்பு வைத்துக் கொண்டிருக்கும்

கடுந் தெய்வங்களைப் போல் இல்லாமல் - உயிரைப் பறிப்பது போல் உருட்டி மிரட்டிப் பார்க்கும் உலுத்தர் களைப் போல் இல்லாமல், காந்தியடிகளைப் போலக் காண்பதற்கு எளிய தோற்றம் உடையவன் - அதாவது - காண வருவோர்க்கு நம்பிக்கை யளிக்கத்தக்க இனிய எளிய தூய தோற்றம் உடையவன் என்பதுதான் அந்தப் புதிய பொருள்; இத்தகையோனைக் காட்சிக்கு எளியன் எனல் முக்காலும் சாலும்.

காட்சிக்கு எளியன் என்னும் ஆழ்கடலுள் குளித்தால் மேலும் ஓர் ஆணி முத்து கிடைக்கலாம். அந்தத் தலைவன் அங்கே யெல்லாம் போகமாட்டான்; இங்கே மட்டுமே வருவான் என்றோ - தனக்கு உற்றவர் வீடுகட்கு மட்டுமே செல்வான்; வருந்தி யழைத்தாலும் மற்றவர் வீடுகட்கு வரமாட்டான் என்றோ - யாரும் சொல்ல முடியாது. கண்ட இடங்களுக்குச் சென்றால் தன் மதிப்பு குன்றிவிடும் – அல்லது தனக்குத் தீங்கு நேரும் என்றெல்லாம் அஞ்சி அவன் தயங்க மாட்டான்; எங்கும் செல்வான்; எல்லோரையும் காண்பான். அதாவது, எங்கோ, எப்போதோ அரிதாய்க் காணப்படுபவன் என்ற இழுக்குக்கு இடமின்றி, எங்கும் எளிதாய் அடிக்கடிக் காணப்படுவான் என்பதுதான் அந்த ஆணிமுத்து அனைய கருத்து.

மேற்கூறிய அனைத்துப் பண்புகளும் உடையவனே நூற்றுக்கு நூறு காட்சிக்கு எளியன் எனப் பாராட்டற்கு உரியன். எத்துணை இனிய கருத்து! எத்துணை உயர்ந்த குறள்!

ஒரு சிறிது படிப்போ, பட்டமோ, பதவியோ, பணமோ வந்து விட்டாலே, தங்களைப் பெருமக்கள் என்று தாங்களே தவறாக எடை போட்டுக் கொண்டு, பலரோடு பழகாமல், பேசாமல், தனியிடத்தில் தங்களைத் தாங்களே சிறைப் படுத்திக் கொள்கின்ற அற்பர்களுக்காக இந்தக் குறள்

இயற்றப் படவில்லை. இந்தப் பதர்கள் எக்கேடு கெட்டால் என்ன? இவர்தம் செயலால் ஆவதோ, அழிவதோ ஒன்றும் இல்லை. மன்பதையோடு (சமுதாயத்தோடு) இரண்டறக் கலந்து பழகாத இந்த மர மண்டைகள் செத்தவர்க்கு நிகர். செத்தவர் எவ்வாறு வந்து பழகமுடியும்? இவ்வாறு குறுக்கு வழியில் சுருக்கப் பெருமக்கள் ஆக முயல்கின்ற இன்னோர்க் காகவே,

"சிறியரேம் மதிக்கும் இந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுளார் மூக ராவர்
பறியணி செவியுளாரும் பயிறரு செவிட ராவர்
குறியணி கண்ணுளாரும் குருடராய் முடி வரன்றே"

(பிறரை ஏறெடுத்துப் பாராமையால் குருடர்; பிறர் சொல்வதை மதித்துக் கேளாமையால் செவிடர்; பிறரிடம் பேசாமையால் ஊமையர்) - என்ற குசேலோபாக்கியானப் பாடலும்,

"பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடின்
உருத்தெரி யாமலே ஒளி மழுங்கிடும்
மருத்து உளவோ எனில் வாகடத் திலை
தரித்திரம் என்னுமோர் மருந்தில் தீருமே"

என்ற தனிப்பாடலும் எழுந்தன போலும். ஆனால், இக் குறள் எழுந்தது, நாட்டு மக்களின் தலையெழுத்தை விதிக் கின்ற நாட்டுத் தலைவனுக்காகவே யாம். மேலும் இக்குறள் எழுந்தது இந்தக் குடியரசுக் காலத்தில் அன்று; எல்லாம் வல்ல முடியரசர் காலத்தில். அங்ஙனமெனில், இக்காலை எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

வேந்தன் எளியவனாய் இருக்க வேண்டும் என்றால் இளித்த வாயனாய் இருக்க வேண்டும் என்பதன்று; கடு கடுப்பு சிடுசிடுப்பு, வீரம்-வேகம் எல்லாம் இருக்க வேண்டிய

இடத்தில் இருக்க வேண்டும்; தன்னை நாடியவரிடம் இருக்கக்கூடாது. அதியமான் என்னும் அரசனை ஒளவையார் பாடியுள்ளார். 'யானைப் பொம்மையுடன் விளையாடு வதைப் போலச் சிறுவர்கள் தன்னுடன் விளையாடித் தன் கொம்புகளை நீரில் கழுவுமளவிற்குக் காட்டி நிற்கும் ஒரு பெரிய யானையைப் போல, அதியமான் தன்னைச் சேர்ந்தோ ரிடம் இனிமையாய்ப் பழகுவானாம்; அதே யானை மதம் பிடித்துத் திரிந்தாற் போலத் தன் பகைவரிடம் அவன் நடந்து கொள்வானாம்' என்பது ஒளவையார் பாடலின் கருத்து. இதனை,

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே"

என்னும் புறநானூற்றுப் பாடலால் அறியலாம். இப்படிப் போல, சங்க நூல்களில் இன்னும் பலப்பல எடுத்துக் காட்டு கள் உள. எனவே, மன்னன் தன்னை நாடி வந்தோர்க்கு எளிதில் கிடைக்கும் பொருளாயிருக்க வேண்டும். அவ்வா றிருந்தால்தான், மக்களின் குறைகளையும், முறைகளையும் நேரில் அறிந்து போக்கவியலும்.

அடுத்து, கடுஞ்சொல்லன் 'அல்லனேல்' என்றார் வள்ளுவர். ஏன், 'இன்சொல்லன்' என்றிருக்கலாமே. இல்லை — இன்சொல்கூட வேண்டியதில்லை; கடுஞ்சொல் இல்லாதிருந்தால் போதும். அரசன் சில குற்றங்களைக் கண்டிக்கும் போது இன்சொல் கூறமுடியாமற் போகலாம். ஆனால் கடுஞ்சொல்லின்றி நடுநிலையில் நடந்து கொள்வது நன்று.

இந்தக் குறளினை இக்கால முறைக்கு வைத்துப் பார்ப்போம். இப்போது பொதுமக்கள் அரசாங்கத்துக்கு ஒருகுறை எழுதித் தெரிவித்தால், அது பல கைக்கு மாறிப் பதிலுருவத்தில் மக்களின் கைக்கு வரப் பல நாட்கள் – பல திங்கள்கள் ஆகலாம். அந்தத் தாள்கட்டு 'சிவப்பு நாடா' வால் கட்டப்பட்டுக் கிடக்கும். இதற்குத் தான் 'சிவப்பு நாடா முறை' என்பது பெயர். இந்நிலை கூடாது. மக்கள் வேண்டுகிற குறைகளையும் வெளியிடுகின்ற முறைகளையும் அரசன் நேரில் அறிந்து உடனுக்குடன் ஆவனபுரிய வேண்டும் — அதாவது 'சிவப்பு நாடா முறை' ஒழிய வேண்டும் என்பது போல வள்ளுவர் அன்றே கூறியுள்ளார். இப்போது அரசியலார் இதில் கண் செலுத்தி யிருப்பதாகத் தெரிகிறது.

முடியரசுக் காலத்திலேயே அரசனது கடமையைச் சுட்டிக் காட்டிய வள்ளுவரது துணிவு பாராட்டத்தக்கது; மன்னன் கடுஞ்சொல் இன்றிக் காட்சிக்கு எளியனாக இருந்து சிறக்க வேண்டும் – நாடு நலம் பெற வேண்டும் என்ற வள்ளுவரது விருப்பம் வரவேற்கக் கூடியது; அவரது பரிந்துரையான இந்த அறிவுரை ஆட்சித் தலைவர்கள் பின்பற்றக் கடவது. வாழ்க வள்ளுவம்!

## 5. இன்னா செய்தார்க்கு ஒறுப்பு

இந்தத் தலைப்பு, திருவள்ளுவரின் ஒரு திருக்குறள் பாடலின் முற்பகுதித் தொடர்புடையது.

திருவள்ளுவர் ஒரு வகையில் கடுமையான பேர் வழியாகக் காணப்படுகிறார். உலகில் மக்கள், பெரும்பாலும் தமக்குத் தீமை செய்தவர்க்குத் திரும்பத் தீமையே செய்வர். தீமை செய்தவர்க்கு அடி உதை கொடுத்தல், அவருடைய

தொழிலையும் செல்வத்தையும் அழித்தல், அவர்களைப் பற்றித் தூற்றிப் பேசுதல், பழிக்குப் பழிவாங்குதல் முதலிய ஒறுப்புகளை (தண்டனைகளை) மக்கள் பதிலுக்குப் 'பரிசு' ஆகத் தருகின்றனர். இன்னா செய்தாரை ஒறுத்தல் அதாவது தண்டித்தல் உலக இயல்பாகத் தெரிகிறது. 'இன்னா' என்பதற்கு, இனிமை தராத துன்பம் என்பது பொருள்.

அறநெறி நூல் இயற்றிய வள்ளுவர் மட்டும் இதற்கு விதி விலக்கா என்ன! தீமை செய்தவர்க்கு ஒறுப்பு தரவேண்டும் என்கிறார். வள்ளுவர் பரிந்துரைக்கும் ஒறுப்பு கடுமையானது; தீமை செய்தார்க்குத் தீமை செய்யப் பட்டவரால் கொடுக்க முடியாத அரிய பெரிய ஒறுப்பாகும். வள்ளுவர் அறிமுகப்படுத்தும் ஒறுப்பை அனைவராலும் அளிக்கவியலாது. அத்தகைய அரிய பெரிய ஒறுப்புதான் யாதோ?

துன்பம் செய்தவர் நாணும்படியாக-வெட்கித் தலை குனியும்படியாகத் தரும் ஒறுப்புதான் வள்ளுவரின் பரிந்துரை. ஏச்சுப் பேச்சினால் நாணுவார்களா? அடி உதை கொடுப்பதால் தலை குனிவார்களா? அவர்கட்கு அழிவு செய்வதனால் நாணித் தலை வணங்குவார்களா? மாட்டார்கள். நாணித் தலை குனிவதற்கு மாறாகத் திரும்ப வும் தீமை செய்வார்கள் - தீமையிலும் பெரிய தீமைகளைச் செய்வார்கள் - சினம் பொங்கி மேலும் அழிவு வேலை செய்வார்கள். எனவே, அவர்களைத் தலை குனியுமாறு செய்வதற்கு உரிய வழியும் வள்ளுவனார் சொல்லிக் கொடுத்துள்ளார்.

தீமை செய்தவர்க்குத் தரவேண்டிய ஒறுப்பாவது, அவருக்கு நன் முறையில் - நயமான முறையில் நன்மை

செய்தலே யாகும் - என்பதுதான் வள்ளுவரின் கண்டு பிடிப்பு. இதை அறிவிக்கும் குறட்பா,

“ இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்” (314)

வள்ளுவர் இந்த உலகத்தில் இருந்து கொண்டுதான் இவ்வாறு கூறியுள்ளாரா? தீங்குக்குத் தீங்கே புரியும் மக்கள் மந்தையின் நடுவில் இருந்து கொண்டுதான் இவ்வாறு கூறியுள்ளாரா? வள்ளுவர் இவ்வாறு பரிந்துரைத்துப் பல நூற்றாண்டு காலம் ஆகியும், மக்கள் இந்த வழியைப் பின்பற்ற வில்லையே - ஏச்சுக்கு ஏச்சு - பேச்சுக்குப் பேச்சு - அடிக்கு அடி - உதைக்கு உதை - அழிவுக்கு அழிவு - என்பனவே இன்றும் நடைமுறையில் உள்ளனவே. ஆம் - இன்றும் மக்களின் நடைமுறை இவ்வாறு இருப்பதால் தான், இந்தக் குறள் பாடலுக்கு இன்னும் பெருமை இருந்து கொண்டுள்ளது போலும்!

வள்ளுவனார் ‘இன்னா செய்யாமை’ என்னும் ஒரு தலைப்பு இட்டுப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். பதிலுக்குத் துன்பம் செய்தால், நாம் தப்ப முடியாதபடி மேலும் துன்பமே பரிசாகக் கிடைக்கும். முற்பகலில் ஒருவர்க்குத் தீமை செய்யின், பிற்பகலிலேயே அந்தத்தீமை கொடிய வடிவெடுத்துத் திரும்ப நம்மை வந்தடையும். பதிலுக்குத் துன்பம் செய்யா திருத்தலே, தூய உள்ளத்தினரின் கோட்பாடாகும் - என்றெல்லாம் வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

“ செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்” (313)

“ பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்” (319)

"கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்" (312)

என்பன குறள்கள்.

திருவள்ளுவர் சான்றாண்மை என்னும் தலைப்பில் இது போன்ற ஒரு கருத்து வழங்கியுள்ளார். தமக்குத் துன்பம் செய்தவர்க்கும் இன்பமே – இனிமையே செய்யாவிடின், எவரும் சான்றோர் எனப் படுதற்குத் தகுதியாகார் என்பது கருத்து.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு" (987)

என்பது குறள். இன்னும் மேலே சென்றுள்ளார் பொய்யா மொழியார். 'பண்புடைமை' என்னும் தலைப்பில் அவர் கூறியுள்ள கருத்துகள் இரண்டினைக் காண்பாம். விளை யாட்டாகவும் பிறரை இகழ்ந்து பேசுதல் துன்பத்திற்கு இடமாகும். பிறர் படும் துன்பத்தை உணர்ந்து இரங்குவோர் பகைவர்க்கும் உயர்ந்த பண்பான நற்செயல்களையே புரிவர். தம்மொடு நட்பு கொள்ளாமல் தமக்குத் தீமை செய்தவர்க்கும் நற்பண்புடன் நன்மை செய்யாதவர்கள் மிகவும் கடைப்பட்டவ ராவர். அதாவது - தாழ்ந்தவராகக் கருதப்படுவர் - என்பன தெய்வப் புலவரின் கருத்துகள்!

"நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு" (955)

"நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை" (998)

என்பன குறள் பாடல்கள்.

ஈண்டு 'கருத்து ஒப்புமை காண்டல்' என்னும் முறையில் ஏசு பெருமானின் கருத்து ஒன்றைக் காண்போமே. "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு"

என்பதுதான் அந்தக் கருத்து. இதன் உட்பொருள் என்ன? ஒருவர் நமக்குத் துன்பம் செய்யின், பதிலுக்கு அவருக்குத் துன்பம் செய்யக்கூடாது என்பதாகும். 'மறு கன்னத்தைக் காட்டு' என்பது பொருள் பொதிந்த தொடர் - அதாவது - அவர் உன்னை அடித்ததாகவே கருதாதே - அவர் உன்னை அடிப்பதில் இன்பம் காண்கின்றார் என்றால், அவருக்கு இன்னொரு கன்னத்தை வேண்டுமானாலும் காட்டு - அடித்து அவா அடங்கட்டும் - ஆசை தீரட்டும். என்பது இதன் உட்பொருள் எனலாம்.

வள்ளுவப் பெருந்தகையும் ஏசு பிரானும் கூறியுள்ள ஒத்த கருத்தில் ஒருவகைச் சிக்கல் எழலாம். அஃது என்ன? தமக்குத் தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்யின், மேலும் தீமை செய்வார் என அஞ்சி நன்மை செய்து அடி பணிகிறான் - இவன் ஒரு கோழை - என்று தீமை செய்த வரோ பிறரோ கருதலாம். கருதிவிட்டுப் போகட்டுமே! தம்மால் எதிர்க்க முடியாதவரிடத்தில் அடங்கிப் போவது நன்மைதானே! மற்றும், தம்மால் எதிர்க்க முடிந்தவரிடத்தும் அதாவது தம்மினும் வலிமை யற்றவரிடத்தும் அடங்கி ஒழுகின், 'எவ்வளவோ பெரியவர் தம்மினும் தாழ்ந்தவ ரிடத்தும் அடங்கி ஒழுகுகிறாரே - எவ்வளவு பண்புடைமை! என்று உலகம் போற்றும். இங்கே, 'சான்றாண்மை' என்னும் தலைப்பில் வள்ளுவர் கூறியுள்ள கருத்துகள் நுணுகி நோக்கி மகிழ்தற்கு உரியன. அவை வருக: வல்லார்க்கு வலிமை எனப்படுவது பணிவுதான்; அப்பணிவு, சான்றோர் தம் பகைவரைத் திருத்த உதவும் படைக்கல மாகும். ஒருவரது சால்புடைமையை அறிவதற்கு 'உரைகல்' எது எனில், தமக்கு நிகர் அல்லாதவரிடத்தும் தோல்வியை ஒத்துக்கொள்ளும் அடக்கம்தான். இவை வள்ளுவரின் கருத்துகள்.

" ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை" (985)

" சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்" (986)

இந்த அறிவுரையை இடத்திற்கு ஏற்றாற்போல் செயல் படுத்தல்வேண்டும். மிகவும் கொடிய முரடன் ஒரு கன்னத்தில் அறைந்தால், அவனிடம் மறு கன்னத்தைக் காட்டின், அவன் காட்டுபவனை நோக்கி, 'என்னடா, விடைக்கிறாயா' என்று சொல்லிச் சினங் கொண்டு, மற்றொரு கன்னத்தையும் 'பொளி பொளி' என்று பொளிந்து தள்ளிப் பொத்தலாக்கி விடுவான். எனவே, பிறர்க்குப் பணிதல் என்னும் படைக் கலத்தையும் எண்ணிப் பார்த்துப் பயன் படுத்தல் வேண்டும்.

இந்தக் கருத்துக்களை யெல்லாம் உள்ளத்தில் வைத்துக் கொண்டு உலகியலுக்கு வருவோமாயின், சில எடுத்துக் காட்டு கிடைப்பதும் மிகவும் அரிதாகும். ஏசுபிரான் தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களையும் பொறுத்தருளும் படிக் கடவுளை வேண்டினார். கவுதமப் புத்தர், தம்மைத் தாழ்த்தியோரைப் பதிலுக்குத் தாழ்த்தத் தம்மாணாக்கர்கள் முயன்றபோது, அவ்வாறு செய்தல் தகாது என்று தடுத்து விட்டார். திருக்கோவலூரை ஆண்ட மெய்ப்பொருள் நாயனார், தம்மைக் கத்தியால் குத்திய முத்தநாதன் என்பவனைப் பாதுகாப்பாக ஊர் கடக்கக் கொண்டுபோய் விடும்படித் தம் ஏவலர்க்குக் கட்டளையிட்டது பெரிய புராணத்தில் சொல்லப்பட்டுள்ள ஒரு வரலாறு. இவ்வாறு சிலவே காண்பிக்க முடியும்.

இன்றைய உலகிற்கு வருவோமாயின், புனைந்து எழுதுகிற கதைகளிலும் காப்பியங்களிலும் நாடகங்களிலும் வேண்டுமானால் இவ்வாறு சில எடுத்துக்காட்டுகளைக்

காணலாமே தவிர, மக்கள் மந்தைக்கு நடுவே நடை முறையில் காணுதல் அரிது.

வள்ளுவர் கூறியுள்ளபடி, இன்னா செய்தார்க்கும் நன்னயம் செய்யாததனால்தான் அந்தக் குறளுக்குப் பெரிய மதிப்பு இருக்கிறது. இனி அந்தக் குறளுக்கு வேலையில்லாத படி - தேவையில்லாதவாறு மக்கள் நடைமுறையில் இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றும் காலம் எக்காலமோ-அக்காலம் நற்காலமாகும் - பொற்காலமுமாகும்.

# *6. ஒரே உலகம்

ஒரே உலகம் என்றால் என்ன? இந்த ஒரே யுலகத்திற்கும் ஐக்கியநாட்டு அவைக்கும் தொடர்புகள் இருக்கின்றனவா? ஒரே யுலகம் என்பது நமக்குத் தேவைதானா? தேவையாயின் இவ்வொரேயுலகம் உருப்படுமா? ஆகிய இன்ன பிறவற்றை நாம் சிந்தித்து ஆராய்ந்து முடிவிற்கு வரவேண்டும்.

முதற்கண், 'ஒரேயுலகம்' என்பதனை எடுத்துக் காட்டுக்களின் வாயிலாக விளக்க வேண்டும்.

அன்றைய உலகம் மொழிவாரியாகப் பல நாடுகளாகப் பிரிந்து ஆளப்பட்டு வந்தது. வங்கநாடு வங்காள மொழி பேசுநர்க்கும், ஆந்திர நாடு தெலுங்குமொழி பேசுநர்க்கும், தமிழ்நாடு தமிழருக்கும் ஆக, இவை போன்று பல நாடுகள் தத்தம் மொழிவாரியாகப் பிரிந்து தனித்தனியாக ஆளப் பட்டு வந்தன.

* (புதுவை ஆசிரியர் பயிற்சி மையத்தில் ஐ. நா. நாளன்று ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இது)

ஆனால் இன்று, ஏறக்குறைய எல்லா நாட்டினரும் ஒன்று சேர்ந்து உலகத்தை ஆள்கின்றனர். இங்ஙனம் எல்லாரும் ஒன்று சேர்ந்து அரசாள்வதை 'ஒரே யுலகம்' என்று கூறலாம்.

ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் நாடுகளை மட்டும் அரசாள்வது என்பது தன் நலம்! அண்டைய நாடுகளுக்கும் உதவியாய் இருந்தால்தான் உலகம் முன்னேற முடியும். ஒரு நாட்டில் குழப்பம் ஏற்பட்டால் அதனை மற்றெல்லா நாடுகளும் தீர்த்து வைக்கவேண்டும். எனவே இதன்படிப் பார்க்கையில் ஒவ்வொரு நாட்டினருக்கும் பற்று தங்கள் நாட்டின் மீது மட்டுமன்று! எல்லா நாடுகள் மீதும் உண்டு. ஒவ்வொரு நாட்டினரும் உலகப் பாதுகாப்பாளர்கள்! உலகம் உருப்பட எல்லா நாட்டினரும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும். எல்லோரும் பிரிவின்றிச் சேர்ந்து ஒரே உலகமாக இருக்கவேண்டும்.

ஏறக்குறைய 200-300 ஆண்டுகளுக்கு முன்னர்கூட பல நாட்டவரும் ஒன்று சேர்ந்து ஒரே யுலகமாக இருந்திருப்பர் என்று எண்ணுவதற்கிடமில்லை. இது பற்றி இன்றும் ஐயப்பாடுகள் இருந்து வருகின்றன. இம்மாதிரியான ஐயப்பாடுகளுக்கெல்லாம் தடையாகவிருப்பதுதான் ஒரே யுலகின் தலையாய கொள்கை. இன்றுள்ள பல குடியரசுகள் போல உலகத்துப் பல நாடுகளும் ஒரே ஆட்சிக் குட்பட்டிருப்பின் 'ஒரே யுலகம்' என்று கூறலாம்.

இந்த ஐக்கிய நாட்டவை தினவிழாவில் இன்று நாம் எண்ண வேண்டியது என்னவென்றால், இப்பொழுது 110 நாடுகள் ஐக்கியமாகியிருக்கின்றன. இதுவே ஒரே யுலகத்திற்கு முன்னோடி.

இந்த விழாவில் நண்பர்களால் நாடகம் நடக்கவிருக்கின்றது. இதற்காக அவர்கள் எத்துணையோ

ஒத்திகைகள் போட்டுப் பார்த்திருப்பர். இவ்வொத்திகைகள் போன்றே இவ்வொரு உலகத்திற்கும் ஐக்கிய நாட்டவை உள்ளது. மற்றும், ஆசிரியர்க்காகப் பயிற்சிகள் நம் பள்ளியில் தரப்படுகின்றன. இத்தகைய ஒத்திகைகள் - பயிற்சிகள் போன்றே ஒரே யுலகத்திற்கும் ஒத்திகையாக - இருப்பது ஐக்கிய நாட்டவை!

எனவே நடிகர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எங்ஙனம் ஒத்திகை, பயிற்சி தொடர்பு கொண்டுள்ளனவோ அதைப் போல ஒரே யுலகத்திற்கும் ஐக்கிய நாட்டவைக்கும் தொடர்புண்டு!

ஆகவேதான், இப்பொருள்பற்றிப் பேசுவது இவ் வகைக்குப் பொருந்துமெனத் தெரிந்து எடுத்துக் கொண்டேன்.

**ஒரே உலகு தேவைதானா? இக் கருத்து எவ்வாறு பொருந்தும்?**

காட்டாக, ஒருவன் நோயால் வாடுகிறான். ஒருவன் பட்டினியால் வருந்துகிறான். இன்னவர்களுக் கெல்லாம் மற்றவர் உதவிகள் மிகமிகத் தேவை. ஒற்றுமையிருந்தால் தான் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளமுடியும். அதைப் போல ஒரு நாடு மற்றொரு நாட்டின் உதவியின்றி வாழ்வதென்பது இயலாத காரியம். எந்தவொரு நாட்டின் சிறு உதவியாவது தேவை. ஒரு சுமையான கல்லை ஒருவரால் தூக்கவியலாது. பலர் முயன்றால் தான் முடியும். அதைப் போன்று எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு ஒன்றுக் கொன்று உதவிக் கொண்டால் தான் இவ்வுலகம் உருப்படும்.

இன்று பர்மா, இலங்கை போன்ற ஊர்களுக்கும் அனுமதிச் சீட்டின்றிப் போகமுடியாது. "ஏன் அனுமதிச் சீட்டின்றிப் போகக்கூடாது? நான் இந்த உலகத்தில் தானே பிறந்தவன்? இவ்வுலகம் எனக்குச் சொந்த

மில்லையா? இவ்வுலகத்தின் ஊர்களுக்குச் செல்ல எனக்கேன் உத்தரவுச்சீட்டு? என்று அப்போது ஒருவன் கேட்டிருக்க இடமிருக்கிறது. இவை போன்ற வினாக்கள் எழும்பா வண்ணம் ஐக்கிய நாட்டவை பார்த்துக் கொள்கின்றது.

எத்தகைய தனிமனிதன் ஒருவனும் மற்றவர் உதவியின்றித் தனித்து வாழமுடியாது. மற்றவர் உதவிகள் தனிமனிதன் ஒவ்வொருவனுக்கும் வேண்டும்! தனிமனிதன் சமூகத்தோடு சேர்ந்து வாழாவிடின் அவனுக்கு உதவிகள் கிட்டமுடியாது. ஆகவே உலகமும் பலகூட்டு நாடுகளின் உதவியின்றி முன்னேற முடியாது.

**ஒரே உலகக் கொள்கை நிலைக்குமா?**

"ஒரே குடும்பத்தில் உடன் பிறந்தவர்களுக்குள்ளேயே பிணக்கு நடக்கின்றதே! அப்படியிருக்க, எல்லாரையும் ஒன்றுகூட்டி மேய்க்க முடியுமா?" என்னுங் கேள்விக்கு விடை கூறத்தான் வேண்டும்.

எல்லாரையும் ஒன்றுபடுத்திச் செயலாற்றுவதென்பது முதலில் கடினமாகத்தான் இருக்கும். பழக்கத்தில்தான் பயன் காணமுடியும். இதற்கு மக்கள் பண்பில் வளர்ச்சியிருக்க வேண்டும். எந்தவொரு கடினச் செயலையும் நாள்பட்ட நீடித்த உழைப்பால் செய்யமுடியும். மக்கட் பண்பு நல்ல முறையில் அதைச் செய்யவேண்டும்.

மனிதன் ஒரு தன்நலவாதி! ஏன் எல்லா வுயிரினங்களுமே சுரண்டும் பண்புடையவைகள்தாம்! கரப்பான்பூச்சி மற்றொரு பூச்சியை விழுங்குகின்றது. இதனை இன்னொன்று விழுங்குகின்றது. எல்லாம் தன்நலம்! தான் வாழ்ந்தால் போதும்! மற்றவர் வாழ்ந்தாலென்ன? வீழ்ந்தாலென்ன? என்ற நிலையே உள்ளது.

மனிதன் நான்கு காரணங்களால் ஓரளவு நல்ல மனிதனாய் நடமாட முடிகின்றது.

1) **அரசாங்க அச்சம்**: 'நாம் நியாயம் தவறி நடந்தால் அரசாங்கம் நம்மைத் தண்டிக்குமே' என்றவொரு காரணத்தால் மனிதன் தீச்செயல் புரிவதற்கு அஞ்சுகின்றான், இவ்வச்சத்தின் பயனாகவும் நல்லவனாக நாட்டில் மதிக்கப் படுகிறான்.

2) **சமூக அச்சம்:** நாம் தவறு செய்தால் நாடு நம்மைத் தூற்றுமே! சமூகத்தினின்றும் நம்மை ஒதுக்கி விடுமே! அதன் உதவிகள் நமக்குக் கிட்டாவே' - என்ற காரணத்தாலும் மனிதன் தவறு புரியாமல் இருக்கின்றான். இக்காரணத்தால் அஞ்சுகிறவர்கள் அரசாங்கத்திற்கு அஞ்சுபவரைக் காட்டினும் சிறிது எண்ணிக்கையில் குறைந்தவர்களே!

3) **கடவுள் அச்சம்:** 'தீமைகள் புரிந்தால் நம்மை இறைவன் தண்டிப்பாரே' என்ற காரணத்தால் தவறுகள் செய்வதற்கஞ்சுபவரும் நாட்டில் இருக்கிறார்கள்.

மேற்கூறிய இருவித அச்சங்களைக் காட்டினும் இவ்வச்சமுள்ளவர்கள் மிகக்குறைவு

4) **மனச்சான்று அச்சம்**: இதுவரை கூறியதைவிட இக்காரணத்தால் அஞ்சுபவர் மிகமிகக் குறைவு. 'தவறுகள் செய்தால் நம் மனச்சான்று நம்மை உறுத்திக் கொண்டிருக்குமே' என்ற காரணத்தாலும் நல்லவர்களாக இருக்க முயலுகிறார்கள் சிலர்.

தவறு செய்யும்போதும் செய்த போதும் செய்யப் புகும் போதும் மனமானது "நீ தவறுகிறாய்! நான் உன்னை மற்றவர்களுக்குக் காட்டிக் கொடுப்பேன்!" என்று அச்சுறுத்துகிறது. இங்ஙனம் செய்வதால் மனத்திற்கு அஞ்சிச் சிலர் நல்லவர்களாக நடக்க முற்படுகிறார்கள். இவ்வாறு அடிக்கடி (தவறுகள் செய்யும் போதெல்லாம்)

எண்ணிப் பார்ப்பதால், பழக்கத்தின் காரணமாக மனச் சான்றுக்கு மதிப்பு தந்து நல்லவன் என்னும் பெயர் பெறுகிறான் மனிதன். மனச்சான்றுக்கு அஞ்சுபவர் தவறுகள் செய்யார். காட்டாக ஒன்று கூற விழைகிறேன்! என் மகன் ஒருநாள் பள்ளிவிட்டு வீடு திரும்புகையில் வழியில் எட்டணா நாணயம் கண்டான். அதை எடுத்துக் கொள்ளாமல் என்னிடம் வந்து நாணயம் கண்டதைக் கூறினான். நான் 'அதை ஏன் எடுக்கவில்லை' என்றதற்கு, அப்பா! பிறருடையதை எடுக்கக் கூடாது! எடுத்தால் மிகவும் மனச் சான்றுக்கு மாறாக ஆகிவிடும் - என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே?'' என்று என்னையே கேட்க ஆரம்பித்து விட்டான்.

இதிலிருந்து 'மனச்சான்றுக்கு மாறாய் நடக்கக் கூடாது' என்னும் கருத்து அவன் மனத்தில் பழக்கத்தின் காரணமாக ஆழமாகப்பதிகிறது; அதன்படிச் செயலாற்றவும் செய்கின்றது என்பது தெரிய வருகிறது. நீங்கள் உளநூல் கற்று வருகின்றீர்கள். உங்களுக்குத் தெரியும் எப்படிப்பட்ட மரபு நிலையையும் பழக்கம் மாற்றி விடுமென்று.

எப்போது உலகத்தில் போர் தொடங்கிற்றோ அப்போர் உலகில் இருவர் இருக்கும்வரை ஒழியாது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் மனிதனுக்கு இயற்கையாகவே போரூக்கம் இருக்கின்றது - என்பதால், இடைவிடாத பழக்கம் இன்றியமையாதது. நாம் இளமையிலேயே பிள்ளைகளுக்கு ஐக்கிய நாட்டுத் தத்துவங்களை ஊட்டி ஊட்டி அவர்கள் மனத்தில் ஊறச் செய்ய வேண்டும். அவை அவர்கள் மனத்தில் பசு மரத்தாணிபோல் பதிந்துவிடும். எக்கொள்கை யையும் நீண்ட காலம் பிள்ளைகள் மனத்தில் ஊறச் செய்தால் அவை மனத்தில் நன்றாக நாளடைவில் பதிந்து விடும்.

**ஒரே உலகத்திற்குத் தடைகளாக இருப்பவை**

அன்று உலகம் விரிந்து இருந்தது. இன்று நெருங்கிச் சுருங்கியிருக்கின்றது. ஆனால் இச்சமயத்தில்தான் நாம் விலகியிருக்கிறோம். அதாவது, "இது எங்கள் நாடு - எங்களுக்கு உரிமை. நாங்கள் மற்றவர்களோடு சேர மாட்டோம்'' என்றெல்லாம் கூறி விலகுகிறார்கள்.

கல்வி வளர வளர அறிவு வளர்ந்ததே யொழிய மனிதனுக்கு நல்ல பண்பாடு மட்டும் குறைந்து வருகின்றது. நகரத்தின் ஒரு வீட்டில் இரவில் சாவு என்றால் அது விடிந்து தான் தெரிந்து மற்ற வீட்டினர் பார்க்க வருவார்கள். ஆனால் கிராமத்தில் இந்நிலையில் ஒருபடி முன்னேற்றம் தான். இந்த அளவில் நெருங்கி உறவாடி ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் பண்பு வளர்ந்தால்தான் உலகம் ஒரே உலகமாக இருக்கும்.

**முயன்றால் ஒரே உலகத்தை உருவாக்க முடியும்!**

சீட்டோ-நாட்டோ-ஆசியா ஆகிய நாடுகளெல்லாம் கூட்டு முறையில் இயங்கி வருகின்றன. காமன்வெல்த் - என்பதும் உள்ளது. இவற்றை யெல்லாம் நாம் மைல் கற்களாக நினைவு செய்து ஒரே உலகத்தை உண்டாக்கு வோம். நாடுகட்கிடையே ஏற்படும் பொறாமை, பிணக்குகள் போன்றவற்றைத் தீர்த்து வைப்பதற்கு ஐக்கிய நாட்டவை உதவுகிறது.

இதற்கு முன்னே 'உலக ஒற்றுமைக் கழகம்' என்ற ஒன்று ஏற்பட்டுத் தோல்வி கண்டுவிட்டது. பொருளாதாரத் துறையிலே சமூகத்துறையிலே ஐக்கிய நாட்டவை உதவு கிறது. இரண்டாம் உலகப் போர் இட்லரால் தொடங்கு முன்னரே இவ்வொற்றுமைக் கழகம் தோன்றி மறைந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால்தான்

இவ்வைக்கிய நாட்டவை தோன்றியிருக்கிறது. இதனால் சிலருக்கு இது உருப்படுமோ என்னும் ஐயம் ஏற்பட்டிருக் கிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (புறநானூறு)

2000 ஆண்டுகட்கு முன்னேயே இக்கருத்து மக்கள் நெஞ்சத்தில் எழுந்திருக்கின்றது. மனிதன் முதன் முதலில் காட்டிலே வேட்டையாடித் திரிந்த அன்றே இக்கருத்து எழுந்தது என்று துணிந்து கூறலாம்.

சாதி மதம், கட்சிகள் இவை ஒழியவேண்டும். ஒழிந்தால் தான் உலகம் ஒரேயுலகமாக இருக்க முடியும். இதற்குத் துணிவுவேண்டும். ஒரே பொது மொழியினால் உலகம் முழுதும் ஆளப்பட வேண்டும்.

பொதுமொழி ஆங்கிலமாக இருக்க வேண்டும். (உலகப் பொதுமொழி) இன்று ஊருக்குப் போவதற்கு ஊர்திகளில் செல்கிறோம். 'ஏன் நடந்துபோனால் என்ன? நடந்து போனால் பல இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கலாமே! கிராமங்களைப் பார்த்துச் செல்லலாமே? இதனால் ஊருக்குப் போவதாயும் இருக்கும் - அத்துடன் பல கிராமங்களைப் பார்த்ததாகவும் இருக்குமே' என்று யாரேனும் கேட்பாரேயாகில் முடிந்தால் நடந்து செல்லட்டும் அவர்கள்!

**'ஒரே உலகம்' என்னும் கொள்கை உருப்படுமா?**

உலக நாடுகள் எல்லாம் மொழிவாரியாகப் பிரிந்து ஒற்றுமையாக இருக்கலாம். இவ்வாறு செய்யின் ஒரேயுலகம் உருப்படும். வள்ளுவரும்,

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'
'உலகந் தழீஇயது ஒட்பம்'

என்று கூறியிருக்கிறார். பாரதியும், 'தனியொருவனுக்கு உணவிலையெனில் சகத்தினையே அழித்து விடுவோம்' என்று கூறுகிறார். இவ்வாக்கியங்களெல்லாம் ஒரேயுலகக் கொள்கையை வலியுறுத்துகின்றன.

அரசியல் தலைவன் ஒருவன் பிச்சைக்காரனைக் கண்டு நையாண்டி செய்யக்கூடாது! அவனைக் கண்டு ஒவ்வோர் அரசியல் தலைவனும் வெட்கப்படல் வேண்டும். மக்கள் பண்பாட்டைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, சமூகப் பயிற்சி - குடிமைப் பயிற்சி என்றெல்லாம் கூறிப் பயனில்லை.

எனவே, ஐக்கிய நாட்டுக் கோட்பாடுகளையும் நல்ல பண்புகளையும் நாம் இள உள்ளங்கட்குக் கற்பித்து அவர்களை அதன்படிச் செயல்படச் செய்தால் 'ஒரே உலகம்' என்னும் கொள்கை உண்மையாகும்; உருப்படும்.

''தொல்லுலக மக்க ளெல்லாம்
ஒன்றே என்னும்
தாயுள்ளம் தன்னி லன்றோ இன்பம்''

— பாரதிதாசன்

# 7. மூவர் தமிழ்

'மூவர் தமிழ்' என்பது சில நூல்களில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. ஔவையார் தமது 'நல்வழி' என்னும் நூலின் நாற்பதாம் பாடலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

''தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் என்றுணர்'' (நல்வழி-40)

மூவர் தமிழ் என்பதில் மூவர் என்பவர் யார்—யார்? மூவர் தமிழ் என்பது எது? இதற்கு விடை, உமாபதி சிவாசாரியாரால் (உமாபதி சிவத்தால்) இயற்றப்பட்டதாகக் கூறப்படும் 'திருமுறை கண்ட புராணம்' என்னும் நூலில் உள்ளது.

இந்த நூலில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவர் தொடர்பான செய்திகளும், இவர்கள் பாடிய தமிழ்ப் பாடல்கள் தொடர்பான செய்திகளும் பேசப்பட்டுள்ளன. இவர்கள் அருளிய தமிழ்ப் பாடல்கள் 'மூவர் தமிழ்' (9), 'மூவர் செந்தமிழ்கள்' (10), 'மூவர் பாடல்' (13, 22) எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இம்மூவரும் 'தமிழ் மூவர்' (19) என்று ஒரு பாடலில் குறிப்பிடப் பட்டுள்ளனர். இதனால், மூவர் யார் - யார்? என்பதும், மூவர் தமிழ் என்பது இம்மூவரும் பாடிய தமிழ்ப் பாடல் களைக் குறிக்கும் என்பதும் பெறப்படும். இனி, இந்த மூவர் தமிழ் பற்றிய வரலாற்றை, திருமுறை கண்ட புராணத்தில் உள்ளவாறு காண்பாம்.

இராச ராச சோழனிடம், அவ்வப்போது சிலர் வந்து, இந்த மூவரால் அருளப்பட்ட சிற்சில பாடல்களைப் பாடிக் காட்டினர். பாடலைக் கேட்டுச் சுவைத்து மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்த மன்னன், இம்மூவரின் பாடல்கள் அனைத்தையும் அறியவேண்டும். அவை எங்கே உள்ளன எனத் தேடச் செய்தான். எங்கும் கிடைக்கவில்லை. பின்னர், நம்பியாண்டார் நம்பி யிருந்த திருநாரையூருக்கு வந்து, மூவர் பாடல்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தரல் வேண்டும் என நம்பியிடம் வேண்டுகோள் விடுத்தான். சிதம்பரத்து நடராசர் கோயிலில் ஓர் அறைக்குள் காப்பிட்டுக் கிடக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

இராசராசன் சிதம்பரம் சென்று, கை இலச்சினை (முத்திரை) இட்டு மேற்குச் சுற்றில் உள்ள அறையினைத்

திறக்கும்படி, கோயில் பூசனை புரியும் அந்தணர்களை வேண்டினான். அந்தணர்கள், "தமிழ் வைத்த மூவர் வந்தால் அறை திறக்கும்" (19) என்றனர். அதாவது, சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவரும் வந்தாலேயே அறை திறக்கப்படும் என்று கூறிவிட்டனர்.

வீட்டுலகில் (மோட்சத்தில்) இருக்கும் அம்மூவரையும் மன்னன் எந்தப் போக்கு வரவு ஊர்தியின் வாயிலாக எவ்வாறு அழைத்து வர இயலும்? பார்த்தான் மன்னன். உடனே, கோயிலில் மூவர் திருவிழா நடத்தச் சொன்னான். மூவர் சிலைகளையும் அணி செய்து ஊர்வலமாக அந்த அறைக்கு எதிரில் கொண்டுவரச் செய்தான்; இதோ மூவரும் வந்து விட்டனர் - கதவைத் திறக்கலாம் – என்றான்.

அந்த மூன்று சிலைகளையும் மூவர் இல்லை எனக் கூறின், எந்தக் கோயிலில் உள்ள எந்தச் சிலைக்கும் வேலை கிடையாதன்றோ? எனவே, கை காப்பு நீக்கி அறை திறக்கப்பட்டது.

செல்லுப் புற்று மண்ணால் சுவடிகள் மூடப்பட்டிருந்தன. புற்று மண்ணைத் தட்டிக் கொட்டிச் சீர்செய்து, நல்ல உருப்படிகளாகக் கிடைத்தவரையும் எடுத்துப் போற்றினர். மன்னன் வேண்டுகோளின்படி, நம்பியாண்டார் நம்பி, மூவர் பாடல்களையும் ஏழு திருமுறைகளாக வகுத்துத் தொகுத்தார்.

**பன்னிரு திருமுறைகள்**

சைவப் பெரு நூல்கள் பன்னிரண்டு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுப் போற்றப்படுகின்றன. அவற்றுள் முதல் ஏழு திருமுறைகள் மூவர் பாடல்களேயாகும். சம்பந்தரின் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், நாவுக்கரசரின் பாடல்கள் அடுத்த மூன்று திருமுறைகளாகவும் அதாவது –

நான்காவது - ஐந்தாவது - ஆறாவது திருமுறைகளாகவும், சுந்தரர் பாடல்கள் ஏழாவது திருமுறைகளாகவும் தொகுக்கப் பெற்றன.

பின்னர், மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகவும், திருவிசைப்பா-திருப்பல்லாண்டுப் பாடல்கள் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், திருமுகப் பாசுரம் முதலானவை பதினோராம் திருமுறையாகவும் தொகுக்கப் பெற்றன. சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகப் பின்னர்க் கொள்ளப்பட்டது.

திருமுறைகள் வெளிவரச் செய்ததால், இராச ராசன், திருமுறைகண்டசோழன் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப்படுகிறான்.

இந்தப் பன்னிரண்டு நூல்களையும் இணைத்துப் 'பன்னிரு திருமுறைகள்' எனத் தொகைப் பெயர் தந்திருப்பது, 'பன் மாலைத் திரள்' வகையாகும்.

**முதல் ஏழு**

இங்கே, இறுதி ஐந்து திருமுறைகளை விடுத்து, முதல் ஏழு திருமுறைகளை மட்டும் முதலில் எடுத்துக் கொள்ளலாம். மூவர் பாடல்களும் மூன்று நூல்களாக ஆக்கப்பட்டன. இவையே 'மூவர் தமிழ்' என்னும் தொகைப் பெயர் பெற்றன. 'மூவர் தமிழ்' என்னும் தொகையையும் 'பன் மாலைத் திரள்' வகையில் சேர்க்கலாம்.

மூவர் தமிழ் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டதைப் பற்றிக் கூறும் பாடல்கள் இதற்கு அகச்சான்றுகளாம். மந்திரங்கள் ஏழுகோடியானதால் இப்பாடல்கள் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டனவாம். பாடல்கள் வருமாறு:-

"மன்னுதமிழ் விரகர்எங்கள் காழிவேந்தர்
வகுத்தருளால் அமைத்த திரு முறையோர் மூன்றும்,
அன்னவகை வாகீசர் முறையோர் மூன்றும்,
ஆரூரர் உரைத்ததிரு முறைய தொன்றும்,
துன்னவகை ஏழாகத் தொகுத்துச் செய்தான்
தூயமனு எழுகோடி என்ப துன்னித்
தன்னிகரில் திருவருளால் மன்னன் தானும்
தாரணியோர் வீடுபெறும் தன்மை சூழ்ந்தே" (24)

"மந்திரங்கள் எழுகோடி யாதலினால் மன்னுமவர்
இந்த வகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து..." (28)

என்பன பாடல்கள். திருமுறைகண்ட புராணத்தில், மூவர் தமிழின் தெய்வ ஆற்றல்களும் கூறப்பட்டுள்ளன. சம்பந்தர் தமிழ், எரியிலே வேக வில்லை-வைகை யாற்றில் எதிரேறி வந்தது. அதாவது-மதுரையில் அனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் வென்றது; திருமயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கியது; திருமருகலில் பாம்பு நஞ்சை நீக்கியது. நாவுக்கரசரின் தமிழ் திங்களூரில் நஞ்சை நீக்கியது; கொல்ல வந்த யானையை வணங்கச் செய்தது; கருங் கல்லை மிதிக்கச் செய்தது. சுந்தரரின் செந்தமிழ், அவிநாசியில் முதலையுண்ட சிறுவனை வரவழைத்தது-இவ்வாறு மூவர் தமிழின் ஆற்றல்கள் போற்றப் பெற்றன:

"எரியினிடை வேவாது; ஆற்றெதிரே ஓடும்;
என்புக்கும் உயிர்கொடுக்கும்; இடுநஞ் சாற்றும்;
கரியை வளைவிக்கும் கல் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங்காணே" (17)

மூவர் தமிழின் ஆற்றலைப் பரஞ்சோதி முனிவரும் தமது திருவிளையாடல் புராணத்தில் கூறியுள்ளார்:

சிவனைப் பரவையாரிடம் தூது விடுத்ததும், முதலை உண்ட சிறுவனை வரவழைத்ததும், எலும்பைப் பெண்ணாக்

கியதும், மறைக் காட்டில் திறக்கப்படா திருந்த கதவினைத் திறந்ததும், கன்னித் தண்தமிழ் மொழிச் சொற்களா? அல்லது-வேற்று மொழிச் சொற்களா? என்று வினவுவது போல் மூவர் தமிழின் முதன்மை ஆற்றலை அறிவித் துள்ளார் பாடல்:-

''தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும், எலும்பு பெண்ணுருவாக்
கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்டமிழ்ச் சொல்லோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்''

என்பது பாடல். இவ்வளவு பெருமைக்கு உரிய மூவர் தமிழைத் திட்டமிட்டு அறைக்குள் போட்டுச் செல் அரிக்கச் செய்ததும், மூவர் வந்தால்தான் கதவைத் திறக்க முடியும் என அடம் பிடித்ததும் கொடுமை என ஒரு சாராரைச் சிலர் தூற்றலாம். ஆனால், மூவர் தமிழை அடியோடு எரித்து விடாமல், அறைக்குள் வைத்துக் காத்து வந்தார் களே - என அன்னாரைப் போற்றுதலே ஒரு வகையில் பொருந்தும்.

## தேவாரம்

மூவர் தமிழாகிய முதல் ஏழு திருமுறைப் பாடல்களும் 'தேவாரம்' என்று பெயர் வழங்கப் படுகின்றன. இப் பெயர் பாடல் ஆசிரியர்களால் தரப்பட்டதன்று; பிற்காலத் தாராலேயே தரப்பட்டதாகும். இதன் பொருள் என்ன? தே + ஆரம் எனப் பிரித்து, தெய்வ மாலை — அதாவது- தெய்வத்திற்குச் சாத்தும் பாமாலை என்று இதற்குப் பொருள் செய்ய வேண்டும். தே + வாரம் எனப் பிரித்துத், தெய்வ அன்பு - அதாவது - தெய்வத்தின்பால் செலுத்தும் அன்பு எனச் சிலர் கூறுவர்.

பல மலர்களால் தொடுத்த பூமாலைபோல், பல்வகைப் பாக்களால் தொகுத்த பாமாலையே தேவாரம் ஆகும்.

தேவாரம், திருஞான சம்பந்தர் தேவாரம், அப்பர் என்னும் திருநாவுக்கரசர் தேவாரம், சுந்தரர் தேவாரம் என மூவகை யாக ஆசிரியர் பெயரால் குறிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு வரும் பாடிய தேவாரப் பாக்கள் அவரவர் பெயரால் தனித் தனியாகக் குறிப்பிடப் படும்போது, அவ்வத் தொகையைத் 'தனி மலர் மாலை' என்னும் வகைக்குள் அடக்கலாம்.

**தேவாரப் பெயர் ஆட்சி**

தேவாரம் என்னும் பெயர் முதலில் பாக்களைக் குறிக்க வில்லை. கடவுள் தொடர்புடையது - கடவுள் வழிபாட்டுத் தொடர்புடையது-கடவுள் திருமேனி (விக்கிரகம்) தொடர் பானது. வழிபாட்டு இடத் தொடர்புடையது என்னும் பொருளில் சில நூல்களிலும் சில கல்வெட்டுகளிலும் தேவாரம் என்னும் பெயர் ஆட்சி காணப்படுகின்றது. உமாபதி சிவம் என்பவர் இயற்றிய கோயில் புராணம்-திருவிழாச் சருக்கம் என்னும் பகுதியில்,

"உயர்தர மூவாயிரவர் கடாவா மறையொடு
தேவாரக் கைப்பற்றிய பணிமுற்ற..." (27)

என்றும் ஈடு முப்பத்தாறாயிரப்படி என்னும் வைணவ விரிவுரை நூலில், 'உம்முடைய தேவாரமோ' (6-8-10) என்றும் இப் பெயராட்சி உள்ளது.

மற்றும், தென்னிந்தியக் கல்வெட்டு ஒன்றில் (7-269), "பெரிய வுடையார் தேவாரத்தில் கேட்டருளி" என்றும், மற்றொரு கல்வெட்டில் (2-155) "பெரிய பெருமாளுக்குத் தேவார தேவராக எருந்தருளிவித்த தேவர்" என்றும், முனியூர்க் கல்வெட்டில் (8-205) "திருமுறைத் தேவாரச் செல்வன்" என்றும், திருக்களார் கல்வெட்டில் (8-260) "நம் தேவாரத்திற்குத் திருப்பதிகம் பாடும் பெரியான்" என்றும் தேவாரப் பெயர் ஆட்சி காணப்படுகிறது.

பண்டு அரசர், அருளாளர் முதலியோர் வெளியூர்க்குச் செல்லும்போது, உடன் எடுத்துச் செல்லும் சிறு சிறு கடவுள் உருவம் வைக்கப்பட்ட பெட்டி 'தேவாரப் பெட்டி' எனப்பட்டது. மற்றும், கடவுள் வழிபாடாகிய தேவாரத்தின்போது (தேவாரம்-கடவுள் வழிபாடு), ஓதப்பட்ட பாடல்கள் நாளடைவில் தேவாரப் பாடல்கள் என்னும் திருப்பெயர் வழங்கப்பட்டன. இந்த அடிப்படையில், பின்னர், மூவர் தமிழ்ப் பாடல்கள் தேவாரம் என்று குறிப்பிடப்பட்டன.

## தேவாரத்தின் வேறு பெயர்கள்

தேவாரம் என்ற பெயர் பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னரே மூவர் தமிழுக்கு வழங்கப்படத் தொடங்கியது. சேக்கிழார், திருப்பதிகம், தமிழ்த்தொடை, உரைமாலை முதலிய பெயர்களாலேயே மூவர் தமிழைக் குறிப்பிட்டுள்ளார். தொடக்கத்தில், சம்பந்தர் திருமுறை - நாவுக்கரசர் திருமுறை - சுந்தரர் திருமுறை எனவும், சம்பந்தர் பதிகம் - நாவுக்கரசர் பதிகம் - சுந்தரர் பதிகம் எனவும் மூவர் பாடல்கள் பெயர் வழங்கப் பெற்றன. மற்றும், சம்பந்தர் தேவாரம் 'திருக் கடைக் காப்பு' எனவும், சுந்தரர் தேவாரம் திருப்பாட்டு எனவும் பெயர் வழங்கப் பட்டதுண்டு. திருநாவுக்கரசர் பாடல்களே - பதிகங்களே முதல் முதலில் 'தேவாரம்' என்னும் திருப்பெயர் பெற்றன.

## போற்றிப் பேணாமை

தேவார ஆசிரியர்கள் மூவரும், ஊர்தோறும் சென்று பதிகங்கள் பாடினர். அவை ஓலைச் சுவடிகளில் எழுதப் பட்டன. அவரவர் காலத்திலேயே அவரவர் பெயரால் நூல் தொகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தக் காலத்தில், முப்பது தலைப்புகளில், தலைப்புக்கு இரு பாடல்கள் வீதம் எழுதினாலும், அப்பாடல்களுக்கு, இன்னார் கவிதைகள்

என்ற மகுடம் இட்டு வெளியீட்டு விழாவும் நடத்து கின்றனர்.

இவ்வாறு தேவாரப் பாடல்கள் உரிய காலத்திலேயே போற்றிப் பேணப்படவில்லை. அவை அழிவதற்கும் அழிக்கப் படுவதற்கும் தக்க காரணம் இருந்தது. சமணர்களையும் பௌத்தர்களையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்ததால் போற்றிக் காப்பாற்ற முடியவில்லை. அவர்கள் ஓலைச் சுவடிகளைத் திட்டமிட்டு அழித்திருக்கலாம்.

**தமிழ் - தமிழ் - தமிழ்**

தேவாரப் பாடல்கள் மூவர் தமிழ் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டன. தேவாரப் பதிகங்கள் தமிழ்மாலை என ஆசிரியர்களாலேயே அறிவிக்கப்பட்டன. நாளும் இன்னிசை யால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன் எனத் தமிழ் பரப்பு வதாகச் சொல்லப்பட்டதும் உண்டு. இவ்வாறு தமிழ்-தமிழ்-தமிழ் என்று ஓலமிட்டதற்கு உரிய காரணம் யாது?

சமசுகிருதத்தின் திரிபு மொழிகளாகிய பிராகிருதம், பாலி என்னும் இரு மொழிகளில், சமணர்கள் பிராகிருத மொழியைக் கையாண்டும், பௌத்தர்கள் பாலி மொழியைப் பயன்படுத்தியும் தத்தம் சமயம் வளர்த்தனர். தேவார ஆசிரியர்களோ, அந்த மொழிகளில் மதம் மாறிய மக்கட்கு இருந்த 'மாயை'யை அகற்றத் தெய்வத் தமிழைக் கையாண்டனர். தமிழ் மணம் எங்கும் வீசச் செய்தனர். தேவார ஆசிரியர்களும் ஆழ்வார்களும் தமிழ்-தமிழ்-தமிழ் என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு அடித்துக் கொண்டதில் உள்ள மறைபொருள் (இரகசியம்) இதுவே. சமசுகிருதம் - ஆங்கிலம் முதலிய மொழிகளின் மேலாட்சி ஏற்பட்ட போதெல்லாம் தமிழ்ப் புலவர்கள் தம் முன்னோரின் முறையையே பின்பற்றித் தமிழ் வளர்த்தனர். இதற்கு வழிகாட்டிகளாய் இருந்தவர்கள் தேவார-திவ்வியப் பிரபந்த

ஆசிரியர்களேயாவர்: இந்த அடிப்படை நோக்கத்தில்தான், தேவாரப் பாடல்கள் 'மூவர் தமிழ்' என்னும் தொகைப் பெயர் பெற்றன.

இந்தப் பாடல்களை வெளிவரச் செய்து 'திருமுறை கண்ட சோழன்' என்னும் பட்டப் பெயரை இராசராச சோழன் தட்டிக் கொண்டான். பிற்கால மன்னர்கட்கு இத்தகைய தமிழ் உணர்வு இல்லாமற் போனது வருந்தத் தக்கது.

# 8. கன்னல் தமிழும் கவியரசும்

"வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும் கூர்வாளும் போலே
(வெண்ணிலாவும்)
வண்ணப் பூவும் மணமும் போலே
மகர யாழும் இசையும் போலே
கண்ணும் ஒளியும் போலே எனது
கன்னல் தமிழும் யானும் அல்லவோ
(வெண்ணிலாவும்)

என்பது, கவியரசர்-பாவேந்தர் பாரதிதாசனாரின் பாடல் ஒன்றின் முன் பாதியாகும். இந்தப் பாடலிலுள்ள ஒப்புமை நயங்கள் மிகவும் சுவைக்கத் தக்கன. அவற்றை ஒவ்வொன் றாய்க் காண்பாம்.

**வெண்ணிலாவும் வானும்**

நம் நாட்டில் அமாவாசையன்று இரவு முழுதும் நிலா ஒளி இல்லை. அடுத்த நாளிலிருந்து பருவம் வரையும் சிறிது சிறிதாக ஒளிகூட முழுநிலா ஒளி வீசும். அதற்கு அடுத்த நாளிலிருந்து ஒளி சிறிது சிறிதாகக் குறைய, அமாவாசை

யன்று ஒளி சிறிதும் இராது. பிறை, நாளுக்கு நாள் ஒளி வளரும் காலப் பகுதியை வளர்பிறை என்றும், நாளுக்கு நாள் ஒளி தேயும் காலப் பகுதியைத் தேய்பிறை என்றும் கூறுவர். ஞாயிறு, பூவுலகு, நிலா ஆகியவை சுற்றுவதால் இந்த மாற்றம் ஏற்படுகிறது.

நன்மங்கல வினைகளை வளர்பிறையில் தொடங்கினால்தான் வளர்ச்சி கிடைக்கும் எனவும், தேய்பிறையில் தொடங்கின் தளர்ச்சியே கிடைக்கும் எனவும் மக்கள் நம்புகின்றனர்.

அந்தக் காலத்தில் இரவில் விளக்கு வசதி கிடையாது. நிலா ஒளி உள்ள நாட்களில் இரவிலும் மக்கள் தொடர்ந்து செயலாற்ற முடிந்தது. முன்னிரவில் நிலா ஒளி இல்லாத நாட்களில் அவ்வாறு செயலாற்ற இயலவில்லை. அதனால், தேய் பிறையில் தொடங்காமல் வளர் பிறையில் தொடங்கும் வழக்கம் ஏற்பட்டது. பின்னர் இந்தக் கொள்கை 'சாத்திர சம்பிரதாயம்' என்னும் பெயருக்கு உட்பட்டு விட்டது.

எந்தக் காலத்திலும், வானத்தில் நிலா இருப்பின் பூவுலகு பொலிவு பெறுகிறது. நிலா இல்லாத காலத்தில், பிள்ளையில்லாத இல்லம் போன்றது எனப் புலவர்கள் தாழ்த்திக் கூறும் அளவுக்கு வானம் ஆகிவிடுகிறது. நிலா உள்ள வானமே பொலிவாயிருப்பதால், பாவேந்தர் நிலாவையும் வானத்தையும் இணைத்துக் கூறியுள்ளார். ஞாயிற்றைச் செஞ்ஞாயிறு என்பதால், நிலா வெண்ணிலா எனப்படுகிறது. இதைத்தான் கவியரசர் 'வெண்ணிலாவும் வானும் போலே' என்றார். இது பாடலின் முதல் பகுதி. அடுத்து இரண்டாம் பகுதி வருக:

**வீரனும் கூர்வாளும்**

இந்தக் காலத்தில் போர் மறவர்கட்குத் துப்பாக்கி படைக் கருவியா யிருப்பது போல, அந்தக் காலத்தில் வாள் படைக் கருவியாய்ப் பயன்பட்டது.

துப்பாக்கி என்பது சுடும் கருவி. இதை, சுடும் கருவி களுள் மிகுந்த ஆற்றல் உடையனவற்றிற்கெல்லாம் பொதுப் பெயராக - பிரதிநிதிப் பெயராகக் கொள்ளல் வேண்டும். இந்த மிகுந்த ஆற்றலைத்தான் 'கூர்வாள்' என்பது குறிப் பிடுகிறது. 'கூர்' என்பதில் அவ்வளவு ஆழ்ந்த கருத்து அடங்கி யுள்ளது.

கையில் கூர்வாள் இருந்தால் போதுமா? நன்கு பயன் படுத்த வேண்டுமே!

ஓர் ஊரில் உடன்பிறந்தார் நால்வர் இருந்தனர். அவர்களுள் மூவர் துணிவுடையவர். நாலாமவன் தொடை நடுங்கி. மிக்க வலிமையுடைய பகைவன் ஒருவனைத் துணிவுடைய மூவரும் வளைத்துக் கொண்டு தாக்கினர். அப்போது, தொடைநடுங்கி, தன் அண்ணன்மார்களை நோக்கி, அண்ணே! அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுங்கள் - நானும் ஓர் அடி அடித்துப் பார்க்க ஆசையாயிருக்கிறது - என்று கூறினானாம். இத்தகைய தொடைநடுங்கிப் பேடிகளிடம் கூர்வாள் இருந்தும் யாது பயன்? பேடி கை வாளைப்பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறியுள்ளார்:

"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்" (614)

"பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சுமவன் கற்ற நூல்" (727)

என்பன குறள்கள். அதனால்தான், பாவேந்தர், வீரன் என்ற சொல்லையும் கூர் என்ற சொல்லையும் அடக்கி 'வீரனும் கூர்வாளும் போலே' என்றார். அடுத்து மூன்றாம் பகுதி:

**வண்ணப் பூவும் மணமும்**

மணம் இல்லா மலருக்கு மதிப்பு இல்லை. இத்தகைய மலர்களை, 'இணர் ஊழ்த்தும் நாறாமலர்' என்று குறிப்பிட்டுள்ளார் குறளார். 'பொன்மலர் நாற்றம் உடைத்து' என்னும் பொன்னான மொழியும் மலருக்கு மணத்தின் தேவையைக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

கவியரசர் 'பூ' என்று மட்டும் கூறவில்லை. 'வண்ணம்' என்னும் அடைமொழி தந்து 'வண்ணப் பூ' என்று குறிப்பிட்டுள்ளார். பின் வண்ணப் பூவோடு மணத்தை இணைத்துள்ளார். பூவின் வண்ணத்திற்கும் மணத்திற்கும் நோக்கம் உண்டு.

பெண் பூவில் கருப் பகுதியில் ஆண்பூவின் மகரந்தப் பொடி வந்து 'பிற மகரந்தச் சேர்க்கை' உண்டானால் வளமான காய் காய்க்கும். வண்டுகள் ஆண் பூக்களிலிருந்து மகரந்தப் பொடியைக் கொண்டு வந்து பெண் பூக்களின் கருப் பகுதியில் சேர்க்கும். இவ்வாறு வண்டுகள் செய்ய அவற்றை ஈர்ப்பதற்காகவே, மலர்கள் கவர்ச்சியான வண்ணங்கள் உடையனவாக உள்ளனவாம். மாலையில் மலரும் முல்லை முதலிய மலர்கள் வெண்மையா யிருப்பதற்குக் காரணம், இரவில் - இருட்டில் வெள்ளையாயிருந்தால்தானே தாம் இருப்பது வண்டுகட்குத் தெரியும் என்பதாகும். மணம் வீசுவதும் வண்டுகளை ஈர்ப்பதற்கே.

இந்த இரண்டு செய்திகளையும் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

"மஞ்சள் குளித்து முகம் மினுக்கி - இந்த
மாயப் பொடி வீசி நிற்கும் நிலை" (மலரும் மாலையும்)

எனச் சூரியகாந்தி என்னும் தலைப்பில் கூறியுள்ளார். மஞ்சளாயிருக்கும் சூரியகாந்தி, வண்டுகளை ஈர்ப்பதற்

காக மஞ்சள் பூசி முகத்தை மினுக்குகிறதாம். மலர்கள் மாயப் பொடி (மகரந்தத் தூள் - Pollen) வீசுகின்றனவாம். "என் மருமகள் என் மகனுக்கு என்னவோ சொக்குப் பொடி போட்டு விட்டிருக்கிறாள்" என மாமியார் சொல்வதாகக் கூறப்படும் உலகியல் செய்தி ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. மேலும் ஒரு பாடலில் கவிமணி அறிவிக்கிறார்:

"வண்டின் வரவு எதிர் பார்த்திருப்போம் - நல்ல
வாசமும் வீசி நிற்போம்" (மலரும் மாலையும்)

வண்டுகளை ஈர்க்க மணம் வீசப்படுகின்றதாம். கவுதமப் புத்தர் காப்பியம் என்னும் நூலிலும்,

"மாலை மலர்கள் மணம்வீசி - வண்டை
மயக்கியே தம்பால் ஈர்த்தனவே" (18-15)

என இச் செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை யெல்லாம் அறிவியலார் 'இயற்கையின் தேர்வு' (Selection of Nature) என்பர். எனவே, மலருக்கும் வண்ணத்திற்கும் மணத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அறிவிக்கவே, "வண்ணப் பூவும் மணமும் போலே" என்று பாடினார் பாவேந்தர். அடுத்து, பாடலின் நான்காம் பகுதி வருக:

### மகர யாழும் இசையும்

யாழ் தமிழர்களின் இசைக்கருவி. யாழில் பலவகை உண்டு. பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என்னும் ஒருவகை நான்கனுள் மகர யாழும் ஒன்றாகும். இது, மகர (மீன்) வடிவம் அமையப் பெற்றுப் பத்தொன்பது நரம்புக்ளைக். கொண்டது. 'குழலினிது யாழினிது' என்னும் வள்ளுவர் வாய்மொழி யாழின் இனிமையை அறிவிக்கிறது.

யாழுக்கும் இசைக்கும் நெருக்கம் மிகுதி. பண்டு யாழ்க் கருவியை நிலைக்களமாகக் கொண்டே பெரும் பண்களும்

அவற்றின் திறங்களும் நுண்ணிதின் ஆராய்ந்து வகைப்படுத் தப்பட்டன. யாழ் நரம்பின் துணை கொண்டு ஆராய்ந்து கண்ட பண்வகைகள் 'யாழின் பகுதி' எனப்படும், அப்பண் களின் இயல்பினை விளக்கும் இசை நூலை 'நரம்பின் மறை' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். மகர யாழ் பற்றிய ஆட்சி பல நூல்களின் இடம் பெற்றுள்ளது. மணிமேகலையில்,

> ''தகரக் குழலாள் தன்னொடு மயங்கி
> மகர யாழின் வான்கோடு தழீஇ'' (4-55,56)

எனவும், மேருமந்திர புராணத்தில்,

> ''மகர யாழ் வல்ல மைந்தன் ஒருவனைக்கண்ட மத்தப்
> புகர் முகக் களிற்றின்...'' (வச்சிராயுதம்-31)

எனவும் மகர யாழ் இடம் பெற்றுள்ளது. இவற்றைக் கொண்டு, இசைக்கு, மற்ற கருவிகளைவிட யாழோடு தொடர்பு நெருக்கம் என்பது பெறப்படும். எனவேதான், மகர யாழும் இசையும் போலே' என்றார் பாவரசர்.

**கண்ணும் ஒளியும்**

இது பாடலின் ஐந்தாம் பகுதி. கண்கள் இருப்பினும், எந்த ஒளியும் சிறிதும் இல்லையேல், கண்கள் எதையும் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியாது. எவ்வளவோ மிக்க பேரொளி இருப்பினும், கண்கள் இல்லையேல் - குருட்டுக் கண்களால் எப்பொருளையும் பார்த்தறிதல் இயலாது. பொருள்களைக் காணும் நிலையில் கண்கட்கும் ஒளிக்கும் உள்ள இணைபிரியாத் தொடர்பினால், 'கண்ணும் ஒளியும் போலே'' என்று பாடினார் பாவேந்தர்.

**கன்னல் தமிழும் கவியரசரும்**

பாடலின் ஆறாம் பகுதி 'கன்னல் தமிழும் யானும்' என்பது. தமிழ் கன்னல் தமிழாம். கன்னல் என்பதற்கு,

கரும்பு, சர்க்கரை, இனிமை என்ற பொருள்கள் உண்டு. அதாவது, கன்னல் தமிழ் என்றால், கரும்புபோல் இனிக்கும் தமிழ் என்பது பொருளாம். தஞ்சைவாணன் - கோவை ஆசிரியர் பொய்யா மொழிப் புலவர்,

"தேருந்தொறும் இனிதாம் செந்தமிழ்"

என்றார். மாணிக்க வாசகர் திருக்கோவையாரில்

"உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்"

என்றார். தீந்தமிழ் = தித்திப்பான தமிழ்.

தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்ற பொருள் உண்டு.

எனவே, தமிழுக்கும் தமக்கும் நெருக்கம் மிகுதி எனக் கவியரசர் கூறுகிறார். வானத்திற்கு வெண்ணிலாபோல வீரனுக்குக் கூர்வாள் போல-மலருக்கு மணம் போல-மகர யாழுக்கு இசைபோல-கண்ணுக்கு ஒளிபோல-என உவமை களை அடுக்கி, கவிஞருக்குத் தமிழ் இன்றியமையாதது எனக் கருத்து கொள்ளலாகாது. இந்த உவமைகளை அடுக்கி, இவற்றைப்போல, தமிழுக்குக் கவியரசர் இன்றி மையாதவர் எனக் கருத்து கொள்ளல் வேண்டும். அந்த அளவுக்குக் கவிஞர், தமிழின் பெருமைகளை விளக்கிப் பல சிறந்த தமிழ் நூல்களைப் படைத்துத் தமிழை வளர்த்து உள்ளார். கன்னல் தமிழும் கவியரசர் புகழும் வாழ்க.

# 9. பகைவரை மயக்கிய பாவேந்தர்

## 1. வாழ்க்கைக் குறிப்புகள்

பாவேந்தர் பாரதிதாசனாரைப் பற்றிக் கட்டுரை எழுதுபவர்கள், அவருடைய பாடல்களில் உள்ள சிறப்பை எடுத்துக்காட்டியே கட்டுரை எழுதுவார்கள். அவரோடு பல்லாண்டு காலம் நெருங்கிப் பழகியவன். அவர் தொடர்

பான வாழ்க்கைக் குறிப்புகள் இரண்டினை மட்டும் இவண் தருகிறேன்.

### 1.1 பகையின் தோற்றம்

1942-ஆம் ஆண்டு கோடை விடுமுறை நாளில் நடந்த நிகழ்ச்சி ஒன்று முதலில் தரப்பெறும். அப்போது யான் மயிலம் கல்லூரியில் விரிவுரையாளனாகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். விடுமுறையில் யான் புதுச்சேரிக்கு வந்திருந்தேன். ஒருநாள் புதுச்சேரியைச் சார்ந்த உப்பளம் என்னும் ஊரில் பாரதிதாசனார் தலைமையில் யான் சொற்பொழிவாற்றினேன். ஐயா அவர்கள், முடிவுரையில் என்னைத் தாறுமாறாகத் தாக்கிப் பேசிவிட்டார்கள். நான் பதில் கொடுக்க உடனே எழுந்தேன். என்னை மு. த. வேலாயுதனார் என்பவர் தடுத்து அமரச் செய்துவிட்டார். இளைஞனாகையால் ஐயாவின் மேல் யான் பெரும்பகை கொண்டிருந்தேன்.

### 1.1.2 காரிருளில் மின்னல்

1942 கோடை விடுமுறையில் இந்தப் பிணக்கு ஏற்பட்டது. விடுமுறை முடிந்ததும் மயிலம் தமிழ்க் கல்லூரிக்குப் பணியாற்றச் சென்றேன். காலையில் கல்லூரி வகுப்பு தொடங்குவதற்கு முன்பு, ஆசிரியர்களும் மாணாக்கர்களும் ஓரிடத்தில் வரிசையாக நின்று கூட்டுக் குழு வழிபாட்டுப் பாடல்கள் பாடிய பின்னரே வகுப்புக்குச் செல்வது வழக்கம்.

குழு வழிபாட்டில் முதலில் கடவுள் வணக்கப் பாடலும் அடுத்துத் தமிழ் வாழ்த்துப் பாடலும் பாடப்பெறும். தமிழ் வாழ்த்தாகச் சுப்பிரமணிய பாரதியார் பாடல்கள், சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியப் பாடல்கள், கவியரசு வேங்கடாசலம் பிள்ளையின் பாடல்கள் முதலியவை மாறி மாறிப் பாடப்படும். மாணாக்கர் இருவர் பாடுவர். முதல்

நாள் மாலையே, மறுநாள் காலை பாடப்போகும் பாடல் களை என்னிடம் அறிவித்து ஒப்புதல் பெறவேண்டும். அவ்வாறு தணிக்கை செய்யும் பொறுப்பு என்னிடம் அறி வித்து ஒப்புதல் பெறவேண்டும். அவ்வாறு தணிக்கை செய்யும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சில நாட்களில், பாரதிதாசனார் தமிழ் வாழ்த்துப் பாடலைப் பாடுவதற்கு என்னிடம் ஒப்புதல் கேட்பர். 'அவன் பாடலைப் பாடக்கூடாது. அவன் நாத்திகன் - அவன் பாடலைப் பாடவே கூடாது' என்று கண்டிப்பாக நான் மறுத்து விடுவது வழக்கம்.

ஒருநாள் சொற்பொழிவிற்காக நான் வெளியூர் சென்றிருந்தேன்; மறுநாள் காலை வகுப்பு தொடங்கு வதற்கு முன் வந்து சேரவேண்டும் எனக் குறிவைத்து விரைவாகக் கல்லூரிக்கு வந்துவிட்டேன். நான் கல்லூரிக் குள் நுழையும்போது குழு வழிபாடு நடந்து கொண்டி ருந்தது. பாடல்கள் என்னால் தணிக்கை செய்யப்பட வில்லை. நான் வந்தபோது இறை வணக்கப் பாடல் பாடிக் கொண்டிருந்தனர்; அடுத்துத் தமிழ் வாழ்த்துப் பாடல் பாடினர். அந்தத் தமிழ் வாழ்த்துப் பாடலைக் கேட்டதும் யான் மெய்ம் மறந்து போனேன்; மயிர்க்கூச்செறிந்து மகிழ்ச்சியில் திளைத்தேன். அந்தப் பாடல், பாவேந்தர் பாரதிதாசனார் இயற்றியதும், இப்போது புதுவை மாநில அரசால் இறைவணக்கப் பாடலாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுக் கூட்டங்களில் பாடப்படுவதுமாகிய 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்று தொடங்கும் பாடல் தான் அப்பாடல் முழுவதும் வருமாறு:-

"வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரரின் வீரமும் வெற்றியும் நீயே

தாழ்ந்திடும் நிலையினில் உனைவிடுப் பேனோ
தமிழன் எந்நாளும் தலைகுனி வேனோ
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீ; உயிர் நான் மறப்பேனோ

செந்தமிழே உயிரே நறுந் தேனே
செயலினை மூச்சினை உனக்களித் தேனே
நைந்தாயெனில் நைந்து போகும் என் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே

முந்தைய நாளினில் அறிவும் இலாது
மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தாமரைக் காடு பூத்தது போலே
செழித்த என் தமிழே ஒளியே வாழி!"

இந்தப் பாடலைக் கேட்ட பின்னர், பாவேந்தர் மீது எனக்கிருந்த பகையுணர்வு சிறிது சிறிதாகக் குறைந்து. பின்னர் அறவே மறைந்தது. அவர்பால் எனக்கு ஒருவகைப் பற்று ஏற்பட்டது. கார் இருளில் மின்னல்போலப் பகைமை யிடையே இந்தப் பற்று ஏற்பட்டது. ஆனால், மின்னல் போல் மறைந்து விடாமல் இன்று வரையும் நீடித்து நிலைத் திருக்கின்றது. பகைவனை மயக்கிப் பகை மாற்றிய சிறப்புப் பாடலாகும் இது. இந்தப் பாடல் ஒன்றே கவிஞரின் புகழுக்குச் சான்று பகரப் போதுமே! அவரது தமிழ்ப் பற்றை என்னென்று வியப்பது!

## 1.2 நாட்டுப் பற்று

பாவேந்தர் என்னிடம் கூறிய மிகவும் சுவையான செய்தி ஒன்று உள்ளது. இதை நான் கூட்டங்களில் கூடக் கூறியிருக்கிறேன். அதாவது:

பிரெஞ்சுக்காரர் புதுச்சேரியை ஆண்டு கொண்டிருந்த போது, (பிரிட்டிஷ்) இந்தியாவில் விடுதலைப் போராட்டம்

மிடுக்காக நடந்து கொண்டிருந்தது. அத்தகைய போராட்டம் புதுச்சேரியில் நடக்காதபடிப் பிரெஞ்சுக்கார ஆட்சியினர் கண்காணித்து வந்தனர். குறிப்பாக, அரசு ஊழியர்கள் கதர் உடையும் காந்தி குல்லாவும் அணியக் கூடாது என்பது கடுமையான ஆணையாகும்.

ஆனால், பிரெஞ்சு அரசுக் கல்வித்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த நம் கவிஞர் கதராடையும் காந்தி குல்லாவும் அணிவாராம். பிரெஞ்சுக்காரக் கல்வித்துறைத் தலைவர் விடுமுறையான ஒருநாளில் தமது வீட்டில் ஆசிரியர் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தாராம். குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயம் கூட்டத்திற்கு வர வேண்டுமாம்.

அவ்வாறே ஆசிரியர்கள், குறித்த நாளில் துறைத் தலைவரின் வீட்டில் சென்று அமர்ந்திருந்தனராம். அப்போது, கவிஞர் கதராடையும் காந்தி குல்லாவும் அணிந்து கொண்டு போய் ஆசிரியர்களுடன் அமர்ந்தாராம். ஆசிரியர்கள் சுப்புரத்தினம் என்னும் இயற்பெயருடைய கவிஞரைப் பார்த்து, 'டேய் சுப்புரத்தினம்! இந்த உடையுடன் இங்கே இருக்காதே - போய் வேறு உடை உடுத்திக்கொண்டு வா அல்லது வீட்டுக்குப் போய்விடு. துரை (கல்வித்துறைத் தலைவர்) வந்து பார்த்தால் உன்னைத் தொலைத்து விடுவான். உன் வேலைக்கே சீட்டுக் கிழித்துவிடுவான் - எழுந்து போ போ' - என்று வற்புறுத்தினார்களாம்.

ஆனால் கவிஞர் சிறிதும் அசைந்து கொடுக்க வில்லையாம்; துரை வந்து பார்க்கட்டும். எனக்குச் சீட்டுக் கிழிக்கட்டும் – நான் எதற்கும் தயார் என்று கூறினாராம். மீண்டும் ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டும் கவிஞர் நகராமல் ஒரே உறுதியுடன் இருந்து விட்டாராம்.

பின்னர்ச் சிறிது நேரத்தில் பிரெஞ்சுக்காரத் தலைவர் ஆசிரியர்கள் அமர்ந்திருந்த கூட்டத்துக்கு வந்தாராம். வந்ததும் கவிஞர் சுப்புரத்தினத்தை நெடுநேரம் ஏற இறங்கக் கவனித்துப் பார்த்தாராம்; பிறகு அவ்விடத்தினின்றும் அகன்று உள்ளே சென்றாராம்.

தலைவர் உள்ளே சென்றதும் ஆசிரியர்கள் மிகவும் அஞ்சி, கவிஞரை நோக்கி, "டேய் சுப்புரத்தினம்! பார்த்தாயா? துரை எதற்கு உள்ளே போயிருக்கிறான் தெரியுமா? உனக்கு 'டிஸ்மிஸ்' ஆர்டர் எழுதிக்கொண்டு வரத்தான் போயிருக்கிறான். இனிமேலாவது எழுந்து போய்விடு. உன்னை மன்னித்தாலும் மன்னிப்பான். இல்லாவிடின் உன்னோடு எங்களுக்கும் ஏதாவது தொல்லை நேரிடலாம்'', என்று சொல்லிப் பார்த்தார்களாம். அப்போதும் கவிஞர் எழுந்து செல்லாமல் ('ஆணி அடித்துக் கொண்டும்' 'வேர் பாய்ந்தும்') அதே இடத்தில் அமர்ந்திருந்தாராம்.

சிறிது நேரத்தில் துரை தம் மனைவியை அழைத்துக் கொண்டு வந்து கவிஞரைச் சுட்டிக்காட்டிப் பின்வருமாறு கூறினாராம்: 'இதோ பார் இவரை! கதர் ஆடையும் கதர் குல்லாவும் அணியக் கூடாது; அணிந்தால் வேலை போய் விடும் என்று நாம் விதி செய்துள்ளோம். அப்படியிருந்தும், இவர் எதற்கும் அஞ்சாமல் கதர் உடையுடன் என் எதிரிலேயே வந்திருக்கிறார். இவருடைய உறுதியான துணி வையும் நாட்டுப் பற்றையும் பார்! இப்படியொரு நாட்டுப் பற்றுடையவர் இருப்பார் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை' என்று தம் மனைவியிடம் கூறிக் கவிஞரை மெச்சினாராம். அதன்பிறகுதான் ஆசிரியர்கள் அச்சம் நீங்கி மூச்சு விட்டார்களாம்.

இங்கே நாம், கவிஞரின் உறுதியான நாட்டுப் பற்றைப் பெரிதும் வியப்பதா? அல்லது, கல்வித்துறைத் தலைவரின்

பெருந்தன்மையைப் பற்றிப் பெரிதும் வியப்பதா? ஒன்றும் புரியவில்லையே. சரி - இருவரையுமே வியப்போம். இச்செய்தியைக் கவிஞர் என்னிடம் நேரில் கூறியபோது நான் அவரை மிகவும் பாராட்டினேன்.

பகைவனாயிருந்த என்னைப் பணிய வைத்தாற் போலவே பிரெஞ்சுக்காரக் கல்வித்துறைத் தலைவரையும் வியப்படையச் செய்துவிட்ட பாவேந்தர் பாரதிதாசனாரின் புகழ் என்றென்றும் வாழ்க.

## 10. கவிஞர் கண்ட காதலர்களும் தொழிலாளர்களும்

முழு நிலா காயும் ஒரு பருவ நாள் - இரவு நேரம்- ஒரு வெட்ட வெளி. அதில், ஒரு காதல் இணை அதாவது காதலனும் காதலியும் கை கோத்தபடிப் பேசி மகிழ்ந்து சிரித்துக் கொண்டிருந்தனர். காதலியினும் காதலன் சிறிது உயரமாக இருக்கிறான். இன்ப மயக்கத்திலே காதலியின் கூந்தல் சரிந்து கிடக்கிறது. இருவரும் மகிழ்ந்து பேசி நகைக்கும்போது, பெண்ணாதலின் காதலியின் சிரிப்பு ஒலி சிறிதாக இருந்தது. ஆண் ஆதலின் காதலன் 'கல கல' என உரக்கச் சிரித்தான். இந்தக் காட்சியைக் கண்ட கவிஞர் (பாவேந்தர் பாரதிதாசன்) இதைப் பின்வரும் பாடலாக வடித்துத் தந்துள்ளார்:

"வெட்ட வெளியினில் நாங்கள் - எதிர்
வேறொரு காட்சியும் கண்டோம்
குட்டைப் பனைமரம் ஒன்றும் - எழில்
கூந்தல் சரிந்ததோர் ஈந்தும்

மட்டைக் கரங்கள் பிணைத்தே - இன்ப
வார்த்தைகள் பேசிடும் போது
கட்டுக்கு அடங்கா நகைப்பைப் - பனை
'கல கல' என்று கொட்டிடிற்றே.''

என்பது பாடல். இங்கே, குட்டைப் பனை மரம்தான் காதலன்; ஈச்ச மரம்தான் காதலி. ஈந்து என்றால் ஈச்ச மரம். பனை மரம் மிகவும் நெட்டையாயிருக்கும். மிகவும் உயரமாய் இருப்பவரைப் பார்த்து 'பனை மரம் போல் வளர்ந்து விட்டார்' என்று கூறுவது வழக்கம். ஆனால், சிற்றீச்ச மரமோ, பனை மரம் போல் இன்றி ஓரளவு உயரமே இருக்கும். காதலனும் காதலியும் கைகோத்துக் கொள்ள வேண்டுமெனில், நெட்டைப் பனை மரத்திற்கு ஒத்து வராது. அதனால்தான், ஈச்ச மரத்தோடு கைகோத்துக் கொள்ளக் குட்டைப் பனை மரத்தால் முடிந்தது.

காதலி ஈந்தின் கூந்தல் சரிந்தது எப்படி? பனை மரத்தின் மட்டைகள் நேர்க் கோட்டில் நீண்டு கொண்டிருக்கும். (நாளாகிய பனை மட்டை இற்று விழும் நிலையில் கீழ் நோக்கித் தொங்குவதை இங்கே எடுத்துக் கொள்ள லாகாது). ஈச்ச மரத்தின் மட்டைகளோ எப்போதுமே - இயற்கையாகவே சரிந்த நிலையில் இருக்கும். இந்த இயற்கை நிலைமை, இன்ப மயக்கத்தால் கூந்தல் சரிந்திருக்கும் நிலையை நினைவூட்டுகிறது.

கை கோத்துக் கொள்ளலாவது: குட்டைப் பனை மரமும் ஈந்தும் பக்கத்தில் பக்கத்தில் நெருங்கி யிருப்பதால், பனையின் மட்டைகள் ஈந்தின் மட்டைகளுக்குள்ளும், ஈந்தின் மட்டைகள் பனையின் மட்டைகளுக்குள்ளும் புகுந்து செருகிக் கொண்டிருக்கும் நிலை. இதுதான் கை கோத்துக் கொள்ளுதல் என்பது.

இன்ப வார்த்தைகள் பேசுதல் என்பது, காற்றினால் மட்டைகள் அசையும்போது ஏற்படும் ஒலியாகும்.

காதலி பெண்ணாதலின் அவளது சிரிப்பொலி பெரிதாயில்லை; காதலன் ஆடவனாதலின் சிரிப்பொலி பெரிதாயிருந்தது—என்பதாவது: ஓலை காய்ந்த பனை மட்டைகள் காற்றினால் 'கல கல' என்று பேரொலி எழுப்புவதாகும். 'பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது' என்னும் பழமொழி ஈண்டு எண்ணத்தக்கது. கட்டுக்கு அடங்கா நகைப்பு என்பது: பனை மட்டைகள் ஓயாது சல சலத்துக் கொண்டிருப்பதாகும். 'சல சல' என்பது 'கல கல' என்பது போன்ற ஒலிக் குறிப்பாகும். 'கல கல' என்று கொட்டிற்று என்பது: ஒருவர் அளவு மீறிப் பேரொலியுடன் தொடர்ந்து சிரித்தால், இன்னொருவர் அவரைப் பார்த்து, 'போதும் சிரித்தது-நிரம்பக் கொட்டி விடாதே-பல் கொட்டிவிடப் போகிறது' என்று கூறும் உலகியல் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. கொட்டுதல் என்பது மிகுதியைக் குறிப்பதற்கு இன்னொரு சான்று வருமாறு: தண்ணீரைச் சிந்தினார்-தண்ணீரைத் தெளித்தார் என்பன சிறிதளவு தண்ணீரையே குறிக்கும். தண்ணீரைக் கொட்டினார் என்பதோ, கலத்திலுள்ள தண்ணீர் முழுவதையுமே குறிக்கும். இவ்வளவு சொல் நயங்களும் பொருள் நயங்களும் கவிஞர் பாரதிதாசனின் இப்பாடலில் அமைந்திருப்பது மிக்க இலக்கியச் சுவை பயக்கின்றதன்றோ.

பாவேந்தரின் 'மாவலி புரச் செலவு' என்னும் தலைப்பில் உள்ள பத்துப் பாடல்களுள் இது ஐந்தாவது பாடலாகும். சிறந்த கற்பனைகளும் உவமைகளும் தற்குறிப் பேற்றமும் சமுதாயக் கருத்தும் தொழிலாளர்கள்பால் பரிவும் இந்தப் பாடல்களில் பொதிந்துள்ளன.

கவிஞர், நண்பர்கள் சிலருடன், ஒருநாள் இரவு நிலா ஒளியில் தோணியில் ஏறிப் பக்கிங்காம் கால்வாய் வழியாகச் சென்னையிலிருந்து மாவலிபுரம் சென்றாராம். நிலா சினம் கொண்டதுபோல் மிகவும் சிவந்து காணப்பட்டதாம்.

தொழிலாளர் படும் தொல்லையைக் கண்டு அது சிவந்திருக்குமோ என எண்ணிச் சுற்று முற்றும் பார்த்தளாம். தோணியைச் செலுத்தும் தொழிலாளர்கள் படும் தொல்லையைக் கண்டு நெஞ்சம் துடித்தாளாம். அது தொடர்பான இரு பாடல்கள் வருமாறு:—

"தோணிக் கயிற்றினை ஓர் ஆள் - இரு
தோள்கொண் டிழுப்பது கண்டோம்
காணச் சகித்திடவில்லை - அவன்
கரையொடு நடந்திடு கின்றான்
கோணி முதுகினைக் கையால் - ஒரு
கோல் நுனியால் இலை போன்ற
தோணியை வேறொரு வன்தான் - தள்ளித்
தொல்லை யுற்றான் பின்புறத்தில்"—

"இந்த உலகினில் யாரும் - நல்
இன்ப மெனும் கரை ஏறல்
சந்ததும் தொழி லாளர் - புயம்
தரும் துணை யன்றி வேறே
எந்த விதத்திலும் இல்லை - இதை
இருபது தாம் சொன்னோம்
சிந்தை களித்த நிலாவும் - முத்துச்
சிந்தொளி சிந்தி உயர்ந்தான்"—

இந்தப் பகுதியைச் சேர்ந்த பத்துப் பாடல்களுமே பத்தாயிரம் பாடல்கட்கு ஒப்பாகும். கவிஞரின் இலக்கியச் சிறப்பிற்கும் சமுதாய நோக்கிற்கும் இதனினும் வேறு சான்று வேண்டுமா?

# 11. மூன்று மடல்கள்

மடல் (கடிதம்) வடிவில் சில செய்திகளை அறிவுறுத்துவது ஒருவகை இலக்கியமாகும். இந்த முறையை அறிஞர்கள் பலர் கையாண்டுள்ளனர். எடுத்துக்காட்டு ஒன்றே ஒன்றாவது காண்போமே. சவகர்லால் நேரு அவர்கள் தம் மகள் இந்திரா அவர்கட்கு மடல் வடிவில் பல செய்திகளை அறியச் செய்த இலக்கியப் படைப்பு பலரும் அறிந்ததாகும். சிலர், அன்னைக்கு – தம்பிக்கு – தங்கைக்கு என்றெல்லாம் தலைப்பிட்டுத் தனித்தனி நூலே எழுதியிருப்பதையும் பலரும் அறிந்திருப்பர்.

இந்தக் கட்டுரையில், ஒருவர் தம் மைந்தனுக்கும், மாணாக்கனுக்கும், நண்பனுக்கும் எழுதியதாகத் தனித் தனி மடல்கள் மூன்று உள்ளன. இந்த முறை படிப்பவர்க்கு அலுப்பு தட்டாமல் ஆர்வம் ஊட்டும் ஒருவகை முயற்சி யாகும். இனி முறையே மடல்களைக் காண்பாம்.

**மடல் - 1**

## வரலாற்று அறிவு

அன்புள்ள மைந்த,

நலம். நலம் பல மலர்க!

நின் கடிதமும் நீ படிக்கும் ஊர்ப் பள்ளியில் தந்த தேர்வு மதிப்பெண் பட்டியலும் வந்தன. தேர்வு மதிப்பெண் பட்டியலில் கையொப்பம் இட்டு அனுப்பியுள்ளேன்.

நீ எல்லாப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண் பெற்றிருக் கிறாய். மகிழ்ச்சி. ஆனால் வரலாற்றுப் பாடத்தில் மட்டும் தேவைக்குக் குறைவான மதிப்பெண் பெற்றுள்ளாய். வரலாற்றுப் பாடத்தையும் கவனித்துப் படிக்க வேண்டும்.

மாகவி சுப்பிரமணிய பாரதியார் தம் ஆத்திசூடி நூலில் 'சரித்திரத்தில் தேர்ச்சி கொள்' என்று எழுதியிருப்பதை நீ அறிந்திருப்பாய் என்று எண்ணுகிறேன். இல்லையேல், இப்பொழுதாயினும் அறிந்து, பாரதியாரின் அறிவு மொழியைச் செயலுக்குக் கொண்டு வருவாயாக.

தேர்வில் வெற்றி பெறுவதற்காக மட்டும் வரலாறு படிக்க வேண்டும் என்பதில்லை. வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காகவும் வரலாறு படிக்க வேண்டும். கல்வி நிறுவனங்களில் வரலாற்றுப் பாடம் கற்பித்துத் தேர்வு நடத்துவதே, பிற்கால வாழ்க்கையைப் பயனுள்ள முறையில் அமைத்துக் கொள்வதற்காகத்தான்.

முதலில் வரலாறு என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். Yesterday is History என்று ஆங்கிலத்தில் சொல்வது உண்டு. அதாவது, நேற்று வரலாறு என்பது இதன் பொருள்.

இவ்வாறு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உலகில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளையும் பிற்கால வழிமுறையினர்க்குப் படிப்பினையாக இருக்கும்படி ஒரு மாதிரி வாழ்க்கையாகத் தெரியும்படி எழுதி வைக்கப்பட்டிருப்பதே வரலாறாகும்.

வரலாற்றைப் புரிந்து கொள்ள உதவும் சாதனங்களால் - வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் துணைப் பொருள்களால் - வரலாற்றைத் தெரிந்து கொள்ள உதவும் கருவிகளால் வரலாற்றை மூன்று வகைப்படுத்துவது உண்டு. அவையாவன: பட்டப் பகலில் நடந்த வரலாறு - வைகறையில் மூடுபனியில் நடந்த வரலாறு - அமாவாசை நள்ளிரவு இருட்டில் நடந்த வரலாறு என்பன அவை. இம்மூன்றையும் விளக்க வேண்டுமா? சரி விளக்குகிறேன்.

பட்டப் பகலில் நடந்த வரலாறு என்பது, இந்தக் காலத்தில் நாம் படிக்கின்ற வரலாற்று நூல் செய்தியாகும். அதாவது, நிகழ்ச்சி நடைபெற்ற காலம் – ஆண்டு – திங்கள் - நாள் – மணி, நிகழ்ச்சி நடைபெற்ற இடம், நிகழ்ச்சியை நடத்தியவர், அதன் காரணம், அதன் விளைவுகள் முதலியவை பற்றி நன்கு வெளிப்படையாக அறிந்து எழுதி வைத்திருக்கும் நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ளும் வரலாறாகும்.

வைகறையில் மூடுபனியில் நடந்த வரலாறாவது: இந்த நேரத்தில் எதிரில் யாரோ வருகிறார் என்பதை ஒரு தோற்றமாக உணர்ந்து கொள்ள முடிகிறதே தவிர, தெளிவாக இன்னார் எனப் புரிந்து கொள்ள முடியாதல்லவா? அதுபோல, நிகழ்ச்சி நடந்த நேரம் – இடம் – நிகழ்த்தியவர் முதலிய விவரங்களைப் போதிய அளவு தெளிவாக அறிந்து கொள்ள முடியாமல், இலக்கியங்களிலே கூறப்பட்டிருப்பவற்றைக் கொண்டு உய்த்துணர்வாக அறிந்து கொள்ளும் வரலாறாகும்.

அமாவாசை நள்ளிருளில் நடந்த வரலாறு எனப்படுவதாவது: ஞாயிறு – திங்கள் இவற்றின் ஒளியோ - விளக்கொளியோ இல்லாத நள்ளிருளில் பொருள்களைத் தடவிப் பார்த்துத்தான் ஓரளவு புரிந்து கொள்ள முடியும். அதுபோல, புதைப்பொருள் - அகழ்வாராய்ச்சி வாயிலாகக் கண்டுபிடித்துத் தோண்டி எடுக்கும் பொருள்களைக் கொண்டு ஒரு தோற்றமாகப் பழங்கால நிலைமைகளைப் புரிந்து கொள்ளும் வரலாறாகும். அரப்பா - மொகஞ்ச தாரோ–சிந்துவெளி நாகரிகம் இவ்வாறு கண்டுபிடித்துத் தெரிந்து கொண்ட அமைப்பேயாகும். இது போன்ற பழைய நாகரிகங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்த மூன்றனுள், இலக்கியங்களின் வாயிலாகத் தெரிந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் கற்பனையும் கலந்திருக்க

லாம். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரிய புராணம், பாரதம், இராமாயணம் போன்றவை இத்தகையனவே. இலக்கிய இன்பத்திற்காக - இலக்கியச் சுவை நயத்திற்காகக் கற்பனை கலப்பது உண்டு. இவற்றுள் உள்ள கற்பனைச் செய்திகளைப் பகுத்தறிவின் வாயிலாக விட்டு விலக்கி, நடந்திருக்கக் கூடியதை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இலக்கிய ஆசிரியனுக்கும் வரலாற்று ஆசிரியனுக்கும் உள்ள வேறுபாடாவது: கற்பனையும் கலந்து எழுதுபவன் இலக்கிய ஆசிரியன். கற்பனை சிறிதுமின்றி - தன் சொந்தக் கருத்தைச் சிறிதும் புகுத்தாமல், நடந்ததை நடந்தவாறு அப்படியே எழுதி அளிப்பவன் வரலாற்று ஆசிரியனானவன். வரலாற்று ஆசிரியன், கற்பனையையோ - தன் சொந்தக் கருத்தையோ இடையில் புகுத்துவானேயாகில், அவனது எழுத்து, வரலாறு என்ற பெயருக்கு உரியதாகாமல் இலக்கியம் என்னும் பெயர் பெறும் நிலையை அடைந்து விடும். எனவே, வரலாறு அதாவது சரித்திரம் என்பது, நடந்ததை நடந்தவாறு, காலம் - இடம் - நிகழ்த்தியவர் பற்றிய அறிமுகத்துடன் எழுதப்பட்டிருப்பதாகும்.

வரலாறுகள் எழுதப்பட்டிருப்பதன் நோக்கத்தை உணர்ந்து, அதனால் கிடைக்கக்கூடிய படிப்பினையின்படி நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

வரலாற்று அறிவினால், எது நல்லது - எது கெட்டது, எது அறம் – எது மறம் என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்; அறநெறியில் வாழ்ந்தவர்கள் அடைந்த ஆக்கத்தை யும், மறநெறியைக் கடைப்பிடித்தவர்கட்குக் கிடைத்த பேரிழப்பையும் தெரிந்த கொள்ள முடியும். அதற்கு ஏற்ப நம் வாழ்க்கையைச் சீரிய - நேரிய முறையில் அமைத்துக் கொண்டு ஆக்கம் பெற இந்த வரலாற்றறிவு நமக்குப் பேருதவி புரியும்.

வரலாற்று நூல்களில் மாபெரும் போர்களைப் பற்றிப் படிக்கிறோம். அப் போர்களால் விளைந்த கேடுகளைப் பற்றியும் படிக்கிறோம். எனவே, போர் கூடாது என்பதை ஆணித்தரமாக அறிய முடிகிறது.

இலக்கியங்களில் உள்ள வரலாற்றுச் செய்திகட்கும் மக்களை வழிநடத்திச் செல்வதில் பங்கு உண்டு. சிலப்பதிகாரத்தால், ஆழ்ந்து ஆய்ந்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதையும், மணிமேகலையால் உலகப் பற்றுப் பிணிப்பு கூடாது என்பதையும், பெரிய புராணத்தால் அன்பு நெறியினையும் பாரதத்தால் பங்காளிகட்குள் பகையின்றி ஒற்றுமை வேண்டும் என்பதையும் சூது கூடாது என்பதையும், இராமாயணத்தால் பிறன்மனை நயத்தல் கூடாது என்பதனையும் - சாதி சமய வேறுபாடின்றி அனைவரும் உடன் பிறந்தவர் போல் ஒன்றி வாழ வேண்டும் என்பதையும், அரிச்சந்திரன் கதையால் உண்மையே பேச வேண்டும் என்பதையும், இன்னும், இன்ன பிற வரலாறுகளால், நம் வாழ்க்கையை நன்முறையில் கடைத்தேற்ற உதவும் பல்வேறு படிப்பினைகளையும் அறிந்து பின்பற்ற வேண்டும்.

இதனால்தான், 'சரித்திரத்தில் தேர்ச்சிகொள்' என்னும் அறிவுரையை அளித்துப் போந்தார் பாரதியார். வாழ்க நீடூழி.

இங்ஙனம்

**உன் தந்தை**

மடல் - 2

## காலத்தோடு செயல்

அன்புள்ள மாணவ நண்ப,

நலம். நலம் பல பெருகுக.

உன் மடல் கிடைத்தது. உனக்கு வேலை மிகுதியா யிருப்பதால் உடனடியாக மடல் எழுத முடியவில்லை என்று

எழுதியிருக்கிறாய். ஆமாம், இந்த வயதில் எவ்வளவு வேலையா யிருப்பினும் முயன்று செய்யத்தானே வேண்டும்? சில நேரம் பல வேலைகள் சுமந்து போவதாகவும் குறிப் பிட்டிருக்கிறாய். வேலைகள் எல்லாம் சுமையாகக் குவியாமல் இருப்பதற்கு ஒரு வழி உண்டு. அந்த வழியினை, நீ என்னிடம் கல்வி பயின்று கொண்டிருந்த காலத்திலேயே நான் அறிவித்திருப்பதாக நினைவிருக்கிறது. மீண்டும் அதனை ஈண்டு உனக்கு நினைவு செய்கிறேன்.

வேலையில் காலக்கழிவு செய்தல் கூடாது. எந்த வேலையா யிருப்பினும் உரிய நேரத்தில் முடித்துவிட வேண்டும். பிறகு பார்ப்போம் என்று ஒத்திப்போடும் இயல்பு நம் ஆக்கத்திற்குப் பெருந்தடைக் கல்லாகும். முழு வேலையையும் ஒத்திப்போடுவதற்கு மட்டும் இதனை நான் கூறவில்லை; குறித்த வேலையை அரைகுறையாய் விட்டு வைப்பதற்கும் சேர்த்தே நான் இந்த அறிவுரை யினைக் கூறுகின்றேன். அரைக் கிணறு தாண்டலாமா?

வேலையைக் குறையாய் நிறுத்தும் இயல்பு உடையவ ரிடந்தான் வேலைகள் மலையெனக் குவிந்து விடுவது வழக்கம். முற்பகல் வேலையைப் பிற்பகல் செய்ய, பிற் பகல் வேலையை மறுநாள் செய்ய, - இப்படியே போய்க் கொண்டிருந்தால், எந்த வேலையும் ஒழுங்குறாது. அவசரக் கோலம் அள்ளித் தெளித்த கதையாய்ப் போய்விடும். ‘செய்வன திருந்தச் செய்’ என்பது முதுமொழி யல்லவா?

சிலர் செய்யவேண்டிய வேலையை உரிய காலத்தில் செய்யாமல் காலப் பாழ் செய்து, வேறு இன்பப் பொழுது போக்குக் களியாட்டங்களில் ஈடுபடுவது உண்டு. வெளித் தோற்றத்திற்கு அவர்கள் களியாட்டயர்வதாகக் காணப் படினும், அவர்தம் உள்ளத்தே, ஐயோ! வேலையை விட்டு விட்டு வந்து விட்டோமே, எப்போது செய்வது-என்ன

ஆவது என்ற எண்ணம் உறுத்திக் கொண்டேயிருக்கும். குறை வேலைக்காரர்கள், பொழுது போக்கினால் பெறும் போலி இன்பத்தைக் காட்டிலும், உரிய காலத்தில் முடித்து மன நிறைவு கொள்வதால் உண்டாகும் இன்பமே பேரின்பம்! பேரின்பம்! இந்த உண்மையைப் பலர் உணர்வதில்லை.

சுற்றி வளைக்காமல் சுருங்கச் சொல்லவேண்டுமாயின், எடுத்துக் கொண்ட வேலையை உரிய காலத்திலேயே முற்றும் முடிக்காமல் எச்சமாய் விடுவது-அதாவது-வேலையைக் குறையாக நிறுத்திவைப்பது, நம் திட்டங்களை எல்லாம் முறியடித்து, நம்மைக் குறிக்கோள் அற்றவராக்கி நம் வாழ்வையே சீர்குலைத்து விடும். எனவே, வேலையில் சிறிதும் குறை வைக்கக்கூடாது. வாழ்க்கையில் சிறு பகையிருப்பினும், அது எங்ஙனம் நாளடைவில் பெரிய பகையாக முற்றி நம் தலைக்கே கேடு விளைத்து விடுமோ-அங்ஙனமே குறை வேலையும் செய்துவிடும்.

ஏன், வேறோர் எடுத்துக் காட்டும் உண்டே! தீயை முற்றும் அணைக்காமல் சிறிதளவு எச்சமாய் (குறையாய்) விட்டு வைப்பினும், அது பெருகி வளர்ந்து பெருங்கேடு செய்யுமல்லவா? வினைக் குறையும் அதுபோன்றதே. இதனை நம் வள்ளுவப் பெருந்தகையாரும்,

"வினைபகை என்றிண்டின் எச்சம் நினையுங்கால்
தீ யெச்சம் போலத் தெறும்" (674)

என்னும் குறட்பாவால் தெளிவுறுத்தியுள்ளாரே. எனவே எந்த வேலையினையும் காலம் தாழ்த்துச் செய்தல் கூடாது. உரிய காலத்தில் செய்து விட வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையானவையாகக் கடமைப்பட்டுள்ள செயல்களில் காலத் தாழ்வு கூடாது என்பது மட்டுமன்று. நல்ல பல அறச் செயல்கள் புரிவதிலும் காலத்தாழ்ப்பு கூடாது. காலத்

தோடு செய்தல்வேண்டும். இப்போது நாம் இளைஞராய்த் தானே இருக்கிறோம்-பிறகு பொறுமையாக அறச் செயல்கள் புரியலாம்-எனச் சோம்பியிருத்தலும் கூடாது-என்கிறார் வள்ளுவர்:

"அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை" (36)

என்பது திருக்குறள். இதை நாலடியாரும் வற்புறுத்துகிறது.

நாம் இப்போது இளமைாய்த்தானே இருக்கிறோம் இன்னும் நாள் ஆகட்டும்—பிறகு நல்வினை செய்வோம் என்று சோம்பியிருந்தலாகாது. கையில் பொருள் உள்ள போதோ மறைக்காமல் அறம் செய்யவேண்டும். இளமையை நம்பக் கூடாது. சூறைக் காற்று வீசின், முற்றி முதிர்ந்த கனி வீழாமல் மரத்திலேயே இருக்க, பச்சிளங்காய் விழுந்து விடுவதும் உண்டு—என்று நாலடியார் நவில்கிறது.

"மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்ம்மின்
முற்றி யிருந்த கனி யொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு" (79)

என்பது பாடல். இதையே, முன்றுறை அரையனார் இயற்றிய பழமொழி நானூறு என்னும் நூலில் உள்ள ஒரு பாடல் வேறொரு கோணத்தில் விளக்குகின்றது:

ஓடத்தில் ஏறு முன்பே ஏறுபவரிடம் ஓடக்காரர் கட்டணம் வாங்கி விடவேண்டும். அவரை அக்கரை சேர்ந்தபின் அவருக்கு அக்கறை இல்லாமலும் போகக் கூடும். அதாவது, அவரிடம் கட்டணம் வாங்குவது அரிதாகவும் போய் விடலாம். சுங்கப் பணம் வாங்குவதும் இது போன்றதே. எனவே, எதையும் தாங்கும் இளமை உள்ள போதே கல்வி கற்கவேண்டும். முதுமையில் கற்க முடியாமல் போகலாம் என்று இந்நூல் அறிவுறுத்துகிறது.

"ஆற்றும் இளமைக்கண் கல்லாதான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ-ஆற்றச்
சுரம் போக்கி உல்கு கொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிகொண்டார்" (1)

நல்ல பல செயல்கள் உரிய காலத்தில் செய்யப்படாமல் காலம் தாழ்த்தப்படுவதற்கு உரிய காரணங்களுள் சோம்பல் தலையாய காரணமாகும். இந்த மடி அதாவது சோம்பல் கூடாது என வள்ளுவர் 'மடியின்மை' என்னும் தலைப் பிட்டுப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். இவற்றுள் சில காண்பாம்.

குடி (குடும்பம்) என்னும் அணையா விளக்கு, சோம்பல் என்னும் சிட்டம் கட்டக் கட்ட ஒளி மழுங்கி அணைந்து விடும்-அழிந்து விடும்:

"குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்" (601)

என்பது குறள்.

தமது குடியை உயர்ந்த குடியாக்க விரும்புபவர், சோம்பலுக்குச் சோம்பல் தந்து சுறுசுறுப்புடன் இயங்கு வாராக!:

"மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்" (602) என்பது குறள்.

மடியை (சோம்பலை) மடியிலே கட்டிக்கொண்டிருக்கும் அறிவிலி பிறந்த குடி அவனுக்கும் முந்தி மடிந்துபோகும்:

"மடி மடிக்கொண் டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து" (603)

"பருவத்தே பயிர் செய்" என்னும் ஔவையின் (ஆத்திசூடி-2) அறிவுமொழியும் ஈண்டு எண்ணத் தக்கது.

என் அரிய மாணவ நண்ப! இது காறும் யான் கூறிய வற்றை உள்ளத்தில் கொண்டு, உரிய வேலைகளை உரிய நேரத்தில் செய்துவிடின், துன்பம் இன்றி இன்பம் எய்தலாம். 'பொன்னினும் சிறந்த பொருள் அருங்காலம், அல்லவா? வாழ்க பல்லாண்டு.

இங்ஙனம்
**உன் ஆசிரியன்**

**மடல் — 3**

## எண்ணித்துணிக

அன்பு கெழுமிய நண்ப,

நலம். நலம் பல பெருகுக, உன் மடல் வந்தது. மனம் சரியில்லை - எதைச் செய்யத் தொடங்கினும் ஒரே குழப்பமாயிருக்கிறது - சூழ்நிலையும் சரியில்லை - என்று மடலில் எழுதியிருக்கிறாய். தெளிவான எண்ணத்தோடு செயல் தொடங்கின் வெற்றி பெறலாம்.

திருவள்ளுவனார் என்ன கூறியுள்ளார்.? 'எண்ணித் துணிக கருமம்' என்றார். எண்ணுதலோ அதாவது சிந்திப்பதோ தெளிவு பெறுவதற்குத்தான். இந்தச் செயலை மேற்கொள்ளின், ஆக்கம் கிடைக்குமா அல்லது அழிவு நேருமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இன்னாருடன் சேர்ந்து செய்யலாமா என்றும் ஆய்ந்து பார்க்கவேண்டும்.

தொழிலை எந்த இடத்தில் தொடங்கினால் வெற்றி கிடைக்கும் - எந்தக் காலத்தில் தொடங்கினால் மேன் மேலும் வளரும் - என இடமும் காலமுங்கூட நன்கு எண்ணிப் பார்த்துத் தேர்ந்தெடுத்துத் தொடங்கவேண்டும்.

முன்பின் ஆய்வு இன்றித் திடீரெனத் தொடங்கின் தற்செயலாய் வெற்றி கிடைப்பினும் கிடைக்கலாம். ஆனால் உறுதியாக வெற்றி கிடைக்கும் என்று சொல்ல முடியாது. ஒன்று கிடக்க ஒன்று நேர்ந்து விடலாம். எனவே, எதையும் 'அவசரக் கோலம் அள்ளித் தெளித்த கதையாக' ஆக்கி விடலாகாது.

நம் செயலுக்குத் துணைபுரிய, ஆராயாமல், எவரை யும் எளிதில் நம்பிவிடக் கூடாது. நம்பிக்கையானவர் எனத் துணிந்த பின்னரே சேர்த்துக் கொள்ளவேண்டும்.

திடுதிப்பென்று எதையும் தொடங்கிவிடின், பொருள் இழப்புக்கேயன்றி உயிர் இழப்பிற்கும் ஆளாக நேரிடும். 'ஆய்ந்தோய்ந்து பாராதவன்தான் சாவ மருந்துண்பவன்' என்பது மக்களிடையே வழங்கும் ஒரு பழமொழி. திருவள்ளுவருங்கூட இதைக் கூறியிருக்கிறாரே.

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்" (791)

என்பது அவரது குறட்பா.

உலகியலில், ஆராய்ந்து - சிந்தித்துப் பார்க்காமல் கொண்ட திடீர் நட்பாலும் திடீர்க் காதலாலும் வாழ்க்கையைப் பாழாக்கிக்கொண்ட எடுத்துக்காட்டுகள் மிகப் பல உண்டு.

பிறர்க்கு நல்லது செய்தல் என்னும் பெயரால் ஆராயாது எல்லாருக்குமே நன்மை செய்து விடுதல் கூடாது. இந்த நன்மையின் துணைகொண்டு, நன்மை செய்தவருக்கோ மற்றும் பிறர்க்கோ தீமை செய்யும் கொடியவர்களும் உண்டு. ஆராயாமல் அவர்க்குச் செய்த நன்மை, பாம்புக்குப் பால் வார்த்த கதையாக ஆகிவிடுவதும் உண்டு.

ஆராயாமல் 'தடாபுடா' என்று செயலைத் தொடங்கி விடின், பின்னர்ப் பேரிழப்போ பெரும் பழியோ நேரின் அதன் பின்பு பலர் துணையாக நின்று 'முட்டுக்கொடுத்துக் காக்க முயன்றாலும் உய்யும் வழி கிடைக்காமல் போய் விடலாம்.

சிலர், எது நல்லது – எது கெட்டது என்று எண்ணாமல்- ஒரு தெளிவு இன்றி – ஒரு சூழ்வும் (ஆலோசனையும்) இன்றி, கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறையை விட்டு விட்டு, கடைப்பிடிக்கக் கூடாத வழியில் சென்று இடர்ப் படுகின்றனர். 'முன்யோசனை' வேண்டும் என்பது இதுபோல் இடர்ப்பாடு எய்தாமல் வெற்றி பெறுவதற்குத்தான். ஆய்வு இன்றி ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்லைத் தொடங்கி, இறுதியில் முதலையே இழந்துவிட்டவர்களின் வரலாறுகள் பல உண்டு.

இப்படியே யோசனை - ஆராய்வு செய்து கொண் டிருந்தால் செயல் ஒன்றும் நடைபெறாது; துணிந்து செயலைத் தொடங்கிவிடவேண்டும்; செயலைத் தொடங்கி விடின், பிறகு அவ்வப்போது நிலைமைக்கு ஏற்ப ஆய்வு செய்து செயல்படலாம் - என்று எண்ணித் தொடங்கிவிட்டுப் பின்னர்த் தலைமேல் கைவைத்துக் கொண்டு அழாத குறையாய் அமர்ந்துவிடக் கூடாது. இதனால்தான் திருவள்ளுவர்

''எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'' (467)

என்ற அறிவுரையை உலகுக்கு அளித்துப் போந்தார்.

தன் வலிமை, தன் படை வலிமை, பகைவர் வலிமை ஆகியவற்றையெல்லாம் ஒத்திட்டு நோக்கி ஆராயாது, திடீரெனப் பகைவர் நாட்டின்மீது படையெடுக்கும் ஓர் அரசின் செயல் பயிரைப் பாத்தி கட்டி வளர்ப்பதைப்போல்

பகைவர்க்கு எளிதில் வெற்றி வாய்ப்பை உண்டாக்கி விடலாம்.

ஆராயாமல் ஆர அமர எண்ணிப் போர் தொடுப்பது எப்போது என்றால், பகைவர் திடீரெனப் படையெடுத்து வந்துவிட்ட போதாகும். பகைவர் படை தம் ஊருக்குள் எதிர்பாராது புகுந்துவிட்டபோது, மணிக்கணக்கில் - நாள் கணக்கில் பலரும் அமர்ந்துகொண்டு என்ன செய்யலாம் - எவ்வாறு செய்யலாம் என்று ஆராய்ந்து கொண்டிருத்தலாகாது. இந்தச் சூழ்நிலையில் நேரத்தை நீட்டினால், 'அரசன் சிங்காரிப்பதற்குள் பட்டணம் பறிபோய் விடும்' என்னும் பட்டறிவு மொழிக்கு ஏற்பத் தோல்வியையே தழுவ நேரிடும். இத்தகைய சூழ்நிலையில், Quick Decision விரைந்து முடிவெடுத்தல், Quick Action - விரைந்து செயல் படுதல், Quick Result - விரைந்த பயன் என்ற முறையில் உடனே செயல்பட வேண்டும். ஆனால், இது போன்ற உடனடிச் சூழ்நிலை இல்லாத காலத்தில், அரசுத்தலைவரும் அமைச்சர்களும் படைத் தளபதிகளும் நன்கு ஆய்ந்து முடிவெடுத்த பின்னரே செயலில் இறங்கவேண்டும்'. வெற்றி பெறாவிடினும் தோல்வி அடையாமலாவது சரி நிகர் சமமாய் இருக்கவேண்டுமல்லவா?

உறவு கருதியோ - நீண்ட நாள் நட்பு கருதியோ, தகுதி யற்றவரை ஆராயாது செயலில் ஈடுபடுத்தலாகாது. இவர்கட்கு வேண்டுமானால் ஏதாவது உதவி செய்யலாம். மற்றப்படி சிறந்த செயல் செய்வதற்கு, உறவு - நட்பு - சாதி - சமயம் என்பவற்றைப் பார்க்காமல், எவர் நன்கு செயல் ஆற்றுவார் என்பதைத் தேர்ந்தறிந்து அவரிடமே செயலை ஒப்புக் கொடுக்கவேண்டும்.

ஆராயாது கண்டவரைச் செயலில் ஈடுபடுத்தினால், அவர்கள் மறைமுகமாகத் தாம் பொருள்சேர்த்துக் கொண்டு

நழுவி விட்டாலும் விடலாம். இவ்வாறு ஏமாந்து போனவர்களின் இரங்கத்தக்க வரலாறு எத்தனையோ உண்டு. 'தாரம் இழந்தவனைப் பெண் பார்க்க அனுப்பினால், அவன் தனக்குப் பார்ப்பான்' என்னும் பழமொழி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

எனவே, எந்தச் செயலிலும் ஈடுபடுவதற்கு முன், நன்றாகச் சிந்திக்க வேண்டும்; சிந்தித்து நல்ல முடிபாகத் தெளிவு பெறவேண்டும். இவ்வாறு செய்யின் வெற்றி உறுதி. ஆமாம். எண்ணத்தில் தெளிவுவேண்டும். வாழ்த்துகள்.

இங்ஙனம்,
**உன் அன்பு நண்பன்**

# 12. பெண் தெய்வ வழிபாடு

'கடவுள் மனிதரைப் படைத்தார்; மனிதர்கள் கடவுள்களைப் படைத்தனர்' என்பதாக ஒரு கருத்து கூறப்படுகிறது. உயிர் இனங்கள் அனைத்திலும் ஆண் - பெண் உண்டு. எனவே, கடவுளர்களிலும் மக்கள் ஆண் - பெண் கண்டனர். இந்த இரண்டும் இன்றித் தோற்றம் இல்லை.

இந்து மதத்தில் ஆண் தெய்வங்களாகவும், பெண் தெய்வங்களாகவும் தெய்வங்கள் பல உண்டு. இவண் நாம் பெண் தெய்வ வழிபாடு பற்றிச் சில செய்திகள் காண்போம்.

**இயற்கை வழிபாடு**

விண், காற்று, தீ, நீர், மண் என்னும் ஐந்து முதற் பொருள்களுள், விண் விண்ணவன் - விண்மகள் - விண் மடந்தை - ஆகாச வாணி என்றும், நீர் துர்காதேவி - காவிரித்தாய் என்றும் மண் மண்மகள் - மண்மடந்தை - நில

மகள் - பூமாதேவி என்றும் பெண்ணாக உருவகிக்கப்பட்டு வழிபடப்படுகின்றன. இயற்கைப் பெண் தெய்வ வழிபாடு இது. பால் தரும் பசுவையும் பெண் தெய்வமாக வழிபடுவது இந்திய மக்களின் மரபு.

### மாரியம்மன் வழிபாடு

மாரியம்மன் என்னும் பெயரில் நாடெங்கும் கோயில்களும், வழிபாடுகளும் உண்டு. மாரியம்மன் மாரியாத்தா என்ற பெயராலும் வழங்கப்படும். அம்மன் - ஆத்தா என்றால் தாய் என்று பொருள். மாரி என்றால் மழை. எனவே, மழையைத் தந்து மக்களை வாழ வைக்கும் தெய்வம் என்னும் பொருளில் மாரியம்மன் - மாரியாத்தா என்னும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. மாரியம்மன் கோயில் விழாக்கள் நாட்டில் மிகவும் பெயர் பெற்றவை.

### மாரியம்மன் வரலாறு

திருவள்ளுவரின் மனைவிதான் மாரியம்மன் ஆனாள் என்பது ஒரு கதை. பிறகு முனிவரின் மனைவி நாகாவலி என்பவளே மாரியம்மன் ஆனாள் என்பது மற்றொரு கதை. சமதக்கினி முனிவரின் மனைவி இரேணுகாதேவி என்பவளே மாரியம்மன் ஆனாள் என்பது வேறொரு கதை. இரேணுகாவின் மகன் பரசுராமன் தாய் செய்த ஒரு பெருங் குற்றம் பற்றி, அவளைத் தலை வேறாகவும், உடல் வேறாகவும் வெட்டி விட்டானாம். எனவேதான், சில இடங்களில் கழுத்தை மட்டும் வைத்து வழிபடுகின்றனர். கழுத்து மாரியம்மன் கோயில்கள் தோன்றிய வரலாறுகளுள் இஃதும் ஒன்று. சிலர் வழிபடும் வாசவி என்னும் வாசவாம்பாளுக்கும் மனிதத் தொடர்புடைய வரலாறு சிலரால் கூறப்படுகிறது.

## பூவாடைக்காரி வழிபாடு

பெண் ஒருத்தி கணவன் இருக்கும்போதே கட்டுக் கழுத்தியாய்ப் (சுமங்கலியாய்ப்) பூவுடனும், பொட்டுடனும் இறந்துவிடின், அவளுக்குப் பூவாடைக்காரி என்னும் பெயர் வழங்கிப் புதுப் புடவை எடுத்து வைத்துச் சிறப்பு உணவு வகைகள் செய்து ஆண்டுதோறும் படையல் போடுவது ஒரு சில குடும்பங்களின் மரபாகும். இது மாட்டுப் பொங்கலன்றோ அல்லது வேறொரு நாளிலோ நடைபெறும்.

## கண்ணகி வழிபாடு

களவு செய்யாத கணவனை இழந்த மறக்கற்பு உடைய கண்ணகி தெய்வமாக வழிபடப்பட்டது பலரும் அறிந்த வரலாறு. கண்ணகிக்காக இளங்கோவடிகள் 'சிலப்பதிகாரம்' என்னும் ஒரு சொல் கோயில் கட்டினார். அவருடைய தமையன் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்காக ஒரு கல் கோயில் கட்டினான். தமிழ்நாடு முழுவதும் கண்ணகி கோயில்கள் எழுந்தன. இலங்கைக் கயவாகு மன்னன் இலங்கையில் கண்ணகிக்குக் கோயில் கட்டினான். வேறு சில இடங்களிலும் கண்ணகி வழிபாடு பரவியது.

## திரௌபதி வழிபாடு

கண்ணகி போலவே திரௌபதியும் மனிதப் பெண் என்பது' அனைவரும் அறிந்ததே. தமிழகத்தில் பாரதக் கதை பரவியதும், கண்ணகி கோயில்களின் இடத்தைத் திரௌபதி பிடித்துக் கொண்டதாக ஆராய்ச்சியாளர் அறிவிக்கின்றனர். இப்போது, தமிழகத்தில் - எனக்குத் தெரிந்த்வரையும் வட தமிழ் நாட்டில் - திரௌபதி கோயில் இல்லாத ஊர்களே இல்லை எனலாம். திரௌபதியம்மன் தொடர்பாகப் பல்வேறு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இதன் தொடர்பாகத் தீமிதிப்பு, தெருக்கூத்து போன்றனவும் நிகழ்கின்றன.

**மாதா கோயில் வழிபாடு**

ஏசுநாதரின் அன்னையாராகிய மரி - மேரி (MARY) என்னும் அம்மையாரைக் கிறித்தவர்கள் வழிபடுவது கண்கூடு. 'சர்ச்சு' (CHURCH) என்னும் ஆங்கிலப் பெயரால் குறிப்பிடப்படும் கோயில், மாதா பெயரால் மாதா கோயில் எனக் குறிப்பிடுவது எண்ணத் தக்கது. கருத்து ஒப்புமை காண்டலுக்காக மாதாகோயில் வழிபாடு ஈண்டு குறிப்பிடப்பட்டது.

**நவராத்திரி வழிபாடு**

கல்வியைக் கலைமகள் (சரசுவதி) ஆகவும், செல்வத்தை அலைமகள் (இலக்குமி) ஆகவும் பெண் தெய்வங்களாக உருவகித்துக் கூறுவது ஒருவகை மரபு. இந்தப் பெண் தெய்வங்கள் மூவர்க்கும் மும் மூன்று இரவு வீதம் மொத்தம் ஒன்பதுநாள் விழா எடுப்பதுதான் நவராத்திரி வழிபாடு ஆகும். நவராத்திரி = ஒன்பது இரவு. புரட்டாசித் திங்கள் அமாவாசை கழிந்த முதல் மூன்று நாள் இரவில் துர்க்கைக் கும் (பார்வதிக்கும்), அடுத்த மூன்று நாள் இரவில் திருமகளுக்கும், இறுதி மூன்று நாள் இரவு கலைமகளுக்கும் வழிபாடு நடத்துவது மரபு. இந்த முறையை மாற்றி, இறுதி மூன்று நாள் இரவு துர்க்கைக்கு உரியது என்று கூறுவாரும் உளர். ஆனால், கலைமகளுக்கு உரியதாகக் கூறுவதே பொருத்தமாகும். ஒன்பதாம் நாளாகிய மகாநவமியன்று 'சரசுவதி பூசை' என்னும் பெயரிலேயே தமிழகத்தில் 'பண்டிகை' கொண்டாடப்படுகிறது. அன்றைய நாளை 'ஆயுதபூசை' நாள் என்று கூறிப் பல்வேறு கருவிகளைப் போற்றுவதும் மரபு.

பத்தாம் நாள் விசய தசமி என்னும் பெயரில் வாழ்க்கைக்கு வெற்றி தரும் நாளாகக் கொண்டாடுவர். பிள்ளைகட்கு அந்நாளில் கல்வி தொடங்கப்பெறும்.

இந்தப் பண்டிகைக் காலத்தில் கோயில்களிலும் வீடுகளிலும் கொலு வைப்பதும், அரசர்கள், மடாதிபதிகள் முதலியோர் கொலுவீற்றிருப்பதும், பெண்கள் ஒருவரை யொருவர் வரவேற்றுப் போற்றுவதும் நடைமுறை வழக்கம். ஆக இந்தக் கொண்டாட்டம் முழுக்க முழுக்க பெண் தெய்வ வழிபாட்டின் ஒரு கூறு (அம்சம்) ஆகும்.

## கொற்றவை வழிபாடு

சிவனுடைய தேவியாகிய சிவைக்குப் பல வகையான பெயர்கள் இருப்பதுடன், பல வகையான கதைக்ளும் சிவை பற்றிச் சொல்லப்படுகின்றன. சிவைக்குப் பல் வகையான உருவங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று: சிங்க ஊர்தியில் (வாகனத்தில்) அமர்ந்து, மகிடாசுரனைக் கொன்று அவன் மார்பில் பாய்ச்சிய வேல் அல்லது சூலத்துடன் இருக்கும் தோற்றமாகும். இந்தத் திருமேனித் தோற்றத்திற்கு வட மொழியில் "துர்க்கை" என்னும் பெயரும் தமிழில் கொற்றவை என்னும் பெயரும் தரப்பட்டுள்ளன, சிவை யாகிய பகவதிக்குக் கொற்றவை என்னும் பெயரும் துர்க்கை என்னும் பெயரும் உண்டு என்பதைத் திவாகரரின் சேந்தன் திவாகர நிகண்டினாலும், மண்டல புருடரின் சூடாமணி நிகண்டினாலும் அறியலாம். அப்பாடல் பகுதிகள் வருமாறு:-

சேந்தன் திவாகர நிகண்டு - தெய்வப் பெயர்த் தொகுதி 23-ஆம் பாடல்:

"கொற்றவை, ஐயை, காாத்திகை, கௌரி,
துர்க்கை, சூலி, மகிடற் காய்ந்தாள்.. .........
மேதித் தலைமிசை விசயை...........
சீர்சால் பகவதி சிறந்ததொல் பெயரே........."

சூடாமணி நிகண்டு தேவப் பெயர்த் தொகுதி — 40, 41–ஆம் பாடல்களில் உள்ள பெயர்கள்:-

"......மகிடற் செற்றாள் கொற்றவை சக்கிரபாணி...
மேதிச் சென்னிமேல் இடர்உற மிதித்த மெல்லியல்
சூலி சண்டிகையே கன்னி சுந்தரி துர்க்கை நாமம்"-

இந்த இரண்டு நிகண்டுகளிலும் கொற்றவை, துர்க்கை என்னும் பெயர்கள் உள்ளன; சூலம் உடையவள் என்னும் பொருளில் சூலி என்னும் பெயர் உள்ளது; மகிடாசுரனைக் கொன்றவள் என்னும் பொருளில் மகிடன் காய்ந்தாள், மகிடன் செற்றாள் என்னும் பெயர்கள் உள்ளன. கொற்றவைக்குச் சிங்க ஊர்தி உண்டெனினும், எருமைத் தலை அசுரன் என்னும் பொருளுடைய மகிடாசுரனை அழித்ததும் அவன் அவன் தலைமேல் அமர்ந்தாளாம். மகிடம், மேதி என்பவற்றின் பொருள் எருமை. இதைத் தான், 'மேதித் தலைமிசை விசயை' எனவும், 'மேதிச் சென்னிமேல் இடர் உற மிதித்த மெல்லியல்' எனவும் நிகண்டுகள் குறிப்பிட்டுள்ளன.

இதைத்தான் இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் வழக்குரை காதையில்,

"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை" —
(34, 35, 36)

என்று குறிப்பிட்டுள்ளார். துணிக்கப்பட்ட - பச்சைக் குருதி (இரத்தம்) அடங்காமல் ஒழுகுகின்ற பிடரித்தலையாகிய இருக்கையில் அமர்ந்து கையில் வேலேந்திக்கொண்டுள்ள கொற்றவை - என்பது இந்தப்பாடல் பகுதியின் கருத்தாகும்.

துர்க்கையைப் பற்றி மார்க்கண்டேய புராணம் முதலிய நூல்கள் பல கதைகளைக் கட்டியுரைத்துள்ளன. துர்க்கைக்கு நூறு கைகளாம் - ஒவ்வொரு கையிலும் படைக்கலம் (ஆயுதம்) இருக்குமாம் மற்றும் சில;

மகிடாசுரனால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் திருமாலிடமும், சிவனிடமும் சென்று முறையிட்டார்கள். திருமால் முகத்திலிருந்தும், தேவர்களின் முகத்திலிருந்தும் ஒருவகை ஒளிப்பிழம்புகள் தோன்றினவாம். இந்தப் பிழம்புகள் ஒன்று கூடித் துர்க்கை என்னும் பெண் தெய்வமாயிற்றாம். இராவணனை வெல்வதற்காக இராமர் கூடத் துர்க்கையை வழிப்பட்டாராம். இன்னும் எத்தனையோ கதைகள் - என்னவோ கதைகள் பற்பல கூறப்படுகின்றன.

**நடை முறைப் பயன்**

யார் யாருக்கோ என்ன என்ன நன்மைகளோ புரிந்த துர்க்கை, இப்போது, உரிய காலத்தில் திருமணம் ஆகாமல், முதுமையை நெருங்கிக்கொண்டிருக்கும் கன்னிப் பெண்கட்குத் தாலிப் பிச்சை போடும் தெய்வமாகக் காட்சியளிக்கிறாள். இத்தகைய பெண்கள் செவ்வாய்க் கிழமை தோறும் பிற்பகல் 3 மணிக்கு மேல் 4-30 மணிக்குள்ளான இராகு காலத்தில் துர்க்கை கோயிலுக்குச் சென்று என்னென்னவோ படையல் செய்து வழிபட்டு வணங்கி வருகின்றனர். இது மிகவும் இரங்கத்தக்க காட்சி!

'சக்தி யின்றிச் சிவம் இல்லை' என்பார்கள். இது, பெண் தெய்வங்களின் பெருமையைக் குறிக்கிறது. நன்மை கிடைக்கும் என நம்பி மக்கள் பெண் தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். இந்த நம்பிக்கை வீண் போகாமல் தக்க பயன் கிடைக்க வேண்டும் என்று வேண்டுவோமாக!

# 13. பாரதிதாசன் ஊரும் பேரும்

## 1. யாதானும் நாடாமால் ஊராமால்

சுப்பிரமணிய பாரதியாருக்கு அணுக்கத் தொண்டரா யிருந்ததால் கனக. சுப்புரத்தினம் என்பவர் 'பாரதிதாசன்' என்னும் புனைபெயர் சூட்டிக் கொண்டார். இப்போது அவர் தமது பாடல் சிறப்பினால் பாவேந்தர் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப் பெறுகிறார்.

### 1-1. மந்திர ஆற்றல்

சர் வால்டர் ஸ்காட் (Sir Walter Scott) என்பவர் ஸ்காட்லாந்தில் பிறந்த ஆங்கில மொழி அறிஞர். இவர் பல பாடல் நூல்களும், உரைநடை நூல்களும், நெடுங் கதைகளும் எழுதிப் பெரும் புகழ் பெற்றவர். அந்த நாட்டில் 'வால்டெர் ஸ்காட்' என்னும் பெயரைச் சொன்னால் எந்த வீட்டுக் கதவும் திறக்குமாம்.

இதற்கு ஓர் ஒப்புமை கூறப்பட்டுள்ளது. அரேபிய இரவுக் கதைகளுள் (Arabian Nights) ஒன்றான 'அலி பாபாவும் நாற்பது திருடர்களும்' என்ற கதையில், 'திறந்திடு சீசம்' (Open Sesam or Semamun) என்னும் மந்திரத் தொடரைக் கூறியதும் கதவு திறந்து கொள்ளுமாம். அந்தத் தொடரைப்போல, வால்டெர் ஸ்காட் என்னும் பெயரும் மந்திர ஆற்றல் பெற்றிருந்ததாம். (Life of Sir Walter Scott-Chapter II by Lockhart).

### 1-2. சிறப்பு

இதேபோல், தமிழகத்தில் எங்கே சென்று பாரதிதாசன் என்று சொன்னாலும், பாவேந்தர் பாரதிதாசனாருக்குச் சிறப்பான வரவேற்பு கிடைத்தது. (இதை யான் நேரில் கண்டதும் உண்டு.)

இவ்வாறாகப் பாவேந்தருக்கு எல்லா ஊர்களும் தம் ஊராய் இருக்கும் நிலையில், 'பாரதிதாசன் ஊரும் பேரும்' என்னும் கட்டுரைத் தலைப்பு தரப்பட்டுள்ளது. சுற்றி வளைக்காமல் சொல்ல வேண்டுமாயின், பாரதிதாசனாரின் ஊரின் பெயர் 'புதுச்சேரி' என்ற செய்தியே கிடைக்கும்.

## 2. ஊர்ப் பெயர்கள்

புதுச்சேரி பல பெருமைகளால் பெயர் பெற்ற ஊரெனினும், இந்தத் தலைப்பு, புதுச்சேரி என்னும் ஊரின் பேரைப் பற்றிய வரலாற்றை அதாவது ஊரின் பெயர்க் காரணத்தை எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. (இது யான் புரிந்து கொண்டது, தலைப்பு தந்தவர் கருத்து யாதோ?) புதுச்சேரி என்னும் ஊர்ப் பெயரின் பொருள் தெளிவாகப் புரிகிறது. ஆனால், இவ்வூருக்கு அயலவர் சிலர் இட்டுள்ள பெயர்களை நோக்குங்கால் ஒரு வகைக் குழப்பம் ஏற்படுகிறது.

### 2-1. டேனிஷ் ஒல்லாந்து

புதுச்சேரியை டேனிஷ்காரர்கள் 'பொல செரே' என்றும், ஒல்லாந்து (Holland) நாட்டினர் 'புதேஷேயிரா' என்றும் வழங்கினார்களாம்.

### 2-2. பிரெஞ்சு — ஆங்கிலம்

அடுத்து, - Poudichery என்பதில் உள்ள U என்னும் எழுத்து n என்பதுபோல் தெரியும்படி, புதுச்சேரியிலிருந்து கடிதம் பிரான்சுக்குப் போகவே, அங்கிருந்த தலைவர்கள் Pondichery எனக் கொண்டு பொந்திஷெரி எனச் சொல்லவும் எழுதவும் தொடங்கி விட்டனர். இந்தப் பெயர் பிரெஞ்சுக் கூடாரத்தில் நிலைத்துவிட்டது. பிரெஞ்சிலும் இலத்தீனிலும் இலத்தீனின் வழிமொழிகளிலும் 'O' என்பது 'ஒ' எனவே

ஒலிக்கப் பெறும். இந்த O என்பது, ஆங்கிலத்தில் ஆ (Pot) எனவும், ஊ (Roof) எனவும், ஓ எனவும் (Old) எனவும் பலவிதமாக ஒலிக்கப் பெறும். இந்தப் பச்சோந்தித்தனத்தால், பொந்தி ஷெரி என்பதைப் பாண்டிச்சேரி (Pondicherry) என ஆங்கிலேயர் ஒலித்தனர். இப்போது 'பாண்டி' என வழங்கப்படுவது மிகவும் வருத்தத்திற்கு உரியது.

புதுச்சேரி பொந்தி ஷெரியாகவும் பாண்டிச்சேரியாகவும் பிறவிகள் (அவதாரங்கள்) எடுத்ததோடு நிற்காமல், மேலும் சில பிறவிகள் எடுத்துள்ளது.

## 2-3. பெரிப்புளூஸ் — தாலமி

பெரிப்புளூஸ் என்னும் பயண நூல் ஆசிரியர் 'பொதுகே' என்றும் புதுச்சேரியைக் குறிப்பிட்டுள்ளனர். புதுச்சேரியை அடுத்துள்ள 'அரிக்கமேடு' என்னும் அருகன் மேடே இவர்களால் இவ்வாறு குறிக்கப்பட்டதாம். இந்தப் பகுதியே அப்போது புதுச்சேரியாயிருந்தது; கப்பல் தங்கும் துறைமுகமாயிருந்தது. இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு.

பொதுகே, பொதுகா என்னும் பெயர்கள் உண்மையில் எந்த ஊரை இவ்வாறு குறித்தனவோ? இப்பெயர்கள் புதுச்சேரியைத்தான் குறித்தன எனில், பொருத்தமான பெயர்க்காரணம் தெரியவில்லை.

அயல்நாட்டவர் இவ்வாறு பெயர்கள் வழங்க, தமிழர்கள், தஞ்சாவூரைத் தஞ்சை என்பதுபோல் புதுச்சேரியைப் புதுவை என மரூஉ மொழியாகச் சுருக்கிப் பேசுகின்றனர் - எழுதுகின்றனர். சுற்று வட்டாரங்களில் உள்ள படிக்காத பாமர மக்கள் இதைப் 'பிச்சேரி' என்கின்றனர்.

## 2-4. பொதுக்கம் - ஒதுக்கம்

புதுவை என்பதே பொதுகே எனப்பட்டது என்னும் ஓர் அறிஞரின் கருத்தைப் பேராசிரியர் ஒருவர் ஒப்புக் கொள்ளவில்லை. கலித்தொகை 88-ஆம் பாடலிலுள்ள

"புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம் போல"

என்னும் தொடரில் உள்ள 'பொதுக்கம்' என்பதற்கு, (கப்பல்கள் வந்து) தங்குமிடம், மறைவிடம் என்பதாகப் பொருள் கொண்டு, பொதுக்கம் என்பதிலிருந்தே 'பொதுகே' பிறந்திருக்க வேண்டும் என அந்தப் பேராசிரியர் கூறுகிறார். இது சொன்மைக்குப் (சொல் அளவில்) பொருந்துவதுபோல் தோன்றினும், பொருண்மைக்குப் பொருந்துவதாகத் தெரியவில்லை. தங்குமிடம் - மறைவிடம் என்றால் புதுச்சேரி மட்டுந்தானா? மற்ற துறைமுகங் கட்கும் இப்பெயர் பொருந்தாதா? அந்தப் பயணிகள் பல துறைமுகங்கட்குச் சென்றிருப்பார்களே. மேலும், உரை யாசிரியர் நச்சினார்க்கினியர்,

"புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்" என்னும் தொடரைப் 'புள்ளிக் களவன் புனல்சேர்பு ஒதுக்கம்' எனப் பிரித்துக் கொண்டு, 'ஒதுக்கம் என்னும் தொழிற் பெயர் ஆகுபெயர்' என்று உரை வகுத்துள்ளார். எனவே, இந்தப் பெயர்க் காரணம் பொருந்துவதாகத் தெரியவில்லை.

அங்ஙனமெனில், பொதுகே, பொதுகா என்னும் பெயர் களின் போக்குதான் என்ன? நான் சொல்வது பொருத்தம் என எண்ணினால் ஏற்றுக் கொள்ளலாம்; இல்லையேல் தள்ளலாம். நான் சொல்லப்போவது முடிந்த முடிபு அன்று. வெறும் வாயை மெல்பவனுக்கு அவல் கிடைத்தாற் போன்றதே எனது முயற்சி.

## 2.5 Ch- ஒலி

D என்னும் எழுத்து ஆங்கிலத்தில் 'டி' (டகர ஒலி) எனப்படும். இலத்தீன், பிரெஞ்சுமொழிகளில் 'தெ' (தகர ஒலி) எனப்படும் இந்த முறையில்தான் புது என்பது பிரெஞ்சில் Poudi எனப்பட்டது. நம்மக்கள் புதுச்சேரி என்பதைப் புதிச்சேரி எனத் திரிபாகக் கூறியதால், அவர்கள் du போடாமல் di போட்டனர். நம் ஊர்ப் பெயர்கள் பல, ஐரோப்பிய மொழிகளில் தவறாக எழுதப்படுவதன் காரணங்களுள் முதன்மையானது, நாம் கொச்சையாக ஒலித்து அறிவித்ததேயாகும்.

இந்த முறையில் du என்பது di ஆயிற்று. 'ch' என்பது, ஆங்கிலத்தில் Character (கேரக்டர்-பண்பு) என்பதில் ககர ஒலியும், charity (சாரிட்டி-அறம்) என்பதில் சகர ஒலியும் பெறுகிறது. இது போன்ற பச்சோந்தித்தனம் இலத்தீனிலும் பிரெஞ்சிலும் இல்லை, ch என்பது பிரெஞ்சு மொழியில் எங்கு வரினும் 'ஷ்' என ஷகர ஒலி மட்டுமே பெறும். எ. கா:- chat = ஷா (பூனை - t:Silent - ஒலி பெறா ஊமை எழுத்து). Dimanche - திமான்ஷ் (ஞாயிற்றுக் கிழமை) இதுபோலவே, Poudecheira (பு தெ ஷே யிரா) என ஃ ஆலந்து மொழியிலும் ch என்பது ஷகர ஒலி பெற்றுள்ளது. (பிரெஞ்சு மொழியில் 'OU' என்பது 'உ' என ஒலிக்கப் பெறும்).

ஆனால், ch என்பது இலத்தீன் மொழியில் எல்லா இடங்களிலுமே ககர ஒலியே பெறும். இதன் முன்னோடி யான கிரேக்க மொழியிலும் இஃதே.

வீரமாமுனிவரைக் குறிக்கும் Beschi என்பது மற்ற மொழிகளில் பெஷி எனப்படும். இலத்தீனிலோ பெஸ்கியோ (Beschio) என ch ககர ஒலி பெறும். இலத்தீனில் Charus என்பதில் 'க்காரூஸ்' (விலைமதிக்க வொண்ணாத) எனவும்,

Chimera என்பதில் 'க்கிமெரா' (ஒருவகைக் கற்பனை விலங்கு) எனவும் ch ககர ஒலி பெற்றிருப்பது காண்க.

கிரேக்கராகிய பெரிப்புளூஸ் ஆசிரியர்க்கு முன்னமேயே, யாராவது கடல் பயணம் செய்து, ஷகர ஒலியுடைய பிரெஞ்சு முறையில் Poducheri என எழுதியிருப்பின், அதைப் பார்த்த பின், ch என்பதற்கு இவர் ககர ஒலி தந்து 'பொதுகே' என்னும் ஒலிப்பில் எழுதியிருக்கலாம். இறுதி Ri (ரி) ஊமை எழுத்தாகும். இது சில ஐரோப்பிய மொழிகளில் நிரம்ப உண்டு. இதற்கு முன் யாரும் பயணம் செய்யவில்லை என்று உறுதியாகக் கூறமுடியாது. முறையான வரலாறு கிடைக்காத காலம் அது.

இந்தக் கருத்து முற்ற முடிந்த முடிவு அன்று. இதை மறுக்கவும் செய்யலாம். மற்றும், பொதுகே. பொதுகா என்னும் பெயரால் புதுச்சேரியைக் கூறவில்லை - வேறு ஊரைக் குறிப்பிட்டிருக்கலாம் - எனத் தள்ளியும் விடலாம். (அங்ஙனமெனில், யான் வெள்ளைத் தாள்களை வீணாக்கியவனாவேன்)

### 3. மணக் குளம்

இப்போது சென்னையில் உள்ள பகுதிகள், ஆங்கிலேயரின் ஆட்சிக்கு முன் பல சிற்றூர்களாக இருந்தவை. இதுபோலவே, புதுச்சேரிப் பகுதிகளும் பிரெஞ்சுக்காரரின் ஆட்சிக்கு முன் பல சிற்றூர்களாக இருந்தனவே. அவற்றுள் ஒன்று 'மணக் குளம்' என்பது. புதுவைக் கடற்கரைக்குச் சிறிது மேற்கே மணக்குள விநாயகர் கோவில் என ஒரு கோவில் உள்ளது. மணக்குளம் என்பது 'மனுகுலம்' என்பதன் திரிபு எனச் சிலர் கூறுவது பொருந்தாது.

### 3-1 கடவுளர் பெயர்

தீவனூர்ப் பிள்ளையார், மயிலம் சுப்புராயர், செஞ்சி ரங்கநாதர் என்பனபோல், மணக்குள விநாயகர் என்னும் பெயரும் ஊரின் பேரால் ஏற்பட்டதே. 'மணல் குளம்' என்னும் பெயருடைய பகுதியில் உள்ள விநாயகர் என்பதே இதன் பொருள்.

### 3.2. மணல்

மணல் என்னும் சொல்லில் தொடங்கும் ஊர்கள் பல உள. மணமேடு, மணக் குப்பம், மண வெளி, மணப் பாறை, மணக்கால் முதலியன அவை. இப்பெயர்களில் 'ல்' கெட்டு 'மண' என்பது நிலைமொழியாய் உள்ளது. மணல்மேடு, மணல்பாறை என்பனவே, மணமேடு, மணப்பாறை எனப் படுகின்றன. மற்ற பெயர்களும் இவ்வாறேயாம்.

### 3-3. குளம்

குளம் என்னும் வருமொழியால் முடியும் ஊர்ப் பெயர்களும் பல உள. வாழைக் குளம் (புதுவையின் புற நகர்ப் பகுதி இது), பெரியகுளம், தெப்பக்குளம், தல்லாகுளம், சாத்தன்குளம், மூளைக்குளம், எர்ணாகுளம், கடம்பன் குளம், காயன்குளம், கோட்டிக்குளம், தாதன்குளம், மடத்துக்குளம், கூடங்குளம், பரம்பிக்குளம், தாமரைக் குளம், தேவிகுளம், கனக செட்டிகுளம், ஊமைச்சி குளம், மாங்குளம் - முதலியன அவை.

### 3-4. மணல்குளம்

இவ்வாறே மணல் என்பதும் குளம் என்பதும் சேர்ந்து, இடையில் உள்ள 'ல்' கெட, க் என்னும் வலிமிக மணக் குளம் என்னும் பெயர் உருவாயிற்று. புதுச்சேரி நகருக்குள் உள்ள சிறப்பான இடம் ஆதலானும், பழைய சிற்றூர் ஆதலானும் இதன் பெயர்க்காரணம் ஈண்டு இடம்

பெற்றது. இனிப் புதுச்சேரி என்பதன் பெயர்க் காரணத்தைக் காண்பாம்.

## 4. புதுச்சேரி

**4-1. புது:** புதுப்பேட்டை, புதுப்பாளையம், புது வண்டிப்பாளையம், புதுக்குப்பம், புதுவூர், புதூர், புத்தூர், புதுக்கோட்டை, புதுக்காடு, புதுச்சத்திரம், புது நகரம், புத்துச்சேரி (கேரளம்) எனப் 'புது' என்னும் அடிச்சொல்லில் தொடங்கும் ஊர்கள் பல உள.

### 4-2. சேரி

கோட்டுச்சேரி, தெளிர் (தெள்ளுச்) சேரி, தலைச்சேரி, கலமசேரி, கூடுவாஞ்சேரி, கொக்கலாஞ்சேரி, கொரட்டாசேரிச் கங்கணஞ்சேரி, பார்ப்பினிசேரி, மட்டஞ்சேரி, வடக்காஞ் சேரி, வேளச்சேரி, புத்துச்சேரி (கேரளம்) எனச் சேரி என்னும் வருமொழியில் முடியும் ஊர்கள் பல உள.

### 4-3. புதுமை

புதுச்சேரி என்பதில் உள்ள 'புது' என்பது, முற்றிலும் புதிதாய் உண்டாக்கப்பட்ட சேரி என்னும் கருத்தைக் குறிக்கவில்லை; பழமையாய் இருந்த பகுதி புதுமையாகச் சீர்திருத்தப்பட்டது என்னும் கருத்தைக் குறிக்கின்றது.

புதுச்சேரி நகரின் நடுவே கலவைக் கல்லூரி என்னும் ஒரு கல்வி நிறுவனம் 'ப' வடிவில் உள்ளது இதன் நடுவே ஓர் அமைப்பு கட்டுவதற்காகத் தரையைத் தோண்டியபோது மண்டை ஓடுகளும் எலும்புகளும் அகப் பட்டன. (இதை நான் நேரில் பார்த்தேன்) இந்த இடம் முன்பு இடுகாடாய் இருந்ததாகத் தெரிகிறது. பின்னர் நகர் புதுமையாய் விரிவடைந்ததால், இந்த இடுகாட்டைப் பற்றிப் பொதுமக்கள் இன்று ஒன்றும் அறிந்திலர். யானும்

என்னுடன் இருந்த நண்பர்களும் அப்போதுதான் அறிந்தோம். பிரெஞ்சுக்காரர் 17-ஆம் நூற்றாண்டிலேயே ஆட்சி மேற்கொண்டு நகரைப் புதிதாய் வடிவமைத்தனர். நெடுங்காலம் ஆனதால் இடுகாடு அறியாப் பொருளாயிற்று.

## 5. இனச்சேரி

இப்போது சேரி என்பது, தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்பைக் குறிக்கும் பெயராகக் கருதப்படுகின்றது. உண்மை இஃதன்று. பலரும் சேர்ந்து வாழும் இடம் சேரி என்பதே சரியான பொருளாகும். ஆனால் ஓர் உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வோர் இனத்தவரும் வாழ்ந்த ஒவ்வொரு பகுதியும், அவ்வவ் வினத்தின் பெயரால் சேரி ஒரு காலத்தில் பெயர் வழங்கப்பட்டது என்ற உண்மைதான் அது.

## 5-1. தெருப் பெயர்கள்

புதுவையில் உள்ள தெருக்களுள் பல சாதிகளின் பெயரால் குறிப்பிடப்பட்டன. எ.கா: சான்றோர் (சாணார்) வீதி, சிறிய பார்ப்பாரத் தெரு, பெரிய பார்ப்பாரத் தெரு, வேளாளர் தெரு, செட்டி தெரு, வைசியர் தெரு, செங்குந்தர் தெரு, வண்ணாரத் தெரு, வன்னியர் தெரு, யாதவர் தெரு முதலியன. புதுச்சேரி நகரில் கிறித்துவர் மிகுதியாயிருக்கும் பகுதி, இப்போதும் இந்துக்களால் 'கிறிஸ்தவபுரம்' எனக் குறிப்பிடப்படுவதுண்டு. இது போலவே, இசுமாலியர் மிகுதியாயிருக்கும் பகுதி முசுலீம் வட்டாரம் எனப்படுவதுண்டு. அரிக்கமேடு (அருகன் மேடு) உட்பட்ட புதுச்சேரிப் பெரும்பரப்பில் பண்டு கிரேக்கக் குடியேற்றம் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறு பல பிரிவினரும் சேர்ந்து வாழும் சேரியாகப் புதுச்சேரி உள்ளது. (இப்போது புதுச்சேரித் தெருக்களின் சாதிப் பெயர்கள் நீக்கப்பட்டு விட்டன.)

குறிப்பிட்ட ஓரினத்தார் மட்டும் மிகுதியாயுள்ள இடம் அந்த இனத்தின் பெயரால் சேரி எனப் பண்டு வழங்கப் பட்டிருப்பினும், இப்போது பலருக்குப் பறைச்சேரி மட்டுமே தெரியும். அதனால் சேரி என்பதை இகழ்ச்சியாக எண்ணும் மனப்பான்மை உண்டாகிவிட்டது.

## 5.2 இடைச்சேரி

இடையர்கள் மிகுதியாய் உள்ள பகுதிக்கு இடைச்சேரி என்ற பெயர் உண்டு. சீவக சிந்தாமணியின் 422, 423–ஆம் செய்யுள்கட்கு நச்சினார்க்கினியர் வரைந்துள்ள உரைப் பகுதியில் இப்பெயரைக் காணலாம்.

"அங்ஙனம் சிதறின கோவலர் குழலும் கோடாலியும் அங்கே கிடக்கக் காட்டைச் சூழலப் போய், இடைச்சேரியில் மகளிர் நின்று சுழலும்படி, அவ்வேடர் கயிறு போல அத் தலையை நெகிழவிட்டாராயின் இத்தலையை நெகிழ விடார்"- என்பது உரைப்பகுதி. 422-ஆம் பாடலில் உள்ள 'பள்ளி' என்பதற்கு இடைச்சேரி என்னும் பொருள் தரப் பட்டுள்ளது. (கோவிந்தையார் இலம்பகம்).

## 5.3 பார்ப்பனச் சேரி

இது மட்டுமா? உயர் குலத்தார் என்று சொல்லும் பார்ப்பனர் வசிக்கும் இடம் 'பார்ப்பனச் சேரி' எனப்பட்டது. இப்பெயரை, நன்னூல் (பொதுவியல்-) 377-ஆம் நூற்பாவின் உரையில், பழைய உரையாசிரியராகிய மயிலைநாதர் குறிப் பிட்டிருப்பதிலிருந்து அறியலாம்:

"எயின நாடு, மற நாடு, பார்ப்பனச் சேரி, அரசர் பெருந்தெரு, வாணிக நகர் எனும் இவை உயர்திணைக்கண் பல விரவிப் பன்மையின் ஒரு பெயர் ஏற்றன"- என்னும் உரைப் பகுதியில் பார்ப்பனச் சேரியைக் காணலாம்.

## 5.4 புறஞ்சேரி

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் மதுரையின் புறநகர்ப் பகுதியில் தங்கியிருந்த செய்தியைக் கூறும் காதைக்குச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் 'புறஞ் சேரி யிறுத்த காதை' எனப் பெயர் தந்துள்ளார். அந்தச் சேரி, அறம் புரிகின்ற நல்லோர் தவிர, மற்ற தீயோர் இல்லாததாம்.

"அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர் புரிந்தென்" (195-196)

என்பது பாடல் பகுதி. அறச்செயல் புரிவோர் இருக்கும் இடமும் புறஞ்சேரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. "அறம்புரி மாந்தர் அன்றிச் சேரா" என்பதிலிருந்து, அறம்புரி மாந்தர் சேரும்சேரி என்பது பெறப்படும். எனவே, சேரி என்பதைத் தாழ்ந்ததாக எவ்வாறு கொள்ள முடியும்?

## 5.5 காலனி, பேட்டை

நாளடைவில் பல சாதியினரும் கலந்து வாழத் தொடங்கியதால், சேரி என்னும் தொகுப்புப் பெயர் மறைந்தது. குறிப்பிட்ட ஓரினத்தார் (பறையர்) மட்டும் ஒரே இடத்தில் சேர்ந்து வாழ்வதால், சேரி என்பது, அவர் களின் குடியிருப்பை மட்டும் குறிக்கும் பெயராய் விட்டது. இப்போது சேரி என்று சொல்ல நாணி, காலனி என்றும் பேட்டை என்றும் வழங்குகின்றனர். இப்போது 'பறையர்' என்று சொன்னால் அரசு ஒறுக்கும் அளவுக்கு நிலைமை முற்றி விட்டது.

## 5.6 தொழில் அடிப்படை

தொழில் அடிப்படையில் ஏற்பட்ட சாதிப் பெயர்களில் உயர்வு-தாழ்வு இல்லை. பண் இசைப்பவன் பாணன்.

பறை கொட்டுபவன் பறையன். திருவிழாவில் கடவுள் திருமேனி தெருவில் உலா வரும்போது, முதலில் பறை மேளம் இடம் பெறுகிறது; அடுத்து நாயன (நாதசுர) மேளம் இடம் பெறுகிறது. இதில் உயர்வு-தாழ்வு என்ன? வண்ணான் - பரியாரி என்பன தாழ்வாம். வண்ணான் எனினும் சலவைத் தொழிலாளி எனினும் பொருள் ஒன்றே. உடையை வண்மை (தூய்மை) செய்பவன் வண்ணான். மலையாளத்தில் மண்ணான் என்பர். மண்ணுதல் என்றால் தூய்மை செய்தல். பரிகாரம் என்றால் மருத்துவம். பரிகாரி = மருத்துவன். இப்பெயர் கொச்சையாகப் பரியாரி எனப்படுகிறது. இது உயர்ந்த பெயர். மீனவர் என்ப தனினும் செம்படவர் என்னும் பெயரே சிறந்தது. மீனவர் என்றால் மீன் பிடிப்பவர். செம் படகர் என்பதே செம்படவர் என்றாயிற்று. செம் படகு ஓட்டுபவர் செம் படகர். படவு என்பது தமிழில் கொச்சை உருவம். படவ என்பது தெலுங்கில் எழுத்து மொழி. செம் படவ(க)ர் என்பதில் குறைவே யில்லை. இப்பெயர்கள் எல்லாம் பிற் காலத்தில் செயற்கையாகக் குறைவுப் பெயர்களாக ஆக்கப் பட்டன. சேரி என்பதும் இன்னதே என்பதற்காக இவ்வளவு எழுத வேண்டியதாயிற்று.

இவ்வாறாகப் பல சேரிகளைச் சேர்ந்த பல இனத்தவரும் சேர்ந்து வாழ்வதால்-அதாவது, புதிய முறையில் பல சேரி யினரும் சேர்ந்து வாழ்வதால், இவ்வூர் புதுச்சேரி என்னும் அழகிய பெயரால் வழங்கப்படுகிறது.

### 6. தென் புதுவை

இங்கே புதுச்சேரி தொடர்பான மற்றொரு சிக்கல் உள்ளது. புதுச்சேரி மாநிலத்தின் தலைநகரான புதுச்சேரி யைச் சுப்பிரமணிய பாரதியார் தமது குயில் பாட்டில்,

"செந் தமிழ்த் தென்புதுவை என்னும் திருநகரின்
மேற்கே சிறுதொலைவில் மேவுமொரு மாஞ்சோலை"
(6, 7)

எனத் 'தென் புதுவை' என்று குறிப்பிட்டுள்ளார். வடக்கே ஒரு காசி யிருப்பதால் தெற்கே இருப்பதைத் தென் காசி எனவும், தெற்கே ஒரு பழநி இருப்பதால் வடக்கே உள்ளதை வட பழநி எனவும் குறிப்பிடுவதுபோல், வடக்கே ஒரு புதுவை இருப்பதால் இது தென் புதுவை எனப்பட்டதா? 'தென்' என்பதற்குத் தெற்கு, இனிமை, அழகு என்ற பொருள்கள் உண்டு. இப் பொருள்களுள் எதை உள்ளத்தில் கொண்டு பாரதியார் தென்புதுவை எனக் கூறியிருப்பார்?

## 6.1 பட்டறிவு

பொறுத்தருள வேண்டும். இங்கே அடியேனது சொந்தப் பட்டறிவு நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிட ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன்:

1940-ஆம் ஆண்டு மயிலம் கல்லூரியில் யான் விரிவுரை யாளனாயிருந்தபோது ஒருநாள், எல்லப்ப நாவலர் இயற்றிய அருணைக் கலம்பகம் என்னும் நூலை நடத்திக் கொண் டிருந்தேன். ஒரு பாடலில் 'தென் அருணை' என்னும் தொடர் இருந்தது. திருவண்ணாமலைக்கு, அருணகிரி அருணாசலம் முதலிய பெயர்களும் உண்டு. அருணாசலம் என்பதன் மரூஉ மொழியே அருணை என்பது. தென் அருணை என்பதற்கு, அழகிய அருணை-இனிய அருணை-தெற்கே உள்ள அருணை என்றெல்லாம் பொருள் செய்ய லாம் என்று நான் கூறினேன். உடனே, என்னிலும் அகவை யிலும் உருவத்திலும் பெரிய மாணாக்கர் ஒருவர், 'அப்படி யென்றால், வடக்கே ஓர் அருணை இருக்கிறதா?' என்று கேட்டார். 'வடக்கே ஓர் அருணை இருப்பதால்தான் இதனைத் தென் அருணை என எல்லப்ப நாவலர் குறிப்

பிட்டுள்ளார்' என யான் கூறியதும் மாணக்கர் அமைதி யானார். இந்தியாவின் வட கோடியில் ஓர் அருணாசலப் பிரதேசம் இருப்பதை இன்று பலரும் அறிவர்.

## 6.2 ஸ்ரீ வில்லி புத்தூர்

இனித் தென் புதுவைக்கு வருவோம்: புதுச்சேரி மாநிலப் புதுவைக்குத் தெற்கே இரண்டு புதுவைகள் உள்ளன. ஒன்று: பெரியாழ்வார் திருமொழியிலுள்ள பாடல் பகுதி ஒன்று ஈண்டு நோக்கத் தக்கது.

"செற்றம் இலாதவர் வாழ்தரு தென்புதுவை
விட்டு சித்தன் சொல்
கற்றிவை பாட வல்லார் கடல்
வண்ணன் கழலிணை காண்பார்களே" (3-3-10)

என்பது பாடல் பகுதி. தென் புதுவை = ஸ்ரீ வில்லிபுத்தூர். விட்டு சித்தன் = பெரியாழ்வார். (ஸ்ரீ வில்லி) புத்தூர் = புது ஊர். எனவே, இது மரூஉ மொழியாகப் புதுவை எனப் பட்டது. பெரியாழ்வார் இந்தப் புதுவையைத் தென் புதுவை என்று கூறியிருப்பது மிகவும் பொருத்தம். இதற்கும் தெற்கே எந்தப் புதுவையும் இல்லை. இது, புதுச்சேரி மாநிலப் புதுவைபோல் பெருவரவிற்றாகப் பேசப்படுவ தில்லை. இனி மற்றொரு புதுவையைக் காண்போம்.

## 6-9. சடையன் புதுவை

தலைநகர்ப் புதுச்சேரியின் தெற்கே தஞ்சை மாவட்டத்தில் ஒரு புதுவை உள்ளது. இங்கே தான் சங்கரன் என்பவரும், அவர் மகன் சடையன் (சடையப்ப வள்ளல்) என்பவரும், சடையனின் மகன் சேதிராயன் என்பவரும் வாழ்ந்ததாகத் தனிப் பாடல்கள் கூறுகின்றன. இலங்கைத் தமிழ் மன்னன் பரராச சிங்கன் பாடிய தான பாடல் ஒன்று வருமாறு:

### 6.3.1 சங்கரன் புதுவை

"இரவு நண்பக லாகிலென்
பகல் இருளறா இரவாகிலென்
இரவி எண்டிசை மாறிலென்
கடல்ஏழும் ஏறிலென் வற்றிலென்
மரபு தங்கிய முறைமைபேணிய
மன்னர் போகிலென் ஆகிலென
வளமை யின்புறு சோழமண்டல
வாழ்க்கை காரண மாகவே
கருது செம்பொனின் அம்பலத்திலோர்
கடவுள் நின்று நடிக்குமே
காவிரித் திருநதியிலே ஒரு
கருணை மாமுகில் துயிலுமே
தரு வுயர்ந்திடு புதுவையம்பதி
தங்கு மானிய சேகரன்
சங்கரன் தரு சடையன்
என்றொரு தருமதேவதை வாழவே!"

என்பது பாடல். இது, பெருந்தொகை என்னும் தொகை நூலில் 1135-ஆம் பாடலாக உள்ளது. இந்தப் பாடலில் சங்கரனும் அவர் மகன் சடையனும் இடம் பெற்றுள்ளனர். இனிச் சடையன் மட்டும் இடம் பெற்றுள்ள இரண்டு தனிப் பாடல்களைப் பார்ப்போம்:

"மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவிரி - பொய்கழுவும்
போர்வேல் சடையன் புதுவையான் இல்லத்தை
யார்போற்ற வல்லார் அறிந்து"

(சடையன் சோழ மன்னனிடத்தில் அலுவல் பார்த்ததும் உண்டாதலால் போர்வேல் சடையன் எனப்பட்டான்.)

"புரந்தர தாரு புதுவைச் சடையன்
இருந்த வியலூர் தெற்குமேற்கு - பரந்தபொன்னி
ஆற்று நீரால் விளையுமப்பாற் கிழக்காகி
மாற்று நீரால் விளையு மாம்".

## 6.3.2 சேதிராயன் புதுவை

இனிச் சடையன் மகன் சேதிராயனைப் பற்றிய பாடல் வருமாறு:

"காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரை - பூவலயம்
உள்ளத் தகும்புதுவை ஊரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து"

என்பது பாடல். சடையனுக்குப் பிறந்த பிள்ளைப் பெருமாள் சேதிராயன் என்பவன். இவன் 'புதுவைச் சேதிராயன்' என்னும் பெயராலும் வழங்கப்படுவான்.

## 6.4 வெண்ணெய் நல்லூர்

மேலுள்ள பாடல்களில் அறிவிக்கப்பட்டுள்ள சங்கரன், சடையன், புதுவை, காவிரி, சோழமண்டலம் என்னும் பெயர்களை நோக்குங்கால், இந்தப் புதுவை என்பது தஞ்சை மாவட்டத்துப் புதுவையே யாகும் என்பது தெளிவு. கம்பர் தம் இராமாயண நூலின் பாயிரத்தில்,

**"நடையின் நின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடை நிகழ்ந்தது இராமாவ தாரப்பேர்த்
தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய் நல்லூர்வயின் தந்ததே" (10)**

என்று சடையனுக்கும் வெண்ணெய் நல்லூருக்கும் தொடர்பு காட்டியுள்ளார். இது, தஞ்சை மாவட்டத்திலுள்ள வெண்ணெய் நல்லூராகும்.

சிலர், கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் தஞ்சை மாவட்டமாகிய காவிரி நாட்டைச் சேர்ந்தவரல்லர்; அவர் தென்னார்க்காடு மாவட்டத்தின் - திருக்கோவலூர் வட்டத்திலுள்ள திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்தவர்; அவர் கம்பரை ஆதரித்தது அவ்வூரில்தான் - என வன்மையாக அடித்துப் பேசுகின்றனர். இக்கொள்கை சரியன்று. சடையன் காவிரியோடும் சோழ மண்டலத்தோடும் பாடல்களில் தொடர்பு படுத்தப்பட்டிருப்பதால், அவன் தஞ்சை மாவட்டத்து ஊர்க்காரனே யாவான்.

எனவே, தஞ்சை மாவட்டத்துப் புதுவையும் (புதுச்சேரியும்), திருநெல்வேலி அருகில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் புதுவையும், தலைநகர்ப் புதுச்சேரிக்குத் (புதுவைக்குத்) தெற்கே உள்ளவை என்பது பெறப்படும்.

## 6.5 புதுச்சேரிச் சடையன்

ஒரு சிலர் கம்பரை ஆதரித்த சடையன் தென்னார்க்காடு மாவட்டத்துத் திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்தவனே என அடித்துப் பேசுவது போல, ஒரு சிலர், புதுவைச் சடையன் என்பது, புதுவை மாநிலத் தலைநகர்ப் புதுச்சேரியாகிய புதுவையைச் சேர்ந்தவனே என அடித்துப் பேசுகின்றனர்.

யான் இந்த இருசாராரிடமும் வாதாடிப் பார்த்தேன். சடையன், காவிரியோடும் சோழ நாட்டோடும் பல பாடல்களில் தொடர்புறுத்தப்பட்டிருப்பதல்லாமல் சோழ மன்னனோடும் தொடர்புறுத்தப்பட்டிருப்பதால், பாடல்களில் கூறப்பட்டுள்ள வெண்ணெய் நல்லூரும் புதுவையும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தனவே எனச் சொல்லிப் பார்த்தேன். அவர்கள் ஒத்துக் கொள்வதாகத் தெரியவில்லை.

இலங்கையில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் சடையன் கப்பல் கப்பலாய் அரிசி அனுப்பியதால், இலங்கை மன்னன்

பரராச சிங்கன், காவிரியோடும் சோழமண்டலத்தோடும் தொடர்புறுத்திச் சடையனைப் புகழ்ந்து பாடியுள்ளான். தென்னார்க்காடு 'மாவட்டத் திருவெண்ணெய் நல்லூரில் சடையன் இருந்திருந்தால் கப்பல் கப்பலாய் இலங்கைக்கு அரிசி அனுப்பியிருக்க முடியாது; காவிரி பாயும் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவனா யிருந்ததாலேயே கப்பல் கப்பலாய் அரிசி அனுப்ப முடிந்தது.

எனவே, புதுவைச் சடையன் என்பதிலுள்ள புதுவை என்பது, தலைநகர்ப் புதுச்சேரியைக் குறிக்க வாய்ப்பே யில்லை. இந்த நிலையில், புதுவை மாநிலப் புதுவைக்குத் தெற்கே இரண்டு புதுவைகள் இருக்க, புதுவை மாநிலப் புதுவையைப் பாரதியார் தென்புதுவை என்று குறிப்பிட் டிருப்பது மிகவும் சிக்கலாகவும் குழப்பமாகவும் உள்ளது.

ஸ்ரீ வில்லிபுத்தூரைப் புதுவை என்பது அவ்வளவாகப் பொருந்தாததும் சிறுவரவினதுமாகும். 'புதுவைச் சடையன்' என்று கூறும் பாடல்களையும் பாரதியார் அவர் காலச் சூழ்நிலையில் அறியாதிருந்திருக்கலாம். அல்லது சடைய னைத் தென்னார்க்காடு மாவட்டத்துத் திருவெண்ணெய் நல்லூரான் என்று எண்ணியிருக்கலாம். அதனால் அவ்விரண்டு புதுவைகளையும் பாரதியார் சுட்டாமல் புதுச்சேரி மாநிலப் புதுவையையே சுட்டியிருக்கலாம். அங்ஙனமெனில், இந்தப் புதுச்சேரிக்கு வடக்கே ஒரு புதுச் சேரி இருந்திருக்கவேண்டுமே?

## 6.6 செங்கைப் புதுச்சேரி

இது குறித்துப் பலமுறை எண்ணிப் பார்த்ததுண்டு. ஒருநாள், இந்தியாவின் தலைமை அமைச்சராய் இருந்த திருமதி இந்திராகாந்தி செங்கற்பட்டு மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது, புதுச்சேரிப் பகுதிக்கும் சென்றதாக வானொலி அறிவிக்கக் கேட்டேன். பாரதியார் செங்கற்பட்டு

மாவட்டத்தை அடுத்துள்ள சென்னையில் நெடுங்காலம் தங்கியிருந்ததால், செங்கற்பட்டு மாவட்டப் புதுச்சேரியை அறிந்திருக்கலாம். அது வடக்கேயிருப்பதால் புதுச்சேரி மாநிலப் புதுச்சேரியைத் தென் புதுவை எனக் குறிப்பிட்டிருக்கலாம். இல்லையேல், தென் புதுவை என்பதற்கு அழகிய-இனிய புதுவை என்று பொருள் கூறுவதைத் தவிர வேறு வழியில்லை.

## 7. இனச் சுட்டு இன்மை

இங்கே தொல்காப்பியரும் நன்னூலாரும் அறிவித்துள்ள ஒரு கருத்து உள்ளத்தை உறுத்தாமல் இல்லை. தொல்காப்பியர் கிளவியாக்கத்தில்,

"இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே" (18)

என்வும் பவணந்தியார் நன்னூல் பொதுவியலில்

"பொருள்முத லாறாம் அடைசேர் மொழியினம்
உள்ளவும் இல்லவும் ஆம் இரு வழக்கினும்" (50)

"அடை மொழி இனமல்லதும் தரும் ஆண்டுறின்" (51)

எனவும் கூறியுள்ளபடி நோக்கின், தென் புதுவை என்பதிலுள்ள 'தென்' என்பதை, இனச் சுட்டு இல்லாப் பண்பாக-இனச்சுட்டில்லா அடையாகக் கொள்ளலாம்.

ஆனால் இந்தக் கருத்து எனக்கு மனநிறைவு அளிக்கவில்லை. ஒருகால், இடப் பெயர்கள் அல்லாத வேறு பெயர்கட்கு முன் உள்ள பண்பு - அடைமொழிகள் இனச்சுட்டு இல்லாதனவாயிருக்கலாம். இடம் தொடர்பான பெயர்கட்கு முன்னால் வரும் திசைப் பெயர்களை இனச்சுட்டு உள்ள பெயர்களாகவே கொள்ளல் வேண்டும்.

தொல்காப்பியரையும் பவணந்தியாரையும் யான் மறுக்கிறேன். இனச்சுட்டு இல்லாத பண்புகளே - இனச்சுட்டு

இல்லாத அடைமொழிகளே இல்லை — எல்லாம் உலக வழக்கு-செய்யுள் வழக்கு ஆகிய இரண்டிலும் இனச் சுட்டு உள்ளவையே என்பது அடியேனது கருத்து.

## 8.1 ஒத்துக்கு மத்தளம்

உரையாசிரியர்கள், செஞ்ஞாயிறு - வெண்டிங்கள், வடவேங்கடம் - தென்குமரி என்னும் பூச்சாண்டிகளைக்காட்டித் தொல்காப்பியருக்கும் நன்னூலாருக்கும் ஒத்துக்கு மத்தளம் அடித்துள்ளனர்.

செஞ்ஞாயிறு - வெண்டிங்கள், வடவேங்கடம் - தென்குமரி என்பன இனச் சுட்டு உள்ளனவே என்பது அடியேனது கருத்து. இதற்கு உரிய விளக்கமாவது:-

விண்வெளியில் உள்ள கோடிக்கணக்கான கோள்களுள் கண்கட்குப் பெரியனவாய்த் தெரிவனவும் நமக்கு நன்மை பயப்பனவாயும் உள்ள கோள்கள் ஞாயிறும் திங்களும் ஆகிய இரண்டே. இவற்றுள் ஞாயிறு செந்நிறம் உடையது போலவும், திங்கள் வெண்ணிறம் உடையது போலவும் தெரிவதால் முன்னது செஞ்ஞாயிறு எனவும், பின்னது வெண் திங்கள் எனவும் இனச் சுட்டுள்ள அடைமொழிகளைப் பெற்றுள்ளன. செஞ்ஞாயிறு இல்லையெனில் திங்களை வெண் திங்கள் எனவும், வெண் திங்கள் இல்லையெனில் ஞாயிறை செஞ்ஞாயிறு எனவும் கூறியிருக்க மாட்டார்கள். வேறு ஞாயிறுக்கு மாற்றாகச் செஞ்ஞாயிறு எனவும், வேறு திங்களுக்கு மாற்றாக வெண் திங்கள் எனவும் கூறவில்லை. இவ்விரண்டுமே ஒன்றுக்கு ஒன்று மாற்றாகும்.

## 8.2 எல்லைகள்

அடுத்து, வடவேங்கடம் - தென்குமரிக்குச் செல்லலாம். தெற்கே ஒரு வேங்கடம் இருப்பதால் வடவேங்கடம் என்றும், வடக்கே ஒரு குமரி இருப்பதால் தென்குமரி

என்றும் கூறவில்லை. தமிழ் நாட்டின் வடக்கு எல்லை வேங்கடம் - தெற்கு எல்லை குமரி என நாட்டிற்கு எல்லைகள் கூறப்பட்டுள்ளன. வடவேங்கடம் என்பதில் உள்ள 'வட' என்பது வேங்கடத்திற்கு அடைமொழி. தென்குமரி என்பதிலுள்ள 'தென்' என்பது குமரிக்கு அடைமொழி. இவை எல்லைகளைக் குறிக்கும் அடை மொழிகளாகும். வடக்கும் தெற்கும் ஒன்றுக்கு ஒன்று மாற்றுதானே.

## 9. இடப்பெயர்கள்

இந்த அடிப்படையுடன் தென் புதுவைக்கு வருவோம். எந்த இடம் தொடர்பான பெயருக்கு முன்னும் உள்ள 'தென்' என்பது தெற்கு என்னும் பொருளையே தருவதை அறியலாம். சில காட்டுகள்;-

தென் காசி, தென் கயிலாயம், தென் கோடு, தென் பரதம், தென் பல்லி, தென் பாண்டி, தென்பார், தென் பாரதம், தென்பால், தென்பாலி, தென்புலம், தென் புலத்தார், தென் மலை, தென் மதுரை, தென்முனை, தென் வரை, தென் திசை, தென்னகர், தென்னம் பொருப்பு, தென்னுலகு, தெனாது, தென்னவன், தென் கிழக்கு, தென் மேற்கு, தென் மூலை, தென் பக்கம், தென் கோடி, தென் கடல், தென்னார்க்காடு, தென் அருணை முதலியனவாம்.

மேலே, இடப்பெயருக்கு முன் தென் என்பது தெற்கு என்னும் பொருள் தந்து நிற்பதைக் காணலாம். இந்த முறையில் நோக்குங்கால் தென் புதுவை என்பதற்குத் தெற்கே உள்ள புதுவை என்றே பொருள் கொள்ளல் வேண்டும்.

பாரதியார் கூறியுள்ள தென் புதுவை என்னும் தொடருக்கு இப்பொருள் கூற, செங்கற்பட்டு மாவட்டப் புதுச்சேரியே துணை செய்ய முடியும்.

## 10. பாரதியாரின் குறைபாடு

தென்புதுவை என்பதற்கு அழகிய-இனிய புதுவை எனப் பொருள் கூற முடியுமாயினும், பல புதுவைகள் இருக்கும் நிலையில், பாரதியார், எந்தத் தெளிவும் இன்றித் தென் புதுவை எனக் கூறியிருப்பது குறைபாடுடையதே. செங்கற் பட்டு மாவட்டப் புதுச்சேரியை மையமாக வைத்துப் பாரதியார் தென்புதுவை எனக் கூறினார் என்னும் கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள், அழகிய-இனிய புதுவை என்று பொருள்பண்ணுவதைத் தவிர வேறு வழி இல்லை.

இது காறுங் கூறியவற்றால், பாரதிதாசனின் ஊரும் பேரும் பற்றிய விவரங்கள் ஓரளவு புலனாகும்.

### கருத்து வழங்கிய கருவூலங்கள்

Life of Sir Walter Scott — by Lokhart
அரேபிய இரவுக் கதைகள் — அலிபாபாவும் நாற்பது திருடர்களும்
கலித்தொகை-88 — நச்சினார்க்கினியர் உரை
பெரிப்புளூஸ் — கிரேக்க ஆசிரியர்
சீவக சிந்தாமணி — 422, 423 — நச்சினார்க்கினியர் உரை
நன்னூல் — 377 — மயிலைநாதர் உரை
சிலப்பதிகாரம் — புறஞ்சேரி யிறுத்த காதை—195, 196
சுப்பிரமணிய பாரதியாரின் குயில் பாட்டு — 6, 7.
அருணைக் கலம்பகம் — எல்லப்ப நாவலர்
பெரியாழ்வார் திருமொழி — 3-3-10
பரராச சிங்கன் பாடல்
தனிப் பாடல்கள்
கம்ப ராமாயணம் — பாயிரம் — 10
தொல்காப்பியம் — களவி யாக்கம் — 18
நன்னூல் — பொது வியல் — 50, 51
உலக வழக்காறுகள்

# 14. அமைதிச் சுவை

## சில காட்சிகளின் நிலை

ஓரிடத்தில் ஒரு சில காட்சிகள் உள்ளன. அவற்றைக் கண்டவன் சொன்ன கருத்துகள் சில வருமாறு:

"யாரும் கொண்டு செல்லக்கூடிய அமைதியற்ற பெண் உள்ளாள்; குழந்தை அலறுகின்றது. விருப்பம் இல்லாத கன்னிப் பெண்ணைக் காளை ஒருவன் காம வெறி பிடித்துத் தொடர்கிறான்; அவன் தொடாதபடி அப்பெண் போராடித் தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

காதால் கேட்கப்படும் இசையை, ஓர் அழகிய இளைஞன் ஒரு மரத்தின் கீழே இருந்து கொண்டு இசைக்கிறான். அவன் இசைப்பாடலைத் தொடர்ந்து எழுப்ப முடியவில்லை; நிறுத்தி விடுகிறான். அம்மரத்தின் இலைகள் உதிர்கின்றன.

துணிவுள்ள ஓர் இளைஞன் தான் விரும்பிய பெண்ணை நெருங்கி முத்தமிடுகிறான். அவள் மறைந்து கொண்டாள்; அதனால் அவளை அவன் மேலும் காதலிக்க முடியவில்லை. பல்லாண்டு கழிந்ததும் அவள் அகவை முதிர்ந்து அழகற்றவளாகிவிட்டாள்.

இன்பம் ஊட்டிய மரக்கிளைகள் இலைகளை உதிர்த்து விட்டன; இளவேனில் காலச் சூழ்நிலைக்கு வழியனுப்பு விழாவும் (பிரிவு உபசாரமும்) நடத்தி விட்டன. இன்னியங்கள் இசைப்பவர்கள் களைப்பினால் இசையை நிறுத்தி விட்டார்கள். அவர்களின் இசை கேட்டுக் கேட்டுப் பழமையாகி விட்டது. காதலர்கள் சிலர், இளமை மாறிவிட்டதால், காதல் சுவையைத் தொடர்ந்து நுகர முடியாதபடித் தெவிட்டல் உண்டாகிவிட்டது."

காட்சிகள் சிலவற்றைக் கண்டவன் மேலே அறிவித்துள்ளவாறு கூறினானா? இல்லவேயில்லை — பின்வருமாறு தான் கூறினான் — என்ன கூறினான்?

"எவராலும் கொண்டு போக வியலாத அமைதியான பெண்ணும், நன்கு பேணி வளர்க்கப்படுகின்ற ஒலி எழுப்பாத குழந்தையும் உள்ளனர்: (Thou still unravished bride of quietness, Thou foster child silence).

விருப்பம் இல்லாத கன்னிப் பெண்ணை ஆண்மகன் காம வெறி பிடித்துத் தொடர்கிறான். அவன் தொடாதபடி அப்பெண் போராடித் தப்பித்துக் கொள்கிறாள். அவளை அவனால் தொட முடியவில்லை. (What mad pursuit? What struggle to escape)

காதால் கேட்க முடியாத இனிய இசை — உள் உணர்வால் உணரக் கூடிய — கற்பனையால் உணரக்கூடிய இனிய இசை. மரத்தின் கீழே இருக்கும் அழகிய இளைஞனே! இசைப் பாடலை நீ என்றுமே நிறுத்த முடியாது; தொடர்ந்து இசைத்துக் கொண்டே யிருப்பாய்! அந்த மரத்தின் இலைகள் என்றுமே உதிரமாட்டா!

(Heard melodies are sweet,
but those unheard
Are sweeter; therefore,
ye soft pipes play on;
Not to the sensual ear,
but more endeared,
Pipe to the spirit
ditties of no tone;
Fair youth, beneath the trees,
thou const not leave
Thy song nor ever can
those trees be bare)

துணிவான இளைஞனே! நீ விரும்பும் அந்தப் பெண்ணை அடைய வெற்றி இலக்கை (winning goal) நெருங்கி விட்டது போல் தோன்றினும், நீ அவளை முத்தமிட முடியாது. வருந்தாதே! அவள் மறைந்து கொள்ள மாட்டாள், அவளை நீ என்றும் காதலித்துக் கொண்டே யிருக்கலாம். அவள் இதே நிலையிலேயே இருப்பாள் - கிழவியாக மாட்டாள்; ஆதலின் அவள் அழகும் என்றும் நிலைத்திருக்கும்.

(Bold lover; never,
never canst thou kiss,
Though winning nearth goal—
Yet do not grieve;
She cannot fade,
though thou had not thy bliss,
For ever wilt thou love,
and she be fair!")

இன்பூட்டும் மரக்கிளைகளே! உங்கள் இலைகள் உதிரமாட்டா! இலை தளிர்க்கும் இளவேனில் காலச் சூழ் நிலைக்கு வழியனுப்பு விழாவே (பிரிவு உபசாரமே) கிடையாது; என்றும் இளவேனிற் காலத்திலேயே நீங்கள் (மரங்கள்) இருக்க முடியும்.

(Ah happy, happy boughs!
that cannot shed
Your leaves, nor ever
bid the spring adieu;

மகிழ்ச்சியூட்டும் இன்னியங்கள் இசைப்பவர்கள் களைப் பின்றி எப்போதும் இசைத்துக் கொண்டேயிருப்பர்; இசை எப்போதும் புது இசையாகவே இருக்கும்.

(And happy melodist, unwearied,
For ever pipping songs for ever new)

எவ்வளவு மகிழ்ச்சியான காதல் - எவ்வளவு மகிழ்ச்சியான காதல்! காதலர்கள் என்றும் இளமையுடன் இருந்து குளிர்ந்த (Warm = வெதுப்பான) காதல் சுவையை நுகர்ந்து கொண்டேயிருப்பர்; துன்பமின்றித் தெவிட்டாமல் காதலிப்பர்.''

(More happy love!
more happy, happy love!
For ever warm
and still to be enjoyed,
For ever panting
and for ever young)

காட்சிகளைக் கண்டவன் இவ்வாறு கூறினான். அவன் இவ்வாறு கூறுவதற்கு ஏற்ப, என்றும் ஒரே மாதிரியாயிருந்த அந்தக் காட்சிகள் யாவை?

ஒரு கிரேக்கப் பாணியில் செய்யப்பட்ட ஒரு சாலின் பெரிய கொள்கலத்தின்) மேலே சுற்றி வரையப்பட்டுள்ள ஓவியங்களைப் பார்த்தே அவன் இவ்வாறு கூறினான். ஓவியத்தில் வரையப்பட்டவை, நிலை மாறாமல் என்றும் ஒரே அமைதி நிலையில் இருக்கும் அல்லவா?

**ஒன்பான் சுவைகளுள் அமைதி**

நகை (சிரிப்பு), அழுகை, இளிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம் (வீரம்), வெகுளி (சினம்), உவகை (காமம்), அமைதி (சாந்தம்) என்பன ஒன்பது சுவைகள் (நவரசங்கள்) ஆகும். அமைதி என்பது, இன்பம் வரினும் துன்பம் வரினும், நிலை மாறாமல் என்றும் ஒரே நிலையில் இருப்பதாகும். இவ்வாறு பொது மக்கள்

இருப்பது அரிது. மெய்யுணர்வினர் அருளாளர்கள்-முற்றத் துறந்த முனிவர்கள் – உயர்ந்த பண்பாளர்கள் ஆகியோரே இவ்வாறு என்றும் நிலை மாறாது அமைதியான ஒரே நிலையில் இருக்க முடியும். இந்த அமைதி நிலைக்கு-இந்த ஒரே மாதிரியான நிலைக்கு விளக்கம் தருவதற்கு ஓவியங்களே உவமையாக இருந்து உதவி செய்யும்.

**ஜான் கீட்சு**

இதை அறிவிக்கவே, ஜான் கீட்சு (John Keats) என்னும் ஆங்கிலப் புலவர் இயற்றிய "Ode on A Greacian Urn" என்னும் தலைப்புடைய பாடல் பகுதிகள் பொருளுடன் மேலே தரப்பட்டுள்ளன.

தாமரை மலர் தடாகத்தில் மலர்ந்திருக்கும். அது ஆடி அசைந்து கொண்டிருக்கும். நேரம் ஆக ஆக நிறம் மாறி இதழ் சுருங்கி வதங்கிப் பொலிவிழந்து குவியவும் செய்யும். பறித்துக் கொண்டு வந்து கையிலோ வேறிடத்திலோ வைத்திருக்கும் தாமரை மலரும் நேரம் ஆக ஆக நிலை மாறிப் பொலிவு இழக்கும். ஆனால் ஓவியத்தில் வரையப் பட்டுள்ள தாமரை மலரோ நிலை மாறாமல் என்றும் குவியாமல் மலர்ச்சியுடனேயே பொலிவு பெற்றுத் திகழும்.

**தாமரை முகம்**

மக்களின் மலர்ந்த முகத்திற்குத் தாமரை மலரை உவமையாகக் கூறுதல் மரபு. மக்களின் முகம் எப்போதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. மக்களுள் மிக உயர்ந்தவர் களின்-மக்கள் தன்மைக்கு அப்பாற்பட்ட மேல் நிலையில் உள்ளவர்களின் முகமோ, இன்பத்திலும் துன்பத்திலும் ஒரே மாதிரியாயிருக்கும். அதாவது, ஓவியத்தில் உள்ள தாமரை மலரேபோல் ஒரே நிலையில் இருக்கும். இதற்கு ஏதாவது ஓர் எடுத்துக் காட்டு கிடைக்குமா? காண்பாம்:

## சித்திரத்துச் செந்தாமரை

உலகியலில் — ஒரு குடும்பத்தில், தந்தை தன் மூத்த மகனுக்கு முதலில் பாகப்பிரிவினை செய்து தந்த உடைமைகளுள் ஒரு பகுதியினைப் பின்னர் இளைய மகனுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறின், மூத்த மகனும் மூத்த மருமகளும் வாளா இருப்பார்களா? போர்க் கொடி உயர்த்துவர் அன்றோ? இந்த அளவுக்கே இது எனில், மூத்த மகனுக்குப் பாகமே இல்லை-எல்லாம் இளைய மகனுக்கே என்று தந்தை கூறின். என்ன நேரும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உலகில் தந்தை தரும் சொத்தைவிட வேறு எந்த வசதியும் அற்ற மூத்த மகன் ஒருவன், எனக்கு வேண்டா-தம்பிக்கே கொடுத்து விடுங்கள் என்று செல்வானா?

தந்தை தனக்குத் தரினும்-தராவிடினும் இன்ப துன்பம் அற்ற ஒரே மன நிலையில் மூத்த மகன் இருப்பானா? உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியாகிய முகம் ஒரே நிலையில் இருக்குமா?

மூத்த மகன் ஒருவன், இத்தகைய சூழ்நிலையில் சித்திரத்தில் வரையப்பட்டுள்ள செந்தாமரையைப் போல ஒரு நிலையில் இருந்ததாகக் காப்பியத்தில் கூறப் பட்டுள்ளான். இராமாயணக் காப்பியத் தலைவனாகிய இராமனே அவன்.

இராவணனால் இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சீதை, அசோகவனத்தில் இருந்தபோது, பழைய நிகழ்ச்சிகள் பலவற்றை எண்ணி வருந்துகின்றாள்: அவற்றுள் ஒன்று:-

முடி சூடிக்கொண்டு அரச பதவியை ஏற்றுக் கொள்க என்று தந்தை சொன்னபோது இராமனது முகம் எவ்வாறு

இருந்ததோ, அவ்வாறே, அரசச் செல்வத்தைத் துறந்து காட்டிற்குப் போவாயாக என்று சொன்னபோதும் இருந்த தாம். இந்த அமைதி (சாந்த) நிலைக்குத்தான் சித்திரத்துச் செந்தாமரையை ஒப்பிட்டு நோக்கிச் சீதை வருந்தினாள் என்பதாகக் கம்பர் பாடியுள்ளார். (பாடல்: சுந்தர காண்டம்-காட்சிப் படலம்)

"மெய்த் திருப்பதம் மேவு என்ற போதினும்
இத்திருத் துறந்து ஏகு என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்" (20)

இந்தச் செய்தி படிப்பதற்கு மிகவும் சுவையாயுள்ள தல்லவா? அமைதிச் சுவைக்கு இதனினும் வேறு எடுத்துக் காட்டு வேண்டுமா என்ன!

# 15. ஆசிரிய இராமாயணம்

**கண் வழிக் கள்வன்**

மிதிலையில் அரச மாளிகையின் மாடியின் நின்றிருந்த சீதையும் தெருவில் சென்ற இராமனும் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டனர்; ஒருவரிடம் ஒருவர் உள்ளத்தைப் பறிகொடுத்தனர். அன்றிரவு சீதை இராமனது உருவை எண்ணிக் காதலால் புலம்புகின்றாள்.

"தெருவில் சென்ற அவன் என் கண்ணின் வழியாக என்னுள் புகுந்து என் பெண்மையையும் நாணையும் திருடிக் கொண்டான். இவன் ஒரு புது வகைக் கள்வ னாவான்" என்று கூறி வருந்தினாள்.

மேலும் தன்னை வருத்தும் திங்களை நோக்கி, இருள் என்னும் பெயருடன் வந்து உலகை விழுங்கி எனை

வருத்தும் கரு நெருப்பினிடையே தோன்றி யெழுந்த வெள்ளை ·நெருப்பாகிய திங்களே! அவருடைய (இராமருடைய) கருநிறத்திற்குத் தோற்று அலறிக் கொண்டிருக்கும் கடலை நீ தோன்றி அலைமோதச் செய்து வருத்துகிறாய்; என்னையும் வருத்துகிறாய்; ஆனால், திங்களே! நீ கொடியை அல்லை. நீ அமிழ்தத்துடன் தோன்றியதால் யாரையும் கொல்லமாட்டாய். மற்றும், திருமகளோடு கடலில் தோன்றியதால் என்னைச் சுடுவாயா? சுடாதே - என்கிறாள். பாடல்கள்:

**மிதிலைக் காட்சிப் படலம்**

"பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்
என்வழி உணர்வும் எங்கும் காண்கிலேன்
மண்வழி நடந்து அடிவருந்தப் போனவன்
கண்வழி நுழையுமோர் கள்வனே கொலாம்" (55)

"கொடியை அல்லை நீ யாரையும் கொல்கிலாய்
வடு இல் இன் அமுதத்தோடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணோடு என்றால் எனைச்
சுடுதியோ கடல் தோன்றிய திங்களே" (77)

சீதையின் நிலை இஃதாக, இரவு முழுதும் சீதையை எண்ணி வருந்திக் கொண்டிருந்த இராமன், மறுநாள் வில்லை நாண் ஏற்றி முறித்துச் சீதையை மணக்கத் தகுதி பெற்றவ னானான்.

**ஆவலைத் தூண்டுதல்**

சீதையால் காதலிக்கப் பெற்ற இராமன் வில்லை நாணேற்றி ஒடித்த நற்செய்தியைத் தெரிவிக்க நீல மாலை என்னும் தோழி சீதைபால் ஓடினாள்; சீதையை வணங் கினாள்; மகிழ்ச்சியுடன் ஆடிப் பாடினாள். இதைக் கண்ட ஏதை, அவளை நோக்கி, உன் மகிழ்ச்சிக்குக் காரணமான

செய்தியை விரைவில் சொல் என்று வினவினாள். நீலமாலை சொல்லத் தொடங்கினாள்:

நால்வகைப் படையைக் கடல்போல் மிகுதியாக உடையவன்; கல்வியில் சிறந்தவன்; தயரதன் என்னும் பெயரினன்; முகில்போல் வழங்கும் கையன். அவனுடைய மகன் மன்மதனினும் சிறந்த அழகுடையவன். பாடல்:

"கயரத துரகமாக் கடலன் கல்வியன்
தயரதன் எனும் பெயர்த் தனிச்செல் நேமியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வன் பூங்கணை
மயல்விளை மதனற்கும் வடிவு மேன்மையான்" (58)

'இராமன் வில்லை முறித்தான்' என மூன்று சொற்களால் செய்தியைத் தெரிவித்திட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல், நீலமாலை சீதையின் ஆவலைத் தூண்டி மேலும் வளர்த்துகிறாள்:

மராமரம் போன்ற திண்ணிய தோளினன்; அரவணைத் திருமாலோ என ஐயுறும் ஆற்றலன்; இராமன் என்பது அவன் பெயர். அவன் தம்பியொடும் முனிவரொடும் மிதிலைக்கு வந்தான்:

"மராமரம் இவையென வளர்ந்த தோளினன்
அராஅணை அமலன் என்று அயிர்க்கும் ஆற்றலான்
இராமன் என்பது பெயர் இளைய கோவொடும்
பராவரு முனியொடும் பதி வந்து எய்தினான்" (59)

ஓர் ஆண்மகன் மற்றோர் இளைஞனுடனும் முனிவர் ஒருவருடனும் ஊருக்குள் வந்தான் என்று சொல்வதன் வாயிலாக, சீதை தெருவில் கண்ட காட்சியை நினைவுறுத்தி மேலும் ஆவலைத் தூண்டுகிறாள்: சிவனிடமிருந்து வந்த அந்த வில்லைக் காணவந்தவன் நாணேற்றினான். விண்ணுலகமே அதிர்ந்தது!

"பூணியல் மொய்ம்பினன் புனிதன் எய்தவில்
காணிய வந்தனன் என்ன, காவலன்
ஆணையின் அடைந்தவில் அதனை ஆண்தகை
நாண் இனிது ஏற்றினான் நடுங்கிற்று உம்பரே" (60)

வில்லை நாண் ஏற்றினான் என்றால் போதுமா? அதனை வளைத்து முறித்தானா என்பது தெரியவேண்டுமே! மேலும் கூறுகிறாள்: ஒரு நொடி நேரத்தில் வில்லை எடுத்தான்; இதற்கு முன்பே எடுத்துப் பழகிய ஒரு பொறிபோல நாணேற்றி வளைத்து முறித்தான்:

"மாத்திரை அளவில் தான் எடுத்து முன்பயில்
சூத்திரம் இதுஎனத் தோளின் வாங்கினான்
ஏத்தினர் இமையவர்; இழிந்த பூமழை
வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்ததே" (61)

தேவர்கள் பூமாரி பொழிந்தனராம். வில் இற்ற ஒலி கேட்டு அவையே நடுங்கிற்றாம். ஒரு தொடரில் சொல்ல வேண்டிய செய்தியை, சீதையின் ஆவலைத் தூண்டும் முறையில் பல தொடர்களில் கூறியதாக அமைத்துள்ள சுவையான இந்தப் பகுதி ஒரு கம்ப சூத்திரமோ!

**ஆசிரிய இராமாயணம்**

சீதையின் ஆவலைத் தோழி தூண்டும் இந்தப் பகுதி வால்மீகி இராமாயணத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இது கம்பரின் சுவையான சொந்தப் படைப்பாகவே தோன்றுகிறது. கம்ப இராமாயணம் விருத்தப்பாவால் ஆனது. "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்" எனக் கம்பர் சிறப்பிக்கப் பெற்றுள்ளார்.

தமிழில் ஆசிரியப்பாவால் ஆன இராம காதை (இராமாயணம்) ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. தொல் காப்பியம் - பொருளதிகாரம் - அகத்திணையியலில் உள்ள

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர் சொளப் பெறாஅர் (54)

என்னும் நூற்பாவின் உரையில், சுட்டி ஒருவர் பெயர் கொண்ட கைக்கிளைக்கு எடுத்துக்காட்டாக, நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் ஆசிரிய இராமாயணப் பாடல் ஒன்றைத் தந்துள்ளார். அதன் கருத்தாவது:

விசுவாமித்திர முனிவர் காட்டில் தமது வேள்வியைக் காப்பாற்றிய இராமனோடு மிதிலைக்குச் சென்றிருந்த போது இராமன் சனகனது வில்லை நாணேற்றி முறித்தான். முதலிலேயே இராமனைக் கண்டு அவனிடம் தன் உள்ளத்தைச் செலுத்திய சீதை, மிக்க விசையுடன் நாணேற்றி வில்லை ஒடித்த இடி போன்ற ஒலியைக் கேட்டு, இடியே றுண்ட பாம்புபோல் வாட்டம் எய்திப் படுக்கையிலிருந்து எழுந்து, வில்லை ஒடித்தவர் நாம் முன்பு கண்ட இளைஞராக (இராமனாக) இருப்பாரோ-அல்லது வேறு யாராகவாவது இருப்பாரோ என்று மயங்கினாள்' பாடல்

"ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய இராம னவனொடு
மிதிலை மூதூர் எய்திய ஞான்றை
மதியுடம் பட்ட மலர்க்கண் சீதை
கடுவிசை வில்ஞாண் இடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்டம் எய்தித்
துயிலெழுந்து மயங்கினள் அதா அன்று மயிலென
மகிழ்..."

என்பது பாடல் பகுதி. இப்பாடல், புறத்திரட்டு என்னும் தொகை நூலில் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடலும் முழுமையாகத் தரப்படவில்லை. நீல மாலை என்னும் தோழி சீதையின் ஆவலைத் தூண்டிப்

பின்னர் இராமன் வில் ஒடித்த செய்தியைச் சீதைக்குத் தெரிவித்ததாகக் கம்பர் பாடியுள்ளார். இந்த ஆசிரியப் பாடலோ, வில் ஒடித்த ஒலியைச் சீதை தானே கேட்டதாகத் தெரிவிக்கிறது. இவ்வாறு சிறுசிறு வேற்றுமையுடன் பல்வேறு இராம காதைகள் இருக்கும் போலும்.

இந்த ஆசிரியப்பா இராமாயணத்தை மு. இராக வையங்கார் 'பழைய இராமாயணம்' எனக் குறிப்பிட்டு உள்ளார். இந்த ஆசிரியப்பாவை நோக்கக் கம்பரின் நன் கொடை மிகவும் சுவையானதன்றோ!

இப்படி ஆசிரியப்பாவால் ஆன ஓர் இராமாயணம் உண்டு என்பதற்கு வலுவூட்ட மற்றும் ஓர் ஆசிரியப்பா இராமயணப் பாடலைக் காண்பாம்!

தொல்காப்பியம் - புறத் திணையியலில் உள்ள

"கட்டில் நீத்த பாலினானும்" (76-16)

என்னும் பகுதிக்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையில் பரதனைப் பற்றிய செய்தி வருகிறது. அதாவது?

"கட்டில் நீத்த பாலினானும் = அரசன் அரச உரிமையைக் கைவிட்ட பகுதியானும். அது பரதனும் பார்த்தனும் போல்வார் அரசு துறந்த வென்றி.

(உ-ம்) "கடலும் மலையும் நேர்படக் கிடந்த
மண்ணக வளாகம் நுண்வெயில் துகளினும்
நொய்தா லம்ம தானே இஃதெவன்
குறித்தன னெடியோன் கொல்லே மெய்தவ
வாங்குசிலை இராமன் தம்பி யாங்கவன்
அடிபொறை யாற்றி னல்லது
முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே"

இஃது அரசு கட்டில் நீத்த பால்." என்பது நச்சினார்க் கினியரின் உரைப் பகுதி. இராமனுடைய தம்பியாகிய

பரதன், இராமனின் அடிகளைச் (பாதுகைகளைச்) சுமப்பதைத் தவிர, மண்ணுலகைக் காக்கும் சுமை தொடர்பான முடியைத் தலையில் சுமக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டானில்லை - என்பது இப்பாடலின் கருத்து.

இந்தப் பாடல் நேரிசை ஆசிரியப்பா. இப்படியாக, ஆசிரியப்பாவால் ஆன இராமாயணம் ஒன்று இயற்றப் பட்டுள்ளது என்ற செய்தி அறியக்கிடக்கிறது.

இந்த ஆசிரியப்பா இராமாயணத்தை மு. இராக வையங்கார் 'பழைய இராமாயணம்' எனக் குறிப்பிட்டிருப்ப தால், இது கம்ப இராமாயணத்திற்கும் முற்பட்டதாய் இருக்கலாம் போலும்.

# 16. தமிழன் கண்ட கல்வி முறை

### இக்காலக் கல்வி முன்னேற்றம்

இன்று, மருத்துவம், விஞ்ஞானம், பொறியியல் முதலிய துறைகள் வளர்ச்சி பெற்றிருப்பதைப் போலவே கற்பிக்கும் (போதனா) முறையும் வளர்ச்சி பெற்றுள்ளது. புதிய புதிய முறைகள் பல தோன்றியுள்ளன. விளையாட்டு முறை, கிண்டர் கார்டன் முறை, மாண்டிசோரி முறை, தன்னோக்க முறை. தனிப் பயிற்சி முறை, ஆதாரக் கல்வி முறை என்றெல்லாம் அவைகட்குப் பெயரும் சூட்டியுள்ளனர். குழந்தைகளின் இன்னல்கள், உளவியல்பு முதலியவற்றை அறியாமல், குழந்தைகட்குப் புரிகிறதோ புரியவில்லையோ, அவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ, எப்படியேனும் திணிக்க வேண்டும் என்ற முறையில் அக்காலக் கற்பிக்கும் முறை அமைந்திருந்ததாம். அதை மாற்றி மேற்கண்ட முறைகள் வாயிலாக மாணவர் உள்ளத்திற்கேற்ப அவர்களே

விரும்பிக் கற்கும் முறையில் கல்வியில் முன்னேற்றம் கண்டிருப்பதாக இக்காலத்தவர் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். இவ்வளர்ச்சியை நோக்க, அக்காலக் கல்வி முறை பின்தங்கிய நிலையிலா - அல்லது வளர்ச்சி பெற்ற நிலையிலா - அல்லது வேறு எந்த நிலையில் இருந்தது என்பதைக் காண்போம்.

**அக்காலக் கல்வி முறை**

அக்காலத்தில் பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்புவதே பெரிய விழாவாக அவரவர்களின் குடும்ப நிலைக்குத் தக்கபடி கொண்டாடப்பட்டது. அந்த எழுத்தறிவிக்கும் விழாவை (அட்சராப்பியாசத்தை) இன்று எங்கே காண முடிகிறது? மேய்ப்பவனிடம் ஆடு மாடுகளை ஓட்டி விடுவதைப் போல வல்லவா இன்றைய பள்ளிப் பயிற்சி அமைந்து விட்டது? அன்றைய மாணவர்கட்கு இப்பொழுதிருக்கும் உரிமையும் கிடையாது - சோம்பலும் கிடையாது. மாணவர்கள் வைகறையிலேயே பள்ளிக்குச் சென்றுவிட வேண்டும். முதலில் வந்தவனுக்கு ஓரடி; இரண்டாவது வந்தவனுக்கு இரண்டடி. இப்படி அடிகளின் எண்ணிக்கை ஏறும். இதற்குப் 'படியடி' என்று பெயராம். இந்த அடி உடல் வருத்தும் அடியன்று; காலந் தவறாமையைக் கற்பிக்கும் மெல்லிய இனிய அடி. நண்பகல் உணவிற்கே மாணவர்கள் வீடு செல்ல அனுப்பப்பட்டனர். மற்ற நேரம் ஆசிரியர் வீட்டில்தான். 'குருகுல' முறையில் ஆசிரியருடனேயே உண்டு உறைந்து கற்றதும் உண்டு. ஆனால், இத்தகு குரு குலங்களில், இக்கால மாணவர் விடுதிகளில் காணப்படும் 'சிகரெட்' புகை மண்டலத்தைக் கண்டிருக்கமுடியாது.

அன்றைய ஆசிரியர் ஒவ்வொருவரும் பல்கலை வல்லுநராக இருந்தனர்; கணிதம், வானியல், சோதிடம்,

இலக்கியம், இலக்கணம், முதலியவற்றில் புலமை பெற்றிருந்தனர். இன்றைய ஆசிரியர்களைப்போல் அடிப் படைக் கல்வியைப் பொதுப்படையாகக் கற்றவர்கள் அல்லர். மணிக்கு ஓர் ஆசிரியர், பாடத்திற்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை அன்று இருக்கவில்லை. மளிகைக் கடையில் வேலை பார்ப்பவர்கள், வாங்க வருபவர்கட்குப் பொருள் கொடுக்கின்றனர். அதற்காகக் கடை முதலாளி அவர்கட்குச் சம்பளம் கொடுக்கின்றார். இந்த மளிகைக் கடைக்கும் பள்ளிக்கூடங்கட்கும் என்ன வேறுபாடு இருக்கப் போகின்றது? அக்கால முறை இதைப் போன்றதன்று. மாணவர்களைப்பற்றிய எல்லாவற்றிற்கும் ஆசிரியரே பொறுப்பாளி. அவர்களின் வாழ்வு, தாழ்வு எல்லா வற்றிற்குமே ஆசிரியர் நேரடிப் பொறுப்பாளியாவார். மாணவர்களும் அவர்களுக்கு வேண்டிய தானியம் காய்கறி கள் (எண்ணெய், எருமுட்டை முதற்கொண்டு) அனைத்தை யும் கொடுத்துதவினர்.

பள்ளிக்கூடம், திண்ணை, மரத்தடி முதலிய விடங்களில் நடத்தப்பட்டது. இப்பொழுது பள்ளியின் அமைப்பு, இப்படி இப்படி இருக்க வேண்டும்; அப்படி இருந்தால்தான் தொடங்குவதற்கு ஒப்புதல் கிடைக்கும் என்று கூறப் படுகிறது. இந்த வரையறையும் கண்டிப்பும் அக்காலத்தில் இல்லை. இந்த வறட்டு முறையில் நம் ஏழை நாடு பின் தங்கியதால் மீண்டும் மரத்தடிக்கே வரத் தொடங்கி விட்டது. தமிழன் முறையில் இயங்கும் தாகூரின் "விசுவ பாரதி" தலை நிமிர்ந்து நிற்கின்றது.

### எழுத்தறிவித்தவன் இறைவன்

மற்றும், இக்காலத்தில் மாணவரிடம் வலிந்து புகுத்த வேண்டிய நிலையில் உள்ள சில நல்ல முறைகள் அக் காலத்தில் இயற்கையாகவே அமைந்திருந்தன. எடுத்துக் காட்டாக, இக்காலத்தில் பிள்ளைகள் நாட்டுக்கேற்ற

குடிமக்களாக விளங்க வேண்டும் என்பதற்காகக் குடிமைப் பயிற்சியைப் (Citiztenship) பாடமாக்கியுள்ளனர். பெண்கட்குச் சமையற்கலையைக் கூடப் பாடமாக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. பாடங்கள் வாயிலாக இவற்றைப் புகுத்த வேண்டிய (injection) நிலை அன்று ஏற்படவில்லை. பழக்க வழக்கங்களிலும் உடையிலும் நாட்டுக்கு அயலார்போல் வீட்டுக்கும் அயலாராய் இன்றைய படித்த இளைஞர்கள் இருப்பதுபோல் அன்று இருந்ததில்லை. "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்று போற்றிய காலம் அக்காலம். ஆசிரியரைப் பழிப்பதையும் எதிர்ப்பதையும் நாகரிகமாகக் கருதுவதே இக்காலக் கல்வி முன்னேற்றமாகும். கல்லூரி வேலை நிறுத்தம் அதாவது படிப்பு நிறுத்தம் அடிக்கடி நடைபெறுவதற்குக் காரணம் ஆசிரியனை இறைவனாகக் கருதும் மனப்பான்மை இல்லாததே யாகும்.

" நுணங்கு நூல் ஓதுதல் கேட்டல் மாணாக்கர்
வணங்கி வலங் கொண்டு வந்து".

என்ற சிறு பஞ்ச மூலக் கருத்திற்கிணங்க மனப்பான்மை வளர்ந்தால் இந்த நிலை மாறும்.

அன்று திருமணம் முதலிய நல்ல நிகழ்ச்சிகளில் ஆசிரியர்க்கே முதலிடம் கிடைக்கும். இன்று அரசியல் தலைவர்கட்கும் உயர்தர அதிகாரிகட்குமே முதலிடம் கிடைக்கின்றது. அரசியலுக்கும் பதவிக்கும் கிடைக்குமிடம் இனியேனும் கல்விக்குக் கிடைக்குமென நம்பமுடியுமா?

**கணிதச் சிறப்பு**

இப்படியாகப் பழங்காலக் கல்வி முறையில் பல நல்ல நடைமுறைகள் இருந்ததல்லாமல், பாடத் திட்டத்திலும் சில சிறந்த பகுதிகள் இருந்தன, அவற்றுள் தலை சிறந்ததாகத் தமிழ்க் கணக்கைக் கூறலாம். தமிழில் என்ன இருக்கிறதென்று கேட்பவர்கள்கூட, தமிழ்க் கணிதத்தைச்

சிறப்பித்துப் புகழ்கின்றனர். செய்யுள் நடைமுறையில் உள்ள "கணக்கதிகாரம்" என்னும் தமிழ்க் கணித நூல் இன்றும் வாழ்கிறது. நம் தமிழ்க்கணக்கில் 'பின்ன' வாய்ப்பாடு கூட உண்டு. இப்பொழுது சிலர் தாளில் போட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் சில பின்னக் கணக்குகளை, அப்போது பின்ன வாய்ப்பாட்டின் துணை கொண்டு மனக்கணக்காகவே போட்டு விடுவார்களாம்.

தமிழ்க் கணிதத்தில் சிறு சிறு பின்னங்களுக்குக்கூடத் தனித்தனிப் பெயர்கள் இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாகச் சில நோக்கலாம்:-

$\frac{1}{320}$ — முந்திரி $\frac{3}{80}$ — முக்காணி

$\frac{1}{160}$ — அரைக்காணி $\frac{1}{20}$ — ஒருமா

$\frac{1}{80}$ — காணி $\frac{1}{10}$ — இருமா

$\frac{1}{40}$ — அரைமா $\frac{3}{20}$ — மும்மா

இப்படியே இன்னும் பல உண்டு. இவற்றையெல்லாம், கொறுக்கையூர் காரி நாயனார் இயற்றிய கணக்கதிகாரம் என்னும் நூலில் உள்ள,

> இம்மிதான் ஈரைந் தரையெனவே வைத்திதனைச்
> செம்மைதரும் கீழ்முந் திரிசெய்து — பின்னவை
> மூன்றுபடி பத்திரட்டி முந்திரியே ஒன்றென்றார்
> ஆன்ற அறிவி னவர்.
> முந்திரி அரைக்காணி முன்னிரண்டு பின்னிரண்டாய்
> வந்ததோர் காணிநான் மாவாக்கி — ஒன்றொடு
> நாலாக்கிக் காலாக்கி நன்னுதலாய் காலதனை
> நாலாக்கி ஒன்றாக நாட்டு.

என்னும் பாக்களானும் பிறவற்றானும் அறியலாம்.

**அகராதிக் கலை**

அடுத்து மற்றொரு கல்வித்திட்டத்தை இங்கே குறிப்பிடாமல் விடமுடியாது. அதாவது, இந்தக் காலத்தில் 'லெக்சிகோகிராபி' (Lexicography) என்று சொல்லப்படும் சொற்பொருள் விளக்கம் கூறும் அகரார்தி (Dictionary) கலை அந்தக் காலத்தில் விரிவான முறையில் கையாளப்பட்டு வந்தது. இன்று அகராதி தேவைப்படுகிறது. சிலருக்கோ அகராதியைப் பயன்படுத்தும் விதமே தெரியாது. மெத்தப் படித்தவர்களும் இன்று அடிக்கடி அகராதியின் உதவியை நாடவேண்டிய நிலையில் உள்ளனர். அன்று, கற்றவர்களோ அகராதிப் பொருள் முழுவதையும் மனத்தில் அமைத்து வைத்திருந்தனர். அந்தக் காலத்து அகராதி நூலுக்கு 'உரிச்சொல்' அல்லது 'நிகண்டு' என்பது பெயர். நிகண்டு செய்யுள் நடையில் இருக்கும். அதனால் மனப்பாடம் செய்வதற்கு மிக எளிது. ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களும் (அர்த்தங்களும்) செய்யுளாகவே சொல்லப்பட்டிருக்கும்; ஒரே பொருளுக்குரிய பல பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, கடலுக்கு எத்தனை பெயர்கள் உண்டோ - காட்டிற்கு எத்தனை பெயர்கள் உண்டோ - அத்தனை பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கும். இந்த நிகண்டுச் செய்யுட்களை மனப்பாடம் செய்து வைத்திருப்பவர்கள், புதுப்புதுச் சொற்களையமைத்துப் பாடல்கள் படைக்கலாம்; பிறர் இயற்றியுள்ள பாடல்களுக்கும் ஆசிரியர் உதவியின்றித் தாமாகவே பொருள் புரிந்து கொள்ளலாம். இன்றுபோல் அகராதி மூட்டையைச் சுமக்கவேண்டியதில்லை. எத்துணை நன்மை!

இப்படி உதவும் எண்ணற்ற நிகண்டு நூல்கள் தமிழில் உண்டு — இன்றும் உள்ளன. இப்போது ஆங்கிலத்தில் 'ஆக்சுஃபோர்டு' டிக்ஷ்சனரி (Oxford Dictionary) — அந்த டிக்ஷ்சனரி—இந்த டிக்ஷ்சனரி என்று தம்பட்டம் அடித்துத்

திரியும் பலருக்குத் தமிழ் நிகண்டு நூல்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இன்னும் சொல்லப்போனால் நிகண்டு எனறால் பணத்துக்கு எத்தனை படி என்று கேட்பவர்களும் இன்று இருக்கக்கூடும். ஆனால் அந்தக் காலக் கல்வி முறையில் நிகண்டு என்னும் இந்த அரிய கலைச் செல்வம் நடைமுறையில் இருந்தது.

அடுத்தபடியாக, வாழ்க்கைக்குப் பயன்படும் பல அறிவுரைகளைக்கூறும் 'சதகம்' என்னும் ஒருவகை நூலும், இன்ன பிற சிற்றிலக்கியங்களும் பின்னர்ப் படிப் படியாகப் பேரிலக்கிய-இலக்கண நூற்களும் கற்பிக்கப்பட்டன. உரை நடை (வசன) நூல்கள் இல்லாமல் செய்யுள் நூல்களே இருந்த அக்காலத்தில்-எல்லாக் கலையும் செய்யுள் வாயிலாகவே கற்ற அக்காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு நிகண்டு, சதகம் முதலிய நூல்களைக் கற்பது மிகவும் எளிதாக இருந்தது. 'கோழி முட்டையிடும்; முட்டை வெள்ளையாக இருக்கும். பசு பால் கொடுக்கும்; பால் வெள்ளையாக இருக்கும்' என்பன போன்றவற்றைப் படிப்பு என்னும் பெயரில் இன்று படிப்பவர்க்கு நிகண்டு முதலிய நூல்கள் 'சிம்ம சொர்ப்பன' மாகத்தான் இருக்கும். பழைய முறைக் கல்வி கற்ற நம் பாட்டனார்கள், 'பால் வெள்ளையாய் இருக்கும்' என்பது ஒரு படிப்பா என்று சொல்லிச் சிரிப்பதை நாம் வெட்கப்படாமல் பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும்.

## புறவினைச் செயல்கள்

மற்றும், ஆசிரியர் மாணவர்களைக் கோயிலுக்கும், திருவிழாவிற்கும் அழைத்துச் செல்லுதல், விழா நாட்களிலும் கொண்டாட்ட நாட்களிலும் கோலாட்டம், பாட்டு, நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தச் செய்தல், வேலை செய்வித்தல், முதலிய உற்சாகமான செயல்கள்

அக்காலத்தில் பின்பற்றப் பட்டு வந்தன. இவை போன்றவற்றை இக்காலத்தினர் 'புறவினைச் செயல்கள்' (Extra curricular Activities) என்று ஆடம்பரமாக (படாடோபமாக) அழைக்கின்றனர். இப்படி இன்னும் பல சிறப்புக்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

எனவே, வாழ்க்கைக்குப் பயனளிக்கும் கலையறிவு, நூலறிவு, நல்ல உழைப்பு, நல்ல பழக்கவழக்கங்கள் எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை முதலியவற்றையே அக்காலக் கல்வி புகட்டியது. இன்றைய ஐரோப்பியக் கல்வி, ஆடம்பர வாழ்க்கை, பெரிய மேதை போன்ற செருக்கு மனப்பான்மை, கையூட்டு, உடலுழைப்பில் வெறுப்பு இவற்றைத் தானே உண்டாக்கியுள்ளது? ஆசிரியர் மாணவர் பிணைப்பும் மளிகைக்கடைத்துறை போல் ஆகிவிட்டதல்லவா? இப்பொழுது எளிய வாழ்க்கை, சமூகத்தொண்டு, குடிமைப் பயிற்சி, முதலியவற்றின் வாயிலாகப் பழைய நிலைமைக்குக் கல்வித் தரத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கரடியாகக் கத்துகின்றனர். அன்று தமிழன் கண்ட கல்வியின் தரம் தாழ்ந்து விடவில்லையே!

### குறையும் நிறையும்

ஒரு குறைபாட்டை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இன்றுள்ள குழந்தை உள நூலும் (Child Psychology) கல்வி உளநூலும் (Educational Psychology) அன்று எந்த நாட்டிலும் தோன்றியிருக்கவில்லை. அதனால் சிலகுறைபாடுகள் பயிற்றலில் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டு வந்தாலும் "கொள்வோன் கொள்வகையறிந்து அவன் உளங்கொள" நூல் சொல்லிக் கொடுக்கப்பட்டது என்பதற்கு, பதின் மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நன்னூல் பாயிரம் சான்றாக நிற்கின்றது. அது வருமாறு:-

"ஈதல் இயல்பே இயம்புங்காலைக்
காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி யிருந்து தன்தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன்
உளங்கொளக்
கோட்டம் இல் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப"

இது, பன்னெடுங் காலத்திற்கு முன்பே தமிழன்கண்ட கல்வி முறையாகும். இந்த நன்னூல் பாயிரப்பாடலின் பொருள் அறிந்தவர்கள், இந்த நூற்றாண்டில் ஐரோப்பாவி லிருந்து இறக்குமதியாயிருக்கும் பயிற்றுமுறை, ஏற்கனவே நம் நூல்களில் சிறந்த முறையில் பேசப்பட்டுள்ளது என் பதை நன்கு உணர்ந்து தெளிவு பெறுவர். இப்படியாக இன்னும் எத்தனையோ சிறந்த கல்விக்கொள்கைகள் பழந் தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ளன.

# 17. காக்கை கற்பிக்கும் ஆக்க நிலை

**மலையத்தனைக் கருத்து**

நாம் நாடோறும் எளிதிற் காணும் காக்கைகளின் செயல் ஒன்றினைக்கொண்டு, வள்ளுவனார் மலையத் தனை பெரிய கருத்து ஒன்றை மக்கள் இனத்திற்கு அறிவுறுத்தியுள்ளார். அந்தக் கருத்தைக் கட்டளைக் கருத்தாகவே கற்பித்துக் கூறியுள்ளார் என்றும் கொள்ளலாம்.

இந்தியர்கள் தமியராய் - மறைவாக உண்ணுவர் என்பதாக ஒரு கருத்தை மேனாட்டார் கூறுவதாகச் சொல்வதுண்டு. மறைவிடத்திலன்றி வெளியிடத்தில் பலரும்

காணவும் உண்ணுபவர் எனப்படுபவரும் உண்ணும், உணவைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்து உண்ணுவ தில்லை.

**காக்கை கற்பிக்கும் பாடம்**

ஆனால், ஒரு காக்கையோ, ஓரிடத்தில் ஓர் இரையைக் காணின், மறைவாகத் தான் மட்டும் தனித்து உண்ணாமல், மற்ற காக்கைகளையும் கரைந்து (அழைத்து) உண்ணும். உண்டு கொண்டிருக்கும் போதும் கரைந்துகொண்டே உண்ணும்.

மக்கள் இவ்வாறு செய்வரா? இல்லையே! தாம் பெற்ற செல்வத்தை மறைக்காமல், காக்கையைப் போல், மற்றவர்க்கும் பகிர்ந்தளித்து நுகரும் மாந்தர்க்குச் செல்வம் குறைந்துகொண்டேயிருக்குமா-அல்லது-நிறைந்துகொண்டே யிருக்குமா? குறைந்துகொண்டே போவதுதான் இயற்கை. பாரி வள்ளல் கூட வாரி வாரி வழங்கியதால் ஒன்றும் இல்லாதவனாகிவிட்டான் என்பது ஒருசாரார் கருத்து. அளவின்றிப் பிறர்க்கு அளித்த மாந்தர் சிலர் வறிஞராகி விட்ட வரலாறு நேரில் அறிந்ததே.

**வள்ளுவரின் புரட்சி**

உண்மை யிவ்வாறிருக்க, வள்ளுவனார் புரட்சியான ஒரு புதுக்கருத்தைக் கூறியுள்ளார். கரவாது (மறைக்காமல்) இனத்தையும் கரைந்து உண்ணும் காக்கையைப் போல் நடந்து கொள்பவர்க்கே செல்வங்களும் உளவாகும் என்று அவர் அறிவித்துள்ளார். இக்கருத்துடைய குறளாவது:

"காக்கை கரவா கரைந்துண்ணும்: ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள"
(பொருட்பால் - சுற்றம் தழால்)

இக்கருத்து ஒருவகையில் நடைமுறைக்கு மாறாகத் தெரிகிறதல்லவா? அங்ஙனமாயின்; இக்கருத்து பொருந்துமாறு எங்ஙனம் என ஆராயவேண்டும்,

வரலாறு நடந்ததைக் கூறுவது; இலக்கியமோ நடந்ததை நடப்பதை அடிப்படையாகக் கொண்டு இனி நடக்க வேண்டியதைக் கூறுவது என்பது. "இலக்கியமும் வரலாறும்" என்பது தொடர்பான ஒரு கருத்தாகும்.

**கருதுகோள்**

திருக்குறள் ஓர் இலக்கியம். "நடந்ததை அடிப்படையாகக் கொண்டு நடக்க வேண்டியதைக் கூறுவது இலக்கியம்" என்ற கருதுகோளை (Formula) மேற்காட்டியுள்ள குறளோடு பொருத்திப் பார்க்குங்கால் அறியப்படும் உண்மையாவது:

பிறர்க்கு வழங்குபவரிடத்திலேயே செல்வம் இருக்கும் என்பது, வள்ளுவர் வெளிப்படையாகக் கூறியுள்ள கருத்து. இதற்குள்ளே மறைந்து பொதிந்து கிடக்கும் கருத்து ஒன்று உண்டு: காக்கையைப் போல் பரந்த உளப்பாங்கு உடையவரிடத்திலேயே - பலர்க்கும் பயன்படுபவரிடத்திலேயே செல்வம் இருக்க அரசு ஒப்புதல் அளிக்க (அனுமதிக்க) வேண்டும்; அவ்வாறு பயன்படாதவர் செல்வத்தைப் பறிமுதல் செய்யவேண்டும் என்பது அதன் உட்கருத்து. இஃது, அரசு மேற்கொள்ள வேண்டிய கட்டளைக் கருத்தாகும். "நடந்ததை-நடப்பதை அடிப்படையாகக் கொண்டு நடக்க வேண்டியதைக் கூறுவது இலக்கியம்" என்ற கருதுகோளின்படி, மேற்காட்டியுள்ள குறளின் பொருத்தப்பாடு இப்போது புலனாகலாம்.

ஆக்கம் யாரிடத்தில் நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதைக் காக்கை கற்பிக்கின்றதல்லவா?

**குறிப்பு:** – இந்தக் கருத்து, 1982ஆம் ஆண்டு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், "இலக்கியமும் வரலாறும்" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில், கட்டுரையாசிரியர் பேசிய கருத்துக்களுள் ஒன்றாகும்.

# 18 நிகழ்வது தழீஇய எச்ச உம்மை

காலம் மூவகைப்படும்; அவை: இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்பன - என இலக்கண நூலாசிரியர்கள் கூறியுள்ளனர். தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - வினையியலில்

"காலம் தாமே மூன்றென மொழிப" (2)
"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமும் குறிப் பொடும் கொள்ளும்
மெய்ந் நிலை யுடைய தோன்ற லாறே" (3)

எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**உரைகள்**

**தெய்வச் சிலையார்:-** மேற்சொல்லப்பட்ட காலத்தின் பாகுபாடாகிய இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என அம் முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும் பொருள் நிலைமையை உடைய தோன்று நெறிக்கண்.

**இளம்பூரணர்:-** காலம் மூன்றாவன இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பதூஉம், வெளிப்படக் காலம் விளங்காதன குறிப்பு வினை என்பதூஉம் பெற்றாம்.

(வ-று) உண்டான், உண்ணா நின்றான், உண்பான் எனவரும்.

இறப்பாவது, தொழிலது கழிவு; நிகழ்வாவது, தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை; எதிர்வாவது தொழில் பிறவாமை.

**சேனாவரையர்:-** இளம்பூரணர் கூறியுள்ள அனைத்தையும் கூறி, மேற்கொண்டு தொடர்ந்து சேனாவரையர் கூறியிருப்பது:- தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சியாகலின், அஃது ஒரு கணம் நிற்பதல்லது இரண்டு கணம் நில்லாமையின், நிகழ்ச்சி என்பதொன்று அதற்கு இல்லையாயினும், உண்டல்—தின்றல் எனப் பஃறொழில் (பல்தொழில்) தொகுதியை ஒரு தொழிலாகக் கோடலின் உண்ணா நின்றான் - வாரா நின்றான் என நிகழ்ச்சியும் உடைத்தாயிற்று என்பது.

இனி நன்னூல் சொல்லதிகாரம் - பொதுவியலில் காலம் பற்றிப் பவணந்தியார் கூறியுள்ள நூற்பா வருமாறு:

"இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் மூன்றே" (31)

**உரைகள்**

**மயிலைநாதர் உரை:-** போவதும் வருவதும் நிகழ்வதும் என்று காலம் மூவகைப்படும்.

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என முறையின் கூறாராயது, காலம் என ஒரு பொருள் இல்லை என்பாரும், நிகழ்காலம் ஒன்றுமே என்பாரும், இறந்ததூஉம் எதிர்வதூஉம் என இரண்டு என்பாரும், இறப்பு நிகழ்வு எதிர்வு என மூன்றென் பாருமான இப்பகுதியார், ஆசிரியர் அவருள் காலம் இல்லை என்பார், ஒரு பொருள் நிகழுமிடத்துப் பொருண்மைப் பேறல்லது காலம் என்று வேற்றுணர்வும் பிறவும் படுவதில்லை என்ப. இனி, காலம் ஒன்றென்பார், யாறொழுகும் - மலை நிற்கும் என உள்பொருள் ஒரு காலத்தானே சொல்லப்படும் பிறிதில்லையென்ப. இறப்பும் எதிர்வும் என இரண்டு

என்பார், கோல் ஓடுங்கால் சென்றதூஉம் செல்வதூஉம் அன்றே? அதனால் நிகழ்வு இல்லை என்ப. மூன்று என்பார்- நெருநல் - இன்று - நாளை எனவும், வந்தான் - வாரா நின்றான் - வருவான் எனவும், இவ்வாறு சொற்கள் மூன்று காலமும் காட்டுதலின் மூன்று என்ப. இவ்விகற்பமெல்லாம் அறிவித்தற்கு இவ்வாறு சூத்திரம் செய்தார் எனக் கொள்க.

ஏகாரத்தான், மூன்று என்பதே ஈண்டுப் பொருள் எனக் கொள்க.

> "உலக வழக்கமும் ஒரு முக் காலமும்
> நிலைபெற உணர்தரு முதுமறை நெறியான்"

என்றார் அகத்தியனார்,

**சங்கர நமச்சிவாயர்** (சிவஞான முனிவர்) **உரை:-** "பொருள்களின் தொழில் இறந்ததும் நிகழ்வதும் எதிர் வதும் ஆதலின், அவ்வாறு இயற்றும் காலமும் மூன்று கூற்றதாம் எனவும் உய்த்துணர்தலின், இங்ஙனம் உணராது காலம் இன்றெனவும் - நிகழ் காலம் ஒன்றுமே எனவும் - இறந்த காலம் எதிர்காலம் இரண்டுமே எனவும் கூறுவார் கூற்றை விலக்கிக் காலம் மூன்றே என்றார். இதன் திறம் இன்னும் விரித்துரைப்பிற் பெருகும். நிகழ் காலம் போல வெள்ளிடைப் பொருளன்றி, இறந்த காலம் எதிர்காலம் இரண்டும் மறை பொருளாய் நிற்றலின், இறப்பு நிகழ்வு என்னாது இறப்பு எதிர்வு என்றார்.

இதுகாறும், எடுத்துக் கொண்ட கட்டுரைக்கு அடிப்படை போடப்பட்டது; இனி, மேலே கட்டடம் எழுப்ப வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால், இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் காலம் மூவகைப்படும் என்னும் கொள்கை இலக்கண நூலாசிரியர்களாகிய அகத்தியனார், தொல்காப்பியனார்,

பவணந்தியார் ஆகியோர்க்கு உடன்பாடு என்பது தெரிய வருகிறது.

ஆனால், உரையாசிரியர்களின் உரைக் குறிப்புகளால் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. காலம் என ஒன்று இல்லை என்பது சிலர் கருத்து. காலம் என ஒன்று இருப்ப தாகக் கொள்ளினும் நிகழ் காலம் ஒன்று மட்டுமே உள்ளது என்பது வேறு சிலரின் கொள்கை! நிகழ் காலம் என்பது இல்லை—இறந்த காலம், எதிர் காலம் என்னும் இரண்டு மட்டுமே உள்ளன என்பது மற்றொரு சாராரின் கோட்பாடு. அந்த அந்தக் கொள்கைக்குக் கூறப்படும் காரணங்களையும் உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். நாம் அவற்றைச் சிறிது விவரமாகக் காண்பாம்.

நம் நாட்டு அறிஞர்களைப் போலவே, ஐன்ஸ்டின் போன்ற அயல் நாட்டு அறிஞர்களும் காலக் கோட்பாட்டில் மாறுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

காலம் என ஒன்று இல்லை என்னும் கருத்து எனக்கும் உடன்பாடே, அப்படியெனில், 'நிகழ்வது தழீஇய எச்ச உம்மை' என்னும் தலைப்பை எவ்வாறு கட்டுரைத் தலைப்பாய் எடுத்துக் கொண்டாய்? என்னும் வினா எழும். படிப்படியாக மேலே செல்வோம்.

இடம் என ஒரு பொருள் இல்லாதது போலவே, காலம் எனவும் ஒரு பொருள் இல்லை. இரண்டும் சூழ்நிலைகளால் வரையறுக்கப் படுகின்றன. வெட்ட வெளியில் வீடு கட்டிக் கொண்டு இது இன்னார் வீடு—அது அன்னார் வீடு எனச் சூழ்நிலையால் நாமே வகுத்துக் கொள்கிறோம். குறிப்பிட்ட சில எல்லைகளை அமைத்துக் கொண்டு, இது வரையும் இந்த மாவட்டம்—இந்த மாநிலம்—இந்த நாடு எனவும், இவற்றிற்கு அப்புறம் உள்ளவை அந்த மாவட்டம்—அந்த

மாநிலம் அந்த நாடு எனவும், சூழ்நிலைகளின் உதவியால் நாமாக முடிவு கட்டுகிறோம்.

இது போலவே, பூவுலகம் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு ஞாயிற்றையும் சுற்றும் சூழ் நிலையால், இரவு—பகல், காலை — மாலை, கோடைக் காலம் — மழைக் காலம் குளிர்காலம் என்றெல்லாம் பகுத்துக் கொள்கின்றோம். செய்த செய்கின்ற - செய்யப்போகிற நிகழ்ச்சிகளைக் கொண்டு இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படுத்திக் கொண்டோம். எனவே சூழ்நிலைகளின் துணையால் காலம் என ஒன்றை நாம் உண்டாக்கிக் கொண்டுள்ளோம்.

பொருள்களின் புடை பெயர்ச்சியாகிய தொழில் நடந்து கொண்டிருக்கும் போது, நடந்து விட்டதை இறந்த காலமாகவும் தொடர்ந்து நடக்க விருப்பதை எதிர் காலமாகவும் கொள்வதால், இடையில் நிகழ் காலம் என ஒன்று இருப்பதற்கு வாய்ப்பில்லை என்று கருதிச் சிலர் நிகழ்காலத்தை நீக்குகின்றனர். தொழில் நடந்து விட்டதோ இனி நடக்க இருப்பதோ நேருக்கு நேர் புலப்படாமல் மறை பொருளாக இருப்பதால், இறப்பு-எதிர்வு இல்லை. நேருக்கு நேர் தொழில் நடப்பது தெரிவதால் நிகழ்காலம் என்பது மட்டுமே உள்ளது என்பது நிகழ்காலக் கொள்கை யினரின் கூற்று.

இறப்பு எதிர்வு என்பன மறை பொருளாதலானும், நிகழ்வு ஒன்றே நேருக்குநேர் தெரிந்து கொண்டிருப்ப தாலும், நன்னூல் ஆசிரியர், இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற வரிசையில் சொல்லாமல், இறப்பு எதிர்வு நிகழ்வு என வரிசைப்படுத்தியுள்ளார் எனச் சங்கரநமச்சிவாயர் கூறியிருப்பதிலிருந்து அறியக்கூடியது, நிகழ்காலம் என ஒன்று உண்டு என்னும் உறுதிப்பாடே! நிகழ்காலம்

என்பதற்கு நாம் ஒரு வகை விளக்கம் சொல்வோமே! இறந்த காலமும் நிகழ்காலமும் சந்திக்கும் நேரம் நிகழ்காலம் ஆகும்—எதிர் காலத்திலிருந்து இறந்த காலம் பிரியும் நேரம் நிகழ்காலம் ஆகும்—என்று சொல்லலாமே! நிகழ்வு உண்டு என்ற அடிப்படையுடன் நிகழ்வது தழீஇய எச்சஉம்மைக்கு வருவோம்:

'உம்' என்பதன் பொருள்கள்:

தொல்காப்பியர் தம் தொல்காப்பியம்- சொல்லதிகாரம் இடையியலில்

"எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று
அப்பால் எட்டே உம்மைச் சொல்லே" (1)

என, 'உம்' என்னும் இடைச்சொல்லுக்கு எட்டுப் பொருள்கள் இருப்பதாக அறிவித்துள்ளார்.

இந்த எட்டனுள் நமக்கு வேண்டிய 'எச்சம்' என்னும் பொருளை மட்டும் எடுத்துக் கொள்வோம். இதற்கு உரையாசிரியர்கள் தரும் எடுத்துக்காட்டு விளக்கம் வருமாறு:

இளம்பூரணர்: சாத்தனும் வந்தான் என்றால், அவனையன்றிப் பிறரையும் வரவு (பிறர் வரவையும்) விளக்குமாகலின், அஃது எச்ச உம்மை.

சேனாவரையர்: சாத்தனும் வந்தான் என்னும் உம்மை கொற்றனும் வந்தான் என்னும் எச்சங் குறித்து நிற்றலின் எச்ச உம்மை. கொற்றவனும் வந்தான் என்பதூஉம், இறந்த சாத்தன் வரவாகிய எச்சங்குறித்து நிற்றலின் எச்சஉம்மை.

தெய்வச்சிலையார்: எச்சம் இறந்தது தழீஇயதும் எதிரது தழீஇயதும் என இருவகைப்படும். சாத்தனும்

வந்தான் என்றவழி, முன்னொருவன் வரவு குறித்தானாயின் இறந்தது தழீஇயதாம்: பின்னொருவன் வரவு குறித்தானாயின் எதிரது தழீஇயதாம். ஏனையொழிந்த பொருளைக் குறித்தமையான் எச்சமாயிற்று.

பவணந்தியார் தம் நன்னூல்-சொல்லதிகாரம் இடையியலில்

"எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை
தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே" (6)

என 'உம்' என்னும் இடைச்சொல்லுக்கு எட்டு பொருள் கூறியுள்ளார், 'உம்' என்பதே 'உம்மை' எனப்படுகிறது.

இந்த எட்டனுள் ஈண்டைக்கு வேண்டிய 'எச்சம்' என்பதற்கு மட்டும் உரையாசிரியர்கள் கூறியிருப்பனவற்றைக் காண்போம்.

மயிலைநாதர்:- சாத்தனும் வந்தான் என்பது எச்சம்; அவனையேயன்றிப் பிறரையும் வரவு (பிறர் வரவையும்) விளக்கலின்,

சங்கர நமச்சிவாயர்:- சாத்தனும் வந்தான் என்பது கொற்றன் வந்ததன்றி என பொருள்படின் இறந்தது தழீஇய எச்ச உம்மை. கொற்றனும் வருவான் எனப் பொருள்படின் எதிரது தழீஇய எச்ச உம்மை.

காண்டிகை உரை:- எச்சம் இறந்தது தழீஇய எச்சமும் எதிரது தழீஇய எச்சமும் இருவகைப்படும். சாத்தனும் வந்தான் - இங்கே, கொற்றன் வந்ததன்றி, என்னும் பொருளைத் தந்தால் இறந்தது தழீஇய எச்சம்; இனிக் கொற்றனும் வருவான் என்னும் பொருளைத் தந்தால் எதிரது தழீஇய எச்சம்.

தொல்காப்பிய உரையாசிரியர்கட்குள் தெய்வச்சிலையாரும், நன்னூல் உரையாசியர்கட்குள் சங்கர நமச்சிவாயர்

காண்டிகை உரைகாரர் ஆகியோருமே, இறந்தது தழீஇய எச்சம், எதிரது தழீஇய எச்சம் என்னும் எச்சப் பெயர்களை அறிமுகம் செய்துள்ளனர். மற்ற உரையாசிரியர்கள் இதுபற்றிப் பேச்சு மூச்சு காட்டவில்லை.

முன்பெல்லாம் கூட்டங்களில் பேச்சாளர்களேயன்றித் தலைவர் ஒருவர் இருப்பார். இப்போது முன்னிலை வகிப்பவர் என ஒருவர் முளைத்துக் கொண்டுள்ளார். வாழ்த்துரையாளரும் வரவழைக்கப்படுகிறார். இம்மூவருள், முதலில் முன்னிலையாளர் வந்து விட்டார். முதன்மையாகத் தலைவரை எதிர்நோக்கியுள்ளனர். தலைவரும் வந்து விட்டார். உடனே, கழகத்தார்கள் தலைவரும் வந்து விட்டார் எனக் கூறுகின்றனர். இங்கே தலைவரும் என்பதில் உள்ள உம், முன்னால் நடந்துவிட்ட (இறந்து விட்ட) முன்னிலையாளரின் வருகையைத் தழுவுகிறது. எனவே, தலைவரும் என்பதில் உள்ள 'உம்' இறந்தது தழீஇய (தழுவிய) எச்ச உம்மை எனப்படுகிறது.

வாழ்த்துரையாளர் வராத நிலையில், தலைவர் வந்து விட்டாராயின், தலைவரும் வந்து விட்டார் என்று கூறின், தலைவரும் என்பதில் உள்ள உம், இன்னும் வாழ்த்துபவர் வரவில்லையே என எதிர்காலத்தில் வர இருக்கிற வாழ்த்துரையாளரைத் தழுவுவதால் எதிரது தழீஇய எச்ச உம்மை எனப்படுகிறது.

தலைவரும் வந்து விட்டார் என்பதில் உள்ள 'உம்' இரண்டையும் தழுவுவதாகவும் கூறலாம். அதாவது-முதலில் முன்னிலையாளர் வந்து விட்டார் என்ற இறந்த காலத்தையும், இன்னும் வாழ்த்துபவர் வரவில்லை என்ற எதிர்கால நிகழ்ச்சியையும் தழுவுவதால், இந்த உம்மை, இறந்ததும் எதிரதும் தழுவிய எச்ச உம்மை என்றும் கூறலாம்,

முன்னிலையாளரும் தலைவரும் வாழ்த்துபவரும் மற்றும் வரவேண்டியவர்களும் வந்து விட்டனர் என்பதில், எது எது எதை எதைத் தழுவுகிறது என்று வினவின், எதுவும் எதையும் தழுவவில்லை-இங்கே உம்மைகளை எண்ணிக்கைப் பொருளில் உள்ள எண் உம்மையாகக் கொள்ளவேண்டும், ஏனெனில், இங்கே எதுவும் எச்சமாக குறைவாக இல்லை. தலைவரும் வந்து விட்டார் என்பதிலோ, 'உம்' தன்னில் தானே கருத்து முடியாமல், இன்னும் யரோ வந்து விட்டவரையோ-இன்னும் யாரோ வரவேண்டியவரையும் குறிக்கும் குறைச் சொல்லாக-எச்சச் சொல்லாக இருப்பதால் எச்ச உம்மை எனப் பெயர் வழங்கப்படுகிறது.

**நிகழ்வது தழுவுவது**

இலக்கண உரையாசிரியர்கள், இறந்தது தழீஇய எச்ச உம்மை, எதிரது தழீஇய எச்ச உம்மை என்னும் இரண்டைத் தவிர, நிகழ்காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு 'நிகழ்வது தழீ இய எச்ச உம்மை, என ஒன்று இருப்பதாக எங்கும் கூறவேயில்லை. அதை நாம் கண்டு பிடித்தாக வேண்டும்.

'ஒரே நேரத்தில் முருகனும் கூவினான்-கண்ணனும் கூவினான்' என்றால், முருகனும் கண்ணனும், என்பவற்றில் உள்ள உம்மைகளை நிகழ்வது தழீஇய எச்ச உம்மைகள் எனலாம். முருகனும் என்ற உம்மை கண்ணனும் கூவியதையும், கண்ணனும் என்ற உம்மை முருகனும் கூவியதையும் தழுவுகின்றன. ஒருவர் முன்னேயும் மற்றொருவர் பின்னேயும் கூவினால், இறந்தது-எதிரது எனலாம். இருவரின் கூவலும் ஒரே நேரத்தில் நிகழ்ந்ததால், இந்த உம்மைகள் நிகழ்வது தழுவியனவாக உள்ளன.

ஒரே நேரத்தில் முருகனும் கண்ணனும் கூவினர் என்றால், இந்த உம்மைகள் எதையும் தழுவாததால் எண்ணும்மைகள் எனப்படும். முருகனும் கூவினான்-கண்ணனும் கூவினான் என இரண்டு தொடர்களாகக் கூறினால் தான் நிகழ்வது தழுவியதாகும். இந்தப் புதுக் கண்டு பிடிப்பாகிய நிகழ்வது தழீஇய எச்ச உம்மைக்கு இலக்கிய ஆட்சி ஒன்று காண்போம்.

கம்பர் ஒரு காதல் காட்சியைப் படைத்துக் காண்பித்துள்ளார். சீதை மாளிகையின் மேல் தளத்தில் தோழியருடன் நின்றுகொண்டிருக்கிறாள். அந்த மாளிகைத் தெருவில் இராமன் விசுவாமித்திரருடனும் இலக்குவனுடனும் சென்று கொண்டிருக்கிறான்.

தற்செயலாக இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொள்கின்றனர், நோக்கம் ஆரம்பக் கட்டத்திலிருந்து ஆழ்ந்த கட்டத்திற்குப் போய்விட்டது. சீதையின் இரு கண்களாகிய இரு வேல்கள் இராமனின் தோள்களில் ஆழ்ந்து பதிந்தன. இராமன் கண்களோ சீதையின் மார்பகத்தில் தைத்துக் கொண்டன.

கயிறு இழுப்புப் போட்டியில் இருவர் இரு பக்கலில் நின்றுகொண்டு கயிற்றை இழுப்பர், ஒத்த வலிமையினராயின் அவரவரும் அவரவர் இடத்திலேயே இருப்பர். ஒருவன் மற்றவனினும் மெலியவனாயின், அவன் வலியவன் பக்கம் இழுக்கப்பட்டு விடுவான், இதுதான் இயற்கை நிலை. ஆனால் சீதையும் இராமனும், நோக்கு என்னும் கயிற்றால் உள்ளம் என்னும் கைகொண்டு ஒருவரை ஒருவர் இழுத்தனர். ஆனால் இயற்கைக்கு மாறாக இருவருமே ஒருவரிடத்தை மற்றவர் அடைந்தனர். அதாவது, சீதையின் இதயத்தை இராமனும் இராமனது இதயத்தைச் சீதையுமாக மாறி அடைந்தனர். முதல் காட்சியிலேயே முற்றிய நிலைக்குப் போய் விட்டது என்னவோ போல் இருக்கிறது.

திருவள்ளுவர் காதல் காட்சியை மிகவும் நாகரிகமாகப் படைத்துக் காட்டியுள்ளார். காதலன் நோக்கும்போது காதலி பார்க்காதது போல் தலை குனிந்து தரையைப் பார்க்கிறாளாம். காதலன் பார்க்காதபோது காதலி புன்முறுவலுடன் நிமிர்ந்து அவனைப் பார்க்கின்றாளாம். இரவில் பேருந்துகள் எதிர் எதிராக இயங்கும்போது, ஒரு வண்டி இயக்குநர் விளக்குப் போட்டால் எதிரே உள்ளவர் விளக்கை நிறுத்தி விடுவார். அவர் விளக்கு போட்டால் இவர் நிறுத்தி விடுவார். இது போன்றல்லவா இந்தக் காதலர்களின் காட்சி இருக்கிறது.

''யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.''

என்பது திருக்குறள்.

திருவள்ளுவர் காதலர்களின் நோக்கத்தை இவ்வளவு நாகரிகமாகக் கூறியிருக்க, கம்பரோ மிகவும் பச்சையாகக் கூறியிருக்கிறார். இதற்கும் தக்க காரணம் உள்ளது. திருவள்ளுவரின் காதலர்கள் புதுமுகங்கள். கம்பரின் காதலர்களோ மிகவும் பழைய முகங்கள்.

''கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமா?''

என்று கம்பர் பாடி இராமன்-சீதை காதலை நாகரிகப் படுத்தியுள்ளார்.

திருவள்ளுவரின் காதலர்களோ ஒருவர் பார்க்கும்போது மற்றொருவர் பார்க்கவில்லை. கம்பரின் காதலர்களோ ஒரே நேரத்தில் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொள்கின்றனர். இருவர் கண்களும் ஒன்றை ஒன்று கவ்வி உண்ணப் பார்க்கின்றனவாம். நோக்கின் வாயிலாக நிலை தடுமாறி இருவர் உள்ளமும் ஒன்றும்படியாக இராமனும் நோக்கினானாம்; அதே நேரத்தில் சீதையும் நோக்கினாளாம்;

"எண்ணரு நலத்தினாள் இணையள் நின்றுழி,
கண்ணொடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."
(பாலகாண்டம்—மிதிலைக் காட்சிப் படலம்—35)

இந்தப் பாடலில், 'அண்ணலும் நோக்கினான்' என்பதில் உள்ள உம்மை, சீதையும் நோக்கினாள் என்பதைத் தழுவுகிறது. 'அவளும் நோக்கினாள்' என்பதில் உள்ள உம்மை, இராமனும் (அண்ணலும்) நோக்கினான் என்பதைத் தழுவுகிறது. இவ்விரண்டனுள் முன்னால் நடந்த இறந்தது எது? — பின்னால் நடந்த எதிரது எது? இல்லை-இறந்ததோ எதிரதோ இல்லவேயில்லை. இரண்டும் ஒரே நேரத்தில் நடந்ததால் அண்ணலும் — அவளும் என்ற உம்மைகள் நிகழ்வது தழீஇய எச்ச உம்மைகளாம்.

சிலர், 'இடமுன்-கால முன்' என்னும் கரடி விட்டு இந்தக் கருத்தைக் குலைக்கப் பார்க்கலாம். இங்கே எந்த முன்னும் எந்தப் பின்னும் இல்லை. இரண்டும் ஒரே நேரத்தில் நடந்ததால் இவற்றை 'நிகழ்வது தழீஇய எச்ச உம்மை' என்று கூசாது கூறலாம். இந்தக் கட்டுரையின் பொருள் இஃதே!

## 19. ஆசானின் அன்புரை - நன்னூல் நவில்வது

மாணாக்கர் சிலர் மது அருந்திவிட்டு வகுப்புக்கு வரும் இந்தக் காலத்தில், வகுப்பின் கடைசி வரிசையில் சிலர் அமர்ந்து கொண்டு புகை பிடித்துக் கொண்டும் சீட்டாடிக் கொண்டும் பொழுது போக்கும் இந்தக் காலத்தில், சிலர் ஆசிரியரைக் கேலிப் பொருளாக எண்ணி எள்ளி இகழ்ந்து

திட்டிப்பேசி நகையாடும் இந்தக் காலத்தில், சிலர் தேர்வு எழுதும் போது பார்த்து எழுதுவதற்கு உரிமை உண்டு என்று உரிமை கொண்டாடுவது - கண்டிக்கும் ஆசிரியர்கட்கு அடி - உதை கொடுப்பதும் வழக்கமாகிக் கொண்டுவரும் இந்தக் காலத்தில், இன்னும் சொல்லொணா முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் ஆசிரியர்களைப் பற்றியும் மாணாக்கர்களைப் பற்றியும் எண்ணிப்பார்க்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

அந்தக் காலத்தில், ஆசிரியர்களின் கை மேலோங்கி யிருந்ததும், மாணாக்கர்கள் அடிமைகள்போல் அடக்கி யாளப்பட்டதும் உண்மைதான்! இந்த நிலை பிற்காலத்தில் கண்டிக்கப்பட்டது. குழந்தை உளவியல் (Child Psychology) கல்வி உளவியல் (Educational Psychology) சமூக இயல் (Socialogy) ஆகிய துறைகளும் வளர்ந்துள்ள இந்தக் காலத்தில், ஆசிரியர்கள் மாணாக்கர்களை செல்லக் குழந்தைகள் போல நடத்த வேண்டும் என்பதுபோல் ஒருவகைப் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதும் உண்மைதான்! கூர்ந்து நோக்குங்கால், அந்தக் காலத்தில் பின்பற்றப்பட்ட அடிமை முறையும் சரியன்று - இந்தக் காலத்தில் தரப்பட வேண்டியதாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவு மீறிய செல்லமும் சரியன்று - என்று கூறத் தோன்றுகிறது. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பவணந்தி என்பவரால் இயற்றப்பெற்ற 'நன்னூல் என்னும் நல்ல நூலை அணுகலாம்.

நன்னூலில் அன்புள்ள நல்லாசிரியர்க்கு உரிய இலக்கணமாகக் கூறப்பட்டிருப்பதாவது:-

அருளும், கடவுள் நம்பிக்கையும், உயர்ந்த குறிக்கோளும், மேன்மையும், பல கலைகளையும் தெளிவாகப் பயின்றுள்ள அறிவுத் திறனும் (Subject Knowledge), கருத்துக்களை

நன்கு எடுத்து விளக்கும் வல்லமையும் (Teaching Ability) நிலமும் மலையும்போல் தக்க பயனளிக்கும் நிலைத்த மாண்பும், தராசு போன்ற நடுநிலைமையும், மலர் போன்ற இனிய முகமலர்ச்சியும், பரந்த உலகியல் அறிவும், உயர் குணமும் இன்னபிற நற்பண்புகளும் உடையவர்களே நூல் கற்பிப்பதற்குரிய நல்லாசிரியர்கள் ஆவார்கள் என்று நன்னூல் நவில்கிறது; இதனை,

"குலன் அருள்தெய்வம் கொள்கை மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை,
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்,
உலகியல் அறிவோடு, உயர்குணம், இனையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே,"

என்னும் நன்னூல் பாவால் அறியலாம்.

மேலும் ஆசிரியர் பணிக்கு அருகர் அல்லாதவர் பற்றியும் நன்னூல் நவில்கிறது; அது வருமாறு:-

"மொழிகுணம் இன்மையும், இழிகுண இயல்பும்,
அழுக்காறு அவாவஞ்சம் அச்ச மாடலும்,
கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோர் இலர் ஆசிரியர் ஆகுதலே."

என்பது பா.

இனி, ஆசிரியர் பாடம் கற்பிக்க வேண்டிய முறை பற்றி நன்னூல் நவில்வதைக் காண்போம்.

**பாடம் கற்பிக்கும் முறை**

ஆசிரியர் பயிற்றும் முறையில் (Method of Teaching) வல்லவராய் இருத்தல் வேண்டும். உணவை நன்றாகச் சமைக்கவில்லையெனில், உண்பவர் எவ்வளவு பசியாயிருப் பினும் எவ்வாறு சுவைத்து உண்ண முடியும்? எனவே,

'கூலிக்கு மாரடித்தல்' என்றபடியில்லாமல், ஆசிரியர்கள் பொறுப்புடனும் சுவையுடனும் கற்பிக்க வேண்டும். எவ்வெப் பாடத்தை எவ்வெந் நேரத்தில் கற்பிக்க வேண்டுமோ - அவ்வப் பாடத்தை அவ்வந் நேரத்தில் கற்பிக்க வேண்டும். பாடங் கற்பிக்கும் வகுப்பறை நல்ல சூழ்நிலை யுடையதா யிருக்க வேண்டும். ஆசிரியர் தக்க இடத்தில் இருந்து தெய்வம் வாழ்த்திப் பாடம் தொடங்க வேண்டும். கற்பிக்க வேண்டிய பாடத்தை முன்கூட்டித் தயாரித்து உள்ளத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். விரையாமல், மாணாக்கர் அனைவரும் பின்பற்றித் தொடரும் அளவில் கற்பித்தல் நடைபெற வேண்டும். ஆசிரியர் எவர்மேலும் சினங் கொள்ளாமல், விருப்பத்துடன் - அன்புடன் - முகம் மலர்ந்து கற்பிக்க வேண்டும். எவ்வாறு கற்பித்தால், கேட்கும் மாணவர்கள் புரிந்து கொள்வர், என்பதை அறிந்து அவர் களின் உள்ளத்தில் புரிந்து பதியும்படி கற்பித்தல் வேண்டும். மந்தமான மாணாக்கர் சிலர் இருப்பர்; அவர்கள் மேலும் மற்ற எவர்பாலும் மன மாற்றமோ - வெறுப்போ கொள்ளாமல் அன்புடன் நூல் கற்பிக்க வேண்டும். இந்தக் கருத்துக்கள் அடங்கிய நன்னூல் பா வருமாறு:

**பாடம் கற்பிக்கும் முறை**

"ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பிமுக மலர்ந்து
கொள்வோன் கொள்கை அறிந்துஅவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப."

என்பது நூற்பா. இந்த நூற்பாவிலும் 'வெகுளான் விரும்பி முகமலர்ந்து' என்னும் பொருள் பொதிந்த தொடரில்,

ஆசானின் உரை அன்புரையாக இருக்க வேண்டும் என்னும் கருத்து அடங்கியுள்ளமை காண்க.

எனவே, ஆசிரியர்கள் கடனுக்கு வேலை செய்யாமல் உண்மையாகவே பாடுபட்டு உழைக்க வேண்டும். ஆசிரியர்கள் சிலர் எப்போது மணியடிக்கும் என்றே எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். "மாட்டை மேய்த்தான், கோலைப் போட்டான்" என்பது இன்னோர்க்கேப் பொருந்தும். சில சமயங்களில், தலைமை (அதிகாரி) அலுவலாளர்க்கு அஞ்சி அப்படியும் இப்படியுமாக அசைவதும் உண்டு. இவ்வித ஆசிரியர்களால் மாணவ உலகம் சிறிதும் நன்மை பெறாது. உணவுக் கடையில் பணத்திற்கு உணவு போடும் சிலர்போல் கல்வி கற்பிக்கக் கூடாது; பெற்ற தாய் பிள்ளைக்கு உணவு அளிப்பதுபோல் பரிவுடன் - அன்புடன் கற்பிக்க வேண்டும். இனி மாணவர் பக்கம் சிறிது கவனத்தைத் திருப்புவோம்:

## கற்கும் முறை

### பிள்ளைகளின் குறும்பு

ஆசிரியரிடம் கல்வி பயிலும் பிள்ளைகள் கற்கும் முறையினையும் நன்குணர வேண்டும். யாருக்கோ வந்த விருந்தென மேலோடு இருந்துவிடக் கூடாது. பிள்ளைகள் சிலர், மாணவரின் நன்மைக்காகப் பள்ளிக்கூடம் நடக்கின்றது என்பதை அறவே மறந்து விடுகின்றனர்; மாணவராலேயே பள்ளிக்கூடத்தினர் பிழைப்பதாக எண்ணுகின்றனர்; எண்ணி இடக்கும் செய்கின்றனர்; சில சமயங்களில் பள்ளிக்கூடத்தை ஒரு நாடகக் கொட்டகையாகவே கருதி விடுகின்றனர்; வகுப்பை நாடக மேடையாகவே கருதி விடுகின்றனர்; ஆசிரியர்களை நடிகர்களாகவும் எண்ணுகின்றனர்; நாடகக் கொட்டகையில் கலவரம் செய்யும் சில குறும்பர்களைப்

போல் வகுப்பிலும் கலவரம் செய்யத் தொடங்கிவிடுகின்றனர், என்னே ஆசிரியர் – மாணவர்தம் அன்பு நிலை! ஆனால் ஒரு சில மாணவரிடமே இக்குறை காணப்படுகின்றது. இத்தீய பழக்கம் அறவே கூடாது. பண்டைக் காலத்தில், ஆசிரியரிடத்தில் மாணவர்கள் அகங்கனிந்து அன்பு ததும்ப நடந்து கொண்டது போலவே, இக்காலத்திலும் நடந்துகொள்ள வேண்டும். அதுவே சிறந்த நய நாகரிகமாகும்.

### அடக்கமும் வழிபாடும்

மாணவர் சிலர், ஆசிரியர்க்கு அடங்காமல் நடப்பதைப் பெருமையென்றெண்ணிச் சிறுமை உறுகின்றனர். பெரியோர்க்கு அடங்கி நடப்பதே பெருமையாகும். அடங்காமையால் வரும் கேடுகள் பல,

> அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
> ஆரிருள் உய்த்து விடும்

என்பது குறளன்றோ?

### வழிபாடு

ஆசிரியர்க்கு அடங்கி அவரை வழிபட்டுக் கற்க வேண்டும். குளிர் காய்பவன் நெருப்பை மிக நெருங்கின் சுடும்; மிகவும் எட்டிச் சென்றாலும் குளிரும்; ஆதலின் நடுத்தரமான இடத்திலிருந்தே குளிர் காய்வான். அதுபோலவே, மாணவரும் ஆசிரியரும் அளவு மீறி நெருங்கிப் பழகினால் மதிப்புக் கெடும்; அளவு மீறிப் பிரிந்து நின்றாலும் அன்பு கெடும்; ஆதலின் நடுத்தரமாகவே பழக வேண்டும். ஆனால் நிழல்போல் விடாது அவரை அடுத்திருக்க வேண்டும். ஆசிரியர் எவ்வெவ்விதத்தில் மகிழ்வாரோ அவ்வவ்விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். இங்ஙனம் நெறி தவறாது நிற்கும் நிலைக்குத்தான் வழிபாடு என்று பெயராகும்.

இதனை நன்னூலில் உள்ள

"அழலின் நீங்கான், அணுகான், அஞ்சி
நிழலின் நீங்கான், நிறைந்த நெஞ்சமொடு
எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே."

என்னும் நூற்பாவால் உணரலாம்.

**பாடம் கேட்கும் முறை**

நன்னூலில் பாடம் கேட்க வேண்டிய முறை அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சில மாணவர்கள் நினைத்த நேரத்தில் பள்ளிக்கூடம் செல்வார்கள்; ஆசிரியர் கட்டளையில்லாமலேயே வாயில் வந்ததை உளறிக் கொட்டத் தொடங்கி விடுவார்கள். ஆசிரியர் கற்பிக்கும் பாடங்கள் அவர்தம் செவித்துளையில் சிறிதும் நுழையா. "எல்லாம் நுழைந்தன. இன்னும் வால் மட்டும்தான் நுழையவில்லை" என்று ஒருவர் கூறியதற்கிணங்க, மனம் வேறு எங்கெங்கேயோ சென்றிருக்கும், தப்பித் தவறிக் காதில் விழுந்த இரண்டொரு கருத்தையும் அங்கேயே மறந்து விடுவார்கள். ஆசிரியர் போகலாம் என விடையளிப்பதற்குள்ளாகவே எழுந்து ஓடி வந்து விடுவார்கள்.

இத்தகைய பிள்ளைகளும் உலகில் இருந்தே தீர்கின்றனர். இங்ஙனம் நடத்தலாகாது. குறிப்பிட்ட நேரத்தில் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும்; சென்றதும் ஆசிரியர்க்கு வணக்கம் செலுத்த வேண்டும்; அவர் சொல்லிய பின் இருக்கையில் அமர வேண்டும்; அவர் கட்டளையிட்ட பிறகே ஏதேனும் ஒப்பிப்பதையோ, படிப்பதையோ செய்ய வேண்டும். வேறெங்கும் மனத்தைச் செலுத்தாது ஓவியம் போன்றிருந்து பாடங்களை ஏற்றுக் கேட்க வேண்டும். கோடைக் காலத்தில் உச்சிவேளையில் மிகுந்த தாகம்

கொண்டவன் மிக்க ஆர்வத்தோடு தண்ணீர் பருகுவது போல, ஆசிரியர் சொல்லும் பாடமாகிய உணவைச் செவியே வாயாகவும், நெஞ்சே வயிறாகவும் கொண்டு கேட்டு உண்ண வேண்டும். கேட்ட பாடங்களை மறக்க விடாமல் உள்ளத்தில் பதியவைக்க வேண்டும். ஆசிரியர் 'போ' என விடையளித்த பின்பே வீட்டுக்குப் புறப்பட வேண்டும். மாணவர்களின் தேவையறிந்து கல்வியுணவை ஊட்ட வேண்டும். இக் கருத்துக்களை, நன்னூலிலுள்ள,

> "கோடல் மரபே கூறுங் காலைப்
> பொழுதொடு சென்று, வழிபடல் முனியான்,
> குணத்தொடு பழகி, யவன் குறிப்பிற் சார்ந்து,
> இருவென இருந்து, சொல்லெனச் சொல்லிப்
> பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்,
> சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்,
> செவிவாய் ஆக நெஞ்சுகளன் ஆகக்
> கேட்டவை கேட்டு, அவைவிடாது உளத்தமைத்துப்,
> போவெனப் போதல், என்மனார் புலவர்"

என்னும் நூற்பாவால் நன்குணரலாம். இவற்றையெல்லாம் பழங்கால (கர்நாடக்) விதிகள் என்று தள்ளிவிட முடியாது. இக்காலத்திலும் மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறை விதிகள் பெரும்பாலன இவற்றைப் போன்றே பள்ளிக்கூட அறிக்கைகளில் வெளியிடப்பட்டிருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். ஆதலின் மாணவர்கள் இம் முறையில் பாடங்கேட்டுப் பயன் பெறுவார்களாக. இவ்விதம் கற்கும் கல்வியே விரைவிலும் வேரூன்றிப் பதியும்.

**பின்னின்றும் கற்க**

பொதுவாக உலகத்தில் மானத்தோடு வாழ விரும்புபவர்கள் ஒருவர்க்குப் பின்னின்று கையேந்த மாட்டார்கள்; அந்நிலைக்குப் பெரிதும் நாணுவார்கள். ஆனால் கல்வியைப்

பொறுத்த மட்டிலும் அப்படியிருக்க முடியாது. இருப்பதும் அறிவுடைமையாகாது. ஒன்றும் இல்லாத பிச்சைக்காரன் ஒருவன் எல்லாம் உடைய செல்வர் முன்பு குழைந்தும் பணிந்தும் நின்று ஒன்றைக் கேட்டு வாங்குவான். அது போலவே மாணவரும் ஆசிரியர் முன்பு பணிந்து நின்று பாடங்கேட்க வேண்டும். அவரே சிறந்தவராவர். மேலும் ஆசிரியர்க்குப் பொருளும் கொடுத்து உதவலாம். ஆனால், நன்மை ஒன்றும் செய்யாவிடினும் தீமையாவது செய்யாமல் இருப்பது நல்லது. மற்றும், தாம் ஒன்றும் இல்லாத ஏழையாய் இருப்பின் பிச்சையெடுத்தாயினும் கற்க வேண்டும். இங்ஙனமாக ஒருவரின் பின்னிற்கும் நிலைக்குச் சிறிதும் வெட்கப்படக் கூடாது. கல்வியானது அச்சிறுமை களை யெல்லாம் மறைத்துப் பின்னால் பெரிதும் விளக்கந் தந்து பெருமைப் படுத்தும். இக்கருத்துக்களை,

> "உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
> கடையரே கல்லா தவர்"

என்னும் திருக்குறளானும்,

> "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
> பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்னும் புறநானூற்றானும்,

> "கற்கை நன்றே கற்கை நன்றே
> பிச்சைப் புகினும் கற்கைநன்றே"

என்னும் வெற்றிவேட்கையானும் உணரலாம்.

திருக்குறளும் புறநானூறும் வெற்றி வேற்கையும் கூறும் இந்தக் கருத்தினை, பவணந்தியார், மேற்காட்டியுள்ள தமது நன்னூல் பாவில், 'வழிபடல் முனியான்' என்னும் தொடரால் வெளிப்படுத்தியுள்ளார். அஃதாவது, ஆசிரியரை வழிபடுவதில் வெறுப்புக் கொள்ளாதவனாய் - ஆசிரியரை வணங்குவதற்கு வெட்கப்படாதவனாய் மாணாக்கன் இருக்க வேண்டும்

என்பது இதன் கருத்தாம். மற்றும், நாம் இவரை வழிபடுவதா - இவரை வணங்குவதா - இவருக்கு அடங்கி நடப்பதா - இவரது கட்டளைக்குப் பணிவதா - குலத்தாலும் செல்வத்தாலும் வேறு பிற தகுதிகளாலும் நாம் ஆசிரியரை விட உயர்ந்தவராயிற்றே - என்னும் மான உணர்வாகிய உயர்வு மனப்பான்மை (Superiority Complex) உடைய மாணாக்கனுக்குக் கல்வி கற்பிக்க முடியாது என்னும் கருத்தைப் பவணந்தியார் நன்னூலில்,

> "தளி மடி மானி காமி கள்வன் ...
> படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே"

என்னும் நூற்பாவால் அறிவித்துப் போந்துளார். இந் நூற்பாவிலுள்ள 'மானி' என்பது ஈண்டு கருதற்பாற்று. எனவே, மாணாக்கர்கள் மேற்கூறிய ஒழுங்கு நெறியில் நின்று ஆசானின் அன்பைப் பெற்றுக் கல்வி கற்க வேண்டும். இனி, ஒரு நூலில் முழுப் புலமை பெறுவது எப்படி என்பதை நன்னூல் வழி நின்று காண்பாம்.

## கல்விக் குழந்தை

இங்குக் கல்வியை ஒரு குழந்தையாகவும் அதனைக் கற்கும் மாணவனைத் தாயாகவும் ஒப்பிட்டுக் கூறினால் அது சாலவும் பொருந்தும். அவ்வாறே, நல்லாற்றூர் சிவப்பிரகாச அடிகளார், தாமியற்றிய பிரபுலிங்கலீலை என்னும் நூலுள் ஓரிடத்தில், மிகவும் தெளிவாக எடுத்து இயம்பிப் போந்துள்ளார். வனவசை மாநகரத்தில், மமகாரன் என்னும் அரசனும் மோகினி என்னும் அரசியும் அரசாண்டிருந்தார்கள். அவர்கட்கு நீண்ட நாளாகப் பிள்ளையே பிறக்கவில்லை. கடிய நோன்பு கிடந்தார்கள். அதன் பயனாய்க் குழந்தை ஒன்று பிறந்தது. குழந்தை யென்றால் அரண்மனைக் குழந்தை அல்லவா? அதிலும் நீண்ட நாளாக இல்லாமல் பின்பு பிறந்த குழந்தை

அல்லவா? ஆதலின், அக்குழந்தைக்குச் செய்யப்படும் வளர்ப்பு முறைகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? மிகவும் கண்ணும் கருத்துமாக வளர்த்தாள் தாயாகிய அரசி. அவள் வளர்த்ததற்கு இங்கு உவமையொன்று கொடுக்கப்பட்டுள்ளது. உலகில் கல்வி கற்க விரும்பிய முதல் மாணவன் ஒருவன் எங்ஙனம் தன் பாடங்களைப் போற்றி உணர்ந்து கற்பானோ, அங்ஙனமே அரசியும் தன் குழந்தையை அருமை பெருமையுடன் வளர்த்தார் என்னும் கருத்தில்,

> ''படியில் கல்வி விரும்பினோன் பாடம் போற்றும்
> அதுபோல''

என அவ்வுவமை அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, தாய் ஒருத்தி கண் விழித்தல், மருந்துண்ணல் முதலிய துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு தன் குழந்தையினை வளர்த்துக் காப்பது போலவே, மாணவர்களும் பல விதத்திலும் முயன்று கல்வியாம் குழந்தையை வளர்ச்சி பெறச் செய்யவேண்டும். அதுதான் உணர்ந்து கற்றதாகக் கருதப்பட்டுச் சுவை மிகுதியும் பயக்கும். அங்ஙனம் எவ்வெவ்விதத்தில் கல்விக் குழந்தையை மாணவத் தாய்மார்கள் வளர்க்க வேண்டும் என்பதை நன்னூல் வழி நின்று ஆராய்வோம்:

**புலமை பெறுவது எப்படி ?**

கற்கத் தொடங்கிய மாணவன் ஒருவன், முற்கூறியுள்ள முறைப்படியே ஆசிரியரிடம் பாடங்கேட்டுக் கொள்ள வேண்டும்; அதனோடு விட்டுவிடக் கூடாது; திரும்பவும் வீட்டில் வந்து படிக்க வேண்டும்; கேட்ட நூல்களின் கருத்தை உலக வழக்கத்தோடு ஒத்திட்டு உண்மை உணர வேண்டும்; போற்ற வேண்டியவைகளைப் போற்றி வைத்துக் கொள்ள வேண்டும் - மனப்பாடம் செய்து கொள்ள

வேண்டும். அவற்றுள் விளங்காமல் இருப்பதையும் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். மறுநாள் ஆசிரியரை அடைந்து அவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். மாணவன் ஒரு நூலை ஒரு முறை பாடங் கேட்டதோடு விடக் கூடாது. எங்ஙனமாயினும் முயன்று மற்றொருமுறை கேட்பது நலம். அங்ஙனம் இருமுறை கேட்டால், அந்நூலில் பெரிதும் பிழை படாமல் புலமை உள்ளவன் ஆவான்; மூன்றாவது முறையும் பாடங் கேட்பானேயாயின், தானே பிறர்க்குப் பாடஞ் சொல்லக்கூடிய முறைமையினையும் உணர்ந்து கொள்வான் என்பது உறுதி.

**கால்பங்குப் புலமை**

ஆனால், ஆசிரியர் சொல்லும் பாடங்களை எத்துணை முறை ஊக்கத்தோடு கேட்பினும், அந்நூல்களில் கால்பங்குப் புலமைத்திறம் பெற்றவனாகவே கருதப்படுவான்.

**அரைபங்குப் புலமை**

ஆசிரியரிடம் பன்முறை பாடங் கேட்டதோடு அமைந்து விடக்கூடாது. தன்னைப் போன்ற மற்றைய மாணவர்களோடு சேர்ந்து பழகியும் படிக்க வேண்டும். தனக்குத் தெரியாதனவற்றை அவர்களை வினாவித் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் தெரியாமல் வினாவுவனவற்றையும்தான் அவர்கட்குத் தெரிவிக்க வேண்டும். இங்ஙனம் ஒருவர்க்கொருவர் ஆராய்ந்து கற்றுப் பரிமாறிக் கொள்ளவேண்டும். இம்முறையில் ஒரு கால் பங்குப் புலமை உண்டாகும். ஆகவே, இதுகாறும் கூறியவற்றால் மாணவன் அரைப் பங்குப் புலமையைப் பெற்றுவிடுவான் என்பது உறுதி.

**முழுப் புலமை**

பின்பு, தானே ஓர் ஆசிரியனாக அமர்ந்து மாணவர் பலர்க்குப் பன்முறை பாடங் கற்பிக்க வேண்டும், இம்

முறையில் எஞ்சியுள்ள அரைப் பங்குப் புலமையும் நிரம்ப, முழுப் புலமையும் நிறைவுறும்.

''நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசான் சார்ந்து அவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாகக் கொளினே மடம்நனி இகக்கும்''

''ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலில் பிழைபாடு இலனே''

''முக்கால் கேட்பின் முறையறிந்து உரைக்கும்''

''ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
கால்கூறு அல்லது பற்றலன் ஆகும்''

''அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்''

என்னும் நன்னூற் பாக்களால் நன்குணரலாம்.

எனவே, இம்முறைகளால் வளர்க்கப்படும் கல்விக் குழந்தைதான் மேன்மேலும் வளர்ந்து விளக்கம் பெறும்; முழுப் பயனையும் கொடுப்பதும் ஆகும்.

**அன்றும் இன்றும்**

இற்றைக்கு எழுநூறு ஆண்டுகட்கு முன்பே – அஃதாவது – கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே நன்னூல் நவின்றுள்ள பாடம் பயிற்றும் முறைகள் பல, இந்தக் காலத்தில் புதியன போல அருமை பெருமையுடன் கூறப்படும் பயிற்று முறைகள் பலவற்றோடு ஒத்திருப்பதை ஈண்டு ஒரு சிறிது ஆய்வாம்;

**ஆசிரியர் கற்பிக்கும் முறை**

ஆசிரியர் பாடம் கற்பிக்குமுன் பாடத்தைப் பற்றிய ஆயத்தத்தைச் (தயாரிப்பைச்) சிறப்பாகச் செய்துகொள்ள வேண்டும் என்று பாட முன்னாயத்தத்தின் இன்றியமை யாமையை வலியுறுத்துகின்றனர். இதை ஆங்கிலத்தில் 'Preparation - Lesson Plan' என்ற பெயர்களால் இன்று வழங்குகின்றனர். முன்பும் இப்படித்தான் பாட ஆயத்தத் திற்குப் பின் பாடம் கற்பிக்கப்பட்டது. எதைக் கற்பிக்க வேண்டுமோ - அதை முன்கூட்டியே உள்ளத்தில் அமைத்து வைத்துக் கொள்ளல் வேண்டும் - என்பதை "உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து" என நன்னூல் நூற்பா நவில்கின்றது.

இந்தக் காலத்தில் 'டைம் டேபிள்' (Time Table) என்னும் பெயரில் கால அட்டவணையும், பாட அட்டவணை யும் அமைக்கப் படுவதை அறியலாம். முற்பகலில் எந்தப் பாடம் நடத்தலாம் — பிற்பகலில் எந்தப் பாடம் நடத்த லாம் — தொடக்கத்திலும் முடிவிலும் எவ்வெப் பாடம் நடத்தலாம் — எந்தப் பாடத்திற்குப் பின் எந்தப் பாடம் நடத்தலாம் — விடுமுறைக்குப் பின் தொடக்கத்தில் எந்தப் பாடம் நடத்தலாம் — என்று கால அட்டவணை அமைப்பது ஒரு கலைத் திறனாக மதிக்கப்படுகிறது.

மற்றும், பள்ளிக் கட்டடமும், வகுப்பறையும் நல்ல சூழ்நிலையில் இருந்தால்தான், பளளிக்கூடம் நடத்த அரசு ஒப்புதல் அளிக்கிறது. எனவே, இடமும் தக்கதா யிருக்க வேண்டும் என இன்று வலியுறுத்தப் படுகின்றது. இந்தக் கருத்துகளை எல்லாம் குறிப்பாய் உள்ளடக்கி,

"காலமும் இடமும் வாலிதின் நோக்கி"

என நன்னூல் அறிவிக்கிறது. மற்றும், இந்தக் காலத்திலும்,

காலையில் வகுப்பு தொடங்குவதற்கு முன் 'பிரேயர்' (Prayer) என்னும் பெயரில் கடவுள் வழிபாடு நடத்தப் படுகிறது. இதைத்தான், நன்னூல், 'தெய்வம் வாழ்த்தி' என்னும் தொடரால் சுட்டுகிறது. மாணவன் உள்ளத்திற் கேற்பக் கற்பிக்க வேண்டும்; அவன் நிலைமையறிந்து கற்பிக்க வேண்டும்; திணித்தல் முறை கூடாது என்று இக் காலப் பயிற்றுமுறை கூறுகின்றது. அதையே 'கொள்வோன் கொள் வகையறிந்து அவன் உளங்கொள நூல் கொடுத்தல்' என்று நன்னூலும் வற்புறுத்துகின்றது. மேலும் ஆசிரிய ருக்குத் தான் சொல்லிக் கொடுக்கப் போகும் பாடத்தில் தெளிவும் திறமையும் இருக்க வேண்டும் என்று இக்காலப் பயிற்று முறை வல்லுநர்கள் கூறுவதைக் "கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும்" இருக்க வேண்டும் என்று நன்னூலும் ஏற்றுக் கொள்கின்றது: மேலும் 'ஆசிரியன் விரையான் வெகுளான், விரும்பி முக மலர்ந்து' பாடஞ் சொல்ல வேண்டுமென்றும், 'நிறை கோலைப்போல் நடுவு நிலைமையும், மலரைப்போல் முக மலர்ச்சியும்' உடையவ னாக இருக்க வேண்டும் என்றும் நன்னூல் கூறுகின்றது. இவற்றைக் காட்டிலும் என்ன பயிற்று முறை இன்னும் வேண்டிக் கிடக்கின்றது?

எனவே, இக்காலத்தில் 'புதியவை' என்னும் பெயரால் அறிமுகப் படுத்தப்படும் பயிற்று முறைகள் பலவற்றை, அக்காலத்து அன்பு ஆசான்களும் அறிந்திருந்தனர் — நடை முறையில் கடைப்பிடித்தும் வந்தனர் — என்பது தெளிவு. எந்தக் காலத்திலும் சரி — ஆசான் கற்பிக்கும் உரை, அன்பை அடித்தளமாகக் கொண்டு அதன்மேல் எழுப்பப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாத தாகும்.

# 20. மெய்ம்மயக்கம்

## மெய்ம்மயக்கம்

1.1. மெய்ம்மயக்கம் பற்றித் தொல்காப்பியரும் நன்னூலாரும் கூறியிருப்பனவற்றையும் உரையாசிரியர்களின் உரை விளக்கங்களையும் படித்துப் பார்த்த எனக்கு, மெய்ம்மயக்கத்துடன் மன மயக்கமும் ஏற்பட்டுவிட்டது. காரணம், வழக்கம்போல், உரையாசிரியர்கள் ஒருவரோ டொருவர் 'சண்டை, போட்டுக் கொண்டிருப்பதுதான். நச்சினார்க்கினியர் பிறரை மறுக்கின்றார்; பிறர் இவரை மறுக்கின்றனர்.

## 1.2. இடைநிலை மயக்கம்

மொழியிலக்கண நூலில், மெய்ம்மயக்கம் என்ற ஒன்றைப்பற்றி எழுதித்தான் தீர வேண்டுமா என்ன? இது அவ்வளவு இன்றியமையாததா என்று சிறிது எண்ணிப் பார்த்தேன். சொற்களின் இடையிலே எந்த எந்த மெய் எழுத்துகள் இயைந்து இணைந்து வருகின்றன. எந்த எந்த மெய்யெழுத்துகள் இணையா - என்று கூறுவதுதான் மெய்ம்மயக்கம் என்பது. எது எது எப்படி எப்படி இருக்க வேண்டும் என நீதி நூல்கள்போல் கட்டளைகளை இலக்கண நூல்கள் இடாவிடினும், வரலாற்று நூல்கள் போல், எப்படி எப்படி உள்ளன எனக் கூறியிருப்பதைக் கொண்டு, மொழியை இப்படி இப்படிக் கையாளவேண்டும் எனக் குறிப்பாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. எல்லாம் இலக்கியம் கண்டதற்கு இலக்கணமாக உள்ளன.

சொற்கட்கு இடையில் உள்ள எழுத்துகளின் இயைபு களை - மயக்கங்களைக் கூறுகின்ற இப்பகுதிக்கு 'இடை

நிலை மயக்கம்' என்னும் ஒருவகைப் பெயர் வழங்கப் பட்டுள்ளது. இப்பெயர் தரப்பட்டிருப்பதின் பொருத்தம் என்ன?

மொழிக்கு முதலில் வரக்கூடிய முதல்நிலை எழுத்து களும், மொழிக்கு இறுதியில் வரக்கூடிய இறுதிநிலை எழுத்து களும் இன்னின்னவை என்று கூறியிருப்பதால் மொழிக்கு இடையே இயைந்து - மயங்கி வரக்கூடிய எழுத்துக்களைப் பற்றியும் கூற வேண்டியதாயிற்று. இந்த மயக்கம் வடமொழியில் 'சையோகம்' என்று கூறப்படுகிறது.

## 2. தொல்காப்பியம்

இனித் தொல்காப்பியர் இடைநிலை மெய்ம்மயக்கம் பற்றி எழுத்ததிகாரம் நூன்மரபு என்னும் பகுதியில் கூறியுள்ள நூற்பாக்கள் வருமாறு:

''அம்மூவாறும்வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயங்கு உடனிலை தெரியுங்காலை'' (22)

''டறலள என்னும் புள்ளி முன்னர்
கசப என்னும் மூவெழுத் துரிய'' (23)

''அவற்றுள், லளஃகான் முன்னர் யவவும்தோன்றும்''
(24)

''ஙஞண நமன எனும் புள்ளி முன்னர்த்
தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே'' (25)

''அவற்றுள் ணனஃகான் முன்னர்க்
கசஞபம்யவ ஏழும் உரிய'' (26)

''ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே'' (27),

''மஃகான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்'' (28)

"யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்" (29),
"மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன்தாம் வரூஉம் ரழவலங் கடையே" (30)

என்பது தொல்காப்பிய நூற்பாக்கள்.

## 2.1 நச்சினார்க்கினியர் உரை

இந்த நூற்பாக்களுக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர், இந்த இயைபுகள்—மயக்கங்கள் ஒரு சொல்லுக்குள் இருக்கவேண்டும் எனக் கருதுகிறார். — அவர் விரும்புவது சரிதான். ஆனால், அதற்கேற்ற இலக்கியங்கள்-அதாவது-எடுத்துக்காட்டுகள் கிடைக்கவில்லையே. இருசொற் புணர்ச்சிக்கண் உள்ள இயைபுகளை இவர் இடைநிலை மெய்ம்மயக்கமாக எடுத்துக் கொள்ளவில்லை. காரணம், பின்னர், இருமொழிப் புணர்ச்சியிலக்கணம், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பவற்றில் கூறப்பட்டிருப்பதாகும். இவர் இவ்வாறு கூறியிருப்பினும், ஒரே நிலையில் நில்லாமல் முழுகி முழுகி எழுந்திருக்கிறார். இவருடைய உரைப்பகுதிகள் சில காணலாம்:

"டறலள என்னும் புள்ளி முன்னர்
கசப என்னும் மூவெழுத்து உரிய" (நூன்மரபு-23)

என்னும் நூற்பாவிற்குப் பின்வருமாறு எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார்:

"கட்க, கட்சி—கட்ப எனவும் கற்க-முயற்சி—கற்ப எனவும், செல்க—வல்சி—செல்ப எனவும் கொள்க. நீள்சினை-கொள்ப எனவும் தனிமெய் பிறமெய்யோடு மயங்கியவாறு காண்க. கட்சிறார், கற்சிறார் என்பன இருமொழிப் புணர்ச்சியாகலின் ஈண்டைக் காகா" — என்பது எடுத்துக்காட்டுப் பகுதி. இருசொற் புணர்ச்சியில் உள்ள மெய்ம் மயக்கத்தை ஒத்துக்கொள்ளாத நச்சினார்க்கினியர், 'நீள்

சினை' என்னும் ஓர் எடுத்துக்காட்டை வேறு வழியின்றித் தந்துள்ளமை வியப்பாகும். இனி அடுத்த நூற்பாவிற்குச் செல்லலாம்.

''அவற்றுள், ளஃகான் முன்னர் யவவும் தோன்றும்'' என்னும் நூற்பாவிற்குப் பின்வருமாறு எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார்:-

''கொல்யானை, செல்வம், வெள்யாறு, கள்வன் என வரும். இவற்றுள் 'கொல்யானை' என வினைத்தொகையும் 'வெள்யாறு' எனப் பண்புத்தொகையும் நிலை மொழி வருமொழி செய்வதற்கு இயையாமையின் இவ்வாசிரியர் இவற்றை ஒரு மொழியாகக் கொள்வர் என்றுணர்க. இக் கருத்தானே மேலும் வினைத் தொகையும் பண்புத் தொகை யும் ஒருமொழியாகக் கொண்டு உதாரணம் காட்டுவதும் அன்றி, இவ்வாசிரியர் நூல் செய்கின்ற காலத்து வினைத் தொகைக் கண்ணும் பண்புத் தொகைக் கண்ணுமன்றி ஒரு மொழிக் கண்ணே மயங்குவன உளவாதலின், அவற்றைக் கண்டு இலக்கணம் கூறினார். அவை பின்னர் இறந்தன என்று ஒழித்து அல்லனவற்றிற்கு உதாரணம் காட்டாமல் போதலே நன்றென்று கூறலும் ஒன்று''- என்பது நச்சினார்க்கினியரின் உரைப்பகுதி.

குருடர்க்குக் குருடர் கும்மிருட் டதனில் வழிகாட்டல் போல் வாய்ந்துள்ளது நச்சினார்க்கினியரின் கூற்று. தொல் காப்பியரே எடுத்துக்காட்டுகளும் தந்திருப்பின் தொல்லை யிராது. வினைத்தொகையையும் பண்புத்தொகையையும் தொல்காப்பியர் ஒரு சொல்லாகக் கருதினாராம். அதனால் தாமும் இவற்றை ஒரு சொல்லாகக் கருதுகிறாராம். மற்றும், இருசொற்கள் போல் காட்சி தரும் இவ்விரு தொகைகளே யன்றி, தொல்காப்பியர் காலத்தில் முற்றிலும் ஒரு சொல்லி லேயே இந்த மயக்கம் அமைந்த தனிச்சொற்கள் இருந்தன-

அவை பின்னர் மறைந்து போயின- என்று கூறித் தனிச் சொற்கட்குப் பிறப்பு தந்து பிறகு இறப்பும் தந்து விடுகிறார். அடுத்து —

"ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே" (27)

என்னும் நூற்பாவின் உரையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"இங்ஙனம் ஆசிரியர் சூத்திரம் செய்தலின், அக்காலத்து ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உளவென்று பெற்றாம். அவை இக்காலத்து இறந்தன"- என்பது உரைப்பகுதி. மற்றும், வேறு உரையாசிரியர் உரிஞ்யாது- பொருந்யாது - திரும்யாது - தெவ்யாது என்று இருமொழி எடுத்துக்காட்டுகள் தந்திருப்பது பொருந்தாது என மறுத்துள்ளார். மற்ற நூற்பாக்களின் உரைகளிலும் நச்சினார்க்கினியர் இதே பாதையைப் பின்பற்றிச் சென்றுள்ளார். இவரால் மறுக்கப்பட்டவர் இளம்பூரணரே. பின்வருமாறு இளம்பூரணர் கூறியுள்ளார்:-

## 2. இளம்பூரணர் உரை

"மெய்ம்மயக்கம் ஒரு மொழிக்கும் புணர்மொழிக்கும் பொதுவாகலின், மேற்கூறும் புணர்மொழி செய்கையெல்லாம் தலையாய அறிவினாரை நோக்க ஒருவாற்றால் கூறியவாறாயிற்று."

"டறலள என்னும் புள்ளி முன்னர்
கசப என்னும் மூவெழுத் துரிய"

என்னும் தொடக்க நூற்பாவின் உரை விளக்கத்துள் மேலுள்ளவாறு இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார்.

## 3.1 நன்னூல்

இனி மெய்ம் மயக்கம் பற்றிய நன்னூல் எழுத்தியலில் உள்ள நூற்பாக்களைக் காண்போம்:

"கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்
மெய்ம்மயக்கு உடனிலை ரழவொழித் தீரெட்டு
ஆகுமிவ் விருபான் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே" (55)

"ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே" (56)

"ஞநமுன் தம்மினம் யகரமொ டாகும்" (57)

"டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்" (58)

"ணனமுன் னினங் கசஞபமய வவ்வரும்" (59)

"மம்முன் பயவ மயங்கும் என்ப" (60)

"யரழ முன்னர் மொழிமுதல் மெய்வரும்" (61)

"லளமுன் கசபவய ஒன்றும்மே" (62)

"ரழ அல்லன தம்முன் தாம் உடனிலையும்" (63)

"யரழ வொற்றின் முன் கசதபஙஞநம
ஈரொற்றாம் ரழத் தனிக்குறி லணையா" (64)

"லளமெய் திரிந்த னணமுன் மகரம்
நைந்தீ ரொற்றாம் செய்யு ளுள்ளே" (65)

"தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்
இம்முறை மாறியும் இயலும் என்ப" (66)

என்பன பவணந்தியாரின் நன்னூல் நூற்பாக்களாம். இவற்றிற்கு உரையும் எடுத்துக்காட்டும் தரின் விரியும். இருப்பினும், "கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்" என்னும் நூற்பாவின் உரை விளக்கத்தில் பின்வருமாறு சங்கர நமச்சிவாயர் குறிப்பிட்டுள்ளார்.

## 2. சங்கர நமச்சிவாயர் உரை

"இவ்விடை நிலையை ஒருமொழி தொடர்மொழி என்னும் இரண்டினுங் கொள்ளாது ஒருமொழிக்கே எனக் கொள்வாரும் உளர். எவ்விடத்துவரினும், இரண்டெழுத்து இணங்கிப் பொருந்தும். பொருந்து வாயை இடைநிலை

யென்றோதலானும், இணங்காதனவரின் விகாரப்படுத லானும், அது நூற்கருத்தன் றென்க!! என்பது உரைப்பகுதி. சிவஞான முனிவரின் கருத்தும் இன்னதே. பிரயோக விவேகநூல் விளக்கமும் இஃதே. இங்கே மறுக்கப்பட் டிருப்பவர் உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியரே.

## 3.3 எதிர்பார்ப்பு

நச்சினார்க்கினியர் எதிர்பார்ப்பது சரிதான். அதாவது, முதல்நிலை எழுத்துகள் - இறுதிநிலை எழுத்துகள் எனப் படுவன ஒரே சொல்லில் இருப்பனவாகும். அதுபோலவே, இடைநிலை எழுத்துகளின் இயைபும் ஒரு சொல்லுக்குள்ளே இருப்பதாகவே கொள்வதே பொருத்தமாகும். ஆனால், தொல்காப்பியர் கருத்து நச்சினார்க்கினியர் எதிர்பார்ப்பது போல் இருப்பதாகத் தோன்றவில்லை. தொல்காப்பியர் கருத்தும் நச்சினார்க்கினியரின் எதிர்பார்ப்பாக இருக்கு மாயின் போதிய எடுத்துக்காட்டுகள் தரமுடியவில்லையே. தொல்காப்பியர் காலத்தில் இருந்த எண்ணற்ற சொற்கள் பிற்காலத்தில் வழக்கற்றுவிட்டன என்று நம்புவதற்கில்லை. சில வழக்கறலாம். பல வழக்கறா.

## 4. ஓர் உண்மை

நச்சினார்க்கினியர் ஓர் உண்மையை உள்ளத்தில் எண்ணிப் பார்க்காததால் மற்றவர்களோடு மாறுபடுகிறார். அந்த உண்மையாவது:

இடைநிலை மயக்கம் என்பது, ஒரு சொல்லுக் குள்ளேயோ அல்லது இரு சொற்களின் இயைபுக்குள்ளேயோ, மெய்களின் இயைபு - மயக்கம் எப்படி அமைந்துள்ளது என்னும் நிலைமையைக் கூறுவது.

ஆனால், – உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றிய லுகரப் புணரியல் என்பன, இருசொற்கள் இயையும்போது,

இரண்டிற்கும் இடையே இல்லாத ஓர் எழுத்து புதிதாய்த் தோன்றல், இருக்கும் ஓர் எழுத்து மற்றோரெழுத்தாகத் திரிதல், இருக்கும் ஓர் எழுத்து கெட்டு நீங்கல் ஆகிய தோன்றல்-திரிதல் கெடுதல் என்னும் விகாரங்கள் பற்றிக் கூறுவன.

இடைநிலை மயக்கம் இன்னதன்று. விகாரமானதோ அல்லது இயற்கையாக உள்ளதோ - ஆங்கு எவ்வெவ் வெழுத்துகள் இணையக் கூடியவை என்ற முடிவை ஓரளவு கூறுவது.

எனவே, இருசொற் புணர்ச்சிநிலை வேறு - இடைநிலை மெய்ம்மயக்கம் வேறு என்ற உண்மையை நச்சர் உள்ளத்தில் எண்ணியிருந்தால் மற்றவரோடு மாறுபடார்; இவ்வளவு குழப்பத்திற்கு இடம் இருந்திராது.

## 5. எடுத்துக்காட்டுகள்

மெய்ம்மயக்கம் பற்றிச் சுருக்கமாக, எடுத்துக்காட்டு களுடன் ஒரு செய்தி கூறி முடித்துக் கொள்ளலாம்:

மெய்ம்மயக்கத்தில் வேற்றுநிலை மயக்கம், உடனிலை மயக்கம் என இருவகைகள் கூறப்பட்டுள்ளன. மங்கல், அஞ்சல், நட்பு, பண்பு, ஓய்வு, ஆர்வம், செல்வம், சூழ்வு, தெள்கு, கற்பனை, தென்றல் - போன்றவற்றின் இடையில் உள்ள மெய்கள், பக்கத்தில் வேறு மெய்களோடு மயங்கி யுள்ளன. இது வேற்றுநிலை மயக்கம்.

பக்கம், எங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பட்டம், பண்ணல், வெந்நீர், கத்தி, கப்பல், பொம்மை. வெய்யர். வெல்லம், தெவ்வர், பள்ளம், கொற்றவை, தென்னை — போன்ற வற்றின் இடையில் உள்ள மெய்கள் தம் மெய்களுடனேயே இயைந்துள்ளன. இது உடனிலை மயக்கமாகும். ஒற்றள பெடையில் எந்த மெய்யும் இரண்டாக இருக்கும் என்பது அறிந்த செய்தியே.

எல்லா நூற்பாக்கட்கும் உரிய எடுத்துக்காட்டுகளைத் தொல்காப்பிய உரையிலும், நன்னூல் உரையிலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இங்கே நேரமும் உடல் நலமும் போதவில்லை.

## 6. புதிய இலக்கண ஆக்கம்

இக்கட்டுரையில் இதுகாறும் அறிமுகப்படுத்தியுள்ள முதனிலை, இடைநிலை, இறுதிநிலை என்பவற்றின் அடிப் படையில் புதிய இலக்கண ஆக்கம் என்னும் முயற்சிக்கு உதவக்கூடிய கூறு என்னவென்று காண்போம்:

தெனாலிராமன் கறுப்பு நாயை வெள்ளை நாயாக்கச் செய்த முயற்சிபோல, பழைய இலக்கணத்திற்கு மாற்றாகப் புதிய இலக்கணம் படைக்கும் முயற்சியின் பேரால் ஒன்று கிடக்க ஒன்று செய்துவிடுவோமோ என்ற அச்சத்துடனேயே இதைத் தெரிவிக்கிறேன்.

### 6.1 மாற்று வடிவங்கள்

ஸ, ஷ. ஜ, ஹ, க்ஷ என்ற கிரந்த எழுத்துகட்கும் fa என்னும் உரோமன் எழுத்துக்கும் ஈடான ஒலிப்புடைய எழுத்துகள் தமிழில் இல்லை. சில இடங்களில் ஸ என்பதற்கு 'ய்ச', ஷ வுக்கு 'ழ்ச', ஜ வுக்கு 'ஞ்ச' (பெருஞ்சோதி) ஹவுக்கு 'ஃஅ', க்ஷ வுக்கு 'ட்ச', fa வுக்கு 'ஃப' என்பனவற்றை மாற்றாகப் போடலாம் எனினும், எல்லா இடங்கட்கும் இது ஒத்து வராது. இருப்பினும், இந்தக் கிரந்த - ரோமன் எழுத்துகளைத் தமிழில் ஏற்றுக்கொள்ளத் தயங்கினால், ஸ்டாலின் - ரூஸ்வெல்ட் - புஷ் முதலிய பிறநாட்டார் பெயர் களையோ அல்லது சில பிறமொழி வழங்கும் இடங்களையோ தமிழில் சரியாகக் குறிப்பிடமுடியாது.

கம்பர் லக்ஷ்மணனை இலக்குவன் எனவும் விபீஷணனை வீடணன் எனவும் குறிப்பிட்டிருப்பதுபோல, இப்பெயர்களை

இசுடாலின், ரூசுவெல்ட்டு, புழ்சு என்று குறிப்பிடலாம். ஆனால் இதில் சிக்கல் உள்ளது. 'ஸ்' என்பதோ அல்லது எந்தத் தனிமெய்யெழுத்துமே தமிழில் மொழிக்கு முதலில் வராது. ரூஸ்வெல்ட் என்பதில் 'ரூ' மொழிக்கு முதலிலும் 'ட்' மொழிக்கு இறுதியிலும் வராது. அதனால் கம்பர் செப்பனிட்டுத் தந்துள்ள பாதையில் வழிநடக்க வேண்டும்.

அறிவியல் வளர்ந்து வரும் இந்தக் காலத்தில், இந்தச் செப்பிடுவித்தையெல்லாம் முற்றிலும் ஒத்து வராது. எனவே, தாழ்வு மனப்பான்மை கொள்ளாமல் ஸ, ஷ, ஜ, ஹ, க்ஷ, fa போன்ற எழுத்துகட்கு இணையாக - அதே ஒலிப்பில் புதிய வரிவடிவங்களைப் படைத்துக் கொள்ளலாம். மொழிக்கு முதலிலும் இடையிலும், இறுதியிலும் வரும் எழுத்துகள் - வரா எழுத்துகள் என்னும் - வழியில் நின்று ஓரளவு விலக்கு அளிக்க வேண்டும்.

சமசுகிருத மொழியில் க, ச, ட, த, ப,- என்னும் ஐந்திலும் நான்கு நான்கு எழுத்துகள் உள்ளன. இவற்றைத் தமிழ் தவிர்த்த இந்திய மொழிகள் ஏற்றுக் கொண்டுள்ள தாகத் தெரிகிறது. இந்தத் (தண்டையான) தலையெழுத்து தமிழுக்கு-தமிழர்க்கு வேண்டியதில்லை. தமிழ்ச் சொற்கள் இனிமையாக ஒலிக்கக் கூடியவை.

சுருங்கக்கூறின், ஸ், ஷ, ஜ, ஹ, க்ஷ, fa - இன்ன சில எழுத்துகட்கு எப்படியாவது மாற்று ஏற்பாடு செய்ய வேண்டியது நம் கடமையாகும். மற்றும் மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரக்கூடாத எழுத்து களும் வரலாம் என விதிவிலக்கு அளிக்கலாம் என்பதை நன்னூலாரே தொடங்கி வைத்து நமக்குக் கற்றுத் தந்து சென்றுள்ளார். அஃதாவது:-

**7. விதிவிலக்கு**

"தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்
இம்முறை மாறியும் இயலும் என்ப" (66)

என்பது நன்னூல் எழுத்தியல் நூற்பா. இதற்கு மயிலை நாதர் எழுதியுள்ள உரை வருமாறு.

“என், முதனிலை இடைநிலைகட்கு உரியதோர் வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எழுத்துக்கள் தம்பெயர்களை மொழியு மிடத்து ஈண்டுச் சொன்ன முறையன்றி, முதலாகாதன முதலாகியும் (இடையில்) மயங்காதன மயங்கியும் வரப்பெறும். எ-று.

வ.று. அவற்றுள், லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்” (தொல் - நூன்மரபு. 24) என்பதனுள், ளகர மெய்ம்முன்னர் லகரம் மயங்கினவாறும், லகரம் மொழிக்கு முதலானவாறுங் காண்க”.

என்பது உரைப்பகுதி லளஃகான் முன்னர் என்பதில் உள்ள லள என்பவற்றை ல்ள் எனக் கொள்ளவேண்டும். மொழிக்கு முதலில் வராத லகரம், இங்கே ‘லளஃகான்’ என மொழிக்கு முதலில் வந்திருக்கிறதாம். லளஃகான் என்பதின் இடையிலுள்ள ‘ள’ (ள்) என்பது ‘ல’ (ல்) என்பதுடன் மயங்கி உள்ளதாம். இனி இந்நூற்பாவுக்குச் சங்கரநமச்சிவாயர் வகுத்துள்ள உரைப்பகுதி வருமாறு.

“எனின் மொழி முதல் ஈறு இடை நிலைகட்கு
ஆவதோர் புறனடை யுணர்-ற்று.

இ-ள். எழுத்துக்கள் தம் பெயர்களை மொழிந்து நிலை மொழி வழிமொழியாகப் புணர்க்குமிடத்து, எல்லா மொழி முதற்கும், இங்ஙனம் விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா எழுத்தும் முதலாம்; (இடைநிலை) மயக்கத்திற்கு இங்ஙனம் விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா எழுத்தும் மயங்கும் என்று சொல்லுவர் புலவர். எ-று.

இங்ஙனம் எல்லா வெழுத்தும் தனித்தனி அதற்கதுவே முதலாக வருமெனவே, ஈற்றிற்கு விதித்தனவும் விலக்கியனவு

மாகிய எல்லா எழுத்தும் தனித்தனி அதற்கதுவே ஈறாக வருமெனச் சொல்லாதே அருத்தாபத்தியான் அமைதலின், ஈறுமென மிகைபடக் கூறாதொழிந்தார்.

உ-ம் "அவற்றுள், லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்" என்புழி, லகரம் முதலாகியும், கூனிறுதி ளகர வொற்றோடு மயங்கியும் நின்றது. 'கெப்' பெரிது என்புழி எகரம் மெய்யோடு ஈறாய் நின்றது. பிறவும் வரையறை யின்றி வருதல் காண்க" - என்பது உரைப்பகுதி.

எல்லா எழுத்துகளும் முதலில் வரும் என்றதனால், எல்லா எழுத்துகளும் ஈற்றிலும் வரும் என்ற செய்திதானே தெரிய வருகிறது என்பதாகச் சங்கர நமச்சிவாயர் கூறி யுள்ளார். மொழிக்கு ஈற்றில் வராத 'எ' என்பதும் 'க்' என்பதோடு சேர்ந்து 'கெ பெரிது' எனச் சொல்லின் ஈற்றில் வரும் என்பதாக எடுத்துக்காட்டும் தந்துள்ளார்.

## 8. புத்திலக்கணக்கூறு

எனவே, இப்போது அறிவியல் – உலகியல் வளர்ந்து வரும் சூழ்நிலைக்கு ஏற்ப, பழைய இலக்கண விதிகள் சிலவற்றிற்குத் தேவையான இடங்களில் விலக்கு அளித்துப் புதிய விதிகள் சேர்த்துக் கொள்ளலாம். இந்தக் கருத்தைப் புதிய இலக்கண அமைப்பின் ஒரு கூறாகக் கொள்ளல் வேண்டும்.

**கருத்து வழங்கிய கருவூலங்கள் (ஆசிரியர் பெயருடன்),**

தொல்காப்பியம் - தொல்காப்பியர்

உரைகள் - நச்சினார்க்கினியர் & இளம்பூரணர்.

நன்னூல் – பவணந்திமுனிவர்

உரைகள் – மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர் சிவஞானமுனிவர்

பிரயோக விவேகம் – சுப்பிரமணிய தீட்சிதர்

# 21. நன்னூலும் நடைமுறை இலக்கணமும்

## இலக்கணம் என்றால் என்ன?

இயற்கையாக - தானாக ஓடும் ஆறு, கண்டபடி ஓடி எதையும் சிதைக்காதவாறும் அதன் நீரும் வீணாகாத வாறும், இடைக் காலத்தில் மக்களால் செயற்கையாக இரு பக்கமும் கட்டப்பட்ட கரைகள் போன்றதாகும் மொழிக்கு இலக்கணம். இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் என்பது அறிந்த செய்தி. மக்களின் பேச்சு வழக்குதான் இலக்கிய மாகும். அப்பேச்சு வழக்கு பின்னர் எழுத்து வடிவம் பெற்றது.

பேச்சு வழக்கு, தொடக்கத்தில் கரையின்றி ஓடும் ஆறு போல் ஊருக்கு ஊர் சிதைந்து வேறுபட்டிருந்தது. அதை யொட்டி எழுத்து வடிவிலும் சிதைவு காணப்பட்டது. இந் நிலைமையை எண்ணிப் பார்த்த அறிஞர் சிலர், கண்டவர் கண்டபடி பேசுதலும் எழுதுதலும் கூடா; மொழியை இப்படித்தான் பேச வேண்டும் - இப்படித்தான் எழுத வேண்டும்' - என்று பொதுவான சில விதிகளை அமைத்த னர். ஆறு செவ்வனே ஓடும்படி இடப்பட்ட கரை போல, மொழி செவ்வனே இயங்கும்படி வகுக்கப்பட்ட விதிகளே இலக்கணம் என்னும் பெயர் பூண்டன.

## பயன்

மேலும் மேலும் மொழி சிதையாமலும் பிரியாமலும் இருக்க உதவுவது இலக்கணம்; மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் துணை புரிவது இலக்கணம்; இலக்கியங் களைச் சுவைத்து இன்புற உதவுவது இலக்கணம்,

**மூன்று கொள்கைகள்**

இலக்கணம் கற்பது தொடர்பாக மூவகைக் கொள்கை கள் உள்ளன. ஒன்று: இலக்கணம் என ஒன்று கற்பிக்கப்பட வேண்டியதில்லை. நடந்த பையன் என்பதில் 'நடந்த' என்பது பெயரெச்சம் என்றும், good boy என்பதில் 'good' என்பது adjective என்றும் தெரிந்து கொண்டுதானா மொழியைப் பேசவும் எழுதவும் வேண்டும்? தேவை யில்லையே! பல நூல்களைப் படிப்பதனால் தானாக இலக்கண விதி அமைந்துவிடும். எனவே இலக்கணத்தைத் தனிப்பாடமாகக் கற்கவேண்டியதில்லை. இலக்கணம் கல்லாமலேயே சிலர் இதழ்களில் எழுதிவரவில்லையா என்பது முதல் கொள்கை.

இரண்டாவது கொள்கையாவது: இலக்கணம் என்ற ஒரு பாடம் கட்டாயம் தனியே கற்றே தீரவேண்டும். இன்றேல், மொழியை முற்றிலும் பிழையறப் பேசவும் எழுதவும் இயலாது - என்பது.

**மூன்றாம் கொள்கை**

இலக்கணம் வேண்டா என்பது பொருந்தாது. அது வேண்டியதே. ஆனால், இலக்கணப் பாடத்தைத் தனிப் பாடமாகக் கற்பிக்காமல், இலக்கியப் பாடங்களுடன் - அதாவது - உரைநடைப் பாடத்துடனும் கட்டுரைப் பாடத் தொடும் செய்யுள் பாடத்தோடும் இணைத்துக் கற்பிப்பதே சாலச்சிறந்தது - என்பது.

**மூன்று பற்றிய தீர்ப்பு**

இலக்கணப் பாடமே வேண்டா என்பதை நூற்றுக்கு நூறு ஒத்துக்கொள்ளவே முடியாது. இலக்கணம் இல்லை யேல் மொழி சிதையும் - மொழி பிரியும். அடுத்து- இலக்கணப் பாடத்தைத் தனிப்பாடமாக நடத்த வேண்டா-

இலக்கியப் பாடத்துடன் இணைத்துக் கற்பித்தால் போதும் என்பதை ஒரு சிறிதளவுதான் ஒத்துக்கொள்ள முடியும். அதாவது, நடு நிலைப் பள்ளிவரையும் இலக்கணத்தை இலக்கியத்துடன் இணைத்துக் கற்பிக்கலாம். அதற்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளி - மேல்நிலைப்பள்ளி வகுப்புகளிலும் கல்லூரிகளிலும் தனிப்பாடமாகக் கற்பிப்பது இன்றியமையாததாகும். அவ்வளவு ஏன்? எல்லாநிலை வகுப்புகளிலுமே, வாய்ப்பு நேருங்கால், இலக்கியப் பாடத்தில் இலக்கண நுட்பங்களை எடுத்துக்காட்டிக் கற்பிக்கலாம். ஆனால், எல்லா இலக்கணச் செய்திகளையும் இலக்கியப் பாடத்தோடு இணைத்துக் கற்பிக்க முடியாததலின், இலக்கணம் தனிப்பாடமாகவே கற்பிக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

**கருவிப் பாடம்**

இலக்கணத்திற்கு இவ்வளவு இன்றியமையாமை தர வேண்டியதற்கு உரிய மற்றொரு சிறந்த காரணமும் உண்டு. மொழி ஒரு கருவிப் பாடம் (Tool Subject). அதாவது, கணக்கு, அறிவியல், வரலாறு, நிலநூல் முதலிய எல்லாப் பாடங்களையும் மொழியின் வாயிலாகவே கற்பிக்கிறோம். கணக்கையும் கருவிப் பாடம் எனக் கூறுவதுண்டு. அறிவியல் முதலிய சில பாடங்களில் எண்கள் இன்றியமையா இடத்தைப் பெற்றிருப்பதால், கணக்கும் கருவிப் பாடமே. கணக்குக்கு அடிப்படையான எண்கள் எழுத்துக்களின் சுருக்கக் குறியீடேயாகும். எண்களை நாம் எழுத்தாலேயே ஒலிக்கிறோம். 999999999 என ஒன்பது முறை 9 என்னும் எண்ணை எழுதிவிட்டுப் படிக்க வேண்டுமாயின், ''தொண்ணூற்றொன்பது கோடியே தொண்ணூற்றொன்பது இலட்சத்துத் தொண்ணூற்றொன்பது ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது என எழுத்துகளாலேயே ஒலிக்கிறோம். எண்கள் சொற்களின் சுருக்

கெழுத்துக் (Short hand) குறியீடுகளாம். எனவே, ஒருவகைக் கருவிப் பாடமாக உள்ள கணக்குக்கும் மொழி கருவிப் பாடமாகும். எனவே, மொழியைப் பிழையின்றிக் கையாளத் தெரிந்தால்தான், மற்ற பாடங்களையும் பிழையின்றிக் கற்று எழுத முடியும். ஆகவே, இலக்கணத்தின் இன்றி யமையாத் தேவை இப்போது புலனாகும்.

## நன்னூலின் இடம்

இப்போது முழுமையாகக் கிடைத்திருக்கும் தமிழ் இலக்கண நூல்களுள் தொல்காப்பியமே பழமையானது விரிவானது. இந்நூல், ஒரு தோற்றம், இரண்டாயிரத் தைந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப்படுகிறது. கி. பி. பதின் மூன்றாம் நூற்றாண்டில், பவணந்திமுனிவர் என்பவர், நன்னூல் என்னும் ஒரு நல்ல இலக்கண நூலைப் படைத்துத் தந்துள்ளார். இந்நூலில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் இரு பெரும் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகளாக ஐந்து இயல்கள் உள்ளன.

பவணந்தியார் தொல்காப்பியத்தில் உள்ள சில செய்தி களை விட்டுவிட்டார்; தொல்காப்பியத்தில் இல்லாத பிற்காலத்தில் மக்களின் நடைமுறை வழக்குகளில் உண்டான சில செய்திகளை நன்னூலில் சேர்த்துள்ளார்; தொல்காப்பியத்தினும் நன்னூலைச் சுருக்கமாக அமைத் துள்ளார். அதனால், இக்காலத்தினர் நன்னூலைப் பெரிதும் கையாள்கின்றனர். நன்னூலுக்குப் பிறகு எழுந்த எந்த நூல்களும் நன்னூலின் இடத்தைப் பிடிக்க முடிய வில்லை. எனவே, நாமும் இப்போது பெரிதும் நன்னூலை அடிப்படையாகக் கொண்டு நடைமுறை இலக்கணம் பற்றி ஆராயலாம். நடைமுறை இலக்கணம் என்பது, இக்காலத்தில் நடைமுறையில் பின்பற்றப்பட வேண்டிய

இன்றியமையாத இலக்கணச் செய்திகளாகும். நன்னூல் முழுவதும் கற்கப்பட வேண்டியது எனினும், இப்போது நடைமுறைக்கு இன்றியமையாது தேவைப்படுகிற இலக்கணச் செய்திகள் சிலவற்றை நன்னூலிலிருந்து எடுத்துக் கொள்வோமாக.

**மொழிப் பயிற்சியின் வகை**

கேள்விப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, படிப்புப் பயிற்சி, எழுத்துப் பயிற்சி எனமொழிப் பயிற்சி நால்வகைப்படும். முறை வைப்பும் இஃதே. கேட்டதைத்தான் பேசமுடியும். தமிழ்க் குழந்தைகள் குழவிப் பருவத்தில் ஆங்கிலம் கேட்க வில்லை - தமிழ்தான் கேட்கிறார்கள் - அதனால் அவர் களால் தமிழ்தான் பேசமுடிகிறது. தமிழ் கேட்காத ஆங்கிலக் குழந்தைகளால் தமிழ் பேச முடிவதில்லை - ஆங்கிலமே பேசுகின்றனர். எனவே, பேசுவதற்குக் கேள்விப் பயிற்சி (காதால் கேட்கும் பயிற்சி) இன்றியமையாதது. ஆகவே, சிறார்கள் நல்ல பேச்சுகளைக் கேட்க நிரம்ப வாய்ப்பளிக்க வேண்டும். திருத்தமாகப் பேசினால்தான் திருத்தமாகப் படிக்கவும் எழுதவும் முடியும். சொற்பொழி வாளர் ஒருவர், 'உதாரணமாக வல்லுவரையே எடுத்துக் கொல்லுவோமே' என்று பேசினார். உண்மையாக நடந்தது இது. வள்ளுவரையே எடுத்துக் கொள்ளுவோமே என்று பேசுவதற்குப் பதில் இவ்வாறு பேசியுள்ளார். சிலருக்கு, 'வெல்லம் பல்லத்தில் பாய்வதும் உண்டு ல, ள, எழுத்து களைத் திருத்தமாக ஒலிக்க இளமையிலிருந்தே பயிற்சி பெற்றிருந்தால், இந்த இழிநிலைக்கு இடம் ஏற்பட்டிராது. இன்னும் ஒன்று. தமிழர்களுள்ளேயே சில பகுதியினர் 'ழ' என்பதை 'ள' எனவே ஒலிக்கின்றனர். எனவே, ல - ள - ழ என்பவற்றையும், ர - ற என்பவற்றையும், ண - ந - ன என்பவற்றையும் எவ்வாறு ஒலிக்க வேண்டுமெனப் பயிற்சி அளிக்கவேண்டும்.

**பிறப்பியல்**

எழுத்துகளின் பிறப்பு ஒலி இலக்கணத்தில் இருபதாம் நூற்றாண்டில்தான் மேலைநாட்டினர் கருத்து செலுத்தியுள்ளனர். தொல்காப்பியரோ தம் தொல்காப்பிய நூலில் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்பே, இதற்காகப் பிறப்பியல் என ஒரு தனி இயலே அமைத்துள்ளார். பவணந்தியார் தம் நன்னூலில், எழுத்ததிகாரத்தில் உள்ள எழுத்தியலில், எழுத்துப் பிறப்பொலி இலக்கணத்தை விளக்கியுள்ளார். எனவே, இந்தப் பகுதி நன்னூலில் மிகவும் கற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஒலிப்பு திருந்தினால்தான் பேச்சு திருந்தும். பேச்சு திருந்தினால்தான், படிப்பதும் எழுதுவதும் திருத்தமாயிருக்கும். கிரீனிங் (Greening) என்னும் அறிஞர், "திருத்தமான எழுத்து நடை என்பது, ஒழுங்கு செய்யப்பெற்ற பேச்சு நடையின் பயனேயாகும்" - என்று கூறியுள்ளார். இதைத்தான் ஔவையார், "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" - என ஒரு தனிப்பாடலில் அறிவித்துள்ளார். எழுத்து கண்டுபிடிப்பதற்கு முன்பே, கல்வி இருந்தது; அது பேச்சுவாயிலாகவும் கேள்வி வாயிலாகவும் நடைபெற்று வந்தது என்னும் கருத்தை ஈண்டு நினைவில் கொள்ளல் வேண்டும்.

**அளபெடை**

எழுத்தியலில் 'இசை கெடின்' (91) என்று தொடங்கும் நூற்பாவில் அளபெடை பற்றிப் பவணந்தியார் கூறியுள்ளார். போய் என்பதைப் 'போஒய்' எனவும், கெடுப்பதும் என்பதைக் 'கெடுப்பதூஉம்' எனவும், நிறுத்தி என்பதை 'நிறீஇ' எனவும், நெடிலுக்குப்பின் அதன் இனக்குறிலை அமைத்து அளபை (மாத்திரையை - ஒலி அளவை) மிகுதியாக எடுப்பது அளபெடையாகும்.

இக்கால நடைமுறை இலக்கியத்தில் அளபெடை கையாளப்படவில்லை. மேலே கூறிய உயிர் அளபெடைக்கே இக்காலத்தில் இடம் இல்லையெனில், இலங்ங்கு - எங்ங்கு என்பன போன்ற ஒற்றளபெடைக்கு இக்காலத்தில் சிறிதும் இடமில்லை. ஆனால், 'அம்பிகாபதி காதல் காப்பியம்' என்னும் எனது நூலில் நான் அளபெடைகளை ஓரளவு கையாண்டுள்ளேன்.

தொல்காப்பியரும் நன்னூலாரும், செய்யுளில் இசை (ஓசை) கெடுவதால் அவ்விடத்தை நிரப்ப மற்றோரெழுத்தைப் போட்டு அளபெடுக்கச் செய்யவேண்டும் எனக் கூறியுள்ளனர். இது தவறு பொருள் பொதிவு கருதியே தொடக்கக் காலத்தில் அளபெடை எழுந்தது. நாளடைவில் அதை இடம் நிரம்பப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். அளபெடை பொருள் பெறுமானம் உடையது.

கற்போர்க்குச் சுமையைக் குறைக்க வேண்டின், நன்னூல் பாடத்திட்டத்திலிருந்து அளபெடையை விலக்கிவிடலாம். இதே நோக்கத்திற்காக, நன்னூலின் தொடக்கத்தில் உள்ள பாயிரப் பகுதியையும் விலக்கிவிடலாம். வேண்டுவோர் பிற் காலத்தில் படித்துக் கொள்ளலாம்.

**உறுப்பிலக்கணம்**

நன்னூல் பதவியலில் கூறப்பட்டுள்ள, முதல் நிலை (பகுதி), இறுதி நிலை (விகுதி), இடை நிலை, சாரியை, சந்தி (இணைப்பு), விகாரம் (வேறுபாடு) என்னும் அறுவகை உறுப்பு இலக்கணம் கற்கப்படவேண்டும். இந்த உறுப் பிலக்கணம் கற்பதனால் விளையும் பயன்கள் இரண்டு. ஒன்று: சொல்லாராய்ச்சி செய்ய இஃது உதவும்; இரண்டு: புதிய சொல்லாக்கம் செய்யவும் உதவும்.

**நிகழ்கால இடை நிலைகள்**

உறுப்பிலக்கணம் பற்றித் தொல்காப்பியர் தனியே கூற வில்லை; முதல் நிலை (பகுதி), இறுதி நிலை (விகுதி) என்னும் இரண்டையும் பற்றி ஆங்காங்குக் கூறியுள்ளார்; இடைநிலை பற்றி அவர் ஒன்றும் கூறிற்றிலர். 'புதியன புகுதல்' என்ற முறையில், நன்னூலார் கூறியுள்ளார். மக்களின் அக்கால நடைமுறைப் பேச்சு வழக்கையொட்டி இவ்வுறுப்புகள் நன்னூலில் கூறப்பட்டுள்ளன. நிகழ்காலம் காட்டும் இடைநிலைகளாகக் கிறு-கின்று-ஆநின்று என்னும் மூன்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

> "ஆநின்று கின்று கிறு மூவிடத்தின்
> ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை"
> (143)

என்பது நன்னூல்பா. இந்த நிகழ்கால இடைநிலைகளைத் தொல்காப்பியர் கூறாதது மட்டுமன்று; சங்க இலக்கியங் களிலும் இவை இடம்பெறவில்லை. ஆனால், இடைக்கால இலக்கியங்களில் இவை இடம்பெறத் தொடங்கிவிட்டன.

> "மின்னொளிர் கானம் இன்றே
> போகின்றேன் விடையும் கொண்டேன்"

என்னும் கம்பராமாயணத்தின் (அயோத்தியா காண்டம்-கைகேயி சூழ்வினைப் படலம்) பாடல் பகுதியில், 'போகின் றேன்' எனக் 'கின்று' என்னும் இடைநிலை ஆளப்பட் டுள்ளது. 'போகிறேன்' என்பதைக்காட்டிலும் 'போகின்றேன்' என்பது அழுத்தம் திருத்தத்தை அறிவிக்கிறது. கிறு, கின்று என்பனவே மிகுதியாக இலக்கியங்களில் இடம் பெற் றுள்ளன. 'ஆநின்று' என்பது அரிதாகவே உள்ளது. இம் மூன்றுமே நிகழ்காலம் காட்டினும், கிறு-கின்று என்பவற்றிற் கும் ஆநின்று என்பதற்கும் வேற்றுமை உண்டு. இதன் விளக்கம் வருமாறு:

**தொடர் நிகழ்காலம்**

ஆங்கிலத்தில் They go என்பதற்கு, அவர்கள் போகிறார்கள் என்பது பொருள். இது, Present Tense - நிகழ்காலம் எனப்படும் They are going என்பதற்கு அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பது பொருள் இது, Present Tense continuous - தொடர் நிகழ்காலம் எனப்படும். இந்த ஆங்கில வழக்காறுகள் போல, கிறு - கின்று என்பன பெற்று நிகழ்காலத்தைக் குறிக்கும். ஆநின்று என்பது தொடர் நிகழ்காலத்தைக் குறிக்கும். இதற்கு இலக்கியச் சான்று காட்டினால்தான், இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்படும். இலக்கிய அகச்சான்று இதோ:-

தேவார ஆசிரியர்கள் மூவருள் ஒருவராகிய நாவுக்கரசர் திருவானைக்கா தேவாரப் பதிகப்பாடல் ஒன்றில் இதனைக் கையாண்டுள்ளார்.

"எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்;
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை;
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்"-

என்பது பாடல் பகுதி. ஒருவர் இறந்து விடின், வேறு யாரும் தம் உயிரை விட்டு, இறந்தவரின் உயிருடன் துணை போக மாட்டார்கள். செத்த உடம்பாகிய பெருவிறகை, மரக்கட்டையாகிய சிறு விறகால் தீமூட்டிக் கொளுத்திச் செல்வர் - என்பது இதன் கருத்து. இங்கே, 'செல்லா நிற்பர்' என்பதை ஊன்றி நோக்க வேண்டும். சுடுகாட்டில் ஈமக் கடன்கள் முடித்த பிறகு, திரும்பிப் பார்க்காமல் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பது, தொன்று தொட்டுப் பெரியவர்கள் பின்பற்றி வரும் வழக்கமாகும். (இப்போது திரும்பிப் பார்க்காமல் போனாலும், பின்பொருநாள் தாமாக வந்து தான் தீரவேண்டும்). திரும்பிப் பார்க்கக் கூடாது என்ற காரணத்தால் சென்று கொண்டே இருப்பார்கள் என்னும்

பொருளில் 'செல்லாநிற்பர்' என்பது கூறப்பட்டது. இது தொடர் நிகழ்காலம் (Present Tense Continuous) ஆகும். 'ஆநில்' என்னும் வேர்ச்சொல் தொடர்ச்சியை அறிவிக்கிறது. செல்லா நிற்பர் என 'ப்' எதிர்கால இடைநிலை வந்திருக்கிறதே என வினவலாம். எப்போதும் வழக்கமாக உள்ளதை எதிர்காலத்தால் சொல்வது மரபு. "இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்" என்பது தொல்காப்பிய (கிளவியாக்கம்-19) நூற்பா. இந்த நூற்பாவை நன்னூலாரும் அப்படியே தம் நூலில் (404) பெய்து கொண்டார். ஆங்கிலத்தில் 'Would' என்னும் துணை வினை (Auxiliary Verb) போடுவது போன்றது இது.

எனவே, உறுப்பிலக்கணம் தெரியின், சொல்லாராய்ச்சி செய்து, அதனால் பெறப்படும் சுவையை நுகர முடியும். ஆகவே, நன்னூலில் உள்ள உறுப்பிலக்கணத்தைக் கட்டாயம் கற்க வேண்டும். இந்த அமைப்பு, சங்க காலத்தில் இல்லாமல், பின்னர் வந்த நடைமுறை இலக்கணமாகும்.

**புணர்ச்சி இலக்கணம்**

அடுத்து, புணர்ச்சி இலக்கணம் மிகவும் இன்றியமையாததாகும். நன்னூலில் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்னும் மூன்று இயல்களில் புணர்ச்சி இலக்கணம் கூறப்பட்டுள்ளது. நிலைமொழி எனப்படும் முதல் சொல்லும், வருமொழி எனப்படும் இரண்டாவது சொல்லும் ஒன்றோடொன்று புணரும்போது-இணையும்போது, இரண்டிற்கும் இடையே ஏற்படும் நிலைமையைச் சொல்வதற்குத்தான் புணர்ச்சி இலக்கணம் என்று பெயராம். மழை பெய்தது என்னும் தொடரில் இடையே எந்த மாறுதலும் இல்லை; இது இயல்பு புணர்ச்சி. மழைக்காலம் என்னும் தொடரில் இடையே 'க்' என்னும்

வல்லொற்று மிக்கிருக்கிறது; இது விகாரப் புணர்ச்சி. இந்தப் புணர்ச்சி இலக்கணம் தெரிந்தால்தான், எந்த இடத்தில் இயல்பாயிருக்கும் - எந்த இடத்தில் புதிதாய் ஒரெழுத்து மிகும் - எந்த இடத்தில் இருக்கும் எழுத்துகளுள் ஒன்று கெடும் - எந்த இடத்தில் ஒரெழுத்து இன்னோரெழுத்தாகத் திரியும் - என்னும் விதிகளை அறிந்து மொழியைப் பிழையின்றி எழுதவியலும்.

**புணர்ச்சி இலக்கணமே தவறு**

ஒருவகையில் புணர்ச்சி இலக்கண அமைப்பே தவறானது என்று கூறலாம். கடல் + தாவு படலம் என்பது கடறாவு படலம் என்றாகும் என்பது புணர்ச்சி விதி. முள் + தாள் + தாமரை என்பது 'முட்டாட்டாமரை' என்றாகும் என்பது புணர்ச்சி விதி. எல்லாப் புணர்ச்சி விதிகளும் இன்னவையே. உண்மையில் இவை சரியா? இந்த விதிகள் இலக்கணம என்ற பெயரில் எவ்வாறு எழுதப்பட்டிருக்கக் கூடும்? 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்றபடி, மக்கள் சொற்களை இணைத்துப் பேசும் வழக்குகள், இவ்வாறு தவறான உருவங்களைப் பெறுகின்றன. இந்த அடிப்படையில், மொழி அறிஞர்கள், இன்னின்ன சொற்கள் சேரின் இன்னின்னவாறு ஆகும் என்று முடிபு கூறிவிட்டனர். இது தான் புணர்ச்சி இலக்கணம் (புணர்ச்சி விதி) எனப் படுகிறது.

இதன் பயன் என்ன? இந்த முடிவு இல்லாவிடின், மக்கள் இன்னும் பலவிதமாக நாளுக்குநாள் சிதைத்துப் பேசியும் எழுதியும் வருவர். எனவே, இப்படித்தான் எழுத வேண்டும் என முடிவு கட்டிக் கூறிவிடின், மேலும் சிதைக்காமல் பேசுவர் - எழுதுவர் ஆகவே, மொழி என்னும் ஆறு கண்டபடி ஓடாதவாறு இந்த இலக்கணக் கரை ஓரளவு காத்து வருகிறது. கால வெள்ளத்தில் இந்தக் கரை உடைபடின், மீண்டும் கரையைப் புதுப்பிக்க வேண்டி

யுள்ளது. அதாவது, மீண்டும் இலக்கணத்தில் மாறுதல் செய்யவேண்டும். இந்த மாறுதல்களைப் பிற்கால உரையாசிரியர்கள் தம் உரைகளில் சேர்த்துக்கொண்டு உள்ளனர். தொல்காப்பியத்தினும் மாறுதலாகச் சில இடங்களில் நன்னூல் கூறுவதும் இஃதே. இதுதான் நடைமுறை இலக்கணம் எனப்படுகிறது. ஆனால், மாறுதலை ஓரளவே ஏற்கலாம்; கண்டபடி ஏற்க முடியாது.

**நன்னூலின் தவறுகள்**

நன்னூலில் உள்ள புணர்ச்சி இலக்கணம் கற்கப்படவேண்டியது என்று சொல்லப்பட்டது. ஆனால், மக்களின் பேச்சு வழக்காற்றுக்கு மாறாக, நன்னூலில் - ஏன் - தொல்காப்பியத்திலுங்கூட, சில புணர்ச்சி விதிகள் கூறப்பட்டுள்ளன. இந்தத் தவறான விதிகளை, மொழி அறிஞர்கள் கூடிப்பேசி விலக்கிவிட வேண்டும். இவற்றைக் கற்க வேண்டியதில்லை. இத்தகைய தவறான முடிபுகளுள் சிலவற்றைக் காணலாம்.

ஒரு மொழியிலுள்ள ஒலிப்பு முறைகள் - புணர்ச்சி விதிகள், வேறுசில மொழிகளிலும் ஒத்திருப்பதுண்டு. சில காட்டுகள் வருமாறு.

கால் + ஒடிந்தது என்பதை மக்கள் பேசுங்கால், கால் ஒடிந்தது - கால் ஒடிந்தது - காலொடிந்தது - என்கின்றனர். நிலைமொழியாகிய கால் என்பதின் இறுதியில் உள்ள 'ல்' என்னும் உடல் (மெய்) எழுத்தின் மேல் வருமொழி யாகிய 'ஒடிந்தது' என்பதின் முதலில் உள்ள 'ஒ' என்னும் உயிர் (எழுத்து) ஒன்றி (ல் + ஒ) 'லொ' என்றாகி, 'காலொடிந்தது' என்பது உருவாயிற்று. இதனை நன்னூல்

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"

என்னும் நூற்பாவால் (204) அறிவிக்கிறது. பிரெஞ்சு மொழியிலும் இந்த விதி உண்டு. Comment என்னும்

பிரெஞ்சுச் சொல்லைத் தனியே ஒலிக்கும்போது கொம்மா(ன்)' என்றே ஒலிப்பர். இங்கே t என்பது ஊமை எழுத்தாகும். நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? - How do you do? - How are you? - என்னும் பொருளில் comment allez vous என்பதை ஒலிக்கும் போது, comment என்பதின் இறுதியில் t என்னும் மெய்யெழுத்து 'த்' என்னும் ஒலி பெற அதன்மேல் வருமொழி முதலில் உள்ள 'a' என்னும் உயிர் எழுத்து ஒன்ற, 'ta' என்பன 'த' என்னும் ஒலி பெறும். எனவே, இத்தொடர், 'சொம்மான் தலே வு' என ஒலிக்கப்பெறும். allez, vous என்பவற்றின் இறுதி எழுத்து களாகிய z, s என்பன ஊமை (Silent) எழுத்துகளாம்.

அடுத்து, கல் + உடைந்தது என்பதை மக்கள் ஒலிக் குங்கால், கல் உடைந்தது - கல் உடைந்தது - கல் லுடைந்தது என்கின்றனர். இங்கே நிலைமொழியில் 'க' என்னும் தனிக்குறிலின் பக்கத்தில் 'ல்' என்னும் ஒற்று இருக்க, அதனோடு, வருமொழி முதலில் உள்ள 'உ' என்னும் உயிர் சேரும் போது 'ல்' என்னும் ஒற்று இரட்டித்தது - அதாவது - மற்றொரு 'ல்' வந்து கல் + ல் + உடைந்தது = கல்லுடைந்தது என்பதை உருவாக்கிற்று. இதனை நன்னூல்,

'தனிக் குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்'' (205) எனக் கூறுகிறது. ஆங்கிலத்திலும் இத்தகைய அமைப்பு உண்டு.

Big என்பது, Bi (பி) + g (க்) எனத் தனிக்குறில் முன் (முன் = பக்கத்தில்) ஒற்று வந்த நிலைமொழி யாகும். இதனோடு, வருமொழியில், Superlative degree குறியீடாகிய 'est' என்னும் உயிர் (e) முதல் மொழி வந்ததும், 'g' என்னும் ஒற்று இரட்டிக்க, Big + g + est = Biggest என்பதும் உருவாயிற்று. cut + t + ing cutting என்பதும் இத்தகையதே.

தமிழில் "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" (164) என்னும் நன்னூல் விதிப்படி, விளக்கு + எரிந்தது என இரண்டு உயிர்கள் இணையின் ஒருயிர் கெடும். இங்கே 'கு' என்பதில் உள்ள 'உ' போக, 'க்' என்பதில் 'எ' சேர விளக்கெரிந்தது என்பது உருவாயிற்று. ஆங்கிலத்தில், No one என்பதில் ஓர் 'O' கெட none என்பதும், No + ever என்பதில் உயிர் O கெட never என்பதும் உருவானமை காண்க. I have என்னும் பொருள் உடைய Je + ai என்னும் பிரெஞ்சுத் தொடரில், 'க' என்னும் உயிர் கெட, J' ai என்பது உருவானமையும் காண்க.

'உயிர்வரின் உடம்படு மெய்யென்றாகும்' (162) என்னும் நன்னூல் விதிப்படி, மணி + அடித்தான் என்பதில் உள்ள இ + அ என்னும் இரண்டு உயிர்களை இணைக்க 'ய்' என்னும் உடம்படுமெய் (ஒன்று சேர்க்கும் மெய்) வர, மணியடித்தான் என்பது உருவாயிற்று. இதேபோல் ஆங்கிலத்தில் a + egg என்பதை இணைக்க, இடையே N என்னும் உடம்படு மெய்வர an egg என்பது உருவானமையும் காண்க.

குறிப்பிட்ட ஓர் இலக்கை அடைவதற்காக இவ்வளவு பயணம் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. காலொடிந்தது என்பதிலே, ஒலிப்பு முயற்சி 'கா' என முதலில் நீண்டு செலவிடப்பட்டதால், அங்கே ஒன்று இரட்டிக்கவில்லை. கல்லுடைந்தது என்பதிலே, ஒலிப்பு முயற்சி முதலில் அழுத்தம் பெறாமல் அடுத்து அழுத்தம் பெற்றதால் அங்கே ஒன்று இரட்டித்தது. இதுதான் இயற்கையான புணர்ச்சி விதிமுறையாகும்.

**பண்புப் புணர்ச்சி**

உண்மை — இவ்வாறிருக்க, நன்னூலார் பண்புத் தொகைப் புணர்ச்சியில் தவறிவிட்டார். செம்மை +

ஆம்பல் என்பதுதான் சேதாம்பல் என்றாயிற்று - பசுமை + தார் என்பதே பைந்தார் என்றாயிற்று - என்று கூறியுள்ளார். இச்செய்தி 'ஈறு போதல்' (136) என்னும் நூற்பாவால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கால் + ஒடிந்தது = காலொடிந்தது என்பதும் கல் + உடைந்தது = கல்லுடைந்தது என்பதும் இயற்கையான மக்கள் வழக்காற்றுப் புணர்ச்சி விதியாகும். ஆனால், இதுபோல, செம்மை + ஆம்பல் என்பதைச் செம்மை ஆம்பல் - செம்மை ஆம்பல் எனப் பதினாயிரம் முறை கூறினும் சேதாம்பல் என்பது உருவாகாது. பசுமை + தார் என்பதைப் பசுமைத்தார் - பசுமைத்தார் என நூறாயிரம் முறை கூறினும் பைந்தார் என்பது உருவாகாது. இவற்றின் உண்மையான புணர்ச்சி விதி வருமாறு:-

செம்மை + ஆம்பல் என்பது சேதாம்பல் என்றாக வில்லை; சேது + ஆம்பல் என்பதே சேதாம்பல் என்றாயிற்று. சேது என்னும் சொல்லுக்கும் செம்மை (சிவப்பு) என்னும் பொருள் உண்டு. 'சிலம்பின் மேய்ந்த சிறு கோட்டுச்சேதா' என்னும் நற்றிணைப் (359) பாடல் பகுதி காண்க. இதிலுள்ள சேதா' என்பதைச் சேது + ஆ எனப் பிரித்துச் சிவப்புப் பசு எனப்பொருள் கொள்ளல் வேண்டும்.

அடுத்து - பசுமை + தார் என்பது பைந்தார் என்றாக வில்லை. பை + தார் என்பதே பைந்தார் என்றாயிற்று. 'பை' என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்கே பசுமை என்னும் பொருள் உண்டு என்பதை, 'பை தீர் பாணரொடு, (மலைபடுகடாம்-40), 'நும் பை தீர் கடும்பொடு' (பெரும் பாணாற்றுப்படை-105) முதலிய இலக்கிய வழக்குகளால் அறியலாம். ''பை தீர் பாணர்' என்பதற்கு, பசுமை-வளமை தீர்ந்த ஏழைப் பாணர் என்பது பொருளாம். எனவே

இந்தப் பண்புத் தொகைப் புணர்ச்சி விதிகளை அறிஞர்கள் ஆய்ந்து நன்னூலிலிருந்து விலக்கிவிட வேண்டும்.

**தொண்ணூறும் தொள்ளாயிரமும்**

மற்றும் - ஒன்பது + பத்து என்பதுதான் தொண்ணூறு என்றாயிற்று - ஒன்பது + நூறு என்பதுதான் தொள்ளாயிரம் என்றாயிற்று எனத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறுகின்றன.

''ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின்,
முன்னதின் ஏனைய முரணி, ஒவ்வொரு
தகரம் நிறீஇப், பஃதகற்றி, னவ்வை
நிரலே ணளவழி திரிப்பது நெறியே (194)

என்பது நன்னூற்பா. இந்தப் புணர்ச்சி விதிகள் நூற்றுக்கு நூறு தவறாகும். ஒன்பது + பத்து - ஒன்பது பத்து என்று ஓராயிரம் முறை கூறினும் தொண்ணூறு என்பது வராது. ஒன்பது + நூறு - ஒன்பது நூறு என ஒரு நூறாயிரம் முறை கூறினும் தொள்ளாயிரம் என்பது வராது. இந்த எண்களின் புணர்ச்சிகட்கும் வேறு விதிகள் உள்ளன. சுருக்கமாக அவை வருமாறு:-

தெலுங்கு மொழியில் ஏழு (7) என்பதைக் குறிக்கும் சொல் 'ஏடு' என்பதாகும். ஏடு என்னும் சொல்லுக்கு 'அழுதல்' என்னும் மங்கலமற்ற பொருளும் உண்டு. அதனால் சிலர், ஏழு (7) என்னும் எண்ணைக் குறிக்க, 'ஏடு' என்னும் சொல்லைப் பயன்படுத்தாமல் 'ஆறன் ஒக்கட்டி' (ஆறும் ஒன்றும்) என்னும் சொல்லைப் பயன்படுத்துவர். இது போலவே, தமிழில் ஒன்பது (9) என்னும் எண்ணைக் குறிக்கப் பண்டைக் காலத்தில் 'தொண்டு' என்னும் சொல் பயன் படுத்தப் பெற்றது. இச் சொல்லுக்கு இன்னும் வேறு பொருள்கள் உள்ளமையால் குழப்பம் உண்டாகும் ஆதலானும், குறிப்பாக இச்சொல்லுக்குப் பரத்தைமை

(மாமா வேலை) என்னும் பொருளும் சில பகுதிகளில் உண்டாதலானும் இச் சொல்லுக்குப் பதில் 'ஒன்பது' என்னும் சொல்லைப் பயன்படுத்தினர். இதற்கு எழுத்துச் சான்று காட்டின் விரியு மாதலின் விடுப்பாம். ஒன்பது என்னும் சொல் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே வழக்கில் வந்து விட்டது.

ஒன்பது என்பதற்கு, ஒன்று குறைந்த பத்து அதாவது பத்தில் ஒரு பகுதி குறைந்தது என்பது பொருள். பத்துக்கு முன்னால் ஒன்று போட்டால் ஒன்பது என்னும் பொருள் கிடைப்பதை இலத்தீன் எண்ணில் (Roman Number) காணலாம். X என்பது இலத்தீனில் பத்து. அதற்கு முன்னால் ஒன்று போட்டு IX என்று எழுதின் ஒன்பது என்பது கிடைக்கும். 19 என்பதைத் தமிழில் பத்தொன்பது என்றும், ஆங்கிலத்தில் nineteen என்றும் ஒலிக்கிறோம். இலத்தீனில் XIX என்று அமைத்தால் X + IX = (10 + 9 =) 19 ஆகும். இலத்தீன் மொழியில் இதனை ஒன்று குறைந்த இருபது - அதாவது - undeviginti என்கின்றனர். இலத்தீனில், Viginti என்றால் இருபது; de என்றால் from - அதிலிருந்து கழிவது; un என்றால் ஒன்று. எனவே, ஒன்று குறைந்த இருபது (20—1=19) என்னும் பொருளில் 19=XIX ஒலிக்கப்படுகிறது.

தமிழ் எண்கள், க(1), உ(2), ரு(5), எ(7), அ(8), வ(1/4), ப(1/20) என எழுத்துருவங்களால் குறிக்கப்படுதல் போலவே, இலத்தீனிலும் V(5), X(10) என எண்கள் எழுத்தால் குறிக்கப்படுகின்றன. இவற்றிற்கு முன்னால் ஒன்று சேர்க்கின், IV = 4, IX = 9 என்பன கிடைக்கும். இந்த எண் அமைப்பு ஒற்றுமையின் துணை கொண்டு தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றின் புணர்ச்சி விதிக்குத் தீர்வு காணலாம்.

தொள் + நூறு = தொண்ணூறு - அதாவது - நூறில் - பத்துப்பத்தில் ஒரு பகுதி குறைந்தது என்பது இதன் பொருள்; அதாவது (100 — 10 =) 90 என்பதாம். தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம் - அதாவது - ஆயிரத்தில் - பத்து நூறில் ஒரு பகுதி குறைந்தது என்பது இதன் பொருள். அதாவது (1000 — 100 =) 900 என்பதாம். தொள் என்பதற்குத் துளைக்கப் பட்டது - குறைக்கப் பட்டது என்னும் பொருள் உண்டு. 'தொள்ளைக் காது' என்னும் வழக்காறு காண்க. எனவே, ஒன்பது + பத்து என்பதுதான் தொள்ளாயிரம் எனவும் ஆனதாகக் கூறுவது தவறாகும்.

ஆகவே, இந்தப் பொருந்தாப் புணர்ச்சி விதிகளை நன்னூலிலிருந்தும் தொல்காப்பியத்திலிருந்தும் விலக்கி விட வேண்டும். எனது 'தமிழ் இலத்தீன் பாலம்' என்னும் நூலைப் படித்தால் இது பற்றி இன்னும் விரிவாக அறிந்து கொள்ளலாம். அடுத்து, இனி, ஒற்று மிகல் - மிகாமை பற்றிய புணர்ச்சி விதிகளைப் பார்க்கலாம்.

**வல்லொற்று மிகும் / மிகா இடங்கள்**

இந்த வேற்றுமையில் வல்லொற்று மிகும்; இந்த வேற்றுமையில் மிகாது. இந்த அல்வழியில் ஒற்று மிகும்; இந்த அல்வழியில் மிகாது. இந்தத் தொகையில் மிகும்; இந்தத் தொகையில் மிகாது. இந்த எச்சத்தில் மிகும்; இந்த எச்சத்தில் மிகாது. இந்தக் குற்றிய லுகரத்தில் மிகும்; இதில் மிகாது - என்றெல்லாம் விதிகள் சொல்லப் பட்டிருத்தலின், வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி, வேற்றுமைத் தொகை, பண்புத்தொகை, இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகை, உவமைத் தொகை, வினைத் தொகை, உம்மைத்தொகை, வினை முற்று, வினையெச்சம், பெயரெச்சம், குற்றியலுகரம் [முற்றிய லுகரம் முதலியன பற்றி நன்னூலிலிருந்து தெளிவாகக் கற்றுக்கொள்ளல்

வேண்டும். அன்மொழித் தொகையை ஆகுபெயரில் அடக்கிக் கற்கலாம்.

**வல்லொற்று மிகும் இடங்கள்**

க் - ச் - த் - ப் என்னும் வல்லின ஒற்றுகள் மிகக்கூடிய இன்றியமையாத சில இடங்களைப் பார்க்கலாம். கீழே தரப்படும் எடுத்துக்காட்டுகளில் ஒற்று மிக்கதைக் காணலாம்.

குவளைக் கண் - உவமைத்தொகை. சாரைப் பாம்பு - இரு பெயர் ஒட்டுப் பண்புத்தொகை. ஓடாக் குதிரை - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஓடிப் போனான் - 'இ' ஈற்று இறந்தகால வினையெச்சம். போய்ப் பார்த்தான் - 'ய்' ஈற்று இறந்த கால வினையெச்சம், படிக்கச் சென்றான் - 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

செத்துப் போயிற்று = வன்றொடர்க் குற்றிய லுகரமாக உள்ள 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

அவனன்றிச் செய்திருக்க முடியாது, அவன் இன்றிச் செயல் நடக்காது - அன்றி, இன்றி என்னும் குறிப்பு வினையெச்சம் எட்டுத் தொகை - வன்றொடர்க் குற்றிய லுகரம். நண்டுக்கால் - வேற்றுமைத் தொகையாக உள்ள மென்றொடர்க் குற்றியலுகரம்.

அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் இடப்பொருள் உணர்த்தும் மென்றொடர்க் குற்றிய லுகரங்களின் பின் வலி மிகும். ஒற்றைக் கால், இரட்டைத் தலைகள் - இறுதியில் 'ஐ' பெற்ற எண்ணுப் பெயர்கள்.

வீடு + சாப்பாடு = வீட்டுச் சாப்பாடு, வயிறு + போக்கு = வயிற்றுப் போக்கு - ஒற்று இரட்டித்த நெடில் தொடர் - உயிர்த்தொடர்.

இறுதியில் 'ஐ' பெற்றுவரும் சில சொற்கள்—பண்டைக் காலம், நேற்றைக் கூலி, அற்றைத் திங்கள்.

அப்பையன் - அந்தப் பையன், இப்பொருள் - இந்தப் பொருள் - அ, இ சுட்டு.

எக்குதிரை - எந்தக் குதிரை - எ வினா.

முருகனைப் பார்த்தேன் - இரண்டாம் வேற்றுமை - 'ஐ' உருபு.

கண்ணனுக்குத் தந்தான் - நான்காம் வேற்றுமை - 'கு' உருபு.

பலாப்பழம், களாக்காய் - 'ஆ' ஈற்று மரப் பெயர்கள்.

ஈக்கூட்டம், தீப்புண் - ஈ இறுதித் தனி நெடில்.

மரம்+கிளை=மரக்கிளை, வட்டம்+பலகை=வட்டப் பலகை - இறுதி 'ம்' கெட நின்ற அகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள்.

கேட்டார்ப் பிணிக்கும் தகை - இரண்டாம் வேற்றுமைத் தொகையாக உள்ள உயர்திணைப் பெயர்கள். மேற் கூறி யிருப்பனவற்றின் பக்கத்தில் வல்லெழுத்து வருமொழி வரின் இடையில் வல்லொற்று மிகும்.

**வல்லொற்று மிகா இடங்கள்**

இனி வல்லொற்று மிகா இடங்கள் வருமாறு:- நம்பி தந்தார், அறிஞர் சொன்னார்-என உயர்திணைப் பெயரின் பின் வலி மிகாது.

செய்து, என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களுள், பட்டுப் போயிற்று-விற்றுக் கொண்டான் என்பன போன்ற வன்றொடர்க் குற்றியலுகரங்களில் தவிர, மற்றபடி வந்து கற்றான், கொய்து சென்றான்—என மென்றொடர்

இடைத் தொடர்க் குற்றிய லுகரங்களாக உள்ள 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களில் மிகாது.

அன்று, இன்று, என்று, பண்டு, முந்து முதலிய காலப் பொருள் தரும் மென்றொடர்களில் மிகாது.

எட்டுத் தொகை, பத்துப் பாட்டு என எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களில் தவிர, வேறு எந்த எண்ணுப் பெயர்களிலும் மிகாது.

பொதுவாக, வன்றொடர் அல்லாத மற்ற தொடர்க் குற்றியலுகரங்களில் அல்வழியில் பெரும்பாலும் மிகாது.

தும்மு குமரா, கதவு பெரிது, அது சிறிது, இது பெரிது, எது கரியது, அவ்வளவு—இவ்வளவு – எவ்வளவு கொடுத் தார் முதலிய முற்றிய லுகரங்களில் மிகாது.

உண்ணிய சென்றான் -'செய்யிய' என்னும் வாய் பாட்டு வினையெச்சம், மிகாது. ஓடாக் குதிரை என்பது போன்ற ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சங்களில் தவிர, வேறு எந்தப் பெயரெச்சத்திலும் மிகாது.

வந்த பையன், வருகிற பையன் = தெரிநிலை வினைப் பெயரெச்சம். கரிய குதிரை, சிறிய காடு-குறிப்புப் பெய ரெச்சம், ஓடாத குதிரை = எதிர் மறைப் பெயரெச்சம். வாழ்க கண்ணா, வாழிய புலவ-வியங்கோள் வினைமுற்று, ஓடு முருகா, கொடு தம்பி-முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று.

வேற்றுமை உருபுகளுள். இரண்டாவதின் 'ஐ', நான் காவதின் 'கு' ஆகிய உருபுகள் தவிர, வேறு எந்த வேற்றுமை உருபுகளிலும் மிகாது'

மகனொடு - மகனோடு சென்றார் - ஒடு, ஓடு மூன்றன் உருபுகள். மலையினின்று குதித்தான், வீட்டிலிருந்து புறப்

பட்டான் - நின்று, இருந்து - ஐந்தன் சொல்லுருபுகள். எனது கை, என்னுடைய பொருள்-அது, உடைய-ஆறன் உருபுகள். கண்ணா கொடு, முருகா செல்-எட்டாம் வேற்றுமையில் மிகாது. அவனா செய்தான் - 'ஆ' ஈற்று வினா அவனோ செய்தான் - 'ஓ' ஈற்று வினா. நானே செய்தேன்-ஈற்று 'ஏ' இடைச் சொல். ஓடு குதிரை, தாழ்குழல் - எந்த வினைத் தொகையிலும் மிகாது. இரவு பகல் படித்தான், கைகால் பிடித்தான்-உம்மைத்தொகை, மாதாபாசம்-தமிழ் எழுத் துருவம் பெற்ற வடமொழித் தொடரில் மிகாது.

பதினெட்டு மெய்யெழுத்துக்களுள் ய் - ர் - ழ் என்னும் மூன்றில் தவிர, மற்ற பதினைந்து மெய்யெழுத்துக்களுள் எதன் பக்கத்திலும் இன்னொரு மெய்வராது. எனவே, கற்க்கண்டு, நட்ப்பு, ஆட்ச்சி என்றெல்லாம் எழுதுதல் தவறு.

## குறுக்கு வழி

நன்னூல் நூற்பாக்களை மறந்து, அவற்றிலிருந்து எடுத்த ஒரு பிழிவாக ஒரு குறுக்கு வழி காண்பாம். பொதுவாக எந்த ஈற்றில் முடியும் அஃறிணைப் பெயர்ச் சொற்கட்கும் பின்னே - சிறப்பாக 'இ' ஈற்றிலும் 'ஐ' ஈற்றிலும் முடியும் அஃறிணைப் பெயர்ச் சொற்கட்குப் பின்னே, வருமொழியில் பெயர்ச் சொல்வரின் இடையே வல்லொற்று மிகும். வருமொழியில் வினைச் சொல் வரின் இடையே ஒற்று மிகாது. சில எடுத்துக்காட்டுகள் வருக:— அரிசிச்சோறு, மலைப்பாதை, வரகுக் கஞ்சி, தாய்ப்பால், யாழ்க்கம்பி – வருமொழியில் பெயர்ச்சொற்கள் வந்ததால் வலிமிக்கது.

அரிசி போட்டார், மலைகண்டான், வரகு தந்தார், தாய் பேசினாள், யாழ் கொடுத்தார் – வருமொழியில் வினைச்சொற்கள் வந்ததால் ஒற்று மிகவில்லை.

இந்த விதி பெரும்பாலும் பொருந்தும். 'மலை கிழவோனே' என்பதுபோல் எங்கோ ஒருசில விதிவிலக்கு இருக்கலாம்.

**இடை - மெலி மிகுதல்**

இது காறும் வல்லின ஒற்று பற்றிப் பார்த்தோம். இனி, இடையின ஒற்று பற்றியும் மெல்லின ஒற்று பற்றியும் பார்க்கலாம்:–

இடையின ஒற்றுகளுள் 'வ்' தவிர மற்றவை மிகா: அவ்வண்டி, இவ்வண்டி, எவ்வண்டி – அ, இ-சுட்டு; எ வினா. மெல்லின ஒற்றுக்களுள் ண், ன் என்பன எங்கும் மிகா. மண், பொன் எனத் தனிக்குறிலின் பின் இருப்பின் வருமொழியில் உயிர்வந்தால், மண் + எடுத்தான் = மண்**ணெ**டுத்தான், பொன் + அளந்தான் = பொன்**ன**ளந்தான் என இரட்டிக்கும்.

அ**ங்**ஙனம், இ**ங்**ஙனம், எ**ங்**ஙனம், யா**ங்**ஙனம் - எனச் சுட்டிலும் வினாவிலும் 'ங்' மிகும்.

அ**ஞ்**ஞான்று, இ**ந்**நாய், எ**ம்**மாடு - எனச் சுட்டிலும் வினாவிலும் ஞ், ந், ம் என்பன மிகும்.

மெய்**ஞ்**ஞானம், செய்**ந்**நன்றி, செய்**ம்**முறை - எனத் தனிக்குறில் பக்கத்தில் 'ய்' வந்த நிலைமொழிகளில், ஞ், ந், ம் மிகும்.

மாங்காய், மாந்தளிர், மாம்பழம், விளாங்காய், விளாம்பழம், காயாம்பூ - எனச் சில மரப்பெயர்களில் ங், ந், ம் - மெலி மிகும்.

மேலே, இடை - மெலி மிகுதலில், மிகவும் இன்றியமையாதன எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. எந்த ஒற்றும் மிகுதலோ மிகாமையோ பொருள் பொருத்தம் கருதியேயாம்.

**உடம்படு மெய்**

மணி தீ-தலை என்னும் இ - ஈ ஐ என்னும் ஈறுகளில் முடியும் நிலைமொழிகளின் பின் உயிர் முதல் வருமொழி வரின், இடையில் 'ய்' என்னும் மெய் தோன்றும். சே - தே போன்ற 'ஏ' ஈற்றுச் சொற்களின் பின் உயிர்வரின், இடையில் ய், வ் என்பவற்றில் ஏதாவது ஒன்று தோன்றும். மற்ற உயிரீற்றுச் சொற்களின் பக்கத்தில் உயிர்வரின் இடையில் 'வ்'தோன்றும். இந்த ய், வ் என்னும் மெய்கட்கு 'உடம்படு மெய்' (இணைக்கிற மெய்) என்று பெயராம். எனவே, மணி × ஓசை என்பதை மணிவோசை என்பது தவறு; மணியோசை என்பதே சரி. பலா இனிது என்பதைப் பலாயினிது எனல் தவறு; பலாவினிது என்பதே சரி.

இது நிற்க,- ஒரு-கரு-பெரு என்பவற்றின் பின் ஆசிரியர், இருள், ஒளி என உயிர் முதல் வருமொழி வரின் ஒரு ஆசிரியர், கரு இருள் பெரு ஒளி எனல் தவறு ஓராசிரியர், காரிருள், பேரொளி எனலே சரி.

**கெடுதல் - திரிதல்**

இதுகாறும் புணர்ச்சி விதிகளுள், இடையே ஓர் எழுத்து தோன்றி மிகுதலைப் பற்றிப் பார்த்தோம். இனி, இடையே எழுத்து கெடுதல் பற்றியும் திரிதல் பற்றியும் பார்க்கலாம்.

காலொடிந்தது என உடல் மேல் உயிர் ஒன்று தலையும், கல்லுடைந்தது எனத் தனிக்குறிலின் பக்கத்தில் உள்ள ஒற்று இரட்டுதலையும், விளக்கெரிந்தது என ஈருயிர் இணையின் ஓருயிர் கெடுதலையும் முன்பு கண்டோம் மேலும் சில காண்பாம்.

மரம் + வேர் = மரவேர் எனவும், வட்டம் + வடிவம் = வட்ட வடிவம் எனவும் ஈற்று 'ம்' மெய் கெடுதல் உண்டு.

மண் + குடம் = மட்குடம், பொன் + குடம் பொற்குடம் என 'ண்' என்பது 'ட்' ஆகவும், 'ன்' என்பது 'ற்' ஆகவும் திரியும்.

பொன் + தொடி = பொற்றொடி, முள் + தாள் + தாமரை = முட்டாட்டாமரை என நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஆகிய இரண்டுமே திரிதலும் உண்டு. இவ்வாறு இன்னும் பல உள.

மேற் குறிப்பிட்டுள்ள புணர்ச்சி விதிகளை யெல்லாம் நன்கு கற்றுத் தெளியின் பிழையின்றி எழுதலாம்; செய்யுள் களைச் சந்தி பிரித்துப் பொருள் புரிந்து கொள்ளவும் இயலும், இவைதொடர்பான நன்னூல் பாக்களை எல்லாம் கற்றுக் கொள்ளவேண்டும்.

**வழக்கியல்**

'இலக்கணம் உடையது' (267) என்னும் நன்னூல் பாவில் உள்ள ஆறு வழக்கியல்களுள், சிறப்பாக மரூஉ, இடக்கரடக்கல், மங்கலம் என்னும் மூன்றையும் கட்டாயம் கற்றறிய வேண்டும்.

புதுச்சேரி புதுவை எனவும், சென்னப்பட்டணம் சென்னை எனவும் மருவி - சுருங்கி - வருவது மரூஉ எனப் படும். இதனை ஒருவகைச் சுருக்கெழுத்து (Short hand) என்றும் கூறலாம். நடைமுறை இலக்கணம் என்ற பெயரில் இது மிகவும் தேவை.

மலங் கழுவுதலைக் கால் கழுவுதல் என்றும், 'பீ' என் பதை 'பவ்வீ' (ப் + ஈ) என்றும் மறைமுகமாகக் கூறுவது இடக்கர் அடக்கல் ஆகும். இஃதும் மிகவும் தேவை. செத்தாரைத் துஞ்சினார் - இயற்கை எய்தினார் - கைலாச - வைகுந்த பதவியடைந்தார் - திருநாடு அணி செய்தார் என்றெல்லாம் கூறுவது மங்கலம். வழக்காற்றில் இன்ன பிற மிகவும் இன்றியமையாதவை.

**தொடரிலக்கணம்**

எழுத்துகளால் ஆனது சொல் - சொற்களால் ஆனது சொற்றொடர். சொற்றொடரைத் தொடர் எனவும் வாக்கியம் எனவும் கூறலாம். தொல்காப்பியமும் நன்னூலாரும் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் எழுதினார்களே தவிர, தொடர் அதிகாரம் எனத் தனியே ஒன்றும் எழுதவில்லை. ஆனால், தொல்காப்பியர் தொடரதிகாரத்தை - அதாவது தொடரிலக்கணத்தை, சொல்லதிகாரத்தின் ஒன்பது இயல்களுள் முதலாவதான 'கிளவியாக்கம்' என்னும் இயலுள் கூறியுள்ளார். அதன் பின்பே, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகிய சொற்களின் இலக்கணத்தைத் தனித்தனி இயலில் கூறியுள்ளார்.

**உளவியல் முறை**

சொல்லால் ஆனது தொடராதலின், சொல்லிலக்கணம் முதலில் கூறித் தொடரிலக்கணம் பின்பு கூறுவது 'காரண காரிய முறை' (Logic Method) ஆகும். தொடர் பற்றி முதலில் கூறிப் பின்னர்ச் சொற்களைப் பற்றிக் கூறுவது உளவியல் முறை (Psychological Method) ஆகும். இவற்றுள் பின்னதே சரியானது. மக்கள் தொடராகவே பேசுகின்றனர்; சொல் - சொல்லாக இடைவெளி விட்டுப் பேசுவதில்லை. முதற்கால மக்களும் இக்காலக் குழந்தைகளுங் கூட, தொடராகவே பேசினர் - பேசுகின்றனர். சில நேரம் தனிச் சொல் கூறினால், ஒரு தொடர் அதில் தொக்கியிருப்பதாகப் பொருள் கொள்ளல் வேண்டும். தனிச் சொல்லுக்கு மதிப்போ பொருளோ இல்லை. தொடராகச் சொல்லும் போது தான் ஒவ்வொரு சொல்லும் உரிய மதிப்பு பெறுகின்றது. கற்பிக்கும் ஆசிரியர், தனித் தனிச் சொல் தந்து சொற்றொடரில் (வாக்கியத்தில்) அமைத்து எழுதும்படி மாணாக்கர்க்குப் பயிற்சி அளிப்பார். தொடரில் வரும்

போது, கடினமான அரிய சொல்லுக்கும் பொருள் விளங்கக் கூடும். இதற்குத் 'தன் பொருளைத் தானே விளக்கும் தொடர்' என்று பெயர் கூறுவர். தனிச் சொல்லுக்கு மதிப்பு இல்லாதது போலவே, தனி எழுத்துக்கும் மதிப்பு இல்லை. சொல்லில் வரும் போதே சொல்லாக வரும் போதே தனி எழுத்துக்கு மதிப்பு உண்டு.

### ஒரு சொல் தொடர்

தனிச் சொல்லுக்கு மதிப்பு இல்லை எனினும், சில இடங்களில், ஒரு சொல்லே ஒரு தொடரின் பொருளைத் தருவதுண்டு. குழந்தை அம்மாவை நோக்கி 'அம்மா' என்று ஒரே சொல் சொல்லி விளித்தால், அம்மா தண்ணீர் வேண்டும் - அம்மா பால் வேண்டும் - அம்மா காசு வேண்டும் - என ஒரு தொடரே அதில் அடங்கியிருப்பதாகப் பொருள் கொள்ளல் வேண்டும்.

### இலக்கண இன்பம்

இலக்கணக் குறிப்பின் வாயிலாக இலக்கியத்தைச் சுவைக்கும் பயிற்சியும் வேண்டும். காட்டாக வினைத் தொகையை எடுத்துக் கொள்வோம். வினைத் தொகை என்பது பெயரெச்சத்தின் சுருக்கமேயாகும். வாழ்ந்த மனை - வாழ்கின்ற மனை - வாழும் மனை என்பனவும், முதிர்ந்த கனி – முதிர்கின்ற கனி - முதிரும் கனி என்பனவும், முறையே முக்காலம் காட்டும் பெயரெச்சங்களாகும். வாழ் மனை, முதிர் கனி என்பவற்றில் உள்ள வாழ், முதிர் என்பன வினைத் தொகைகள். இவற்றில் காலம் காட்டும் 'த்', 'கின்று' என்னும் இடை நிலைகளும், 'உம்' என்னும் விகுதியும் தொக்கு (மறைந்து) இருப்பதால், இவை வினைத் தொகை எனப்படும். அதாவது, வினைக்கு இன்றியமையாததாகக் கருதப்படும் காலம் மறைந்த பெயரெச்சம் வினைத் தொகையாகும்.

"வினையின் தொகுதி காலத்தியலும்" (தொல் - சொல் எச்சவியல் -19) என்பது தொல்காப்பிய நூற்பா. வினையின் தொகுதி என்பது வினைத்தொகை.

"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" (364). என்பது நன்னூல். எந்த வினைத் தொகையிலும் இடையில் ஒற்று மிகுதலோ, ஓரெழுத்து கெடுதலோ, ஒன்று மற்றொன்றாகத் திரிதலோ - எதுவும் கூடாது. வினைத் தொகை பற்றித் தெரிந்தால்தானே எந்த மாறுதலும் இன்றி இயற்கையாக எழுதமுடியும்! இந்தப் பயனோடு, இதில் உள்ள மொழி நயத்தைச் சுவைப்பதற்கு சாத்தனாரின் மணிமேகலை நூலிலிருந்து ஒரு பகுதியைக் காண்போம்:-

மாலைக்காட்சி ஒன்றைச் சாத்தனார் (ஷூட்டிங் செய்து) படம் பிடித்துக் கொடுத்துள்ளார். அதை நான் படிப்பவரின் உள்ளத்திரையில் (ஆப்பரேட் செய்து) போட்டுக் காட்டுவேன்:

ஒரு நாள் மாலை மயங்கும் நேரம் - ஒரு தாமரைத் தடாகம். காதலர்களாகிய சேவல் அன்னம் ஒன்றும் பெடை அன்னம் ஒன்றும் தடாகத்தில் தாமரை மலர்மேல் தாவித் தாவி விளையாடிக் கொண்டிருந்தன. பெடை அன்னம் விளையாடியதால் அயர்ந்து ஒரு பெரிய மலர் மேல் அமர்ந்தது. அப்போது அம்மலர் இயற்கையாகக் குவிந்து மூடி பெடை அன்னத்தை மறைத்து அடக்கிக் கொண்டது. பெடையைக் காணாத சேவல் சுற்று முற்றும் தேடி, பின் தாமரை மலரால் மூடப்பட்டிருந்ததை அறிந்து, இதழ்களை —மெதுவாக அன்று—கண்டபடி விரைந்து கிழித்து பெடையை அழைத்துக் கொண்டு கரையேறி விட்டது. இதனை, மணிமேகலையில்—மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதையில் உள்ள (123—126)

"அன்னச் சேவல் அயர்ந்து விளையாடிய
தன்னுறு பெடையைத் தாமரை அடக்கப்
பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்டு-ஏற"

என்னும் பாடல் பகுதியால் அறியலாம். ஈண்டு, தன்னுறு பெடை, அடக்க, பொதி சிதையக் கிழித்து—என்னும் சொல்லாட்சிகள் குறிப்பிடத்தக்கன.

சேவலுக்கு நீர் என்றாலே அச்சம் (அலர்ஜி) ஏற்பட்டு விட்டது. தண்ணீரினின்றும் நீண்ட இடைவெளி உள்ள ஓர் இடத்தில் தங்க வேண்டும் என எண்ணியது. கரையில் உள்ள ஒரு செடியில் தங்கலாமா? செடி உயரம் இல்லை. தண்ணீருக்கும் செடிக்கும் இடைவெளி குறைவு. அதனால் ஒரு மரத்தில் தங்க எண்ணியது. மரம் என்றால் உயர்ந்த மரமாயிருக்க வேண்டுமே! எனவே, அங்கிருந்த மர வகைகளில் உயர்ந்ததான தென்னையில் தங்க எண்ணியது. இருந்த தென்னை மரங்கட்குள்ளும் உயர்ந்த - மிக உயர்ந்த தென்னை மரத்தைத் தேர்ந்தெடுத்தது – அந்த மிக உயர்ந்த தென்னையிலும் எவ்விடத்தில் அமரலாம்? ஏதாவது ஒரு மடலில் (மட்டையில்) தானே அமர வேண்டும்! எந்த மடலில் அமரலாம்? நாள்பட்டதால் கீழ் நோக்கித் தொங்கும் மடல்களில் அமரப் பிடிக்கவில்லை. பக்க வாட்டத்தில் நீட்டிக் கொண்டிருக்கும் நடுத்தர மடல்களிலும் தங்க விருப்பம் இல்லை. மேல்நோக்கிச் செங்குத்தாக உயர்ந்து நீண்டு கொண்டிருக்கும் மடலிலே தங்க விரும்பியது. ஏனெனில், அந்த மடல், விநாடிக்கு விநாடி உயர்ந்து கொண்டே இருந்ததாம். (இந்தக் கருத்தைச் செகதீச சந்திரபோசின் ஆராய்ச்சியாலும் அறியலாம்). எனவே, அந்த மடலிலேயே தங்க எண்ணியது. இதனை, அந்தப் பாடல் பகுதியைத் தொடர்ந்துள்ள

"ஓங்கு இரும் தெங்கின் உயர்மடல் ஏற" (126)

என்னும் அடியால் அறியலாம். 'ஓங்கு' என்னும் வினைத் தொகை, மரம் ஓங்கிக் கொண்டே - உயர்ந்து கொண்டே இருக்கிறது என்பதை அறிவிக்கின்றது. உயர் மடல் என்னும் வினைத்தொகை, மடல் (மட்டை) நேரத்துக்கு நேரம் உயர்ந்து கொண்டிருக்கின்றது என்னும் நயத்தை அறிவிக் கிறது. உயர்ந்துகொண்டே இருப்பதால்தான் 'மடல் அமர' என்று கூறாமல், 'மடல் ஏற' என இன்னும் ஏறு முகமாகவே இருப்பதாகச் சாத்தனார் புனைந்து ஓவியப்படுத்தியுள்ளார். ஓங்கு தெங்கு - உயர்மடல் என்னும் வினைத்தொகைகளில் பொதிந்து கிடக்கும் மொழி நயச்சுவை – இலக்கண இன்பம் இப்போது விளங்கலாம்.

எனவே, நன்னூலில் உள்ள இலக்கணக் குறிப்புகளைக் கற்பிக்கும்போது, இயன்ற அளவு இலக்கியத்தோடு இணைத்துப் பொருத்திக் காட்டி இன்பம் பெறச் செய்தல் வேண்டும். இதனால், மாணாக்கர் இலக்கணத்தை ஆர்வமுடன் கற்பர்.

**இலக்கணத்தின் இன்றியமையாமை**

பல இலக்கணச் செய்திகளையும் கற்று மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும் என்பது இதுகாறும் அறிவிக்கப்பட்டது. இலக்கண விதி தெரியாமற் போனால் என்ன? ஏதுக்குறையக் கருத்தைத் தெரிவித்தால் போதாதா என்று கூறுபவர் இன்றும் உளர். அவர்கள் பேசுவதுபோல் எழுத வேண்டும் என்றும் கூறுவர்.

இதனால் ஏற்படும் இழப்பு சொல்லுந் தரத்த தன்று. பேசுவதுபோல் எழுத வேண்டும் எனில், யார் பேசுவது போல் எழுதல் வேண்டும். ஒரே மொழியை, மூலைக்கு மூலை வெவ்வேறு விதமாகப் பேசுகின்றனரே. இப்படியே போய்க்கொண்டிருந்தால் மொழி சிதைந்து பிரியும். தமிழில் தொடக்கக் காலத்தில் பேசப்பட்ட சொல்லுருவங்கள்,

எழுந்து வடிவம் பெற்றதும், இலக்கண நடை உடையன வாகக் கருதப்பட்டன. நாளடைவில் அவ்வுருவங்கள் பேச்சு மொழியில் சிதைந்து வழங்கப்படலாயின. பின்னர், சிதைந்த அந்தத் தமிழ் வடிவங்களே, நல்ல இலக்கண நடை உடையனபோல் கருதப்பட்டு, வேறு-வேறு மொழிகளாக மாறிப் பிரிந்தன. இவ்வாறு சிதைந்து பிரிந்ததற்குச் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

| **தமிழ்—** | **தெலுங்கு—** | **கன்னடம்—** | **மலையாளம்** |
|---|---|---|---|
| அண்ணன் | அன்ன | அண்ணா | ...... |
| தம்பி | தம்புடு | தம்ம | ... ... |
| அக்காள் | அக்க | அக்க | ... ... |
| தாத்தா | தாத | தாத | ... ... |
| மாமன் | மாம | மாவ | அம்மாவன் |
| ஊண் | ... ... | ஊண்ட | ஊண் |
| அது,இது,எது | அதி,இதி,எதி | அது,இது,எது | அது,இது, எது |
| மழை | வானெ | மளெ | மழ |
| பகல் | பகலு | அகலு | பகல் |
| யார் | எவரு | யாரு | யாராணு |
| ஊர் | ஊரு | ஊரு | ஊரி |
| ஊருக்கு | ஊரிக்கி | ஊரிகே | ஊரிலே |
| கண் | கண்ணு | கண்ணு | கண்ணு |
| மூக்கு | முக்கு | மூங்கி | மூக்கு |
| வாய் | ... ... | பாயி | வாயி |
| செவி | செவ்வு | ... ... | செவி |
| நாய் | ... ... | ... ... | நாயி |
| தலை | தல | தலெ | தல |
| எருது, காளை | எத்து | எத்து | காள |
| ஏழு | ஏடு | ஏளு | ஏழு |
| கூழ் | கூடு | கூளு | கூழு |

| தமிழ் — | தெலுங்கு — | கன்னடம் — | மலையாளம் |
|---|---|---|---|
| கடை | கட | கடெ | கட |
| மலை | மல | மலெ | மல |
| கரை | கர | கரெ | கர |
| உரல் | ரோலு | ஒரல் | ஒரல் |
| கெடு | செடு | கெடு | கெடு |
| இலை | எல | ........ | ........ |
| ஐந்து | ஐது | ஐது | அஞ்சு |
| யான் நான் | ஏனு, நேனு | நானு | ஞான் |
| பத்து | பதி | ஹத்து | பத்து |
| பெயர், பேர் | பேரு | ஹெசரு | பெயர் |
| பாம்பு | பாமு | ஹாவு | பாம்பு |
| குன்று | ...... | ...... | குன்னு |
| கொன்று | --- --- | --- --- | கொன்னு |
| தின்று | ........ | ........ | தின்னு |
| மகன் | ........ | மகனு | --- --- |
| மகள் | ........ | மகளு | ........ |

மேலே காட்டியவற்றில் உள்ள தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மும்மொழிகளின் இலக்கண நடைச் சொற்கள் ஏறக் குறையத் தமிழ் மொழியின் பேச்சு வழக்கில் உள்ள கொச்சைச் சொற்கள் போல இருப்பதை யாவரும் அறிவர். எனவே, குறிப்பிட்ட ஓர் இலக்கண நடையைப் பின் பற்றாமல், கண்டபடி மொழியைக் கையாளின், ஒரு மொழிச் சொற்கள் பலமொழிச் சொற்களாக மாறும் - அதாவது, பல மொழிகளாகப் பிரியும்; அதனால், மக்கள் பல்வேறு மொழியினராகப் பிரிவர். சேர நாட்டுத் தமிழர்கள் மலையாளிகளாக ஆனமை அறிந்த ஒன்றே.

இலத்தீன் மொழியிலிருந்து, இத்தாலி, பிரெஞ்சு, ஸ்பானிஷ், போர்ச்சுகீசியம் முதலிய மொழிகள் பிரிந்தது இந்த மாதிரியே யாகும். இவற்றுள் சிலவற்றை Spoken Latin என்று சிலர் சொல்வர்; அதாவது, இலத்தீனின் கொச்சைப் பேச்சு வடிவங்களே இம்மொழிகளாகத்திரிந்தன என்பர். இதில் சிலர்க்குக் கருத்து வேற்றுமையும் இருக்கலாம்.

எனவே, இலக்கணம், மக்கள் பிரியாதிருக்கும்படி அவர்களிடையே ஒருமைப்பாட்டை உண்டாக்குகிறது. எனலாம். தொல்காப்பியத்தில் உள்ளவற்றுள் சிலவற்றை நீக்கியும், இல்லாத சிலவற்றைச் சேர்த்தும் நன்னூலைப் பவணந்தியார் படைத்துள்ளார் என்பது உண்மைதான் அதனால், நடைமுறை இலக்கணம் என்று சொல்லிக் கொண்டு அளவு மீறிக் கண்டபடி மொழியில் மாற்றம் செய்யக்கூடாது. ஒரு சிறிதும் மாற்றம் செய்யக்கூடாது என்று பிடிவாதமாய் முரட்டுத்தனமாய்ப் பேசக்கூடாது. ஆர்தர் மன்னர் (King Arthur) தம் இறுதிக்காலத்தில் பெடீவர் (Bedeiver) என்னும் அமைச்சரை நோக்கி, "The old order changeth yielding place to new" என்று கூறினாராம். அதாவது, பழமை புதுமைக்கு இடம் தந்து மாறுகிறதாம். இதைத்தான் பவணந்தியார் தம் நன்னூலின் இறுதியில் பின்வருமாறு கூறிப்போந்தார்.

> "பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே" (462)

**கட்டுரைக்குக் கருத்து வழங்கிய கருவூலங்கள்**

தொல்காப்பியம் — தொல்காப்பியர்

நன்னூல் — பவணந்தி முனிவர்

நற்றிணை — பாடல் 359 — கபிலர்

மலைபடு கடாம் — இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார்

பெரும் பாணாற்றுப்படை — கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

மணிமேகலை — சாத்தனார்

திருநாவுக்கரசர் தேவாரம் — திருவானைக்காப் பதிகம்

கம்ப ராமாயணம் — கம்பர்

ஔவையார் தனிப்பாடல்

அம்பிகாபதி காதல் காப்பியம் — சுந்தர சண்முகனார்

தமிழ் இலத்தீன்பாலம் — சுந்தர சண்முகனார்

மொழியியல் கருத்துகள்

ஆங்கிலம் — பிரெஞ்சு — இலத்தீன் — இலக்கணக் குறிப்புகள் சில

தெலுங்கு — கன்னடம் — மலையாளம் — இவற்றின் சொற்கள் சில

# பிற்சேர்க்கை

## 'ஏ' - இடைச்சொல்

### புதிய கண்டுபிடிப்பு

இது தொடர்பான செய்தியைக் கூற, கம்பராமாயணம்-கிட்கிந்தா காண்டம் - நட்புக் கோள் படலத்தில் உள்ள ஒரு செய்யுளை நோக்கிச் செல்லலாம்.

அனுமன் கூறிய சூழ்வுரைகளைத் தன் அறிவுக் கூர்மையால் ஆய்ந்தறிந்த சுக்கிரீவன், அனுமனை நோக்கி, பொன்னைப் போன்றவனே! உன்னையே உடைமையாகப் பெற்ற எனக்கு இயலாதது ஒன்றுமில்லை. இராமனிடம் போவோம் வருக என்று கூறிச் சென்று தனக்குத் தானே ஒத்தவனாகிய இராமனின் தாள் சேர்ந்தான்.

அன்னவாம் உரையெலாம் அறிவினால் உணர்குவான்
உன்னையே உடைய எற்கு அரியது எப்பொருளரோ
பொன்னையே பொருவுவாய் போதெனப் போதுவான்
தன்னையே அனையவன் சரணம்வந் தணுகினான் (16)

'உன்னையே உடைய' என்பது பொருள் பொதிந்த தொடர். நீயே என் முழு உடைமைப் பொருள் எனவும், என் உடைமைப் பொருள்களுள் நீயே சிறந்த உடைமை எனவும், மிகவும் சிறந்தவனாகிய உன்னையே யான் உடைமையாக உடையேன் எனவும் இந்தத் தொடருக்குப் பொருள் கூறலாம். இங்கே புதிய இலக்கணக் குறிப்பு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளேன். அதாவது:

'ஏ' என்ற இடைச் சொல்லுக்குத் தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை என ஐந்து பொருள்கள் உண்டெனவும், 'உம்' என்னும் இடைச்சொல்லுக்கு எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருள்கள் உண்டெனவும் தொல்காப்பியர் இடையியலில் கூறியுள்ளார்.

"தேற்றம் வினாவே, பிரிநிலை, எண்ணே,
ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே" (9)

"எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்று
அப்பா லெட்டே உம்மைச் சொல்லே" (7)

என்பன நூற்பாக்கள்.

'ஏ' இடைச் சொல்லுக்குத் தொல்காப்பியர் கூறியுள்ள வற்றோடு 'இசைநிறை' என்ற ஒன்று கூட்டி 'ஏ' ஆறு பொருளில் வரும் என்று நன்னூலார் இடையியலில் கூறியுள்ளார்.

"பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை என ஆறு ஏகாரம்மே" (3)

என்பது நூற்பா. 'உம்' (உம்மை) என்னும் இடைச் சொல்லுக்கு நன்னூலாரும் எட்டுப் பொருள்கள் கூறியுள்ளார்.

"எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம்முற்று அளவை
தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே" (6)

என்பது நூற்பா.

தொல்காப்பியரும் நன்னூலாரும் 'உம்' என்னும் இடைச்சொல்லுக்கே 'சிறப்பு' என்னும் பொருள் உண்டு என்றுள்ளனர்; 'ஏ' என்னும் இடைச்சொல்லுக்குச் 'சிறப்பு' என்னும் பொருள் உண்டென அவர்கள் கூறிற்றிலர். 'ஏ' என்னும் இடைச்சொல்லும் 'சிறப்பு' என்னும் பொருள் தரும் என அடியேன் (சு. ச.) கூறுகிறேன். இதை விளக்க மீண்டும் 'உன்னையே உடைய' என்னும் தொடருக்கு வருவோம். இதற்கு, 'நீயே என் முழு உடைமைப் பொருள்' எனப் பொருள் கூறின் 'ஏ' தேற்றமாகும். 'என் உடைமைப் பொருள்களுள் நீயே சிறந்த உடைமை' எனப் பொருள் கூறின் 'ஏ' பிரிநிலையாகும். மிகவும் சிறந்தவனாகிய உன்னையே யான் உடைமையாக உடையேன்' எனப் பொருள் கூறின் 'ஏ' சிறப்பு ஆகும். தொல்காப்பியரும் நன்னூல் இயற்றிய பவணந்தியாரும் கூறாத சிறப்புப் பொருள் 'ஏ' என்னும் இடைச் சொல்லுக்கும் உண்டு என்பதுதான் அடியேனது புதுக் கண்டுபிடிப்பாகும்.

# 22. பதப் புணர்ச்சியும் விகுதிப் புணர்ச்சியும்

## 1. சொல் புணர்ச்சி

பதப் புணர்ச்சியும் விகுதிப் புணர்ச்சியும்' என்னும் தலைப்பு எனக்குத் தரப்பட்டுள்ளது. பழந்தமிழ்-புதிய

தமிழ் என்பதும், பழந்தமிழ்ச் செய்திகளைப் புதிய தமிழ்க் கட்டுரையில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களை நான் தொடப்போவதில்லை. அவற்றை அறவே மறந்து-அதாவது-அப்படியாக எந்த ஒரு நூலும் இல்லை என்பதாகக் கற்பனை செய்து கொண்டும் நான் சொந்தமாகப் புது இலக்கணம் படைப்பவன் என்பதாக எண்ணிக்கொண்டும் செய்தியைத் தொடங்குகிறேன். இது மட்டுமன்று; மொழியியல் என்னும் ஒன்று இருப்பதாகவும் எண்ணாமல் தொடங்குகிறேன்.

பதப் புணர்ச்சி என்பதைச் சொல் புணர்ச்சி என்றும், விகுதிப் புணர்ச்சி என்பதை இறுதிநிலைப் புணர்ச்சி என்றும் தமிழில் கூறலாம். சொல் (பதப்) புணர்ச்சி என்றால் எல்லா வகைப் புணர்ச்சிகளையும் தொட வேண்டி வரும். அதாவது-உயிரீற்றுப் புணர்ச்சி, மெய் யீற்றுப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி இன்ன பிறவற்றை எல்லாம் குறிப்பிடவேண்டும். இந்தப் புணர்ச்சிகளுள் சிலவற்றைப் பற்றி நெடுங்காலமாய் யான் எண்ணியிருந்த சில செய்திகளை இவண் தரக் கடமைப்பட்டுள்ளேன்.

புணர்ச்சி என்பது செயற்கையாகச் செய்து கொண்ட ஓர் ஏற்பாடு. இந்தச் சொல்லையும் அந்தச் சொல்லையும் இணைத்து எழுதும்போது, நடுவில் இன்னின்ன நிலைமைகள் ஏற்படலாம் என்று எண்ணி யாரும் தம் சொந்த முறையில் புணர்ச்சி இலக்கணம் வகுக்க வில்லை.

முதலில் எழுத்துகள், பின் எழுத்துகளால் ஆன சொற்கள், பின் சொற்களால் ஆன சொற்றொடர்கள் என்ற காரண காரிய முறை தொடக்கக் காலத்தில் இருந்ததில்லை. அதாவது, தொடக்கக் காலத்தில், மக்கள், அ......ம்......மா......என எழுத்து எழுத்தாகப் பேசவில்லை;

அம்மா .. சோறு போடு எனச் சொல் சொல்லாகவும் பேசவில்லை. அம்மா சோறு போடு என இயற்கையான சொற்றொடராகவே பேசினர்.

ஏதோ குருட்டாம் போக்கில் மக்கள் மொத்தையாக - ஒலித் தொகுப்பாகப் பேசியவற்றிலிருந்து சொற்கள் பிரித்தெடுக்கப்பட்டன. பின், சொற்களிலிருந்து எழுத்துகள் பிரித்தெடுக்கப்பட்டன. நாளடைவில், எழுத்துகள் பற்றியும் சொற்கள் பற்றியும் சொற்றொடர்கள் பற்றியும் இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது.

## 1-2 தவறான புணர்ச்சி

எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நெய்யை எள்நெய் என்று குறிப்பிட்டனர். அது நாளடைவில், எள்நெய் – எள்நெய் எண்ணெய் - எண்ணெய் என்று சொல்லும் நிலை பெற்றது. பின்னர், எள் + நெய் என்பன போன்றவை சேர்ந்தால் எண்ணெய் என்பதுபோல் ஆகும் என்ற செயற்கையான விதி கிடைத்தது. விளக்கு எரிய ஊற்றும் எண்ணெயை, விளக்கு எண்ணெய் என்றனர். இது நாளடைவில், விளக்கு எண்ணெய் - விளக்கு எண்ணெய் - விளக்கெண்ணெய் - விளக்கெண்ணெய் என்று சொல்லப்படும் நிலையை அடைந்தது. இப்படி ஆகும் அமைப்புக்குப் புணர்ச்சி இலக்கணம் என்னும் பெயர் தரப்பட்டது. ஆனால், இந்த இலக்கணம் தவறான அமைப்பாகும்; எள் நெய் என்று சொல்வதும், விளக்கு எண்ணெய் என்று சொல்வதுமே தவறு இல்லாத பொருத்தமான வழக்காறாகும்.

## 1-3 பொருந்தும் புணர்ச்சி

முள் பொருந்திய தண்டை உடைய தாமரையை முள் தாள் தாமரை என்றனர். இது பின்னர் முட்டாள் தாமரை முட்டாட்டாமரை என்று ஒரு வகை இலக்கண விதிப்படி எழுதப்பட்டது. முட்டாட்டாமரை என்ற பெயர் உள்ள பொருள் எதுவும் இல்லை. முள் தாள் தாமரைதான் உள்ளது. இதுவே பொருத்தமானது.

கடல் தாவு படலம் என்பதனைக் கடறாவு படலம் என ஏதோ இலக்கணம் வகுத்து எழுதினர். இது தவறு. கடல் தாவு படலம் என்பதே பொருத்தம்.

தமிழ் வித்துவானும் தமிழ் முதுகலையும் (எம்.ஏவும்) படித்த ஒருவர் 'இறுதி னிலை' என்று எழுதினார். இது இவருடைய தவறு அன்று. இலக்கண ஆசிரியர்களின் தவறாகும். இலக்கண ஆசிரியர்கள், முதல் நிலை என்பது முத நிலை-முதனிலை என்றாகும் என விதி செய்தனர். இந்தத் தவறான முறையைப் பார்த்த அந்த ஆசிரியர் இறுதினிலை என்று எழுதினார். இப்படி எழுதலாமா என்று கேட்டதற்கு முதனிலை என்று எழுதும்போது, இறுதினிலை என்றுதானே எழுத வேண்டும்?- என்று அவர் கூறினார்.

இவ்விதமாக, இலக்கண விதிகள் என்னும் பெயரால் எழுதப்படும் புணர்ச்சி விதிகள் அனைத்தும் இயற்கை யானவை அல்ல - செயற்கையானவையே. அவ்வளவு ஏன்? புணர்ச்சி விதிகள் என்பன எல்லாமே தவறான முடிவுகளே.

## 1.4 மூவகை விகாரங்கள்

மக்கள் சொற்றொடராகப் பேசுவர் என்னும் கருத்து முன்னரே சொல்லப்பட்டது. மக்கள் சொற்றொடராகப் பேசும்போது, முதலில் நிற்கும் சொல்லும் (நிலைமொழியும்), அடுத்து வரும் சொல்லும் (வரு மொழியும்) சேரும்போது இடையில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. வெள்ளி + கிழமை = வெள்ளி + க் + கிழமை = வெள்ளிக் கிழமை எனவும், திரு + அடி = திரு + வ் + அடி = திருவடி எனவும், அங்கே இல்லாத எழுத்துகள் புதிதாய்த் தோன்று கின்றன. பொன் + தாமரை = பொற்றாமரை, நல் + நாடு = நன்னாடு என்பனவற்றில், சில எழுத்துகள் வேறு எழுத்துகளாய்த் திரிகின்றன. மரம் + வேர் = மரவேர், இளம் + நீர் = இளநீர் என்பவற்றில் எழுத்துகள் கெடு

கின்றன. சொற்கள் புணரும்போது ஏற்படும் மாறுதல்கள் இன்ன பிற. குளம் + வெட்டினான் = குளம் வெட்டினான் என இயல்பாக இருப்பதும் உண்டு.

## 1.5 பேச்சே இலக்கணம்

செயற்கைப் புணர்ச்சி முறையில் எழுதினால், இவர் இலக்கணம் படித்தவர் - இலக்கணமாக எழுதுகிறார் என்பர். ஆனால், இவை எழுத்துத் தமிழ் அல்ல - அதாவது- இலக்கியத் தமிழ் அல்ல - இவை பேச்சுத் தமிழே.

எழுத்துகள் தோன்றியும் திரிந்தும் கெட்டும் பேசப்படுகின்ற பேச்சுத் தமிழ் வழக்காறுகளே, இலக்கணம் உடையவை எனக் கருதப்பட்டு இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்றபடி, மக்கள் எழுதத் தொடங்கியபோது, எதைப் பேசினார்களோ - எவ்வாறு பேசினார்களோ அதையே அவ்வாறே எழுதினர். இதை இதை - இப்படி இப்படியே எழுதல் வேண்டும் எனப் பின்னர் அறிவுறுத்தினர். இதற்குப் புணரியல் (மயங் கியல்) அதாவது புணர்ச்சி யிலக்கணம் என்னும் பெயர் சூட்டப் பட்டது.

## 1.6 நன்மையும் நோக்கமும்

இந்தப் புணரியல் செய்யும் நன்மை - அதன் நோக்கம் என்ன? மக்கள் மேலும் மேலும் மாறுதலாக எழுதாமல், இந்த அளவோடாவது ஒரே மாதிரியாய் எழுத வேண்டும். அப்படி இல்லையேல், மொழி இன்னும் மாறிக் கொண்டே போய் வேறொரு மொழி போன்ற நிலையை அடைந்து விடும் - இதற்கு இடம் தரலாகாது - என்பதுதான் புணர்ச்சி இலக்கணத்தின் நன்மையும் நோக்கமும் ஆகும். ஒரே

மாதிரியைப் பின்பற்றாததனால்தான், சோழ நாட்டு மொழியும் பாண்டிய நாட்டு மொழியும் தமிழ் என்னும் பெயரும், சேர நாட்டு மொழி மலையாளம் என்னும் பெயரும் பெற்று வேறு வேறு மொழிகளாய் விட்டன.

இதிலிருந்து அறியக் கூடியதாவது:- இனமும் நாடும் மேலும் மேலும் பிரியாதபடி ஒருமைப்பாட்டைக் காக்கும் தகுதி இலக்கணத்திற்கு உண்டு என்பதாகும்.

இப்பொழுது நடைமுறையில் இருக்கும் புணர்ச்சி விதிகளை மிகுதியாய் மாற்றினால், பழைய எமனா - புதிய எமனா என்று கேட்டதுபோல, பழைய தமிழ் - புதிய தமிழ் என மொழி இரண்டு மொழிகளாகப் பிரிந்துவிடும் இடுக்கண் (ஆபத்து) நேர்ந்து விடலாம்.

இது தொடர்பாக நாம் இப்போது செய்யக் கூடிய தாவது:- இப்போது நடைமுறையில் இருக்கும் புணர்ச்சி விதிகளுள், வேண்டியவற்றையும் பொருந்துகின்றவற்றையும் வைத்துக் கொண்டு, வேண்டாதவற்றையும் பொருந்தாத வற்றையும் விட்டு விடலாம் என்பதே.

**1-7 வேண்டாப் புணர்ச்சிகள்**

வேண்டாதவை என்பன:- முதல் நிலை என்பதை முதனிலை என எழுதாமல் முதல் நிலை என்றே தெளிவாய் எழுதலாம். மானும் மயிலும் என்பதை, நிலைமொழி யீற்று 'ம்' என்பதைக் கெடுத்து மானு மயிலும் என்று எழுதாமல், மானும் மயிலும் என்றே தெளிவாக எழுதலாம். கள் மலர் என்பதைக் கண்மலர் என்றெழுதாமல், கள் மலர் என்றே தெளிவாய் எழுதலாம். முள்தாள் தாமரை என்பதை முட்டாட்டாமரை என எழுதாமல், முள் தாள் தாமரை என்றே புரியும்படி எழுதலாம்.

## 1-8 வேண்டும் புணர்ச்சிகள்

இதுபோல எல்லாப் புணர்ச்சி விதிகளையும் செய்ய வேண்டிய தில்லை. கல் + அடி என்பதை, கல் + ல் + அடி என மற்றொரு 'ல்' இரட்டிக்கச் செய்து கல்லடி என எழுதலாம். இது, தவிர்க்க முடியாத-ஓரளவு இயற்கையான பேச்சு வழக்காகும், தொடக்கக் காலத்தின் பேச்சு வழக்கே எழுத்து வழக்காக எழுதப்பட்டது என்பதை மீண்டும் நினைவில் கொள்ளல் வேண்டும்.

## 8-1 கல்லடி

இங்கே, தனிக் குற்றெழுத்தின் பக்கத்தில் மெய் யெழுத்து வந்துள்ள (கல்) நிலை மொழியின் முன், உயிர் எழுத்தை முதலில் கொண்ட (அடி) வருமொழி வருமாயின், இன்னொரு மெய்யெழுத்து இரட்டித்து வரும். இவ்விதியின் படி, கல் + அடி என்பது, கல் + ல் + அடி = கல்லடி என்றாயிற்று என விதி வகுத்திருப்பதை ஏற்றுக் கொள்ளலாம்.

ஆங்கிலத்திலும் இந்த அமைப்பு உண்டு. Big (Bi - பி, g-க் = பிக்) என்னும் தனிக் குறிலின் பின் ஒற்று வந்த நிலைமொழியின் முன், e என்னும் உயிரெழுத்தை முதலாக உடைய est (Superlative Degree) என்னும் குறியீடு வரின், இடையே மற்றொரு 'g' என்னும் மெய் வந்து big + g + est = biggest என்றாகும் என்னும் விதிகிடைக்கிறது. Thin + n + er = Thinner, Cut + t + ing = Cutting எனப் பல எடுத்துக்காட்டுகள் ஆங்கிலத்தில் உள்ளன.

## 1-8-2 காலடி

கால் + அடி = காலடி என்னும் புணர்ச்சியும் ஏற்கத் தக்கதே. கல்லடி என்பதில் கல் + ல் + அடி என 'ல்' இரட்டித்துள்ளது. கால் + அடி = காலடி என்பதில் 'ல்'

இரட்டாததற்கு உரிய காரணம் என்ன? கல்லடி என்பதில், முதலெழுத்தில் ஒலி முயற்சி மிகுதியாகச் செலவழிக்கப்படவில்லை; அதனால், இரண்டாவது எழுத்தில் ஒலி முயற்சி அழுத்தம் பெறுகிறது; அதனால் 'ல்' இரட்டிக்கிறது. ஆனால் கால் + அடி என்பதில் முதலெழுத்தாகிய 'கா' என்னும் நெட்டெழுத்தின் ஒலிமுயற்சி மிகுதியாகச் செலவானதால், அடுத்த எழுத்தில் ஒலி முயற்சி குறைகிறது. அதனால் 'ல்' இரட்டாமல் கால் + அடி = காலடி என்றே ஒலிக்கப் படுகிறது. கடல் + ஓசை கடலோசை, அகலம் + ஆயிற்று = அகலமாயிற்று - எனத் தனிக் குறிலின் பக்கத்தில் இல்லாமல், தனி நெடிலுக்குப் பக்கத்திலும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் கொண்ட சொற்களின் பக்கத்திலும் உயிரை முதலாகக் கொண்ட வருமொழி வரின், நிலை மொழி ஈற்று மெய்யோடு வருமொழி முதலில் உள்ள உயிர் இணைந்து உயிர்மெய் எழுத்தாக ஒலிக்கும்.

பிரெஞ்சு மொழியிலும் இந்த அமைப்பு உண்டு. Comment allez vous என்னும் பிரெஞ்சுத் தொடரின் ஆங்கிலப் பெயர்ப்பு How are you என்பதாகும். Comment How, allez = are, Vous = you. நீர் எப்படி இருக்கிறீர்? என்பது இதன் பொருள். Comment என்பதைத் தனியாக ஒலிக்கும்போது 'கொம்மான்' என்றே ஒலிக்கவேண்டும். இறுதி t ஒலி பெறா ஊமை (Silent) எழுத்து. இந்த t என்பதே, Comment allez vous என்னும் தொடரில் வரும்போது 'த்' என்னும் தகர ஒலி பெறுகிறது. வருமொழியில் allez என a என்னும் உயிர் முதல் மொழி இருப்பதால், கொம்மான் தலே வு (Commen ta llez vous) என்று ஒலிக்கப் படுகிறது. (Comment = கொம்மான், allez = அலே, vous = வு. ஆங்கிலத்தில் 'டி' என்னும் டகரஒலி பெறும் t என்பது, பிரெஞ்சில் 'தே' எனத் தகர ஒலி பெற்று ஒலிக்கப்படும்).

### 1-8-3 பத்தடி

நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் உயிர் இருப்பின், ஏதாவது ஓர் உயிர் கெடும். பத்து + அடி என்பன இணையின் பத்தடி என்றாகும்: பத்து என்பதின் ஈற்றில் (த் + உ) 'உ' என்னும் உயிர் உள்ளது. அடி என்னும் வருமொழியின் முதலில் 'அ' என்னும் வரு மொழியின் முதலில் 'அ' என்னும் உயிர் உள்ளது. இரண்டு உயிர்கள் உடம்பு (மெய் எழுத்து) இன்றி ஒன்றா. ஆகலின், பத்து என்பதின் ஈற்று 'உ' கெட, பத்த் என்று நிலை மொழி உள்ளது. இதோடு 'அ' சேரும்போது (த்+அ=த) பத்தடி என ஆகிறது.

இந்த அமைப்பு ஆங்கிலத்திலும் உண்டு. No + one = என்பது, ஓர் 'O' கெட்டு None என்றாயிற்று. No + ever என்பது 'O' என்றும் உயிர்கெட Never என்றாயிற்று.

பிரெஞ்சிலும் இந்த அமைப்பு உண்டு. Je + ai (I have) என்பன இணையும்போது, Je என்பதின் ஈற்றில் உள்ள 'e' என்னும் உயிர் கெட J'ai என்னும் உருவம் உண்டாகிறது. 'e' கெட்டது என்பதற்கு அடையாளம் ஆக J என்பதன் பக்கதில், என்னும் 'எழுத்தெச்சக்குறி' (Apostrophe) இடப் பட்டு J'ai என்றாயிற்று.

### 1-8-4 மணியொலி

உடம்பு (மெய்) இல்லாமல் இரண்டு உயிர்கள் இணைய முடியாது என்பது உண்மைதான். அவ்வாறு இணையின், இரண்டில் ஓர் உயிர் கெடும் எனக் கண்டோம். கெடுவது (பெரும்பாலும்) நிலைமொழி ஈற்று உயிர்தான். அப்படி ஓர் உயிர் கெடவில்லையாயின், இரண்டு உயிர் களையும் இணைக்க இரண்டிற்கும் இடையிலே ஏதாவது ஒரு மெய் வரவேண்டும். எ. கா.:- மணி + ஒலி = மண் இ + ஒலி = மண் இ + ய் + ஒலி = மணியொலி. இங்கே,

நிலைமொழி ஈற்று இகர உயிரையும், வருமொழி முதலில் உள்ள ஒகர உயிரையும் உடம்படுத்த (இணைக்க) 'ய்' என்னும் மெய் இடையே வந்துள்ளது.

நிலா + ஒளி = நில் ஆ + ஒளி = நில் ஆ + வ் + ஒளி = நிலாவொளி. இங்கே நிலைமொழி ஈற்று ஆகார உயிரையும் வருமொழி முதலில் உள்ள ஒகர உயிரையும் இணைக்க 'வ்' என்னும் மெய் வந்துள்ளது. நாம் ஒலிக்கும் போது, நம்மையும் அறியாமல், ய் என்பதோ, வ் என்பதோ ஓடி வந்து இடையில் விழுகிறது.

இரண்டு உயிர்களை இணைக்க இடையிலே மெய் வருவது ஆங்கிலத்திலும் ஓரளவு உண்டு. ஒரு பூனை என்பதற்கு ஆங்கிலம் A cat என்பதாகும். இவ்வாறு ஒரு விலங்கு என்பதற்கு A animal என்று எழுதலாகாது. ஏனெனில், உயிர் எழுத்தாகிய, A என்னும் ஓரெழுத்து மொழிமுன், a என்னும் உயிர் முதல் வருமொழியாகிய animal வந்திருப்பதால், இடையிலே 'n' என்னும் மெய்யெழுத்து இட்டு An animal எனல் வேண்டும். a, e, i, o, u, என்னும் ஐந்தும் ஆங்கிலத்தில் உயிர் எழுத்துகள். (இலத்தீனில் 'y' என்பதும் சேர்த்து உயிர் ஆறாகும். ஆங்கிலத்திலும் copy முதலிய சில சொற்களில் y உயிரெழுத்தாக ஒலிக்கும்.)

ஆங்கிலத்தில் an animal, an egg, an idea, an ocean, an umbrella என a என்பதையும், a, e, i, o, u, என்னும் உயிரெழுத்துக்களையும் இணைக்க இடையிலே N என்னும் மெய் வந்துள்ளமையைக் காணலாம்.

A union என்பனவற்றை இணைக்கும்போது An union என்று இடையில் N இட்டு இணைக்கலாகாது. இங்கே 'U' என்பது, umbrella என்பதில் 'அ' என்ற உயிர் போல் ஒலிப்பதுபோல் இன்றி, யூனியன் என யூ என்னும்

(ய் + ஊ) மெய்யெழுத்தாக ஒலிப்பதால், A union என்று தான் எழுதல் வேண்டும்.

ஆனால், ஒரு மணி நேரம் என்னும் பொருளில் 'An hour' என்று எழுதுகிறார்களே – இங்கே வருமொழி முதலில் உயிர் இன்றி, 'h' என்னும் மெய்யல்லவா உள்ளது? - என்று வினவலாம். hour என்பதில் h என்பதற்கு ஒலிப்பே இன்றி, 'அவர்' என உயிர் முதல் வருமொழிபோல் ஒலிப்பதால் An hour என எழுதுகின்றனர்.

தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு என்னும் மும்மொழிகளி லிருந்து தந்த எடுத்துக்காட்டுகளால் தெரிய வருவதாவது: புணர்ச்சி விதி என்பது, மக்களின் பேச்சு வழக்காற்றை ஒட்டியே எழுந்ததாகும் என்பது.

## 1-8-5 பொருந்துவனவும் பொருந்தாதனவும்

எனவே, கல்லடி, காலடி, பத்தடி, மணியோசை போன்ற எளிய புணர்ச்சி விதிகளை வைத்துக் கொள்ளலாம். முட்டாட்டாமரை, கடறாவு படலம் போன்ற வலிய புணர்ச்சிகளைப் பின்பற்றாமல் விடலாம். மற்றும், ஒன்பது + பத்து என்பன சேர்ந்து தொண்ணூறு எனவும், ஒன்பது + நூறு என்பன சேர்ந்து தொள்ளாயிரம் எனவும் ஆனதாகக் கூறும் பொருளற்ற புணர்ச்சி விதிகளை அறவே அகற்றி விடலாம். ஏனெனில், ஒன்பது பத்து - ஒன்பது பத்து என ஆயிரம் முறை கூறினும் தொண்ணூறு என்னும் தொகுப் பொலி கிடைக்காது. ஒன்பது நூறு – ஒன்பது நூறு எனப் பதினாயிரம் முறை கூறினும் தொள்ளாயிரம் என்னும் தொகுப்பொலி கிடைக்காது. அதே நேரத்தில். கல் அடி, கால் அடி என்பவற்றை, கல் அடி – கல் அடி = கல்அடி, கால் அடி - கால் அடி = காலடி என ஓரிரு முறை கூறினாலுமே கல்லடி, காலடி என்னும் தொகுப்பொலிகள் கிடைக்கின்றன. எனவே, தொண்ணூறு,

தொள்ளாயிரம் என்பவற்றின் புணர்ச்சி விதிகளையும் நீக்கிவிடலாம்.

இவ்வாறாக, பொருந்தும் புணர்ச்சி விதிகளையும் இயற்கையாக வேண்டத் தகும் புணர்ச்சி விதிகளையும் கொள்ளலாம். பொருந்தாத - வேண்டாத புணர்ச்சி விதிகளைத் தள்ளலாம்.

## 1-9 பொருள் உள்ள புணர்ச்சிகள்

இதுகாறும் இரண்டு சொற்கள் புணரும்போது உண்டாகும் தோன்றல் திரிதல் கெடுதல் ஆகியமாறுதல் களைப் பார்த்தோம். இந்த மாறுபாடுகள் எந்தப் புதுப்பொருளையும் தரவில்லை. புதுப்பொருள்கள் தரும் மாறுதல்களும் உண்டு. அவற்றுள் சில காண்போம்:

### 1-9-1 நாலேகால்

நால் + கால் = நால் + உ + கால் = நாலுகால். நால் + ஏ + கால் = நாலே கால். இந்த இரண்டிற்கும் பொருள் காணுங்கால் வேறுபாடு உண்டு. நாலுகால் என்பது நான்கு கால்களைக் குறிக்கிறது. நால் என்பதின் ஈற்றில் உள்ள 'உ' என்பதைச் சார்ந்துவரும் எழுத்து சாரியை - என்பர். இந்த 'உ' சாரியை, தமிழினும் தெலுங்கில் மிகுதி. இந்த 'உ' சாரியைக்குப் பொருள் இல்லை; மக்களின் ஒலி இறுதியில் இசைபோல் நீள்கிறது என்னும் ஒருசார் ஒலி இன்பத்தைத் தவிரவேறில்லை.

ஆனால், நால் + ஏ + கால் = நாலேகால் என்பதில், இடையில் உள்ள 'ஏ' என்பதற்குப் பொருள் உண்டு. நாலேகால் என்பதில், நான்கு காலுக்குக் குறைவும் இல்லை - மிகுதியும் இல்லை - நான்கே கால்கள் மட்டுமே என இந்த 'ஏ' தேற்றப்பொருளைத் (உறுதியைத்) தருகிறது. இதற்கு வேறொரு பொருளும் உண்டு.

நால் + ஏ + கால் = $4 \times \frac{1}{4} = 1$ (ஒன்று) என்னும் பொருள் அது. இங்கே 'ஏ' என்பது, பெருக்கல் குறியின் வடிவாய் நின்று, பெருக்கல் பொருளைத் தருகிறது. மற்றும், $4 + \frac{1}{4} = 4\frac{1}{4}$ என்னும் பொருளும் இதற்கு உண்டு.

### 1-9-2 கம்பங் கூழ்

கம்பு + கூழ் = கம்பு + அம் + கூழ் = கம்பங்கூழ் என்பதில், கம்பு - கூழ் என்பவற்றின் இடையில் உள்ள 'அம்' என்பதைப் பொருள் அற்ற சாரியையாக எண்ண லாகாது. கம்பால் ஆன கூழ் என மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் ஆக இந்த அம் உள்ளது. இது பொருள் உள்ளது.

### 1-9-3 கருப்பஞ்சாறு

கரும்பு + சாறு = கரும்பு + அம் + சாறு = கருப்பு + அம் + சாறு = கருப்பஞ்சாறு, என்பதில், இடையில் உள்ள 'அம்' என்பது, கரும்பிலிருந்து எடுக்கப்பட்ட சாறு என ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனுமான பொருள் தந்து நிற்கிறது. (நீக்கல் பொருள் உருபு)

### 1-9-4 வேலங்கிளை

வேல் + கிளை = வேல் + அம் + கிளை = வேலங் கிளை என்பதில், இடையில் உள்ள 'அம்' என்பது, வேலமரத்தினது கிளை என ஆறாம் வேற்றுமையின் 'அது' உருபுப்பொருளிலும், வேலமரத்தில் உள்ள கிளை என ஏழாம் வேற்றுமை உருபும் (இல்) பயனுமான பொருளிலும் இருப்பதாகக் கொள்ளலாம். ஆக, அம் என்பது வேற்றுமை உருபாகவும் செயல்படுகிறது.

### 1-9-5 குரங்கின் வால்

குரங்குவால், எலி, வளை என்பன, குரங்கினது வால், எலியினது வளை என ஆறாம் வேற்றுமைத் தொகையாக

உள்ளன. குரங்கின் வால், எலியின் வளை எனினும் பொருள் அன்னவையே. ஆனால், இங்கே 'இன்' என்பது, ஆறாம் வேற்றுமை உருபாக உள்ளது. இதை வெற்றுச் சாரியை எனல் பொருந்தாது. குரங்கின் வால், எலியின் வளை என்பன ஆறாம் வேற்றுமை விரியாகும்.

## 1-9-6 மரத்தின்மேல் ஏறினான்

மரத்தின்மேல் ஏறினான், மரத்தின் கீழ் அமர்ந்தான் என்பனவற்றிலும் 'இன்' ஆறாம்வேற்றுமைப் பொருளில் உள்ளது. மரத்தினது மேல்பகுதியில் ஏறினான்; மரத்தினது கீழ்ப்பகுதியில் அமர்ந்தான் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். மரத்து என்பதில் உள்ள 'அத்து' என்பது சாரியை. இதைத் துணை உருபு என்றும் கொள்ளலாம். மரத்தின்மேல், மரத்தின்கீழ் என்பன ஆறாம் வேற்றுமை விரியாகும். மேல் ஏறினான், கீழ் அமர்ந்தான் என்பன ஏழாம் வேற்றுமைத் தொகையாகும். கண், கால், கடை, இடை, தலை, திசை, முன், பின், வலம், இடம், மேல், கீழ் உழை, உழி, உள், அகம் முதலியன இடப்பெயர்களாகும். (வேண்டுமானால், இவற்றை, ஏழாம் வேற்றுமை இடப் பொருள் உணர்த்தும் சொல் உருபுகளாகக் கொள்ளலாம்)

## 1-10 ஆறாம் வேற்றுமை உருபுகள்

முருகன் வீடு, முருகன் வீடுகள் - என்பன ஆறாம் வேற்றுமைத் தொகை. இவற்றை விரிப்பின் முருகனது வீடு, முருகன் வீடுகள் என வரும். வருமொழியில் வரும் உடைமைப் பொருள் அஃறிணை ஒருமையாயிருப்பின் 'அது' உருபும், அஃறிணைப் பன்மையாயின் 'அ' உருபும் வரவேண்டும் என்பது விதி. வருமொழிப் பெயர் அஃறிணையாய் இல்லாமல், மகன், நண்பன் என்பனபோல் உயர்திணைப் பெயராயின், முருகனது மகன், முருகனது நண்பன் எனல் தவறு என்று சொல்லப்படுகிறது. எனவே, இவற்றை முருகனுக்கு மகன்,

முருகனுக்கு நண்பன் என நான்காம் வேற்றுமைப் பொருளுக்குக் கொண்டு செல்ல வேண்டுமாம். ஆனால் இது நடைமுறைக்கு ஒத்து வராது. எனவே, இதிலிருந்து தப்பிக்க, முருகனுடைய மகன், முருகனுடைய நண்பன் என 'உடைய' என்னும் சொல்லுருபு பயன்படுத்தப்படுகிறது. அல்லது, முருகன் வீடு, முருகன் நண்பன் எனத் தொகையாக எழுதப்படுகிறது.

## 1-10-1 சிக்கல்

இவ்வளவு சிக்கல் ஏன்? இங்கே ஒரு புதுத்தெளிவை ஏற்படுத்திக் கொள்ளலாம். உடைமைப் பொருள் உயர்திணையாயினும் அஃறிணையாயினும் இரண்டையும் பொதுவாகக் கருதி முருகனது வீடு, முருகனது மகன் என்று எழுதலாம். திருமண அழைப்பிதழ்களில் எனது மகன், எனது தம்பி என்பன போன்றனவே எழுதப்படுகின்றன.

எனது மகன் என்றெழுதியிருந்த திருமண அழைப்பிதழ் ஒன்றை ஒருவர் திருத்தத்திற்காக என்னிடம் காட்டினர். நான், எனது மகன் என்பதை என் மகன் எனப் போட்டனுப்பினேன். எனது மகன் என முதலில் எழுதியவர் என்மகன் என்பதைப் பார்த்து விட்டு, எந்த மடையன் எனது மகன் என்பதை என் மகன் என்று போட்டான் என்று திட்டினாராம்.

## 1-10-2 ஆங்கிலத்தில்

இஃது இங்ஙனம் இருக்க, எனது மகன் என்று போடுவதையும் கூர் சீவிய இலக்கணக்காரர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள், ஆங்கிலத்திலும் ஆறாம் வேற்றுமையில் இது போன்ற சிக்கல் உள்ளதே - ஆங்கிலத்தில் மாறுதல் செய்ய ஒத்துக்கொள்வார்களா? - என வினவுகின்றனர். ஆங்கிலச் சிக்கலாவது:- மாணவனது

அறை என்பதற்கு Student's Room என்று எழுதவேண்டும். மாணவர்களின் விடுதி என்பதற்கு Students' Hostel என்று எழுதவேண்டும். அதாவது உடையவரைக் குறிக்கும் நிலை மொழி ஒருமையாயிருப்பின், 'S' என்னும் ஆறாம் வேற்றுமை உருபை 'S என முன்னால் 'எழுத்தெச்சக் குறி' (Apostrophe) போட்டு எழுதவேண்டும். நிலைமொழிப்பெயர் பன்மையாயிருப்பின், S' என S என்பதற்குப் பின்னால் 'எழுத்தெச்சக் குறி' போடவேண்டும். நாற்காலியின் கால்கள் என உடைய பொருள் அஃறிணையாயின் chair's legs என எழுதலாகாது. legs of the chair என உடைமைப் பொருளை முன்னும் உடைய பொருளைப் பின்னும் எழுதி இடையிலே of என்னும் ஆறாம் வேற்றுமை உருபை அமைத்தல் வேண்டும்.

தமிழில் உடைமைப் பொருள் அஃறிணையா உயர் திணையா – ஒருமையா பன்மையா என்று கருதப்படுகிறது. ஆங்கிலத்திலோ, உரிய பொருள் அஃறிணையா உயர் திணையா - ஒருமையா பன்மையா என்பது கருதப்படுகிறது. ஆங்கிலத்தில் மாறுதல் செய்யாவிடினும், தமிழிலாவது செய்யலாமா - என அறிஞர்கள் ஆய்க.

## 1-11 புதுப்பித்தல்

இது காறும் சொல்புணர்ச்சி தொடர்பாக யான் கூறிய சில புதிய செய்திகளைப் புதிய தமிழில் சேர்ப்பதாக யான் எண்ணவில்லை. வழிவழி வரும் தமிழிலேயே இவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம் என்றே கருதுகிறேன். உரையாசிரியர்கள் புதிய புதிய கருத்துகளையும் எடுத்துக் காட்டுகளையும் சேர்த்துச் சேர்த்துச்சூடு ஆற விடாமல் செய்து தமிழைப் புதுப்பித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால், இதை, தெனாலி ராமன் கறுப்பு நாயை வெள்ளை நாயாக ஆக்க முயன்றதுபோல், பழைய தமிழைப்

புதிய தமிழாக ஆக்குவதாகக் கொள்ளலாகாது. ஒரு வீட்டில் முன்னமேயே இருக்கும் பொருள்களோடு, மேலும் சில பொருள்களை வாங்கி வைத்து, வீட்டு வாழ்க்கையை அழகுடையதாகவும் வளமுடையதாகவும் ஆக்குவது போன்றதே இது. பழைய வீட்டை இடித்துப் புது வீடு கட்டுவது போன்றது அன்று இது.

## 2. விகுதிப் புணர்ச்சி

மேலே, இதுவரையும், சொல்லோடு சொல்புணரும் சொல் புணர்ச்சிகள் சில சொல்லப்பட்டன. இனி, சொல் லோடு இறுதி நிலை (விகுதி) புணரும் புணர்ச்சி விதிகள் பற்றிச் சில காண்பாம்:-

### 2-1 கள் விகுதி

கருத்து, குறிப்பு என்னும் ஒருமையுடன் 'கள்' என்னும் பன்மை விகுதி சேரின், இடையிலே 'க்' மிகுந்து கருத்துக்கள், குறிப்புக்கள் எனச் சிலர் எழுதுகின்றனர். அதாவது, வன் றொடர்க் குற்றியலுகரத்தில் வலி மிகும் என்ற அடிப்படை யில் இவ்வாறு எழுதுகின்றனர். யானும் முன்பெல்லாம் இவ்வாறே எழுதினேன். இப்போது 'க்' மிகுக்காமல், கருத்துகள் - குறிப்புகள் என்றே எழுதுகிறேன்.

வன்றொடரின் முன் ஒரு சொல் வருமொழியாக வந்தா லேயே ஒற்று மிகவேண்டும்; விகுதி சேர்ந்தால் மிக வேண்டா - என்பது சிலரின் கருத்து. கள் என்பதும் பன்மைப் பொருள் தரும் ஒரு சொல்லேயாயினும், விளக்கு - முடுக்கு என்பவற்றோடு கள் சேர்த்து விளக்குக்கள் - முடுக்குக்கள் என்று சொல்வது, இயற்கையாயின்றி - என்னவோபோல் - செயற்கையாய்த் தெரிகிறது. விளக்குகள் - முடுக்குகள் என்று சொல்வதே இயற்கையாய் - அழகாய் இருக்கிறது. இதை ஒத்துக்கொள்ள முடியாது - க் மிக்கே தீரவேண்டும்

எனில், இயல்பாயும் இருக்கலாம் - மிக்கும் இருக்கலாம் - இதனை விகற்பமாகக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை.

## 2-2 எனல்

''பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்'' (குறள் — 196)

என்னும் குறளில், முதலில் உள்ள 'எனல்' என்பதற்கு 'என்று சொல்லாதே (சொல்லற்க)' என்பது பொருள். இறுதியில் உள்ள 'எனல்' என்பதற்கு 'என்று சொல்லுக' என்பது பொருள். இங்கே 'அல்' என்பது வியங்கோள் வினைமுற்று விகுதி. எனல் என்பதை உடன்பாட்டுப் பொருளில் சொல்லும் போது, (என் + க) என்க என்பது போல் என் + அல் = எனல் என்றாகிறது. எதிர்மறைப் பொருளில் சொல்லும்போது, என் + அல் என்பவற்றின் இடையே ஏதோ ஓர் எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டதாகச் சிலர் கூறுவர். இது பொருந்தாது. அதட்டிப் பேசும் ஒலிக்குறிப்பு இங்கே எதிர்மறைப் பொருள் தருவதல்லாமல், 'அல்' என்னும் விகுதியில் அன்மைப் பொருளும் மறைந்திருப்பதாகக் கொள்ளல் வேண்டும்.

## 2-3 புணர்ந்து கெடுதல்

புணர்ந்து கெடுதல் என்பது எண்ணத்தக்கது. சில இடங்களில் விகுதி புணர்ந்து கெட்டது எனக் கூறுவர். இது பொருந்தாது. புணர்வது ஏன்? பின் கெடுவது ஏன்? செய், உண் என்னும் முன்னிலை ஏவல் ஒருமை வினை முற்றில், 'ஆய்' என்னும் விகுதி புணர்ந்து பின் கெட்டதாகக் கூறுவர். அந்தோ இவர்கள் எளியர்! முதலில் புணர்வதும் பின் கெடுவதும் ஏன்? இங்கே விகுதியின்றிப் பகுதியே ஏவலைச் செய்கிறது. இன்னும் கேட்டால்,

செய்வாய் என்பதனினும் 'செய்' என்பதில், ஏவல் அழுத்தம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

மற்றும் உண் என்பது, ஐ விகுதி புணர்ந்து கெட்டு முதல் நீண்டு 'ஊண்' என்றாயிற்று எனவும், திரை என்பதில் 'இ' விகுதி புணர்ந்து கெட்டதாகவும் உரையாசிரியர்கள் சிலர் கூறுவது மிகவும் இரங்கத்தக்க நிலையாகும்.

வியங்கோளில் இக்காலத்தில் 'அல்' விகுதி பயன் படுத்தப்படுவதில்லை. வாழ்க போல் வாழிய என்பது உண்டு. வாழியர் என்னும் வழக்கு குறைந்துவிட்டது. அதாவது, 'இயர்' என்னும் வியங்கோள் விகுதி அருகி விட்டது.

## 2-4 அல்ல

இந்த வேலையைச் செய்த வினைமுதல் அவன் அல்லன், அவள் அல்லள், அவர் அல்லர், அது அன்று, அவை அல்ல என்று எழுதவேண்டும் என்கின்றனர். அதாவது பால் விகுதிகள் போட்டு எழுதவேண்டும். ஆனால், பலர், அவன் அல்ல - அவர் அல்ல - அது அல்ல - அவை அல்ல என்றே எழுதுகின்றனர். இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில், அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை, அது இல்லை, அவை இல்லை என்று கூறும் 'இல்லை' என்ற பொதுச் சொல்போல அல்ல என்பதைக் கொள்ளல் வேண்டும்.

## 2-5 எல்லாரும்

நாங்கள் எல்லேமும் படித்தோம், நீவிர் எல்லீரும் படிப்பீர், அவர்கள் எல்லாரும் படிப்பார்கள் என, தன்மைப் பன்மையை எல்லேமும் என்பதாலும், முன்னிலைப் பன்மையை எல்லீரும் என்பதாலும், படர்க்கைப் பன்மையை

எல்லாரும் என்பதாலும் குறிப்பிடவேண்டும் என்கின்றனர். இப்போது பலர் நாங்கள் எல்லாரும், நீங்கள் எல்லாரும், அவர்கள் எல்லாரும் என்றே எழுதுகின்றனர். தன்மைப் பன்மையின் 'ஏம்' விகுதியையும், முன்னிலைப் பன்மையின் 'ஈர்' விகுதியையும் இவர்கள் விட்டுவிட்டனர். எதிர் காலப் போக்கில், ஆர் விகுதி ஏற்ற எல்லாரும் என்பதே நிலைத்து விடும்போல் தெரிகிறது.

## 2-6 விகுதி மேல் விகுதி

'உண்' என்பது, 'நீ உண்' எனத் தன்வினைப் பொருளும், 'உண்பி' என்பது, (அவனை) உண்ணச்செய் எனப் பிற வினைப்பொருளும் தருகின்றன. நட, நடப்பி போன்றனவும் இன்னவே. இங்கே 'பி' விகுதி சேர்ந்து தன்வினையைப் பிறவினையாக்குவது சுவையாயுள்ளது. ஆங்கிலத்தில் இவற்றை, Make him eat, Make him walk என்பர். Make என்னும் ஒரு சொல்லின் வேலையை, தமிழில் 'பி' என்னும் ஓரெழுத்து ஒரு மொழியாகிய விகுதியே செய்து விடுகிறது. உண்பிப்பி என விகுதிமேல் விகுதி வரும் சொல், நீ உண் – நீ அவனை உண்ணச் செய் - என்ற பொருளைத் தராமல், நீ அவனிடம் (சமையல்காரனிடம்) சொல்லி விருந்தினரை உண்ணச் செய் என்ற பொருளைத் தருவது சுவைமேல் சுவையாயுள்ளது. ஆனால், உண்பிப்பி, நடப்பிப்பி என விகுதிமேல் விகுதி இட்டு வழங்குவது இக்காலத்தில் அருகிவிட்டது.

பழங்கால வழக்குகளாகிய என்றிசினோர், என்மனார், என்மர் என்பனவற்றிலுள்ள விகுதிகளைப் பயன்படுத்தி எழுதுவது பெரும்பாலும் இப்போது இல்லை.

## 2-7 உடுக்கை

சில சொற்களில் இரண்டு விதமான விகுதிகள் இருப்பதுண்டு. உடுக்கை என்பதற்கு உடுத்தல் என்று

பொருள் கொள்ளின் 'கை' விகுதியும், உடுக்கப்படும் உடை எனச் செயப்பாட்டு வினைப்பொருள் கொள்ளின் 'ஐ' விகுதியும் இருப்பதாகக் கொள்ளப்படுகின்றன.

**கால விகுதிகள்**

ஒரு வினை முற்றில் முதல் நிலையாகிய பகுதியின் வேலை வினை அதாவது செயல் இன்னது என்பதை அறிவிப்பது. இடையில் உள்ள இடை நிலையின் வேலை காலத்தை அறிவிப்பது. இறுதியில் நிற்கும் விகுதியின் வேலை வினைமுதலை (வினை செய்தபொருளை) உணர்த்துவது. செல்கிறான் என்பதில், செல் என்னும் பகுதி செல்லுதல் என்னும் செயலையும், கிறு என்னும் இடைநிலை நிகழ்காலத்தையும், ஆன் என்னும் விகுதி செய்கிறவன் ஓர் ஆண்மகன் என்னும் வினை முதலையும் அறிவிக்கின்றன. சில வினை முற்றுகளில், இடைநிலை செய்யும் காலம் காட்டும் வேலையை விகுதிகளே செய்து விடுகின்றன.

## 2-8-1 கும்டும்

உண்கு - உண்கும் – கு, கும் எதிர்காலம் காட்டுகின்றன. சென்று - சேறும் - று, றும் முறையே இறப்பும் எதிர்வும் காட்டுகின்றன. வந்து - வருதும் - து, தும் முறையே இறப்பும் எதிர்வும் அறிவிக்கின்றன. உண்டு - உண்டும் – டு, டும் இறந்த காலம் அறிவிக்கின்றன. இவ்விகுதிகள் இப்போது அருகிவிட்டன.

## 2-8-2 செய்யும் முற்று

'உம்' விகுதி ஏற்ற செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று நிகழ்காலமும் எதிர்காலமும் காட்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது. இது எதிர்காலம் காட்டும் என்பதே பொருத்தம். எப்போதும் நிலையாயுள்ளதைக் குறிக்கும்

பொருளிலும் இது வரும். எ. கா: தண்ணீர் குளிரும்; நெருப்பு சுடும்.

### 2-8-3 செய்யும் பெயரெச்சம்

வேலை செய்யும் பையன், என்பதில் உள்ள செய்யும்' என்னும் பெயரெச்சத்தின் விகுதியாகிய 'உம்' என்பதும் எதிர்காலம் காட்டும்.

செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றும் இன்னதே. மலையாள மொழியில் ஒரே வினைமுற்று உருவம் எல்லாப் பாலுக்கும் வருவது போன்றது இது. அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும் என நான்கு பால்கட்கும் பொதுவாய் நிற்கும் இந்த நிலை, இலக்கணம் கல்லாதார்க்குக் குழப்பம் விளைவிக்கும். எனவே, இந்த அமைப்பை நீக்கவும் செய்யலாம்.

### 2-9 வினையெச்ச விகுதிகள்

இறுதியாக வினையெச்ச விகுதிகளை நோக்கிச் சென்று பயணத்தை முடிக்கலாம். அவன் ஊணை விழுங்கா உறுபசி நீக்கினான் - என்பதில் உள்ள 'விழுங்கா' என்பது எதிர் மறைபோல் சொன்மைக்குத் தெரிகிறது. ஆனால், அதற்குப் பொருண்மையில் 'விழுங்கி' எனப் பொருள் கொள்ளல் வேண்டும். எதிர்மறைபோல் இருப்பதற்கு உடன்பாட்டுப் பொருள் கொள்வது பற்றிச் சிலர் வியப்படைகின்றனர். இதற்குச் 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்று பெயர் கூறுவர்.

### 2-9-1 வினையெச்ச வாய்பாடுகள்

வினையெச்சத்திற்குச் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர், செயற் கென முதலிய வாய்பாடுகள் உரியனவாகச் சொல்லப்பட்

டுள்ளன. இவற்றின் இறுதியில் உள்ள, உ, பு, ஆ, ஊ, என, அ, இன், இய, இயர் என்பன முறையே இவற்றின் விகுதிகளாகும். உ, பு, ஊ முதலிய விகுதிகளைப் போல 'ஆ' என்பதும் வினையெச்ச விகுதியாகும். இது, மாடுகள் மண்ணைத் தின்னா என்பதில் உள்ள தின்னா என்பதன் ஈற்றில் உள்ள 'ஆ' என்னும் எதிர்மறை வினைமுற்று விகுதி போன்ற தன்று. செய்யா என்றால் செய்து - விழுங்கா என்றால் விழுங்கி என்னும் பொருள் தரும் உடன்பாட்டு வினையெச்ச விகுதியாகும். செய் + பு = செய்பு, செய் + ஊ = செய்யூ என்பனபோல், செய் + ஆ = செய்யா எனக் கருத்து கொள்ளல் வேண்டும்.

செய்து என்னும் பொருளிலுள்ள செய்பு, செய்யா, செய்யூ என்பனவற்றின் இறுதியில் உள்ள பு, ஆ, ஊ என்னும் விகுதிகளே இறந்த காலம் காட்டுகின்றன. செய என்பதில் 'அ' விகுதி நிகழ் காலம் காட்டும். செயின், செய்யிய, செய்யியர் என்பவற்றில் உள்ள இன், இய, இயர் என்னும் விகுதிகள் எதிர் காலம் காட்டும். இவற்றுள், செய்து, செய, செயின் என்னும் வாய்பாடுகளே இன்று பெருவாரியாகப் பின்பற்றப்படுகின்றன. செய்யா, செய்யிய என்பன செய்யுளில் ஓரளவு பின்பற்றப்படுகின்றன. செய்பு, செய்யூ, செய்தென, செய்யியர் என்பன வழக்கில் அருகி விட்டன.

### 2-9-2 செய வாய்பாடு:- நிகழ்காலம்

'செய' என்னும் வாய்பாடு நிகழ் காலம் காட்டும் எனப் பட்டது. அவன் படிக்கக்கண்டேன் - என்ற இடத்தில் 'படிக்க' என்னும் செய வாய்பாடு நிகழ்காலம் காட்டுகிறது. காணும்போது அவன் படித்துக்கொண்டிருந்தான். அதனால் இது நிகழ்காலமாகும்.

### 2-9-2-1 காரணப் பொருள் - இறப்பு

**நீர் பாய்ச்ச** நெல் விளைந்தது என்பதில் உள்ள 'பாய்ச்ச' என்னும் செய வாய்பாடு, காரணப்பொருளில் உள்ள வினை

யெச்சம் எனப்படும். நீர் பாய்ச்சிய காரணத்தால்தானே நெல் விளைந்தது? நீர் பாய்ச்சிய பின் நெல் விளைந்ததால், 'பாய்ச்ச' என்பது இறந்த காலப் பொருளுடையது என்றும் கூறலாம்.

## 2-9-2-2 காரியப் பொருள் - எதிர்வு

**நெல் விளைய நீர்** பாய்ச்சினார் என்பதில் உள்ள 'விளைய' என்னும் செய வாய்பாடு, காரியப் பொருளில் உள்ள வினையெச்சம் எனப்படும். நெல் விளைந்தாக வேண்டிய காரியத்திற்காகத்தானே நீர் பாய்ச்சப்பட்டது. இனி எதிர் காலத்தில் நெல் விளைவதற்காகத்தானே நீர் பாய்ச்சினார்கள்? எனவே, 'விளைய' என்பது எதிர்கால வினையெச்சப் பொருளில் உள்ளது.

## 2-9-3 செய்யி வாய்பாடு

வினையெச்ச வாய்பாடு தெரிவித்தவர்கள், 'இ' என்னும் விகுதியில் முடியும் வினையெச்ச வாய்பாடு பற்றி ஒன்றும் கூறவில்லை. இது இறந்த காலம் குறிப்பதாகும். ஓடிப் போனான், விழுங்கி விட்டான், வருந்தி இருந்தான் – என்பவற்றில் உள்ள ஓடி, விழுங்கி, வருந்தி என்பன 'இ' என்னும் விகுதி கொண்ட இறந்த கால வினையெச்சங்களாகும். இவற்றை, ஓடு + இ = ஓடி, விழுங்கு + இ = விழுங்கி, வருந்து + இ = வருந்தி எனப் பகுதியும் விகுதியுமாகப் பிரிக்கலாம். எனவே, இவற்றிற்குச் 'செய்யி' என்னும் வாய்பாடு என்று பெயர் சூட்டலாம். செய் + இ = செய்யி. ஆ, ஊ சேர்த்து செய்யா, செய்யூ என்னும் வாய்பாடு அமைத்தவர்கள் செய் + இ = செய்யி என்ற வாய்பாட்டை அமைக்காதது வியப்பாயுள்ளது.

உகரம் கடதற ஊர்ந்து இயல்பாயும், ஏனை எழுத்து ஊர்ந்து இகரமாய்த் திரிந்தும், நெடிலீற்று முதனிலை

முன்னர் யகரம் வரத் தான் கெட்டும், இறந்த காலம் பற்றி வரும்-என்று தொல்காப்பிய உரையாசிரியர் சேனாவரையர் கூறியுள்ளார்.

'உ' என்பது 'இ' எனத் திரிந்தது என்று சொல்வது பொருந்தாது. ஓடி, ஆடி, வருந்தி, திருந்தி, மயங்கி, தயங்கி என்பன போன்ற 'இ' ஈற்று இறந்த கால வினையெச்சங் களின் இறுதியில் உள்ள 'இ' என்பதை நீக்கிவிடின், ஓடு, ஆடு, வருந்து, திருந்து, மயங்கு, தயங்கு எனக் குற்றியலுகர ஈற்றுச் சொற்களையே காண முடியும். இவற்றின் இறுதியில் உள்ள 'உ' என்பது 'இ' ஆகத் திரியவில்லை. இந்தக் குற்றியலுகரங்கள் கெட, நிற்கின்ற ட், த், க் என்ற மெய் மேல் 'இ' ஏறி ஓடி, திருந்தி, தயங்கி என இறந்தகால வினையெச்சங்கள் உருவாயின.

செய் என்பதோடு பு, ஆ, ஊ என்பன சேரின் செய்பு, செய்யா, செய்யூ என்னும் இறந்த கால வினையெச்சங்கள் உருவாகின்றன. செய் என்பதோடு 'உ' சேரவேண்டுமாயின், கொய்து, கண்டு, சென்று என த் (த்+உ = து), ட் (ட்+உ = டு), ற் (ற்+உ = று) என்னும் இறந்த கால இடை நிலைகள் 'செய்' என்பதற்கும் 'உ' என்பதற்கும் இடையே வரும்.

செய்பு, செய்யா, செய்யூ என்பன போல, 'இ' என்னும் விகுதி சேர்த்து (செய் + இ =) 'செய்யி' என்னும் வாய்ப் பாட்டைப் புதிதாக உருவாக்கலாம்.

கொய், பெய் போன்ற வினைச் சொற்களின் அடிப்படை யில் வாய்பாடு அமைக்காமல், 'செய்' என்பதன் அடிப்படை யாகக் கொண்டு வாய்பாடு அமைத்திருப்பதின் காரணம், எல்லாத் தொழிலும் செய்யப்படுவது ஆதலின், என்க - எனவே, செய் என்பது வினைச்சொற்களின் பொதுப்

பேராட்சியாக (பிரதிநிதியாக) ஆக்கப் பெற்றது. போய், ஆய், உடீஇ, நிலைஇ என்பன சிறு வரவினவாதலின் வாய்பாடு சொல்லப்படவில்லை.

## 23. மெய்ப்பாடு-ஓர் அறிமுகம்

"மங்கை ஒருத்தி தரும் சுகமும்
எங்கள் மாதமிழ்க்கு ஈடில்லை"

(பாரதிதாசன்)

"தேருந்தொறும் இனிதாம் தமிழ்போன்று
இவள் செங்கனிவாய்
ஆருந்தொறும் இனிதாய் அமிழ்தாம்
என தாருயிர்க்கே"

(தஞ்சை வாணன் கோவை-பொய்யாமொழிப் புலவர்)

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு" (குறள் – 783)

"Who entertains the harmless day
with a well – chosen book or a friend"
(Charaeter of The Happy Life by Henry Wotten)

மேற்காட்டியுள்ள பாடல்கள் இலக்கிய இன்பச் சுவையின் சிறப்பினை விளக்குகின்றன. தேர்ந்த இலக்கியப் படைப்பாளர்கள், எந்தச் செயலையும் கலை நயம்பெறக் கூறுவதில் வல்லவர்கள். மகிழ்ச்சிக்கு உரிய செயல் மட்டு மன்று; துன்பத்திற்கு உரிய நிகழ்ச்சியாயினும் அதனைச் சுவைமிக விளக்குவர், எடுத்துக்காட்டுகள் சில காண்போமே:-

அகவை மிகவும் முதிர்ந்த முதியவள் ஒருத்தி தன் வாழ்நாளைப் பழிக்கிறாள். நான் இவ்வளவு நாள் வாழ்ந்து

கிழித்தது போதாதா? இன்னும் எத்தனை ஆண்டு காலம் என் தலைமேல் போட்டு வைக்கப்பட்டிருக்கிறதோ தெரிய வில்லை; இந்தப் பாழாய்ப்போன சாவு எப்போது வருமோ எனப் புலம்புகிறாள். ‘முக்காலுக்கு ஏகாமுன்'' என்ற காள மேகத்தின் தனிப் பாடலுக்கு மாறாக, மூன்றாவது காலாகிய கோலின் துணைகொண்டே இரண்டு கால்களையும் இயங்கச் செய்கிறாள். எட்டி எட்டி அடி எடுத்து வைக்க வில்லை; அங்குலம்-அங்குலமாக நகர்கிறாள். உணவு இல்லாத பசி ஒரு புறம் வாட்டுகின்றது. தலைமயிர் வெள்ளை நூல் கற்றையை விரித்துப் போட்டாற்போல் இருக்கிறது. கண் தெரிந்தாலும் நடையில் சிறிதாவது முன்னேற்றம் இருக்கலாம்; கண்ணும் தெரியாது. கால்களின் வேலைக்கு உதவும் கோலே கண்களின் வேலைக்கும் உதவு கிறது. அதாவது, கோலே காலாக, கோலே கண்ணாகக் கொண்டு முற்றம் வரைக்குங் கூடப்போக முடியாதவளாக உள்ளாள். முதுமையால் ஏற்பட்ட தாழ்வு இது.

இவள்தான் இப்படியெனில், இவளுடைய மருமகள் பேரப் பிள்ளைகள் உட்பட்ட இவளது குடும்பத்தின் நிலை இன்னும் கொடிது. குழந்தைக்குப் பிற உணவுகளினும் தாய்ப்பால் உணவே மிகவும் இன்றியமையாதது என்று செயற்படுத்தி வாழ்ந்த பழங்காலம் அது. தாய்ப்பால் குடிக்கும் பருவத்தில் போதிய தாய்ப்பால் கிடைக்கா விட்டாலேயே பிற உணவுப் பொருள்களை நாடுதல் மரபு. இந்த வீட்டுக் குழந்தைகட்கோ, வேறு உணவுப் பொருள் என்பது அறியாத ஒன்றாகும். எனவே, அவை தாய்ப் பாலையே நம்பித் தாயின் முலைகளிலிருந்து பால் குடிக்க வில்லை - பால் வந்தால் அல்லவா குடிக்கலாம் - பால் இருந்தால் அல்லவா வரும். எனவே, பால் வருமா எனத் தாயின் முலைகளைப் பிசைந்து பார்க்கின்றனர்; பால் வரவில்லை; எனவே, முலையை மென்று தின்பதுபோல்

வாய்களை அசைத்துக் கொண்டிருக்கின்றனர். தாயின் இரண்டு பக்க இடுப்புகளிலும் பல சிறு பிள்ளைகள் அமர்ந்துகொண்டு இவ்வாறு செய்கின்றனராம்.

கணவனும் மனைவியும் படுக்கையறையில் தாராளமாக நடந்துகொண்ட பழங்காலம் அது. அதனால், ஒரு குழந்தை பால் மறப்பதற்கு முன்பே - அதாவது அக்குழந்தை பிறந்த பன்னிரண்டாவது மாதத்திலேயே அடுத்த குழந்தை பிறந்து விடுகிறது. பிறந்த குழந்தையைப் பால் குடிக்கவிடாமல் முன் குழந்தை போட்டி போட்டு அழுது அடம் பிடிக்கிறது. ஒரு வயதுக் குழந்தையோடு அதற்கும் முந்திய குழந்தையும் போட்டி போடுகிறது. பசி... பசி... பசி. எனவே பல குழந்தைகள் இடுப்பைச் சுற்றி அமர்ந்துகொண்டு தாயின் முலைகளை முற்றுகையிட்டுள்ளன. வளமான உடம்பு உடையவர்களினும் வளமற்ற உடலினார்க்குக் குழந்தை மிகுதியாய்ப் பிறக்கும் என்னும் கருத்தும் ஈண்டு எண்ணத் தக்கது.

முதலிலேயே உடல் மெலிவு; துயரமோ மிகுதி - மிகுதி. மேலும் இவ்வாறு குழந்தைகள் பிசைந்து தின்பதால் சீர் அற்ற முலைகளுடன் தாய் பெரிதும் மனம் உடைந்து போனாள். என் செய்வது! உணவு என்ற பேரில் ஏதாவது ஆக்க வேண்டுமே. தோட்டத்துக் குப்பைக் கீரையின் நினைவு வந்தது. குப்பைக் கீரை வற்றாத 'அமுத சுரபி'யாக நாள்தோறும் அடைக்கலம் தந்து வந்தது. கீரைச் செடிகள் பறிக்கப் பறிக்க மொட்டையாய் விட்டன. வறுமை வந்தும் ஏதாவது அளிக்கும் வள்ளல் போல, மொட்டையாகியும், அதிலிருந்து புதிதாய்க் கிளைத்து முற்றாமல் இருக்கின்ற இளங்கொழுந்துகளைப் பறித்து, வந்தாள், அடுப்பில் நீர் உலை வைத்து அதில் குப்பைக் கீரைக்கொழுந்துகளை இட்டு வேக வைத்தாள். கொழுந்து பஞ்சாய் விட்டது, உப்பு ஒரு கேடா? இருந்தால் தானே

உப்பு போடலாம். உப்புக்கே வழியில்லை எனில், மோருக்கு எங்கே போவது? வெற்றுக்கீரைத் தண்ணீரே எல்லாருக்கும் உணவாகின்றது. உயர்ந்த உணவு மறக்கப்பட்டது.

ஆள்பாதி - ஆடைபாதி என்பார்கள். அவளது உடையோ அழுக்கேறிய உடை, அஃதும் உடம்பு முழுவதையும் மறைக்கமுடியாத அவை, குறை ஆடை, இக்காலத்தில் உடைவளம் இருந்தும், புதுநாகரிகக் கொடுமையின் பேரால் சிலர் அரைகுறையாய் உள்ளார்களே - அவள் நிலை இன்னதன்று. இல்லாத ஏழமையால் இந்த நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், எல்லாரையும் காப்பதாகக் கூறும் அவள் போற்றவா செய்வாள்? மாறாக, (பாழுந் தெய்வமே! உன் தலையில் ஓர் இடிவிழக் கூடாதா என்று சொல்லாமல் உள்ளத்தில் உன்னித்) தெய்வத்தைத் திட்டுகின்றாள். வாழ்க்கையில் ஓர் இன்பமும் துய்த்தவள் அல்லள். மற்றும், உன்னைக் கட்டிக்கொண்டு என்ன நலம் கண்டேன்? நல்ல துணிமணி உண்டா? நகை நட்டு உண்டா? ஆரவார உணவு உண்டா? என்றெல்லாம் கூறிக் கணவனைத் திட்டினாளா? அதுதான் இல்லை. ஐயோ! நம் கணவர் இந்தப்பாடு படுகிறாரே - அவர் நன்றாய் இருக்க வேண்டும் - என்று கணவன்மேல் அன்பு செலுத்துகிறாள். இதுதான் தலைக்கற்போ!

இந்தச் செய்தி, குமண மன்னனைப் புலவர் பெருஞ்சித்திரனார் பாடிய புறநானூற்றுப்பாடல் ஒன்றில் உள்ளது. பாடல் பகுதி வருக:

"வாழு நாளோ டியாண்டுபல உண்மையின்
தீர்தல் செல்லா தென்னுயிரெனப் பலபுலந்து
கோல்கா லாகக் குறும்பல ஒதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்துயின்று

முன்றில் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கில் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்து தின வாடிய முலையள் பெரிதழிந்து,
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று
நீர் உலையாக ஏற்றி மோரின்று
அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்
துவ்வா ளாகிய என்வெய் யோளும்
என்றாங்கு இருவர் நெஞ்சமும் உவப்ப'' (159:1-15)

என்பது பாடல் பகுதி. குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடிய அடுத்த பாட்டிலும் இந்த நிலையைக் காணலாம்.

வீட்டில் உணவு இல்லாமையால் குழந்தைச் சிறுவன் வீட்டை மறந்து வெளியிலேயே இருந்தான். எவ்வளவு நேரந்தான் பசியோடு வெளியில் இருக்க முடியும்? அம்மாவிடம் பால் குடிக்கலாம் என்று வந்து தாயின் பால் இல்லாத வற்றிய முலையைச் சுவைத்துப் பார்த்தான்; பால் வரவில்லை. கூழாவது சோறாவது இருக்குமா என்று உணவுக் கலங்களை (பாத்திரங்களை) யெல்லாம் முறையாகத் திறந்து திறந்து பார்த்தான்; ஒன்றும் இல்லை. உடனே பசி தாங்காமல் அழத் தொடங்கி விட்டான். அவனது அழுகையை நிறுத்தத் தாய் என்னென்னவோ முயற்சிகள் செய்து பார்க்கிறாள்: 'அதோ புலி வருகிறது – நீ அழுதாயானால் அது பிடித்துக்கொண்டு போய்விடும்' என்று சொல்லிப் பார்த்தாள் முடியவில்லை. அதோ நிலா பார் - எவ்வளவு அழகாயிருக்கிறது பார்' என்று நிலாவைக் காட்டினாள் – அழுகை நிற்கவில்லை. 'அப்பா இப்படித்தான் இருப்பார் என்று அப்பாபோல் நடித்துக் கோணங்கி காட்டுவாயே - அதுபோல் இப்போது காட்டு

பார்க்கலாம்' — என்று ஒரு போக்குக் காட்டிப் பார்த்தாள் - பயனில்லை. தாய் ஒன்றும் செய்வதறியாது சொல் லொணாத்துயர் உழந்தாள். இந்தக் கருத்தமைந்த புற நானூற்றுப் பாடல் பகுதியாவது:-

“இல்லுணாத் துறத்தலின் இல்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பால்இல் வறு முலை சுவைத்தனன் பெறா அன்
கூழும் சோறும் கடைஇ ஊழின்
உள்ளில் வறுங்கலம் திறந்தழக் கண்டு
மறப்புலி உரைத்தும் மதியம் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை உள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வினவ லானா ளாகி நனவின்
அல்லல் உழப்போள்......” (160:17-26)

என்பது பாடல் பகுதி. இப்பாடல்களைப் போலவே வறுமை யின் எல்லையைக் காட்டுகிற - குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றின் பகுதியைக் காண்போம்.

நீண்ட நாளாய் ஆக்குவதை (சமையலை) மறந்தே விட்ட - கொம்மைகள் உயர்ந்துள்ள அடுப்பிற்குள் ஆம்பி (காளான்) பூத்திருக்கிறது. பசி தாங்க முடியாமல், பால் இன்மையால் தோலோடு தோலாய் ஒட்டிச் சுருங்கிப் பால் வரும் கண்ணும் (துவாரமும்) அடைபட்டுவிட்டதாயின் பொல்லாத வெற்று முலைகளைச் சுவைத்துச் சுவைத்துப் பார்த்தும் பால் கிடைக்காமையால் ‘ஓ’ என அழுகின்ற குழந்தையின் முகத்தைத் தாய் நோக்கிக் கண்களை நீர் நிறைந்த குளமாக்கிக் கொண்டாள்: பாடல் பகுதி வருக:-

“ஆடு நனி மறந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூம்பத் தேம்பு பசி உழவாப்

பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூஉந்தன் மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண் என்
மனையோள்......'' (164 : 1-7)
என்பது பாடல் பகுதி.

மேலே தந்துள்ள பாடல்களில் முதுமை - வறுமை ஆகிய வற்றின் உயர் எல்லைகள் ஓவியப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன.

தன்னிலும் இளையவர்களைப்போல் தான் இயங்க முடியவில்லையே என்ற தாழ்வு மனப்பான்மையால், முதியவள் தன் வாழ்நாளைப் பழிக்கிறாள். குழந்தைகளும் தாயும் அழுவது, அவர்களின் வறுமையின் கொடுமையினைப் புலப்படுத்துகிறது.

முதுமையையும் வறுமையையும் புலவர்கள் சொல் ஓவியப்படுத்தியிருப்பது அவர்களின் புலமையின் வளமையை அறிவிக்கிறது. இத்தகு புலமைத் திறமையை ஒரு கலை என்று கூறலாம். இத்தகைய கலை அமைப்பு இல்லையேல், படிப்பவர்கள் பாடலை இன்புடன் சுவைத்துப் படிக்க இயலாது.

இது பாடல் கலை-அதாவது இலக்கியக் கலை மட்டும் அன்று; இதனை நாடகக் கலை என்றும் கூறலாம். இங்கே அறிவிக்கப்பட்டுள்ள முதியவள், குழந்தைகள், தாய் ஆகியோர் செயல்பட்டிருப்பதைப்போல் அப்படியே நாடகத்தில் நடித்துக் காட்டின், மக்கள் இலக்கியத்தைச் சுவைப்பது போலவே நாடகத்தையும் சுவைப்பர்.

இந்தத் துறையில், நாடகத்தையும், இலக்கியத்தையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் எனலாம். இலக்கியத்தினும்

நாடகமே முந்தியது. தொடக்கக் காலத்தில் அதாவது எழுதப்படிக்கத் தெரியாத காலத்திலேயே - எழுத்து கண்டு பிடிக்காத காலத்திலேயே கூத்து அதாவது நாடகம் வழக்கத்தில் இருந்தது. பின்னர், நடித்த நாடகங்கள் எழுதப்பட்டன. பின்னர், எழுதப்பட்ட நாடகங்கள் நடிக்கப்பட்டன. இங்ஙனமாகப் பாடலும் நடிப்பும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாக இருந்தன.

“அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்” (குறள் – 706)

என்றபடி, அகத்தில் (மனத்தில்) உள்ளதை முகத்தில் தெரியும் குறிகளால் அறிவதன்றி, மற்ற மெய்யுறுப்புகள் செய்யும் செயலினாலும் அகத்தில் உள்ளதை அறிந்து கொள்ளலாம். அதாவது, அகத்தில் உள்ளதை, மெய்யில் (உடம்பில்) தெரியும் குறிகளாலும் செயல்களாலும் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு அகத்தில் உள்ளதை மெய்யின் செயல்பாடு கொண்டு அறிந்து கொள்வதற்கு மெய்ப்பாடு (மெய்+பாடு=மெய்யில் படுவது - தெரிவது) என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

புறநானூற்றுப் பாடலில், முதியோர் பல புலந்தாள், குறும்பல ஒதுங்கினாள், கண்துயின்றாள், மூன்றில் போக முடியாதாள் எனக் கூறப்பட்டிருப்பன முதுமையால் ஏற்பட்ட மெய்ப்பாடுகளாகும்.

புலவரின் மனைவி தொடர்பாகக் கூறப்பட்டுள்ள பசந்த மேனி, படர் அட வருந்தி, வாடிய முலையள், பெரிது அழிந்து, முற்றா இளந்தளிர் கொய்து, உப்பு இன்று, நீர் உலையாக, மோர் இன்று, அவிழ்ப்பதம் மறந்து, அடகு மிசைந்து, மாசொடு, குறைந்த உடுக்கையள், அறம் பழியா, துவ்வாள் என்பன வறுமை காரணமாக ஏற்பட்ட மெய்ப்பாடுகளாகும்.

'நீர் உலையாக ஏற்றி' என்பது, பாலையோ - மோரையோ உலையாக ஏற்றும் பண்டைய பழக்கம் ஒன்றை அறிவிக்கிறது. வேறு இல்லாமையால் நீரையே உலையாக ஏற்றினாள். பால்-மோர் இல்லாவிடினும், அரிசி களைந்த நீரையாவது, சோறு வடித்த கஞ்சி நீரை யாவது, ஏற்றுவதும் உண்டு இதனை,

"தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலினூங்கு இனிய தில்" (1065)

என்னும் குறளாலும் அறியலாம். பாலோ-மோரோ, வடித்த கஞ்சி நீரோ - எதுவும் இன்றி எந்தப் பசையும் இன்றித் தெளிந்த நீர் உலையிலே ஆக்கிய எளிய உணவாயினும், தன் உழைப்பால் கிடைத்ததை உண்ணலினும் இனிய உணவு வேறொன்றும் இல்லை என்பது இக்குறட்பாவின் கருத்து.

அடுத்த பாடலும் இன்னதே. இல் உணாத் துறத்தல், இல்லம் மறந்து உறைதல், வறு முலை சுவைத்தல், பெறாமை, வறுங்கலம் திறத்தல், அழுதல், மறப்புலி உரைத்தல், மதியம் காட்டுதல், தந்தையின் செவ்வி காட்டுதல், அல்லல் உழத்தல் - என்பன வறுமை காரணமாக ஏற்பட்ட அழுகை நிலை - வறுமை காரணமாக ஏற்பட்ட மெய்ப்பாட்டுச் செயல்கள்.

இத்தகைய மெய்ப்பாடுகள் பற்றித் தொல்காப்பியர் தம் தொல்காப்பிய நூலின் பொருளதிகாரத்தில் 'மெய்ப் பாட்டியல்' என ஒரு தனி இயலே அமைத்து விளக்கி யுள்ளார்.

மெய் என்பதற்கு மெய்ம்மை - பொருண்மை எனப் பொருள் கொண்டு, உள்ளத்தில் உள்ள உண்மை (மெய்ம்மை) நிகழ்ச்சி வெளியார்க்குத் தெரியும்படி வெளிப்படுதல் மெய்ப்பாடு எனச் சிலர் விளக்கம் அளித்துள்ளனர்.

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவராகிய பேராசிரியர் என்பவர், "மெய்ப்பாடு என்பது பொருட்பாடு அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்" என மெய்ப்பாடு என்பதற்கு விளக்கம் அளித்துள்ளனர். இவரும் இவர் போன்ற சிலரும், 'மெய்' என்பதற்கு உடம்பு எனப் பொருள் கொள்ளாமல், உள்ளத்தில் நிகழும் உண்மை–மெய்ம்மை நிகழ்ச்சி என்ற மாதிரியில் பொருள் கொண்டுள்ளனர்.

மெய் என்பதற்கு உடம்பு எனப் பொருள் கோடலே பொருத்தமானது. ஒருவரால் உள்ளத்தில் உணரப்பட்ட நிகழ்ச்சி மெய்யில் அதாவது வெளி உடம்பில் வெளிப்பட்டுத் தெரிவதே மெய்ப்பாடு எனப் பொருள் கோடலே அமைவுடையதாகும்.

**மெய் மயக்கம்**

இலக்கணத்தில் மெய்யெழுத்துகளின் மயக்கம் பற்றி கூறுவது மெய்ம் மயக்கம் எனப்படும். இங்கே மயக்கம் என்பது கலத்தல் - கூடுதல் என்னும் பொருளது. இது இங்ஙனமாக, சிலர் மெய் என்னும் சொல்லுக்குப் பொருள் கூறுவதில் மயக்கம் அடைந்துள்ளனர். மெய் என்றதும், அவர்கட்கு உண்மை என்னும் பொருள் வருகிறதே தவிர, உடம்பு என்னும் பொருள் வருவதில்லை.

உடம்பு மெய்யானது இல்லையாம் - பொய்யானதாம் - அழியக் கூடியதாம். விளக்கை அவித்தலை விளக்கைப் பெரிதாக்குதல் என்று கூறும் மங்கல வழக்குப்போல, பொய் யான உடம்பை மெய் என்று கூறுதல் ஒரு வகை மங்கல வழக்கு என்பர் சிலர்.

மற்றொரு சாரார் பின்வருமாறு கூறுகின்றனர்:- இந்த உடம்பு பொய்யானதாம். ஆனால், மெய்யான இறைவன்

இந்த உடம்புக்குள்ளே இருப்பதால், உடம்பு தானி ஆகு பெயராய் 'மெய்' எனப்பட்டதாம்.

இவர்கள் அனைவரும் ஓர் உண்மையை மறந்து விட்டனர். உடல் என்ற பெயரும் உடம்பு என்ற பெயரும் எவ்வாறு ஏற்பட்டதோ அவ்வாறே மெய் என்ற பெயரும் ஏற்பட்டது என்பதை அவர்கள் எண்ணினாரல்லர். உடல், உடம்பு என்னும் பெயர்கள் வந்ததற்கு இயல்பான காரணம் ஒன்றும் கூற முடியாதது போலவே, மெய் என்பதற்கும் இயல்பான காரணம் கூற முடியாது. பொய் - மெய் என்ற அடிப்படையில் வலிந்து செயற்கையான காரணமே கூற முடியும்.

ஓரிடத்தில் வாழ்ந்தவர்கள் உடல் என்றனர். இன்னோரிடத்தில் இருந்தவர்கள் உடம்பு என்றனர். வேறோரிடத்தில் வசித்தவர்கள் மெய் என்றனர். அனைவரும் பிற்காலத்தில் கலந்து கொண்டபோது, மூன்று சொற்களையும் ஒரே பொருள் உடையனவாய் அறிந்து ஏற்றுக்கொண்டனர். ஒரு பொருள் பல் பெயர்கள் ஏற்பட்ட வரலாறு இன்னதே.

இங்கே திருவள்ளுவரின் உதவியை நாடிப்பார்ப்போம். தன் எதிரே இருக்கும் பொருளை அவ்வாறே காட்டுகிற கண்ணாடியைப் போல், உள்ளத்தில் உள்ள உணர்வை அப்படியே முகம் அறிவிக்கும் என்னும் கருத்துடைய

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

என்னும் குறட்பா ஈண்டு எண்ணத்தது. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்னும் முதுமொழியின் கருத்தும் இன்னதே.

இங்கே முகம் என்பது மெய் (உடம்பின் பகுதி); நெஞ்சம் கடுத்தது (அகத்தின் அழகு) என்பது (மெய்யில்

தெரியும்) பாடு ஆகும். படுவது பாடு. படுதல் = தோன்றுதல் — தெரிதல்.

எனவே, மெய்ப்பாடு என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளுதலே பொருத்தமானது.

மேலே தொடக்கத்தில் காட்டப்பட்டுள்ள புறநானூற்றுப் பாடலில், முதியவள் ஒருத்தியின் முதுமை காரணமாக அவள் உள்ளத்தில் எழுந்த இழிவுணர்ச்சி (தாழ்வு மனப்பான்மை) அவளுடைய உடல் - உறுப்புகளில் ஏற்பட்ட மாறுதல்களால் அறியப்பட்டதைக் கண்டோம். இந்த மெய்ப்பாட்டிற்கு, முதுமை காரணமாக வந்த 'இளிவரல்' என்று பெயராம். இளிவரல் என்றால் இழிவாம்.

மற்றும் அப்புறநானூற்றுப் பாடல்களால் வறுமை காரணமாக ஏற்பட்ட அழுகையை அறிந்தோம். இந்த மெய்ப்பாட்டிற்கு, வறுமை காரணமாக வந்த 'அழுகை' என்பது பெயர். இவ்வாறு பல மெய்ப்பாடுகள் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் அறிவிக்கப் பட்டுள்ளன. இனி அவை பற்றிக் காண்பாம்.

தொல்காப்பியர் பொருளதிகாரம் - செய்யுளியலின் முதல் நூற்பாவில், மெய்ப்பாடு செய்யுளின் உறுப்புகளுள் ஒன்றாகும் என்று கூறியுள்ளார். தொல்காப்பியர் மெய்ப் பாட்டியலில் மெய்ப்பாட்டை அறிமுகம் செய்துள்ள முறை திருத்தமாயில்லை. எடுத்த எடுப்பிலேயே,

> "பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
> கண்ணிய புறனே நானான்கு என்ப" (1)
> "நாலிரண் டாகும் பாலுமா ருண்டே" (2)

என்று கூறியுள்ளார். முப்பத்திரண்டு (எண்ணான்கு) பொருளாம். அவை பதினாறிலும் (நானான்கு) அடங்குமாம். அந்தப் பதினாறும் எட்டில் (நாலிரண்டு) அடங்குவதும் உண்டாம்.

தொல்காப்பியர் இவ்வாறு கூறியிருப்பது, கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல இருக்கிறது. பஞ்ச பாண்டவர் எத்தனை பேர் என்பதை விளக்க வந்த ஒருவர், பஞ்ச பாண்டவர் கட்டில் காலைப் போல மூன்று பேர் என்று சொல்லி இரண்டு விரல்களைக் காட்டி ஒன்று என எழுதிப் பின் அதையும் அழித்து விட்டாராம். இந்த மாதிரியில், தொல்காப்பியர் முப்பத்திரண்டைப் பதினாறாக்கிப் பின் பதினாறை எட்டாக்கியுள்ளார். ஆனால் இதற்குங் கீழ்க் குறைக்கவில்லை. அடுத்து மூன்றாவது நூற்பாவில் எட்டு என்னென்ன என்று அறிவித்துள்ளார்.

''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப''

என்பது நூற்பா. முப்பத்திரண்டு, பதினாறு என்று கூறிய இடங்களில் 'மெய்ப்பாடு' என்னும் சொல்லைப் பயன் படுத்தாமல், எட்டைக் கூறிய இடத்தில்தான் மெய்ப்பாடு என்னும் சொல்லை அறிமுகம் செய்துள்ளார். எட்டு இன்னது - இன்னது என எட்டுப் பெயர்களைக் கூறி விளக்கியவர், முப்பத்திரண்டு எது எது - பதின்ாறு எது எது எனப் பேச்சு - மூச்சு காட்டினாரிலர். அதனால், உரையாசிரியர்கள் மண்டையை உடைத்துக் கொண்டு, முப்பத்திரண்டுக்கும், பதினாறுக்கும் குறிப்பாகப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளனர். இனி உரையாசிரியர்களின் வழி நின்று முப்பத்திரண்டையும் எட்டையும் காண்பாம்.

எட்டு வகை மெய்ப்பாடுகளுள் முதலில் கூறப்பட்டுள்ள 'நகை' என்பதை எடுத்துக் கொள்வோம். நகை என்றால் சிரிப்பு. (1) குழந்தை குழறிக் குழறிப் பேசுகிறது. (2) அதைக் காதால் கேட்கிறோம். (3) உள்ளத்தில் இன்ப உணர்ச்சிக் குறிப்பு தோன்றுகிறது. (4) அதனால் வாய் விட்டுச் சிரிக்கிறோம். இங்கே நகை என்னும் மெய்ப்பாடு தொடர்பாக நான்கு நிலைகளைக் காண்கிறோம். அதாவது:

சிரிப்புக் காரணமான பொருள் அல்லது செயல் - அதைக் காணுதல் அல்லது கேட்டல் - அதனால் உள்ளத்தில் உண்டாகும் உணர்வு - அதனால் வெளியில், அதாவது உடம்பில் காணப்படும் மாற்றங்கள். இவ்வாறு எட்டு மெய்ப்பாடுகட்கும் நான்கு நான்கு வீதம் பெருக்கிப் பார்த்தால் ($8 \times 4 = 32$) முப்பத்திரண்டு மெய்ப்பாடுகள் கிடைக்கின்றன. இந்தக் கணக்கு பேராசிரியரின் உரை வழிக் கிடைப்பதாகும்.

இளம்பூரணர் என்னும் தொல்காப்பிய உரையாசிரியரின் 32 என்னும் கணக்கு வேறு மாதிரியானது - மிகவும் எளியது. தொல்காப்பியர், நகை முதலாகிய மெய்ப்பாடுகள் எட்டும் நான்கு நிலைக்களன்கள் வழியாகத் தோன்றும் - அதாவது, ஒவ்வொன்றும் நான்கு நான்கு வகைப்படும் என்பதாக $8 \times 4 = 32$) முப்பத்திரண்டு கொண்ட பட்டியல் பின்னால் தந்துள்ளார். இளம்பூரணர் இந்த முப்பத்திரண்டை எடுத்துக் கொண்டுள்ளார்.

முப்பத்திரண்டு பதினாறாக ஆன விவரமாவது: குழந்தை குழறிப் பேசுதல் - அதைக் காதால் கேட்டல் என்னும் இரண்டையும் சிரிப்பின் காரணம் என ஒன்றாக்கிக் கொள்ளல் வேண்டும். அடுத்து, உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிக் குறிப்பு - அதனால் வெளியில் உடம்பில் தோன்றும் மாற்றம் ஆகிய இரண்டையும் ஒன்றாக்கிக் கொள்ளல் வேண்டும். இவ்விதமாக நான்கை இரண்டாகச் சுருக்கினால், ($8 + 2 = 16$) பதினாறு என்ற பதில் கிடைக்கும்.

நகை என்னும் மெய்ப்பாடு தொடர்பாக நான்கு கூறுகள் கண்டோம், நான்கை இரண்டாக்கினோம். இரண்டை 'நகை' எனச் சுருக்கமாக ஒன்றாக்கினால், மெய்ப்பாடுகள் நகை முதலாக உவகை ஈறாக எட்டு வகைப்படும் என்ற முடிவு கிடைக்கும்.

இவ்வாறாக ஐம்பொறிகளால் பொருள்கள் அறியப்படு வதும் அதனால் உடம்பில் தோன்றும் குறிகளும் மெய்ப் பாடாகும் என்ற கருத்து மிகவும் எளிமையாகப் பெறப் படும். இதனால்தான், செய்யுளியலில், செய்யுளின் ஓர் உறுப்பாகிய மெய்ப்பாட்டை விளக்க வந்த தொல்காப்பியர்,

"உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்" (204)
"எண்வகை இயல்நெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே" (205)

எனக் கூறிப் போந்தார்.

**பண்ணை**

மெய்ப்பாட்டியலின் முதல் நூற்பாவிலேயே, மெய்ப் பாட்டை அறிமுகம் செய்யத் தொடங்கிய ஆசிரியர் தொல் காப்பியர், இந்த மெய்ப்பாடுகள் பண்ணையில் தோன்றுவன என்னும் பொருளில்,

"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப"

என்று கூறியுள்ளார். பண்ணை என்பதற்குப் பேராசிரியர் தரும் விளக்கமாவது:- "முடியுடைவேந்தரும் குறுநில மன்னரும் முதலானோர், நாடக மகளிரின் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமம் நுகரும் இன்ப விளை யாட்டு" என்பது. இதற்கு இளம்பூரணர் தரும் பொருளாவது: "விளையாட்டு ஆயம்" என்பதாகும். இதற்குத் தொல் காப்பியர் கூறியுள்ள பொருள் விளையாட்டு என்பது.

"கெடவரல், பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு" (22)

என்பது, தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - உரியியல் நூற்பா. கெடவரல் என்பது ஒருவகை விளையாட்டு. பண்ணை என்பது ஒருவகை விளையாட்டு.

பண்ணை என்பது ஒரு விளையாட்டு எனச் சொல்லதிகாரம் - உரியியலில் கூறிய தொல்காப்பியர் அடுத்த பொருளதிகார - மெய்ப்பாட்டியலில், பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்'' என மெய்ப்பாடுகள் பண்ணையில் தோன்றுவதாகக் கூறியிருப்பது குழப்பமும் வியப்புமாயுள்ளது. இதனினும் 'விளையாட்டு ஆயம்' (விளையாடும் கூட்டம்) என இளம்பூரணர் கூறியிருப்பது ஓரளவு நன்று. இதனினும், 'நாடக மகளிரின் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமம் நுகரும் இன்ப விளையாட்டு' எனப் பேராசிரியர் கூறியிருப்பது மிகவும் நன்று.

இதிலிருந்து அறிந்து கொள்ள வேண்டியதாவது: பலர் கூடி ஆடலும் பாடலும் செய்யும் நிகழ்ச்சியும் தொல்காப்பியர் காலத்தில் 'விளையாட்டு' எனப் பெயர் வழங்கப் பட்டது என்பதாகும். மேலும் அறியவேண்டியது: பலர் கூடி ஆடல் பாடலுடன் நடத்தும் நாடகத்தில் இந்த எட்டு மெய்ப்பாட்டுப் பண்புகளையும் காணலாம் என்பதாகும்.

ஆடல் = கூத்தாகிய நாடகத் தமிழ். பாடல் இசைத் தமிழ். கூத்தைக் காணும்போதும் இசையைக் கேட்கும் போதும் எட்டு மெய்ப்பாடுகளின் சுவடுகளை அறியலாம்.

ஒரு நாள் ஒரு திரையோவியம் (சினிமா) பார்த்துக் கொண்டிருந்தபோது, கதைத் தலைவனும் (Hero) வில்லனும் போரிடும் காட்சி நடந்துகொண்டிருந்தது. வெற்றியும் தோல்வியும் மாறி மாறித் தாவியும் ஊசலாடிக் கொண்டும் இருந்தன. ஒரு நேரம், வில்லன் கதைத் தலைவனைக் கொன்று விடுவான் போன்ற கட்டம் வந்தது. அப்போது பெண்கள் பகுதியிலிருந்து, வில்லனைக் குறிப்பிட்டு 'அவனை விளக்குமாற்றால் அடியுங்கடி - அவனைப் பழந்துடைப்பக் கட்டையால் அடியுங்கடி' என்ற குரல்கள் எழுந்தன. பெண்டிர் சிலர் இவ்வாறு குரல் எழுப்பினர்.

இதிலிருந்து அறிவதாவது:- மெய்ப்பாடு நடிகர்களிட மிருந்து காட்சியைக் காண்பவர்களிடமும் ஏற்பட்டுவிட்டது என்பதாம். இத்தகைய ஒன்றிய மெய்ப்பாட்டு நிலைமைக்குத் தான் 'ஒத்துணர்ச்சி' (Sympathy) என்னும் பெயர் உளவியலில் தரப்பட்டுள்ளது.

சாவு வீட்டிற்குச் சென்றவர்கள் வீட்டினரின் துயரத்தைக் கண்டு தாமும் துயரப்படுவது உடல் உறுப்பு களால் துயரத்தை வெளிப்படுத்துவது ஒரு வகை மெய்ப்பாடு தான். ஆனால் இதை ஒரு கலை என்று கூறவியலாது. நாடகம் காண்பவர்களும் தமது உணர்வை ஒத்துப் பெறுமாறு நடிகர்கள் நடிக்கும் நடிப்பினை மெய்ப்பாட்டுக் கலை எனலாம். இதுபோலவே, நூலாசிரியர்கள், நூலில் கருத்தை அறிவிக்கும் கவர்ச்சியான முறையினால், நூலைப் படிப்பவர்கள் ஒத்துணர்ச்சி பெறுமாறு எழுதுவதும் மெய்ப்பாட்டுக் கலை எனப்படும்.

கூட்டம் என்னும் பொருளும் உடைய பண்ணையில் தோன்றிய எண்ணான்கு பொருள் எனத் தொல்காப்பியர் கூறியிருப்பதால், நாடகத்தின் உயிர் நாடி மெய்ப்பாடு எனக் கூறலாம். தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் 'இவற்றின் பிரிவை நாடக நூலில் காண்க' என்று கூறி யுள்ளார். உரையாசிரியர்கள் இருவரும் செயிற்றியனார் இயற்றிய செயிற்றியம் என்னும் நாடக நூற் செய்திகள் சிலவற்றைத் தம் உரையிடையே அறிவித்துள்ளனர்:

மெய்ப்பாடு இரண்டு நிலைக்களங்களின் அடிப்படையில் தோன்றும். காட்டாக அச்சம் என்ற மெய்ப்பாட்டை எடுத்துக் கொள்ளலாம். அஞ்சுதற்கு உரிய புலி போன்றவை ஒரு நிலைக்களன். அவற்றைக் கண்டு அஞ்சுபவர் மற்றொரு நிலைக்களன். இதனை அறிவிக்கும் செயிற்றிய நூற்பா,

"இருவகை நிலத்தின் இயல்வது சுவையே"

என்பது. செயிற்றியனார் 'சுவை' என்று கூறியிருப்பது ஒருவகை மிரட்சியைத் தருகிறது. அஃதாவது:— சுவை என்பது, வடமொழியில் உள்ள 'ரசம்' என்னும் சொல்லின் மொழி பெயர்ப்பாகும். நவரசம் என்னும் வடமொழிச் சொல்லாட்சிதான் ஒன்பது சுவை எனப்படுகிறது. நவரசங்களுள் ஒன்றாகிய சாந்தம் (அமைதி, நடுநிலை) என்பதில் உடலில் எந்த மாற்றமும் இல்லையாதலின் அதை நீக்கி மெய்ப்பாடு எட்டு எனப்பட்டது - எனச் சிலர் கூறுகின்றனர்.

அதாவது, மெய்ப்பாடுகள் எட்டும் வடமொழியிலிருந்து தொல்காப்பியரால் எடுத்து அறிவிக்கப்பட்டதாக அன்னாரால் கூறப்படுகிறது. இக்கருத்தைத் தமிழ் அறிஞர்கள் சிலர் மறுத்து, தமிழிலிருந்து (சுவை) ரசம் என்னும் பெயரில் மெய்ப்பாடுகள் வடமொழியில் அறிமுகப் படுத்தப்பட்டன எனத் தக்க சான்றுகள் காட்டி நிறுவுகின்றனர். மற்றும், தொல்காப்பியருக்கு முன்பே, தமிழில் மெய்ப்பாடு பற்றிக் கூறும் நூல்கள் இருந்தன என்பதை,

"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான்கு என்ப"

என்னும் நூற்பாவில், 'என்று கூறுவர்' என்னும் பொருள் உடைய 'என்ப' என்னும் சொல் அறிவிக்கும். மெய்ப்பாட்டின் சுருக்கமான அறிமுகம் இந்தக் கட்டுரை.

★★★

## சுந்தர சண்முகனாரின் உழைப்புகளுள் சில:

| | ரூ. கா. |
|---|---|
| தமிழ் அகராதிக்கலை | 40—00 |
| தமிழ் இலக்கிய வரலாறு | 30—00 |
| கெடிலக்கரை நாகரிகம் | 60—00 |
| அம்பிகாபதி காதல் காப்பியம் | 20—00 |
| கௌதமப் புத்தர் காப்பியம் | 30—00 |
| மர இனப் பெயர்த் தொகுதி-1 | 140—00 |
| மர இனப் பெயர்த் தொகுதி-2 | 200—00 |
| உலகு உய்ய ! | 30—00 |
| பாரதிதாசரோடு பல ஆண்டுகள் | 12—00 |
| கருத்துக் கண்காட்சி | 20—00 |
| தமிழ்க் காவிரி | 12—00 |
| கடவுள் வழிபாட்டு வரலாறு | 15—00 |
| தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு | 20—00 |
| மக்கள் குழு ஒப்பந்தம் | 15—00 |
| மர இனப் பெயர் வைப்புக் கலை | 18—00 |
| மருந்தாகித் தப்பா மர இனப் பெயர்கள் | 20—00 |
| மாதவம் புரிவாள் (தாவர இயல்) | 22—00 |
| பால காண்டப் பைம்பொழில் | 25—90 |
| அயோத்தியா காண்ட ஆழ்கடல் | 20—00 |
| கிட்கிந்தா காண்டத் திறனாய்வு | 35—00 |
| சுந்தர காண்டச் சுரங்கம் | 18—00 |
| தமிழ்நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம் | 100—00 |
| ஆழ்கடலில் சில ஆணி முத்துகள் | 26—00 |
| சிலம்போ சிலம்பு - தித்திக்கும் திறனாய்வு | 50—00 |
| ஆரணிய காண்ட ஆய்வுத்திறன் - அச்சிலே | |

சபாநாயகம் ஆப்செட் பிரிண்டர்ஸ், சிதம்பரம்